சீனா: அதிகாரப் போட்டி?

# உலக உலா

ஜூலை 1995

உலக உலா 1995




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலக உலா

பொதுசன நூலகம்
10-7-1995
39



பாதை திறப்பும் அதன் பலாபலன்களும்

கடத்தற்காரர் மீது நடவடிக்கை எடுத்த பாக் சுங்க அதிகாரிகள் தலிபான் படையாற் கடத்தப்பட்டமை வளர்த்த கடா மார்பிற் பாய்ந்த கதையாகிவிட்டது.



கணனியின் ஆற்றலும் பருமனும்

சிறியரக கணனிகள் உருவாக்கம் மேற்கு நாடுகளில் வீட்டுக்கு ஒரு வானொலிப் பெட்டி போன்று வீட்டுக்கு ஒரு கணனி அமைக்க வகை செய்கிறது.

## உலக விவகாரங்கள்


### ஆசியா

இந்தியாவின் அணையாத நெருப்பு —09
மலேசியாவில் தேர்தல் —11
சீனாவில் புதிய பொருளாதாரக் கொள்கை —13
வடகொரியாவில் உடைவு இல்லை —15
மேற்குலகத்தின் கீழ்த்தரமான பிரச்சாரம் —16
பாதை திறப்பின் பலாபலன்கள் —17
ஆசியாவின் பொலிஸ்காரன் யார்? —20

### அமெரிக்கா

குவாண்டெனமோவில் கிளர்ச்சிக் கீதம் —22
இலத்தீன் அமெரிக்க ஆசியத் தலைவர்கள் —25

### ஐரோப்பா

பொஸ்னியாவின் போர்க் கோலம் —27
பால்க்கன் பகுதியில் இன்னுமொரு போர் —31

### ஆபிரிக்கா

இரத்த வெள்ளத்தில் அகதி முகாம் —34
இரட்டைக் கீதம் —35

### இராஜதந்திரம்

அமைதியை ஏற்படுத்தல் —37

### சுகாதாரம்

கடும் பயிற்சி . . . நீண்ட ஆயுள் —40

### விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

மயக்கம் தரும் புள்ளிகள் —42
எதிர்கால அழைப்புகள் —67
ராங்கிகள் கடலடிக்குச் செல்கின்றன —70

### வரலாறும் நினைவும்

முடிந்த போரின் எதிரொலிகள் —47
போரும் நினைவும் —63
சவக்குழியை அண்மித்த போதும் —66


உலா: 23

விலை: 80-00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணிகம்
பாரிங்ஸ் வங்கி மோசடி —49
எண்ணெய்க்குழாய் இழிமகன் —53

முகாமைத்துவம்
வேகமாக இரு —55
சிறப்பு குறிப்புகள் —56

குற்றவியல்
கட்டட முகப்பில் வெடிப்புகள் —58
ருஷ்யாவின் மோசமான ஏமாற்று —59

கணனி
கணனியின் ஆற்றலும் பருமனும் —71

விண்வெளி
நோவாவின் தோற்றமும் மறைவும் —74

மனிதவியல் வரலாறு
எகிலின் எலும்புகள் —77

விஞ்ஞானம்
நெப்போலியனின் எகிப்து —79

பல்தினைப்பகுதி
புதியன அறிமுகம்
கின்னஸ் சாதனை
பார்வைகள்

அச்சுப்பதிப்பு
இராசன் அச்சகம்
144, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

முன் அட்டைப் பதிப்பு
அந்திவானம் பதிப்பகம்
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

வெளியீடு
உலக உலா நிறுவனம்
144, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

## கேளுங்கள்

செவிப்புலன் இல்லாதவர்களையும் ஊக்கப் படுத்தும் விதமாக எல்லாம் ஒன்றிணைக்கப் பட்டு ( All in One ) எந்த விதமான ஒலியலைகளுக்கும் பொருத்தமானதாக மாற்றக்கூடிய வகையிற் கேட்பதற்கு உதவி செய்யுங் கருவியொன்று அறிமுகமாக்கப்பட்டுள்ளது. இது பண் பலைவரிசை ஒலிபரப்புக்களையும், இன்டக்சன் லூப் ஒலிபரப்புக்களையும் உள்ளடக்கியதாக




உள்ளது. இதன் ஒலி மாற்றி அமைக்கும் அமைப்பு உயர்ந்த உணர்திறன் உடைய ஒலி வாங்கிப்பகுதியை உடையதாக இருக்கிறது. 5420 அமெரிக்க டொலர் பெறுமதியுடைய இக் கருவி ஒடியோலொஜிக்கல் எஞ்ஜினியறிங் கோர்ப்பரேசன் ( 35 மிட்போட் வீதி சம்மவில்லி எம் ஏ. 02143 ) நிறுவனத்தின் தயாரிப்பாகும்.

இந்த ஹெலி, பொம்பர் வரேங்கே சொல்லக் கூடிய கருவி எதனையும் கண்டுபிடித்தால் தான் எமக்குப் பிரயோசனமாக இருக்கும்.

## மக்ஸ்ட் மிக்சர்



வீட்டுப்பாவனைக்கு ஏற்றதாக, பூரண அம்சங்களையுங் கொண்ட இலத்திரனியல் வீடியோ மிக்சர் ஒன்று இப்போது வடிவமைக்கப்பட்டுள்ளது. இது நான்கு உள்வாங்கிகளை ( Input ) ஏற்றுக்கொள்வதுடன் 200–க்கும் அதிகமான விசேடித்த விளைவுகளையும் (Special Effect ) த்ரக்கூடியதாகும். அழித்தல், துடைத்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருப்பித்துக்காட்டல், கரைத்தல் என்பன உட்பட இதன் பணிகள் விரிவானவையாக இருக்கிறது. இதன் மேற்பக்கத்தில் உள்ள தனியான திரையில் பிரயோகத்தின் விளைவுகளை அவதானிக்கக்கூடியவாறு இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி சுமார் 1,200 டொலராகும்.

## இலத்திரனியற் புத்தகங்களின் பக்கம் போடும் கருவி



இலத்திரனியற் புத்தகங்களில் (Digital Books) பக்கங் கட்டுவதற்காக ஒரு கருவி இப்போது ஸ்கைரெல் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. 4.6 அவுன்சு நிறையுடைய இக்கருவி வான் அலைவரிசையாக வரும் செய்திகளைப் பெறக்கூடியதும் ஆகும். இது ஒரு நெருப்புப் பெட்டியின் அளவை ஒத்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. டி. பி. எஸ் - 2 (D. B. S. - 2) என்னும் மொடல் கருவியிலுள்ள இரு துவாரங்களில் ஒன்றினூடாகப் பிணைப்பு ஏற்படுத்த முடியும். 230 அமெரிக்க டொலர் பெறுமதியுடையதாக இது சந்தைக்கு விடப்பட்டுள்ளது.

## தலையில் அணியும் ஒலி, ஒளிக்கருவி.



மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்கள் அணியுந் தலைக்கவசம் போன்ற மனமகிழ் உல்லாசக் கருவியொன்று நெடுங்காலமாக அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் விற்பனையாகிறது. இப்போது ஆயிரம் டொலருக்குக் குறைவாகச் சந்தைப்படுத்தப்படுகிறது. இதனால் சற்று வசதி குறைந்தவர்களும் வாங்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது எல். சி. டி. எனப்படும் திரவப் படிவத்திரையைக் கொண்டது. இதை அணிந்தபடி தொலைக்காட்சிப் பெட்டியில் தோற்றும் படத்தைப் பார்க்கும் போது அதிற் பங்குபற்றுவது போன்ற தத்ரூபம் ஏற்படுகிறது. இசை நிகழ்ச்சிகளைக் கேட்கும் போதும் இதே உணர்ச்சி ததும்புகிறது. இக் கவசத்தில் ஒலி, ஒளிக் கருவிகளை இயக்குங் கட்டளைக் கருவிகளும் இணைந்துள்ளன. விலை ஆயிரம் டொலரைவிடக் குறைவு என்று மாத்திரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தயாரிப்பாளர் போட்டே ரெக்னோலொஜி, நியூயோர்க், அமெரிக்கா.

## காவித்திரியும் பீசியுடன் இணைக்கும் சிறிய உருவ சீடி இயக்கம்



பல்வேறு தகவல்களை உள்ளடக்கிய மிகச் சிறிய உருவ சீடித் தட்டுக்களை இயக்கவல்ல வைப்பர்-170 என்ற பெயருடைய சாதனம் தயாராகிவிட்டது. இது காவித் திரியும் சிறிய ரக பீசி எனப்படும். தனியார் கணிப்பொறியுடன் மாத்திரம் இணையக் கூடியது. இது பிரயாணங்களின் போது ஏற்படும் அதிர்ச்சிகளைத் தாங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 750 கிராம் பாரத்தை இதன் மேல் வைக்கலாமென்று தெரிவிக்கப்படுகிறது. இதன் விலை 650 டொலர்.

## சிறிதாயினும் பெரிதின் சுகம்

அமெரிக்காவின் இரண்டாவது மிகப் பெரிய மோட்டார் நிறுவனம் 1995 ஆம் ஆண்டிற்கான தனது புதிய தயாரிப்புக்களில் ஒன்றைத் திரை நீக்கஞ் செய்துள்ளது. எரிபொருள் சேமிப்பு, கவர்ச்சியான உருவம், விபத்துக்களைத் தாங்கும் உறுதிப்பாடு, பெரிய வாகனத்தின் உல்லாசம் ஆகிய அமிசங்களைக் கொண்ட இந்த நாலு இருக்கைச் சிறிய மினிக்கார், ஒரு புரட்சி எனத் தெரிவிக்கப்படுகிறது. ஜப்பானியர்களை அவர்கள் விளையாட்டிலேயே தோற்கடித்த பெருமை இத்தக் காருக்குண்டு. இதன் நீளம் 11 அடி. மேற்பட்ட விபரங்கள் காலப் போக்கில் வெளியிடப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. நம்பினால் நம்புங்கள் இதன் 'கா' (KA) விலை குறிப்பிடப்படவில்லை. தயாரிப்பாளர்கள் - ஃபோட் மோட்டார் நிறுவனம் யூ. எஸ். ஏ. (Ford Motor Company - U. S. A.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கின்னஸ் தொடர்......

# பாம்பும் பறவையும்

**" இரண்டு உயிரினங்களுக்கும் உற்பத்திக் கால நெருக்கம் உண்டெனை உயிரியல் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். "**

தமிழில் :
கலாநிதி க. சோமாஸ்கந்தன்



ஸ்ரீலங்காவிற்கு இப்படியும் ஒரு சாதனைச் சிறப்பு உண்டு. உலகில் மிகக் கூடிய தொகையினர் பாம்புக் கடியால் இறக்கும் நாடு இலங்கைதான். இங்கு பரப்பளவுக்கு மிகையான உயிரிழப்பு நடப்பதாகவும், வருடமொன்றுக்குச் சராசரி 800 பேர் இறப்பதாகவும் கின்னஸ் அறியத் தருகிறது. 95 சத வீதத்தினர் இலங்கை வாழ் நாகம், புடையன் ஆகியவற்றின் கடியால் இறக்கின்றனர். வேறு இனப் பாம்புகள் கடிப்பதால் மிகுதி 5 சத வீதத்தினர் பலி ஆகின்றனர்.

உலகில் மிகக் கொடிய நச்சுடைய ஆட்கொல்லிப் பாம்பு இராஜநாகம் என்பது சிலர் கருத்து. அவுஸ்திரேலியாவின் புலிப்பாம்பு என்பர் வேறு சிலர். ஆபிரிக்காவின் கறுப்பு மம்பா, இந்தியாவின் காட்டு விரியன் போன்றவையும் இத் தொடர்பிற் பேசப்படுகின்றன. ஆனால் அவுஸ்திரேலியாவின் தைபான் ( Taipan ) என்னுஞ் சிறு செதிற் பாம்பு மிகக் கொடியது எனப் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் விஷம் சில நிமிடங்களிற் கொன்றுவிடும் என்று வைத்திய அறிக்கைகள் கூறுகின்றன. பொதுவில் அவுஸ்திரேலிய மண்ணிலும், சுற்றிய கடலிலுங் காணப்படும் பாம்புகள் ஒட்டுமொத்தமாக விஷம் உடையனவாக உள்ளன.

தைபான் அவுஸ்திரேலியாவின் சிம்சன் பாலைவனத்திற் காணப்படும். இது இரண்டு மீற்றர் வரை வளரும். ஒரே கடியில் மிகக் கூடிய நஞ்சை வெளியேற்றும் பாம்பு தைபான் எனப்படுகிறது. அதற்கு அடுத்ததாக இரண்டாம் இடம் வகிப்பது அவுஸ்திரேலியாவின் ஈஸ்ரேன் பிறவுண் ( Eastern Brown ) என்ற பாம்பு. மிகக் கூடுதலான நஞ்சை வெளியேற்றும் வரிசையில் நாக பாம்பும், இராஜ நாகமும் உலகில் முறையே 12 ஆம், 17 ஆம் இடங்களை வகிக்கின்றன.

பாம்புகளில் 3,000 – 3,500 இனங்கள் உண்டு. இவற்றில் 10-15 சத விதமானவை மாத்திரம் நஞ்சு உடையவை. இவைக்கு நஞ்சுக் கருவிகள் உள்ளன. நச்சுப் பற்கள், நச்சு நாளங்கள், நச்சுச் சுரப்பிகள் முதலியன அடங்கிய அமைப்பே நச்சுக் கருவி எனப்படும். வாயின் மேலுதட்டுக்கருகில் கண்ணின் கீழ், பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு நச்சுச் சுரப்பிகள் உள்ளன. சில இனங்களில் உமிழ் நீர்ச் சுரப்பிகளே நச்சுப் பைகளாக மாறியிருக்கும். மேற்றாடையின் முன் பக்கத்து முனையிற் பக்கத்திற்கு ஒன்றாக இரு நச்சுப் பற்கள் உள்ளன. இந்தப் பற்கள் குழல்போல் அமைந்திருக்கும். நச்சுச் சுரப்பியில் இருந்து வரும் நச்சு நாளம் இந்த நச்சுப் பற்களின் அடியிற் திறக்கின்றது. இந்த நச்சுப் பற்களை நீக்கினாலும் அவை மீண்டும் வளர்ந்து விடும்.

தலையும், நீண்ட வாலும் உள்ள கால் இல்லாத பிராணி என்று பாம்பை வர்ணிப்பது தவறு. தலை, நடுப்பகுதி, வால் என்ற 3 பகுதியைக் கொண்டது பாம்பு வால் மிகவுங் குறுகியது. தலைக்கும், வாலுக்கும் இடைப்பட்ட பகுதியில் முதுகு எலும்புள்ள விலங்கினத்திற்குரிய உள் உறுப்புக்கள் காணப்படுகின்றன. சமிபாட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிகள், ஈரல், இருதயம், நாளங்கள், தசை நார்கள் என்பனவை இதில் அடங்கும். கூடுதலான பாம்புகளுக்கு ஒரு சுவாசப் பை மாத்திரம் உண்டு ஆனால் மலைப் பாம்பு போன்ற பெரிய இனங்களுக்கு இரண்டு பைகள் உள்ளன. பாம்புக்குக் கண் இமை கிடையா. ஒரு தடித்த நிறமற்ற தோல் கண்ணை மூடியிருக்கும். பாம்புகள் கண் இமையும் காதுத் துவாரமும் அற்ற பிராணிகளாகும்.

பாம்புகள் ஊர்வன என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. (Reptiles) இக் குடும்பத்தில் ஆமை, முதலை, நியூசிலாந்து வாழ் துவத்தாரா, (Tuatara) சிறிய, பெரிய பல்லிகள் அங்கம் வகிப்பர். இவையாவற்றிற்கும் பல பொது அமிசங்கள் உண்டு. அவைகளுடைய தோற் றகடுகள், செதில் போன்ற தடித்த அடுக்குகளாற் போர்த்தப்பட்டிருக்கும். இவை யாவும் உடல் வெப்பங் குறைந்தவை. வெப்பம் வெளியேறுவதைத் தடித்த அடுக்குகள் தடுக்கின்றன. மேலதிக வெப்பத்திற்காகப் பாம்பு போன்றவை வெய்யிலிற் காய்கின்றன பாம்பு வெப்பந் தேடுவதில் நேரஞ் செலவிடுவதாக விஞ்ஞான ஆய்வுகளின் முடிபு.

மேற்கூறிய ஊர்வனவற்றின் குடும்பத்திற் பாம்பும், பல்லிகளும் மிக நெருக்கமானவை. பல்லியில் இருந்து பாம்பு உருமலர்ச்சி பெற்றதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இரண்டையும் ஒருங்கிணைத்து ஸ்குவமற்றா (Squamata) என்ற விஞ்ஞானப் பெயர் வழங்குகின்றது. பாம்புகள் உலகின் உஷ்ண வலயத்தில் வாழ்கின்றன சில இனங்கள் குளிர்வலயத்திலும் உள்ளன. பாம்புகள் இல்லாத சில நாடுகளும் உண்டு. அயர்லாந்து இதில் பிரசித்தமானது. இன்னுமொன்று ஹவாய் தீவுகள் சாடிகளில் நடப்பட்ட மரவகை அண்மையில் இங்கு இறக்கப்பட்டபோது மண்ணுடன் கலந்த சில சிறியரகப் பாம்புகள் அங்கு பரவியுள்ளன.

பாம்புகள் பல பருமன்களிற் காணப்படுகின்றன. தென் - கிழக்கு ஆசியாவில் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற தீவுகளில் வாழும் மலைப்பாம்பு 20 அடி 6 அங்குலத்திற்குக் கூடுதலாக வளரும். 1912 ஆம் ஆண்டு 32 அடி 9½ அங்குலமான மலைப்பாம்பு ஒன்று இந்தோனேசியாவின் செலிபீஸ் தீவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளது. தென் - கிழக்கு ஆசியாவின் மலைப் பாம்புகள் உலகின் மிக நீளமானவை. மேற்கு இந்தியத் தீவுகள் சிலவற்றில் வாழும் நூற் பாம்பு உலகின் சிறியவை. இதன் சராசரி நீளம் 4½ அங்குலம். நூற் பாம்புகள் மிக அரிது. உலகின் எடை கூடிய பாம்பு தென் அமெரிக்கா



வாழ் அனக்கொண்டா (Anaconda) இனமாகும் இதன் சராசரி நீளம் 18 – 20 அடி, எடை 500 இறாத்தல் வரை போகும். விஷப் பாம்புகளில் மிக நீளமானது இராஜநாகம். (King Cobra). இது 12 - 15 அடி வரை வளரும். எட்டு அங்குலம் வரை வளரும் குள்ள அடர் (Dwarf adder) விஷப் பாம்பு நபீவியாவில் வாழ்கின்றது. இதுவே விஷப் பாம்புகளில் மிகச் சிறியது.

பாம்புகள் அனைத்தும் அவைகளை விடப் பெரிய உருவமுடைய இரையை அப்படியே உண்கின்றன, காட்டுப் பன்றி ஒன்றை முழுதாக மலைப்பாம்பு விழுங்கும். மானையும் விழுங்குவதும் உண்டு. பெரியவற்றை விழுங்க உதவுவது பாம்பின் தாடை தான். நமது கீழ்த் தாடை மேல் தாடையுடன் காது மட்டத்தில் பொருத்தப்பட்டுள்ளது. பாம்புகளுக்கு இன்னுமொரு மேலதிகமான எலும்பு இரு தாடைகளின் முனைகளை இணைக்கின்றது. அதாவது இதுவோர் இரட்டைப் பிணைப்பு. மேலும் அவற்றின் மேற்றாடையுங், கீழ்த் தாடையுந் தனித்தனியே பிரியக் கூடியவை. இதனால் அது வாயை வேண்டியளவு பிரிக்க முடியும். இரையை முழுவதாக விழுங்குவதால் இரை சீரணம் ஆகும் வரை வேறு இரை தேட வேண்டிய அவசியம் இல்லை. அனக் கொண்டாவும், மலைப்பாம்பும் இரையின் எலும்புகளை நொருக்கிய பின் விழுங்குவதாகக் கூறுவது தவறு. அவை சுவாச ஓட்டத்தை நிறுத்தும் வகையில் இரையை இறுக்கிக் கொல்கின்றன. நச்சுப் பாம்புகள் நஞ்சூட்டிக் கொன்றபின் இரையை விழுங்குகின்றன. மலைப் பாம்பும் அனக் கொண்டாவும் நஞ்சு அற்ற பாம்புகள்.

பாம்புகளில் நீரில், நிலத்தில், மரத்தில், நிலத்தடியில் வசிப்பவை உள்ளன. ஆபிரிக்காவில் ஒருவகைக் கொடிப் பாம்பு உண்டு, இது மரத்தில் வசிக்கும். சுமார் 1. 2 மீற்றர் வரை வளரும். விரைவில் மரத்தில் ஏற உதவும் உடலமைப்பு இதற்கு இருக்கின்றது. சூழ் நிலைக்கேற்ற விதத்தில் இதனாற் தனது உடல் நிறத்தை மாற்ற முடியும். மரக்கிளையில் பதுங்கித் தனது இரைக்காகக் காத்திருக்கும். மரக் கிளையின் நிறத்திற் தனது வண்ணத்தை மாற்றியிருக்கும். இதன் பார்வை மிகக் கூரியது. சிறு தவளைகள், பறவைகள் போன்றவற்றை உண்ணும். இந்த இனப் பாம்பின் நாக்கு மிகவும் பிரகாசமானது. நாக்கை வெளியே நீட்டிச் சுழற்றுவதன் மூலம் இரையைக் கவரும்.

கடற் பாம்புகள் அனைத்துங் கொடிய நச்சு உடையவை. முன் கூறிய அவுஸ்திரேலியன் தைபான் இனப் பாம்பிலும் நூறு மடங்கு கொடிய கடற்பாம்பு வட-மேற்கு அவுஸ்திரேலியாவின் திமோர் கடலிற் காணப்படுகிறது. இதன்கடி சில நிமிடத்தில் மனிதனின் உயிரைப் போக்கும். கடல் வாழ் பெல்சேரி என்பது இதன் பெயர். கடற் பாம்புகள் நீரை விட்டு வெளியே வர மாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையிற் போட்டால் அதனால் ஊர முடியாது. இவை வேகமாக நீந்துவதற்கு உதவியாக முன் முனை தட்டையாகவும், வால் துடுப்புப் போலும் இருக்கும். கடற் பாம்புகளுக்குத் தலையின் மேற் புறத்தில் நாசித் துவாரங்கள் இருக்கின்றன. ஆனால், நீர் உட்புகாமற் தடுக்கிதழ் (Valves) மூடிக் கொள்ளும்.

மலைப்பாம்பும், அனக் கொண்டாவும் ஆதிகாலத்திற் பின்புறத்தில் இரண்டு கால்கள் உள்ளனவாக இருந்துள்ளன. இதற்கு அத்தாட்சியாகப் பாம்பின் உடல் வெளிப்புறத்தில் வாற் பகுதி தொடங்கும் இடத்தில் இரு புறமும் ஒரு சோடி நகங்கள் காணப்படுகின்றன. அத்துடன் தோலின் கீழ் சில எலும்புகள் காணப்படுகின்றன. மறைந்த கால்களில் மிகுதி இவையாகும். இவை இரண்டும் நெடுங்காலம் உயிர் வாழும் என்று பாம்பு பற்றிய நூல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் மிருகக் காட்சியகத்தில் அனக்கொண்டா ஒன்று 40 வருடம் 3 மாதம் 14 நாள்கள் வாழ்ந்துள்ளது. மிகவும் எடை கூடிய தென்பதோடு அனக்கொண்டாப் பாம்புகளில் மிகவும் பருமன் கூடியதாகும். இதன் சுற்றளவு 90-100 சென்ரி மீற்றர் இருக்கும். இது தரையில் மெதுவாக ஊர்ந்தாலும் வேகமாக மரமேறும். நன்றாக நீரில் நீந்தும்.

பாம்புகள் சுடுந் தரையில் ஊர்ந்து செல்வதாற் தோலிற் தேய்மானம் ஏற்படுகிறது. அதே சமயத்தில் இதனடியிற் புதுத் தோல் உருவாகிக் கொண்டிருக்கிறது. புதுத் தோல் முழுமையாக உருவானவுடன் இரண்டு தோல்களுக்குமிடையில் ஒரு பாய்மம் சுரந்து இரண்டையும் பிரித்து விடுகிறது. இப்பாய்மம் கண்களின் செதில்களிலும் பாய்வதாற் பாம்பின் கண்களையும் அது மறைத்து விடும். பார்வை குறைந்த பாம்பு ஒதுக்குப்புறமாகப் பதுங்கியவாறு கல்லிற் தனது தலையைத் தேய்த்து, உதட்டுப் பகுதியில் உள்ள பழைய தோலை முதலில் உரிக்கிறது. பிறகு தரையில் உடலைப் புரட்டி நெளிந்து பழைய தோலைக் கழற்றி விடுகிறது.

தரையில் ஊர்ந்து செல்லும் பாம்பு, பல்லி போன்றவற்றிலிருந்து பிரிந்த கிளை உயிரிகள் காலப் போக்கிற் பறவைகளாக உருப் பெற்றன என்று உயிரியல் விஞ்ஞானங் கூறும். ஊர்வனவற்றின் உடலைப் போர்த்தியிருந்த தகடும், அடர்ந்த செவுள்களும் பறவைகளின் இறகுகளாகவும், செட்டைகளாகவும் மாறியுள்ளன. பறவைகளின் கால்களிற் கரடுமுரடான செவுள் காணப்படுவதை நாம் இத்தொடர்பில் அவதானிக்கலாம். ஆனாற் பறவைகளின் குருதி வெப்பம் உடையது. இன்றைய பறவைகளுக்குப் பற்கள் கிடையாது. பலமான அலகு உண்டு. பறவைகளுக்கு உயர்தரமான பார்வைத் திறனும் கேட்குஞ் சக்தியும் உள்ளன. அவை தமது உணவைச் சுவையறிந்து உண்ணும். கிட்டத்தட்ட எல்லாப் பறவைகளுக்கும் வாசனை இனங் காணும் ஆற்றல் இல்லை.

மனிதன் நிறுவிய பறக்குங் கருவிகளுக்கு முன் உதாரணமாக அமைந்த பறவை இனத்திற் சில பறக்காது தரை வாழ்கின்றன. பறவைகளில் மிகப் பெரிதான நெருப்புக் கோழி பறப்பதில்லை. இவை வட-ஆபிரிக்காவிற் காணப்படுகின்றன. ஆகக்கூடிய உயரம் 9 அடி, எடை 345 இறாத்தல். பெண் கோழி சற்றுச் சிறியது. பறக்க முடியாவிட்டாலும் நெருப்புக் கோழி மிகவும் வேகமாக ஓடும். இது மணிக்கு 40 மைல் வேகத்தில் ஓடுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பறப்பனவற்றில் வேகங் கூடிய பறவை வல்லூறு இனத்திற் பெரிகிரைன் இரகமாகும். இது உயரத்திலிருந்து தரையை நோக்கிப் பறக்கும் போது மணிக்கு 168 மைல் வேகம் எடுப்பதாகக் கின்னஸ் தெரிவிக்கிறது. இதே வேகத்தை ஆசியாவில் வாழும் நீள் சிறகு உள்ள உருவத்திற் சிறிய சுவிஃப்ற் (Swift) நேர் திசையிற் பறக்கும்போது எட்டுவதாகவும் அறிகிறோம்.

இன்று உலகில் 9,000-த்திற்கு மேற்பட்ட பறவை இனங்கள் காணப்படுகின்றன. பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். அவை மலை உச்சியிலும், ஆழ்கடல் அலைமேலும் வாழும் ஆற்றல் மிக்கவை. இரு துருவங்களிலும் அவை காணப்படுகின்றன. உணவும், இனத்தைப் பெருக்குவதற்கு வேண்டிய வசதியும் வாழுமிடத் தெரிவுக்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன. படிமுறை வளர்ச்சியில் இன்று பறவைகள் உச்ச நிலையை அடைந்துவிட்டன. பல பழைமைவாய்ந்த இனங்கள் மனிதனின் செயற்பாட்டாலும், இயற்கைக் காரணங்களாலும் அழிந்து விட்டன. 400 வருடங்களுக்கு முன் நியூசிலாந்தில் வாழ்ந்த மோவா (Moa) என்ற பறவையும், மடகஸ்கார் தீவில் வாழ்ந்த யானைப் பறவையும், மொறிசியஸ் தீவுகளில் வாழ்ந்த டோடோ (DoDo) பறவைகளும் இன்று இல்லாமற் போய்விட்டன. யானைப்பறவை 500 கிலோவுக்கு மேற்பட்ட நிறை உள்ளதாகவும், அதற்கு நிகரான உருவமைப்புள்ளதாகவும் இருந்துள்ளது. இதன் முட்டையைப் பழங்குடியினர் நீர் மொள்ளப் பயன்படுத்தினர். ஒரு முட்டையின் கொள்ளளவு 9 லீற்றர் எனப்படும்.

உயிரினங்களிற் பறவைகள் வலசை போவது மிகவும் ஆச்சரியமான நிகழ்ச்சி. (Migration of Birds) குறிப்பிட்ட காலப் பருவத்தில் ஒவ்வோர் ஆண்டும் பறவைகள் இடம்பெயர்ந்து நெடும் பயணந் தொடங்கிப் புதிய இடத்தைக் குறிதவறாமல் அடைகின்றன. இந்த வியப்பான நிகழ்ச்சி பற்றிய குறிப்பு பைபிளிற் காணப்படுகிறது. கிரேக்கப் புலவர் ஹோமர் ஆராய்ந்துள்ளார். கிரேக்க தத்துவ ஞானி அரிஸ்ரோட்டில் விளக்க முற்பட்டுள்ளார். இன்றைய விஞ்ஞானிகளைப் போல் அவர்களாலும் இதை விளக்க முடியவில்லை. மிக அதிக தூரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலசை போகும் பறவை ஆர்ரிக் ரேர்ன் (Artictern) எனப்படும் வடதுருவக் கவுட்டை வால் ஆலாப் பறவை. இது வடதுருவத்தில் முட்டையிடும். ஆகஸ்ற் மாத இறுதியிற் தென்துருவ அன்டார்டிக்காவை நோக்கிப் பறக்கும். அங்கு இதற்கு நிறைய உணவு கிடைக்கும். ஜூன் மாத மத்தியிற் திரும்பி ஆர்ரிக் வந்துவிடும். அது போகவரப் பறக்குந் தூரம் 35,200 கி மீ. இந்த ரேர்ன் இனத்தில் இன்னுமொரு வகை தரைக்கு வராமற் தொடர்ச்சியாக வானத்திற் சஞ்சரிக்கும். முதிர்ச்சி அடைந்து முட்டை இடும் பருவம் வரை அது வானிற் செலவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 3 தொடக்கம் 10 வருடம் வரையில் அது விண்ணில் வாழும். இரண்டும் ஒவ்வொரு விதத்திற் சாதனை புரிகின்றன.

பறவைகளில் மிகச்சிறியது கியூபாத் தீவிற் காணப்படும் தேன் சிட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த முரலொலிப் பறவை (Hummin g Blrd) வாலையுஞ் சொண்டையுஞ் சேர்த்து இதன் நீளம் இரண்டே கால் அங்குலம். எடை 1.6 கிராம். பெண் இனஞ் சற்றுப் பெரியவை. முரலொலிப் பறவைகள் மிகவும் விரைவாகச் சிறகடிக்கும். பார்வைக்கு அழகாகவும், சிறகுகள் வனப்பாகவும் இருக்கும். பார்க்கும்போது சிறகின் அசைவு கண்ணுக்குத் தெரியாது. ஒரு நொடியில் 50-75 தடவைகள் இறக்கையை அடிக்கும். பொதுவாகப் பறவைகள் முன்னோக்கிப் பறக்கும். ஆனால் முரலொலிப் பறவை பல்திறன் உள்ளது. முன்னோக்கியும், பின்னோக்கியும், பக்கவாட்டிலும் அதனாற் பறக்க முடியும். சில சமயம் அசைவற்று வானில் நிலையாக மிதக்கவும் முடியும். வேறு ஒரு பறவைக்கும் இத்தகைய திறமை கிடையாது. இறக்கைகளிற் துரித அடியே இதற்குக் காரணம்,

பறவைகள் அதிக உயரம் பறப்பதில்லை. சுமார் 900-950 மீற்றர் உயரத்திற் சாதாரணமாகப் பறக்கின்றன. சில பறவைகள் வலசை போகும்போது மிக உயரத்திற் பறக்கின்றன. பறவைகளில் ஆகக்கூடிய உயரத்திற் பறப்பவை இமாலயப் பகுதியில் வாழும் வாத்துக்கள். இவை மலைத் தொடருக்கு மேலாற் பறக்கின்றன. 29 நவம்பர் 1973 இல் மேற்கு ஆபிரிக்காவின் மேல் 37,000 அடி உயரத்திற் பறந்த விமானத்துடன் றஷல் இன வல்லூறு ஒன்று மோதியுள்ளது. 9 டிசம்பர் 1967 இல் ஐஸ்லாந்து விமானக் கட்டுப்பாட்டு நிலைய ராடர் திரையில் 20,000 அடி உயரத்திற் பறந்த 30 அன்னப் பட்சிகள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

பார்வைத் திறன் பறவைகளின் உயிர் வாழ்வுக்கு அத்தியாவசியம். பறவைகளிற் கழுகுகளுக்குப் பார்வைத் திறன் மிக அதிகம். கழுகுகளின் கண்கள் முற்புறத்தில் அமைந்து நேராக முன்னுக்குப் பார்க்க உதவுகின்றன. 3-5 கி. மீ உயரத்திற் பறந்தபடி தரையில் உள்ள சிறு பிராணிகளை அவை அவதானிக்கின்றன. வேகமாக இறங்கி அவற்றை இரை ஆக்குகின்றன. பார்வைத் திறனுக்கு கழுகுப் பார்வை என்ற ஒப்புவமை உண்டு.

வீட்டுப் புறா 1,000 மைல்களுக்கு அப்பால் விட்டாலும் வதிவிடந் திரும்பிவிடும். இத் திறனை ஆராய்ந்த விஞ்ஞானிகள் புறாவின் தலையிற் திசைகாட்டி போன்ற அமைப்பு இருப்பதாகக் கருதுகின்றனர். இக்கருவி எவ்வாறு இயங்குகிறது என்று அவர்களாற் கூற முடியவில்லை. இவற்றின் தலையினுட் தனிவகையான இரும்புத் துணுக்குகள் உள்ளன என்று விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். இதற்கு மக்னெற்ரைற்(Magnetite) என்று பெயர். இவை புவியின் காந்தப் புலத்துடன் இணைந்து புறாக்களுக்குத் திசையை உணர்த்தி வீடு திரும்ப உதவுவதாகக் கூறுவோரும் உளர். சூரியனின் நிலையைக் கொண்டும் அது திசையை அனுமானிப்பதாகவுந் தெரிவிக்கப்படுகிறது. நாகரிகந் தொடங்கிய நாட்டொட்டுப் புறாக்கள் மனிதருக்குச் செய்தி பரிமாறும் ஊடகமாக உதவுகிறது. இரண்டாம் உலக யுத்தத்திலுந் துருப்புக்களுக் கிடையிற் செய்திக் காவிகளாக அவை செயற்பட்டுள்ளன.

(வளரும்)

★

## காற்றுக் கட்டுப்படுத்தற் கருவி

*காற்றழுத்தங் குறைந்த ரயர்கள் தமது பயன்பாட்டுக் கால வரையறைக்கு முன்பே பயனிழப்பதுண்டு. காற்றழுத்தக் குறைவான ரயர்கள் பெருமளவான வீதிவிபத்துக்களுக்கும் காரணியாகின்றன. எம். அன்ட். ஈ. நிறுவனம் பிளசன்றவில்லி நகரத்தில் செயற்பட்டுவருகிறது. இந்த நிறுவனம் இப்பொழுது '' வால்வ்முடி '' ( Valve Cap ) ஒன்றைக் கண்டுபிடித்துச் சந்தையில் விற்பனைக்கு விட்டிருக்கிறது. இதற்கு வழங்கும் பெயர், '' ரயர்செக் '' என்பதாகும். உங்கள் கார் ரயர்களுக்கு வேண்டிய காற்றை ஏற்றியபின் '' ரயர் செக் '' புரியை வால்வ் தண்டின்மீது பூட்டி விடுங்கள். போதியளவு காற்றை அடித்ததும் '' ரயர் செக் '' பச்சைவிளக்கைக் காட்டும். ரயர் வேண்டிய காற்றழுத்தத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதை, சிவப்புவிளக்கினால் அது தெரிவிக்கும். 25 தொடக்கம் 50 இறாத்தல் காற்றழுத்தம் ( Air Presusre) தேவைப்படும் கார்களுக்கு '' ரயர் செக் '' சமய சஞ்சீவி. நாலு ரயர்களுக்குமான '' ரயர் செக் '' களின் விலை 13 டொலர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதில் விழுந்தவை

* ஐ. நா. அமைதிப்படையின் பிரெஞ்சுப் பிரிவுத் தலைமை அதிகாரி லெப்ரினன்ட் கேணல் ஜீன் போல் மிச்சல்:
'நாம் திருப்பிச் சுட்டால் சேர்பியர்கள் எம்மைக் கொன்று விடுவார்கள். எனது படையை நான் சரண் அடைய உத்தரவு இட்டது இக் காரணத்திற்காகவே.'

* நான்கு பொஸ்னிய சேர்பியர்களைக் கைது செய்த ஐ. நா. படை அதிகாரியின் அங்கலாய்ப்பு:
'அமைதிப் படை யுத்தக் கைதிகளை வைத்திருக்க முடியுமா? சர்வதேசச் சட்டம் இதை அனுமதிக்குமா? சட்டவல்லுநர்களைக் கேட்க வேணடும்.'

* சல்மான் றுஷ்டி இயற்கை மரணம் எய்தினால் எத்தனையோ பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடும். இப்படிக் கூறுகிறார் ஈரான் ஆட்சியாளர் அலி அக்பார் நூரி.

* சுட்டு வீழ்த்தப்பட்டு, ஆறு நாட்கள் மறைவிலிருந்தபடி தனது சகாக்களுக்கு அமெரிக்க விமானி ஓ கிரேடி கொடுத்த முதற் செய்தி:
'எனக்கு உடல் நலக்குறைவு இல்லை. ஆனால், தாமதம் இல்லாமல் என்னைக் காப்பாற்றுங்கள்.'

* விமானியைக் காப்பாற்றுந் திட்டம்
பொஸ்னியா
விமானியைப் போல் இன்னும் பலர் வெளியேற வரிசையாய் நிற்கின்றனர்.

* சில கைதிகளைப் பொஸ்னிய சேர்பியப் படைகள் விடுதலை செய்துள்ளனர். இவர்களைக் கையேற்ற ஐ. நா. படை அதிகாரி;
'இன்னும் பலர் உங்கள் சிறையில் இருக்கும் வரை நிலைமை சீராக மாட்டாது.'

* ஆறு நாட்கள் காட்டிற் புல்லுத் தின்று உயிர் வாழ்ந்த அமெரிக்க விமானி, கிளின்ரன் கொடுத்த விருந்து உபசாரத்திற் கூறியது:
'ஐயா என்னை மன்னியுங்கள். இலை மரக்கறி மாத்திரம் எனக்கு வேண்டாம்.'

## தவறுதலாக நடந்த ஒட்டப்பந்தய விபத்து





## ஐ. நாவின் துரித நடவடிக்கைப் படை

* அமெரிக்கத் துருப்புக்கள் பொஸ்னியாவிற் தரையிறங்காமற் தடுக்குஞ் சுலபமான வழி. அவர்களைப் பிரிட்டிஷ், பிரெஞ்சு போன்ற ஐ. நா. படைகளின் தலையில் மிதித்துச் செல்ல விடுவது தான் அந்த வழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிய நாட்டில் அணையாத தீ!

" முஸ்லிம்கள் வாழும் காஷ்மீரை இந்து மன்னன் கையிற் கொடுத்த பிரித்தானியர் காஷ்மீர் பிரச்சனைக்கு வித்திட்டுள்ளனர்."

தமிழில் :
கலாநிதி க. சோமஸ்கந்தன்



இஸ்புல் முஜாகுதீனின் தலைவர் மஸ்ட் குல்கான்

கண்ணுக்கினிய காஷ்மீரில் இந்திய இராணுவம் நிலைகொண்டுள்ளது. மத்திய அரசு நியமித்த ஆளுநர் ஜெனரல் கிருஷ்ணாராவ் நிர்வாகஞ் செய்கிறார். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற இசுலாமிய நாடுகளின் ஆதரவு பெற்ற முஸ்லிம் போராளிகள் தனிநாடு கோரிப் போராடுகின்றனர். 1947 இல் பாரதம் இந்தியா பாகிஸ்தானாகப் பிரிந்தபின் காஷ்மீர் காரணமாக இரு நாடுகளுக்குமிடையில் இதுவரையில் இரண்டு யுத்தங்கள் நடந்துள்ளன. இப்போதைய நடப்புக்கள் இன்னுமொரு யுத்தத்துக்கு அடிகோலுகின்றன.

உலகின் இயற்கை அழகு யாவும் ஒருங்கிணைந்த காஷ்மீர் என்று பிரயாணக் கட்டுரைகள் தெரிவிக்கின்றன. சுவிற்சர்லாந்தின் அல்ப்ஸ் (ALPS) மலைகளின் சூழலும், இங்கிலாந்திற் காணப்படும் ஏரிகள், தடாகங்களின் கவர்ச்சியும், மெக்சிக்கோவின் கொச்சிமில்கோ வனப் பிரதேசத்தின் கொள்ளை அழகும் காஷ்மீரில் காட்சிக்கு உண்டு. காஷ்மீரின் மையமான தால் ஏரியில் மிதக்கும் படகு வீடுகளும், மலர் மற்றும் மரக்கறித் தோட்டங்களும் பிறிதொரு நாட்டிற் கிடைப்பது அரிது. பாரங்குறைந்த மரத் தடிகளை இணைத்து அதன் மேல் மண்ணைப் பரப்பி நீர்மேல் தோட்டஞ் செய்கிறார்கள். எங்கு நோக்கினும் வண்ண மலர்கள் நிரம்பிய நாடு காஷ்மீர்.

காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகர் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகச்சக் கரவர்த்தியால் நிறுவப்பட்டுள்ளது. அக்காலத்தில் அவர் 500 தவச் சாலைகளைக் கட்டுவித்ததாகவும் வரலாறு கூறுகின்றது. ஆயிரம் வருடங்களுக்குப் பின் இந்தியா வந்த சீனப் பயணி ஹியூன் சாங் (Hiuen Tsang) அசோகன் கட்டிய தவச் சாலைகளிற் பல அழிந்துவிட்டதாகவும், 100 மாத்திரம் நல்ல முறையில் இயங்கியதாகவுந் தெரிவித்துள்ளார். இந்தியாவின் வட-மேற்கில் அமைந்த காஷ்மீர் 12 ஆம் நூற்றாண்டில் தொடங்கி 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையில் நடந்த முஸ்லிம் படையெடுப்புக்களால் இசுலாம் மதத்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடாக மாறியுள்ளது.

டில்லியை ஆண்ட மொகலாயச் சக்கரவர்த்தி அக்பர் (1556-1605) காஷ்மீரைத் தனது சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாக 1586இல் இணைத்துள்ளார். இதன் பின் டில்லியின் பிடியில் இருந்த காஷ்மீர் 1756 இல் ஆப்கான் மன்னர்களாற் கைப்பற்றப்பட்டுள்ளது. 19 ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் வீறுகொண்டு எழுந்து சீக்கிய மன்னர்கள் காஷ்மீரைப் பஞ்சாப் அரசின் கீழ்க் கொண்டு வந்துள்ளனர். பிரிட்டிசாரின் இந்திய சாம்ராச்சிய விரிவு ஏற்பட்டபோது சீக்கியர்கள் அதற்குப் பலியானார்கள். 1849 ஆம் ஆண்டளவில் முழுப் பஞ்சாப்பும் பிரிட்டிஷ் ஆட்சியின் அங்கமாகி விட்டது. காஷ்மீரும் இதன் காரணமாகப் பிரிட்டிஷ் வசமாகியது.

காஷ்மீரை நேரிடையாக ஆட்சி செய்யப் பிரிட்டிஷார் விரும்பவில்லை. தமக்கு விசுவாசமான திறை செலுத்தக்கூடிய அப்பிராந்தியத்துக்குரிய மன்னனை ஆட்சியில் அமர்த்துவதே அவர்களின் திட்டம். சீகியர்களுக்குத் திறை செலுத்தியவாறு ஜம்முவை (Jammu) ஆட்சி செய்த குலாப் சிங் அவர்களின் கண்ணிற்பட்டான். இவன் தோகிரி இனத்தைச் (Dogra) சேர்ந்தவன். அத்துடன் மதத்தால் இந்து, ஜம்முவின் மக்கள் பெரும்பான்மையாக இந்துக்கள்; காஷ்மீரின் மக்கள் பெரும்பான்மையாக முஸ்லிம்கள். பிரிட்டிசார் காஷ்மீரின் ஆட்சியை ஜம்முவின் கீழ்க் கொண்டுவந்ததால் இன்றைய பிரச்சனைக்கு வித்திட்டுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் ஜம்முவை ஆளுங் காலத்தில் திபெத்தின் ஒரு பகுதியாய் இருந்த லடாக் (Ladakh) மாகாணத்தைக் குலாப் சிங் தனது இராணுவ வலிமையாற் கைப்பற்றியுள்ளான். திபெத் சீனாவுக்குட்பட்டது. லடாக் திபெத்திற்குட்பட்டது. லடாக், ஜம்மு, காஷ்மீர் மூன்றும் குலாப் சிங் ஆட்சியின் கீழ் வந்தபின் பிரிட்டிசார் திபெத்தின் உரிமைகளை ஏற்க மறுத்தனர். பிரிட்டிசார் வெளியேறியபின் இந்தியாவும் அக்கொள்கையைப் பின்பற்றியதால் இந்திய–சீன மோதல் வெடித்தது. சின்கியாங், அக்சாய் சின் போன்ற சீனப் பிரதேசங்கள் காஷ்மீரை ஒட்டியபடி வர லடாக் காரணமாகியுள்ளது.

இன்று முஸ்லிம்கள் வாழும் இடமாக இருப்பினும் முற்காலத்திற் காஷ்மீர் இந்துக்கள் செறிந்து வாழ்ந்த இடமாகும். இந்து மதத்துக்குப் புத்துயிர் ஊட்டிய ஆதிசங்கரர் ஸ்ரீநகரின் மலையிற் சிவனுக்கு ஆலயம் எழுப்பியுள்ளார். சிவனுக்குத் திகம்பரர் என்ற காரணப் பெயர் உண்டு. அதாவது நீலவானத்தை மாத்திரம் ஆடையாக அணிந்தவர். காஷ்மீரின் தவ சிரேஷ்டரான ஒரு பெண் முனிவர் 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சிவனைப் பின்பற்றி ஆடையின்றித் திகம்பரராகவே இவர் வாழ்ந்தவர். கடும் யோக சாதனைகளை நடத்திய இப்பெண்மணி பெருந் திரளான மக்கள் முன்னிலையிற் தீயாகிச் சோதியிற் கலந்துள்ளார். லாலா யோகீஸ்வரி என்ற பெயருடைய இந்து மாது இன்றும் காஷ்மீரில் போற்றப்படுகிறார்.

ஸ்ரீநகருக்கு 29 கிலோ மீற்றர் தெற்கில் சரார்–ஈ–ஷாரீப் என்ற சிறிய நகரங் காணப்படுகின்றது. இங்கு 535 வருடங்கள் பழைமை வாய்ந்த மரத்தினாலான முஸ்லிம் தலங் காணப்படுகின்றது. ஷேக் நூருடீன் வாலி என்ற முஸ்லிம் புனிதரின் உடல் புதைக்கப்பட்டு அதன்மேல் இக்கோயில் எழுப்பப்பட்டுள்ளது. இங்கு முறையிடும் போது குறைகள் தீரும் என்ற நம்பிக்கை முஸ்லிம்களுக்கும், இந்துக்களுக்கும் உண்டு. இவ்வாறான சர்வமத ஆலயம் அண்மையிற் தீக்கிரையாகியுள்ளது. யார் தீ வைத்தார்கள் என்று திடமாகக் கூற முடியவில்லை. ஆனால் பலத்த சந்தேகம் சுற்றுப்புறத்திலுள்ள இந்திய இராணுவத்தினர் மீது விழுந்துள்ளது.

இவ்வருடம் மார்ச் மாதந் தொட்டு மே மாதம் வரையிலான காலப் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட ஆயுதபாணிகளான முஸ்லிம் போராளிகள் சரார்–ஈ–ஷாரீப் நகரில் நிலைகொண்டுள்ளனர். இவர்களைத் தாக்கி அழிக்க 3,000 இந்திய இராணுவத்தினர் நகரைச் சுற்றி வியூகம் அமைத்து முற்றுகையிட்டனர். இரு பகுதியினரும் வெடி பரிமாறியபோது கோயில் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டு சில நிமிடங்களிற் சாம்பராகியுள்ளது. உலக முஸ்லிம்களின் அனுதாபத்தைப் பெறுவதற்காகப் போராளிகளே புனிதஸ்தலத்திற்குத் தீ மூட்டியுள்ளனர். இவ்வாறு இந்தியத் தரப்பிற் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1992 இல் அயோத்தியாவில் பாப்ரி மசூதி அழிப்புக்கு ஒத்துழைப்பு வழங்கிய இந்திய இராணுவம் நாசகார வேலையை நடத்தியுள்ளது. இவ்வாறு போராளிகள் கூறுகின்றனர்.

காஷ்மீர் வாழ் முஸ்லிம்கள் மனதில் யாதொரு ஐயப்பாடும் இல்லை. இந்திய இராணுவமே அழிவுக்குக் காரணம் என்பதை அவர்கள் நம்புகின்றனர். 1993 இல் ஸ்ரீநகரில் உள்ள ஹஸ்றத்பால் மசூதியிற் சரண்புகுந்த போராளிகளை வெளியேற்ற இந்திய இராணுவம் இவ்வாறான முற்றுகையை நடத்தியுள்ளது. தெய்வாதீனமாக வணக்கஸ்தலம் காப்பாற்றப்பட்டுள்ளது. இங்கு நபிகள் நாயகத்தின் தாடி மயிர் ஒன்று பாதுகாத்து வரப்படுகின்றது. அதற்கு ஏதேனும் நடந்திருந்தால் முஸ்லிம் உலகே கொதித்து எழுந்திருக்கும். வாலியின் கோயில் கொழுத்தப்பட்ட தினம் உலக முஸ்லிம்கள் ஈத் பெருநாளைக் கொண்டாடுந் திருநாளாகும். இதனால் மேலதிகக் கொதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆளுநர் கிருஷ்ணாராவ் காஷ்மீர்ப் பிரச்சனைக்கு முடிவு நெருங்கி விட்டது; தேர்தல் நடப்பது ஒன்று தான் பாக்கி என்று அண்மையிற் கூறியுள்ளார். இது பகற் கனவு போற் றோன்றுகிறது. 1990 ஆம் ஆண்டிற் சூடு பிடித்த விடுதலைப் போர் இதுவரையில் 20,000 உயிர்களைக் குடித்துள்ளது. கிட்டத் தட்ட அரை நூற்றாண்டு காலமாகக் காஷ்மீர், பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளின் பிடியில் இரண்டாகிக் கிடக்கிறது. சரார் ஈ ஷாரீப் நகரிற் குழப்பங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. கோயிலின் அண்மையிற் பதுங்கி இருந்த 23 போராளிகள் இறந்துள்ளனர். 1,000 – த்திற்கு மேற்பட்ட கடைகளும், வீடுகளும் தீக்கிரையாகியுள்ளன. பாகிஸ்தானும், இந்தியாவும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டி நிலைமையை மோசமாக்கி வருகின்றனர்.

காஷ்மீர் ஆட்சியை ஒரு முஸ்லிமிடம் பிரிட்டிசார் ஒப்படைத்திருந்தால் அவருடைய பரம்பரையினர் பாகிஸ்தானுடன் இணையத் தீர்மானித்திருப்பர். ஆனால் ஓர் இந்துவிடம் ஒப்படைத்தபடியால் அவருடைய பரம்பரையினர் இந்தியாவுடன் இணைந்துள்ளனர். பாரதத்தைப் பிரிக்கும் பேச்சுக்கள் நடந்தபோது காஷ்மீரைப் பற்றிப் பேசாமல் விட்டது பெருந் தவறு; இவ்வாறெல்லாம் சிந்திக்கத் தோன்றுகிறது. ஆனால், முன்யோசனை என்பது வரலாற்றில் மிகக் குறைவு.

ரைம், மே 22, 1995.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பொது நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்



# மகாதீர் முகம்மதுவின் தலைமையிற் தேசிய முன்னணி அரசு



## மீண்டும் பதவிக்கு வந்துள்ளது.

தமிழில் : கலாநிதி க. சோமாஸ்கந்தன்

6 மில்லியன் மலேசிய மக்கள் தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். ஆசியன் அமைப்பில் முக்கிய இடம் வகிக்கும் மலேசியா தனது அரசியல் உறுதிப்பாட்டை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளது. 70 வயதினரான பிரதமர் மகாதீர் முகம்மது 1981 ஆம் ஆண்டு தொடக்கம் தமது நாட்டின் பிரதமராகப் பதவி வகிக்கிறார். ஏப்ரல் – மே மாதங்களில் இவ்வருடம் கிடைத்த தேர்தல் வெற்றி அவர் இப்பதவியில் நெடுங்காலந் தொடரும் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. தென் - கிழக்கு ஆசியாவில், ஒரு தசாப்தத்திற்கு மேலாக, அண்மைக் காலத்தில் இவ்வாறு பதவி வகிக்கும் பிரதமர் வேறு யாரும் இல்லை என்பது வெளிப்படை.

தேர்தலிற் போட்டியிட்ட எதிர்க் கட்சிகள் நிலை குலைந்துள்ளன, அவர்கள் நெடுங்காலமாகத் தக்க வைத்திருந்த தேர்தற் தொகுதிகளையும் இழந்துள்ளனர். பெனாங் மாகாணம் (Penang) எதிர்க் கட்சிக்கு வாய்ப்பான பகுதி என்ற பார்வையாளர்களின் கணிப்புப் பொய்த்துவிட்டது. 33 அங்கத்தவர்கள் கொண்ட பெனாங் மாகாண சபையில் எதிர்க்கட்சிக்கு ஒரே ஒரு தொகுதியில் மாத்திரம் வெற்றி கிடைத்துள்ளது. மாகாண அவைகள் யாவற்றிலும் இவ்வாறான தோல்வியே எதிர்க் கட்சிகளுக்குக் கிடைத்துள்ளது. தேசிய மட்டத்திலும் எதிர்க் கட்சிகள் மண் கவ்வியுள்ளன. மகாதீர் தலைமை தாங்கும் யும்னோ எனப்படும் தேசிய முன்னணியின் அமோக வெற்றியின் காரணிகள் என்ன ?

தமது அரசில் குற்றம் பிடிக்கக்கூடிய வாய்ப்பை எதிர்க் கட்சிகளுக்கு மகாதீர் ஒருபோதும் வழங்கவில்லை என்பது முக்கிய காரணம். தேசிய நலனை முன்னெடுப்பதில் அவர் காட்டிய அக்கறையும் அதற்காக அவர் அமுலாக்கிய திட்டங்களும் எதிர்க் கட்சிகளை வாய் அடைக்கச் செய்துள்ளன. கடந்த ஏழு வருடங்களில் மலேசியா பெரும் பொருளாதார வளர்ச்சி கண்டுள்ளது. வருடமொன்றுக்கு 8 சதவீதமாக வளர்ச்சி படிப்படியாக உயர்ந்துள்ளது, இதன் நன்மைகளை நாடு முழுவதும் பெற்றுள்ளது. எதிர்க் கட்சிகள் அரசியல் அனுபவம் அற்றவர்கள் இவர்களிடம் அரசை ஒப்படைத்தால் தாம் பெற்ற நன்மைகளை இழந்துவிடுவோம் என்று மக்கள் நம்பினர். யும்னோவின் திட்டங்களுக்குக் கிடைத்த அங்கீகாரம் என்றே தேர்தல் வெற்றியை வர்ணித்தல் வேண்டும்.

ஆசியாவின் பிரபல அரசியல் ஆய்வாளரான லி போய் பிங் பின்வரும் மேலதிக காரணிகளை விபரித்துள்ளார். '' அரசு திறந்த பொருளாதாரத்திற்கும், தனியார் துறை மேம்பாட்டிற்கும் ஊக்கங் கொடுத்துள்ளது, இதன் பலனை இன்று நாடு அனுபவிக்கின்றது '' என்கிறார் பிங். மலேசியா, மலே இனத்தவர்களையும், முஸ்லிம்களையும் பெரும்பான்மையாகக் கொண்டிருப்பினும் சிறுபான்மை இனங்களையும், மதத்தினரையும் விரோதிக்கும் யாதொரு நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை. இனங்களுக்கிடையில் சமத்துவம் பேணுவதிலும், முஸ்லிம் அடிப்படைவாதம் தலைதூக்காமற் தடுப்பதிலும் மகாதீர் முகம்மதுவின் அரசு இனங்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

யும்னோ எனப்படும் ஐக்கிய மலே தேசிய முன்னணியில் (United Malay National Front) ஆறு அரசியற் கட்சிகள் இணைந்துள்ளன, மலேசியா வாழ் சீன மக்கள் கட்சி, சாமிவேலு தலைமையிலான மலேசியன், இந்தியன் காங்கிரஸ் ஆகியவை இவற்றில் முக்கியமானவை. இவை இரண்டும் மலே இனத்துடன் இணைந்து வாழ்வதையும் அரசியல் நெருக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் விரும்புகின்றன. இந்த ஆதரவின் பயனாக இந்த இரண்டு கட்சிகளுக்கும் அமைச்சரவையில் இடங் கிடைத்துள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக மகாதீர் முகம்மதுவின் தனிப்பட்ட குணவிசேடங்களையும் பார்வையாளர்கள் போற்றுகின்றனர். இனத்துவேஷங் காட்டாது எல்லோருடனும் அவர் நல்லுறவைப் பேணுவதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தலுக்கு முன் முன்னணி வெளியிட்ட தேர்தல் அறிக்கையிற் தேசிய மட்டத்திற் கல்வித் திட்டங்கள் மறுசீரமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மலேயை விட வேற்றுமொழி பேசுவோர் நலன் கவனிக்கப்படுமா என்பது கேள்விக்குறியே. மாற்று மொழி பேசுவோர் தேசிய மொழியில் உயர் மட்டக் கல்வியைக் கற்பதிற் திருப்திப்படுகின்றனர். தமிழ் போன்ற மொழி அரச உதவியின்றிச் சுயதேடலாகக் கற்கப்படுகின்றது. அனேகமாக அரச ஆதரவற்ற மொழி நலிவது இயற்கை. சுற்றுச் சூழற் பாதுகாப்பு நடவடிக்கைகள் கூட்டப்படுமென்றும், வரிகள் இயன்றளவு குறைக்கப்படுமென்றும், தொழிலாளர் அடிப்படை ஊதிய உயர்வுக்கான சட்டங்கள் புகுத்தப்படுமென்றும் தேர்தல் அறிக்கை அறியத்தருகிறது. மகாதீர் முகம்மதுவின் கடந்த கால அரசியலை நோக்குங்கால் தேர்தல் அறிக்கை வெறும் வார்த்தை ஜாலம் அல்ல என்பதை மக்கள் அறிவர்.

யாரும் எதிர்பாராத இந்த அமோக தேர்தல் வெற்றியின் தாக்கங்களை ஆய்வு செய்வது நலம். ஆசியன் அமைப்பில் அங்கத்துவம் வகிப்பதையும், உலகளாவிய முசுலிம் ஒருமைப்பாட்டை மலேசியா பேணுவதையும் மக்கள் ஏற்றுள்ளனர். அதே சமயத்தில் நாட்டில் அடிப்படைவாதந் தலை தூக்காமல், இசுலாம் மதத்தின் மேலாதிக்கம் பேணப்படுவதையும் ஆளுங் கட்சி தனது கொள்கையாகக் கொண்டிருக்கிறது.

யும்னோ வெற்றி ஈட்டியிருந்தாலும் வென்ற தொகுதிகளின் எண்ணிக்கை குறைந்திருப்பின் மகாதீர் முகம்மது பிரதமர் பதவியை இழந்திருப்பார். முன்னணியின் இளை



ஞர் அணி 47 வயதான உப-பிரதமர் அன்வர் இப்பிரகீம், பிரதமராவதைப் பெரிதும் விரும்புகின்றது. ஆனால் தேர்தல் வெற்றி மகாதீரின் பதவியை உறுதிப்படுத்தியதோடு அன்வரின் அபிலாசைகளைப் பின்போட்டுள்ளது. சிங்கப்பூர் போன்ற அண்டை நாடுகள் மகாதீர் முகம்மது பிரதமராகத் தொடர்வதையே விரும்புகின்றன. சிங்கப்பூர் பிரதமர் சொக் தொங், இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்தோ போன்றோர் தொலைபேசி இணைப்பின் மூலம் ஒருவரோடு ஒருவர் கலந்து ஆலோசிக்கின்றனர். இதனால் இப்பிராந்தியத்தின் பொது நலமும், உறுதிப்பாடும் நன்கு பேணப்படுகிறது. இன்றைய நூற்றாண்டு முடிவுறும் வரை மகாதீர் முகம்மது மலேசியாவின் பிரதமராகப் பதவி வகிப்பது உறுதியாகி விட்டது.

ஆசியாவீக் மே 05, 1995

★

## டைனோசரின் நிலைபேறான சொந்த ஆற்றல் வெளிப்பட்டது.

காண்டாமிருகத்தின் கொம்புகள் போல டைனோசர்களின் புதை வடிவங்கள் (Fossils) இன்று தாய்லாந்துக் காரருக்கு இலாபந் தரும் வணிகப் பொருளாய் மாறி வருகின்றன. புதை பொருள் ஆராய்ச்சிப் பகுதிகளிலே கண்டெடுக்கப்பட்ட இவை கம்மியர்களால் (Artisans) விலைக்குப் பெறப்பட்டுப் புத்தரின் வடிவமைந்த தாயத்துக்களாக உருவமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு தாயத்தும் 400 டொலர் விலை போகிறது. ஓர் இரவிலேயே இந்தத் தாயத்து வியாபாரத்தில் 1,000 டொலர் கிடைக்கிறது. இது அந்தப் பிரதேசத்தில் ஒரு வருடத்திற் பெறப்படும் வருமானத்திலும் அதிகமாகும். இந்த வியாபாரந் தொடர்ந்தால் டைனோசரின் புதை குழிகள் மிக விரைவில் மறைந்து போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதரை வெறும் மனிதராக்கும் பணி

## “திறந்த கட்டுப்பாடற்ற பொருளாதாரக் கொள்கைகளுக்கு, கட்டுப்பாடு விதிக்கும் ஜியாங் செமின்.”

தமிழில்:
கலாநிதி க. சோமாஸ்கந்தன்

மாவோ இறந்தபின் அவர் வகித்த உயர்பதவிக்கு வந்த ஹுவா குவோ பெங் இரண்டு வருடங்கள் மாத்திரம் நிலைத்தார். மாவோ காலத்தில் பாதுகாப்புப் பிரிவு மூத்த அதிகாரியாகக் கடமையாற்றிய குவோபெங் மக்களையும், சீன இராணுவத்தையுங் கவருந்திறன் இல்லாதவராகக் காணப்பட்டார். இதன் காரணமாக இராணுவ ஆதரவு பெற்ற டெங் சியோபெங் எளிதாக அதிஉயர் பதவியைப் பிடிக்க முடிந்துள்ளது. மக்களைக் கவருந்திட்டங்களை டெங் முன்வைத்தார். மேற்குலகத் தொடர்பையும் திறந்த பொருளாதாரத்தையும் அவர் திட்டமிட்டு வரவேற்றார். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கிற் செல்வந் திரட்டுவது தீதல்ல என்று டெங் கொள்கைப் பிரகடனஞ் செய்தார்.

செல்வந் திரட்டுவது தீதல்ல என்றுஅவர் கூறியது சிலராற் தப்பாக அர்த்தம் பண்ணப்பட்டுள்ளது. முக்கியமாக அவருடைய நெருங்கிய நண்பர்களும், உறவினர்களும் காற்று உள்ளபோதே தூற்ற வேண்டும் என்ற மொழிக்கு அமைவாக பெருஞ் செல்வஞ் சேர்த்துள்ளனர். இவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றி அரச அதிகாரிகள் யாபேரும் இலஞ்ச இலாவண்யம் போன்ற ஊழல் நடவடிக்கைகளில் இறங்கி உள்ளனர். இவ்வகை ஊழல் இன்றைய சீனாவின் மிகப்பெரிய பிரச்சனையாகும். சீனாவில் முதலீடு செய்துள்ள மேற்குலக நாடுகள் இதை நன்கு உணர்ந்துள்ளன. டெங் ஆட்சிக் காலந் தொட்டு அதிகாரிகளுக்கு



பொருளாதார மையமான குவான்டொங் மாகாணத்திற் காணப்படும் சீன உல்லாசப் பயணிகள் – டெங்கின் படத்தின் முன்பாக.

கையூட்டு, கொடுக்காமல் சீனாவில் ஒரு நற்கருமமும் ஆற்ற முடியாதென்பது உலகறிந்த இரகசியம்.

டெங் தனது வயோதிப காலத்திற் பதவியில் அமர்த்திய ஜியாங் செமின் தனக்கு குவோபெங்கின் கதி ஏற்படக்கூடாது என்பதில் மிகவும் அக்கறையாக இருக்கிறார். தனக்கு ஆதரவான தளத்தை அமைப்பதில் அவர் துரிதமாகச் செயற்படுகின்றார். தனக்குத் துணை போகக் கூடியவர்களை இராணுவத்திற் பதவி உயர்வு கொடுத்துள்ளார். ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்தும் சில கவர்ச்சியான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார் எனினும் குடும்பம், அரசியல், இராணுவம் போன்ற தொடர்புகளைப் பயன்படுத்திப் பெரும் பொருள் திரட்டுவது ஆசியா முழுவதற்கும் பொதுவான விடயம். இதிற் சீனா முதலிடம் வகிக்கிறது. டெங்கின் நெடுங்கால நண்பர்களான சில செல்வந்தர்களைப் பதவி இறக்கஞ் செய்ததோடு. சிறையிலும் ஜியாங் செமின் அடைப்பித்துள்ளார். செல்வந் திரட்டுவது தீதல்ல என்ற மகாவாக்கியத்திற்குப் புதிய விளக்கங் கொடுக்க அவர் முனைந்துள்ளார்.

சட்டுப்பாடற்ற சந்தைப் பொருளாதாரம் நாட்டின் கட்டுக்கோப்பைச் சீர்குலைத்துள்ளதாகவும், மக்களின் பாரம்பரியச் சிந்தனைகளைச் சிதைத்துள்ளதாகவும் சின்சுவா என்ற அரச செய்தி ஏடு தெரிவிக்கிறது. இதன் பின்னணியில் செமின் இயங்குகிறார். இது டெங் மீது சுமத்தப்படும் மிகப் பாரதூரமான குற்றச்சாட்டு.

அத்துடன் டெங் வேறு தான்வேறு என்று செமின் காட்டத் துணியும் ஒரு செயற்பாடுமாகும். டெங், மாவோபோன்றமாமனிதர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்பது மக்கள் கருத்து. இதைத் தகர்க்க செமின் விளைந்துள்ளார். டெங் சாதாரண மனிதர்; அவர் விட்ட தவறைத் திருத்துவது எம்கடன், என்ற ரீதியில் செமினின் அண்மைக்காலநவடடிக்கை அமைகின்றது.

செமின் முன்வைக்குங் கொள்கை பழைமைவாதத்தை ஊக்குவிக்குந் தன்மை உள்ளது, மட்டுப்படுத்தப்பட்ட சந்தைப் பொருளாதாரம் என்பது திட்டமிட்ட மேலிட உத்தரவு பெற்ற பொருளாதாரம் என்று கருதலாம். இது மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் பொதுவுடைமைப் பொருளாதாரத்திற்கு நிகர் எனலாம். செமின் ஒரு படி மேலுக்குச் சென்று புராதன கால, கொன்பியூசியஸ் என்ற சீனச் சிந்தனையாளரின் கருத்துக்களுக்கும் முக்கியத்து வங் கொடுத்துள்ளார். கொன்பியூசியஸ் சீனாவின் சோக்கிரட்டிஸ், அவருடைய சித்தாந்தம் அரச பதவியில் இருப்போருக்கு மிகவும் உவப்பான தொன்று. நாட்டிற்கும் அரச பதவியில் இருப்போருக்கும் விசுவாசமாக நடப்பது குடிமக்கள் கடமை என்பது கொன்பியூசியஸ் தத்துவம். மக்கள் யாபேரும் இதைக்கடைப் பிடித்தால் செமின் ஆட்சி குழப்பமின்றி நிலவும்.

செமின் வகுத்த புதிய கொள்கைகள் அவருக்குப் புதிய நண்பர்களைத் தேடிக் கொடுத்துள்ளன. அரச நிறுவனங்களிலும், அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளிலும் வேலை செய்வோர் தனியார் துறையால்முழ்கடிக்கப்படுமோஎன்றுஅஞ்சியதுண்டு. இன்று அவர்கள் செமின் கொடுத்த வாக்குறுதியாற் பலம் பெற்றுள்ளனர். மூடப்பட வேண்டிய 140,000 அரச நிறுவனங்கள் செமினின் கருணையால் மீண்டும் இயங்குகின்றன. 29சீன நகரங்களில் தானியங்கள், மரக்கறி போன்ற உணவு வகைகளுக்கு விலைக்கட்டுப்பாடு புகுத்தப்பட்டுள்ளது. வங்கி நடவடிக்கைகள், கடன்வசதி, கூட்டுறவு ஒன்றியங்கள் போன்றவற்றின் செயற் பாட்டைச் சீராக்கும் சட்டங்கள் புகுத்தப்பட்டுள்ளன. சுருக்கமாகச் சொல்லப் போனால் டெங் அவர்களுக்கு மிகவும் பொருளாதாரக் கோட்பாடுகள் யாவும் ஒதுக்கப்படுகின்றன. செமின் வெற்றி அடைவாரா என்று டெங் இறந்த சில காலத்தின் பின்தான் சொல்ல முடியும்.

நியூஸ்வீக் மே 22, 1995

★

## தூசுகளுக்கு எதிரான வெளிச்சத்தின் யுத்தம்

பிரான்சியர்கள் இப்பொழுது தங்கள் புராதன சரித்திர சம்பந்தமான சாதனங்களிற் தூசுகள் பட்டு மாசுபடுத்தாமல் வைத்திருக்க ஒரு வழியைக் கடைப்பிடிக்கிறார்கள். அப்படிச் செய்யும்போது வழமையாக ஏற்படும் ஒட்டைகள், ஓடிசல்கள் எதுவும் அத்தகைய விலைமதிப்பற்ற புராதன கலைப் பொருள்களிற் சேதத்தை ஏற்படுத்த மாட்டாது.

''ஆர்ட்லைற்'' அதாவது சித்திர வெளிச்சம் என்ற இப் பொறி திட நிலையிலான இன்பிறாறெட், ''லேசர்க் கதிர்களை அதற்குரிய கை போன்ற குழாய் மூலம் பாய்ச்சுகிறது. அசுத்தமான படைகள் மீது இத்தாக்குதல் நடத்தப்படும்போது ஒவ்வொரு லேசர்க் கதிர்களும் வெளிச்சத்தை உறிஞ்சுகின்றன. அத்துடன் திரும்பவும் பிரதிபலிக்கின்றன. அப்போது கற் பொம்மைகள் மற்றும் சித்திரங்கள் போன்றவற்றின் மீதுள்ள அசுத்தங்கள் தம்பாட்டிலேயே சுழன்று போகின்றன. தொடர்ந்து செய்த பரிசோதனைகளாலும், எக்ஸ் கதிர் படப் பிடிப்புக்களாலும் அக் காட்சிப் பொருள்களுக்கு இந்த லேசர்க் கதிர் துப்புரவு மூலம் பாதிப்பு ஒன்றும் ஏற்படுவதில்லை எனவுங் கண்டறியப்பட்டுள்ளது.

பலப்பல வர்ணங்கள் பூசப்பட்ட காட்சிப் பொருள்களையும் இப்படித் துப்புரவு செய்யலாம். ஏனென்றால் இச் செய்கையினால் மேற்பரப்புக்களிற் பிரதித் தொழிற்பாடு எதுவும் ஏற்படுவதில்லை. அமினியத் தேவாலயத்திலும், பாரிசின் றொட்டடாமிலுள்ள புராதன சிலைகளிலும் இந்த ஆர்ட்லைற் கலவை செய்யப்பட்டுள்ளது.

ஹொலிவூட்டில் அண்மையில் நடைபெற்ற ஆரவாரங்கள் ஒரு புறமிருக்க அதனுடைய பாடல்களைத் தொலைபேசியிற் கேட்டுக் கொள்ள முடியாமல், தொழில் நுட்பக் குறைபாடு தடை செய்துள்ளது. உதாரணமாக நூறு தடவைக்கும் அதிகமாக இயந்திரத் துப்பாக்கிகள் விட்டுவிட்டு இயங்கி ஓசைப்படுத்த அதற்குத் தக்கபடி மின் வெளிச்சத்திலும் துடிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. இதிலிருந்து கிடைத்த தரவுகள் மூலம் நுண்ணிய மின் கடத்திகளால் ஏதாவது நடந்திருக்கலாம் என்பது தெரிய வந்தது.

இதனைத் தவிர்க்கும் முகமாக ஒக்றிட்ஜ் தேசிய ஆய்வு கூடத்திலும், வேறு இடங்களிலும் வெளிச்சம் ஊடுருவக்கூடிய செரமிக் தயாரிப்புக்கள் வடிவமைக்கப்படுகின்றன.

இது முதலில் மின் ஆளிகளை இயங்கச் செய்து முதலில் லேசர்த் துண்டுகளை வெட்டுகிறது. அத்துடன் இலக்கங் காட்டுந் துடுப்புக்கள் நிறுத்தப்படுகிறது. நுண் கடத்தி கம்பி வலைகளுக்கு இப்போது லிதியம் நைபோ பேற் படிகங்களைப் பாவிக்கிறார்கள். அடிக்கடி பாவிக்கும் போது அதன் சக்தி இழப்பாகிறது. ஆனால் இப்போது பயன்படுத்தப்படும் புதிய பொருள் நீண்டகாலப் பாவனைக்கு ஏற்றது. அருதக் களிமண் தகடுகள் சவ்வு போன்றளவுக்கு மெல்லியவை. மிக விரைவாக மின் ஆளியில் இயக்கத்தையும், இயக்கமின்மையையுஞ் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலகம் எதிர்பார்த்த உடைவு ஏற்படவில்லை.

## "அமெரிக்காவின் நட்புறவைத் தென் கொரியர்கள் சந்தேகிக்கின்றனர்."

வடகொரிய அரச அதிகாரம் யாவும் இளையவர் கையிற்றான் இருக்கின்றன. ஜூலை 08. 1994 இல் கிம் இல்சுங் இறந்தபின் நாட்டிற் பாரதூரமான மாற்றங்கள் அல்லது குழப்பங்கள் நேரலாம் என மேற்குலகம் எதிர்பார்த்தது. அப்படி ஒன்று நடைபெறவில்லை, மாற்றங்கள் மிக அமைதியாக ஏற்பட்டுள்ளன. கிம் ஜொங் இல் ஆட்சிபீடத்தில் உறுதியாக அமர்ந்துள்ளார். எனினும் அவரை அரச வைபவங்களிலும் பொது நிகழ்வுகளிலுங் காண்பது அரிதாக இருக்கிறது. தொலைக் காட்சியில் அவர் தோன்றினாலும் அவருடைய பேச்சைக் கேட்கமுடியாமல் இருக்கிறது. பேசத் தயங்கும் ஒரு அரசியற் தலைவர் என்ற சிறப்புப் பெயர் அவருக்கு நாளடைவிற் கிடைத்துள்ளது.

மூத்தவர் வயோதிபங் காரணமாக இறந்தாலும் அவருடைய ஆவி நாட்டையும், மக்களையும் மகனையுங் காத்து வழி நடத்துவதாக வட கொரியர்கள் நம்புகின்றனர். மதங்களுககுரிய தீவிரத்துடன் காட்டுத்தீ போன்ற வேகத்துடன் இந்த நம்பிக்கை பரவுகின்றது. தொடர்புச் சாதனங்கள் இந்த விதச் சிந்தனையை இடைவிடாது வளர்க்கின்றன. அப்பாவுக்குப் பிள்ளை தப்பாமற் பிறந்துவிட்டதாகவும், இருவரும் ஒருவர் தான் என்ற ரீதியில் பிரசாரம் நடைபெறுகிறது. தந்தையின் ஆத்மா தனயனில் வாழ்வதாகவும் மக்கள் நம்ப வைக்கப்பட்டுள்ளனர். தந்தை, மகன், தந்தையின் ஆவி என்ற ஒரு புதுவித திரித்துவம் இந்த நாட்டில் வேர் விட்டுள்ளதை அவதானிகள் கவனித்துள்ளனர்.

சென்ற ஒக்ரோபரில் செய்யப்பட்ட ஒப்பந்தம் இன்றுவரை செயற்பட ஆரம்பிக்கவில்லை. அணு உலைகளைச் செயலிழக்கச் செய்வதாக வடகொரியா செய்த உடன்படிக்கை நிறைவேற்றப்படவில்லை. நாலு பில்லியன் டொலர் பெறுமதியான குண்டு தயாரிக்க இயலாத உலையை ஒப்பந்தத்தின் பிரகாரம் அமெரிக்கா, ஜப்பான், தென்-கொரியா ஆகிய நாடுகள் வட-கொரியாவுக்கு அனுப்பமுன் முரண்பாடுகள் கிளம்பியுள்ளன. குறித்த அணு-உலை தென்-கொரியத் தயாரிப்பாகும். அமெரிக்கா அல்லது ஜப்பான் தயாரித்த பொருள்தான் தமக்கு வேண்டுமென வடகொரியா அடம்பிடிக்கின்றது. தென்-கொரியா தமது எதிரியாம், எதிரியின் தயாரிப்பு வேண்டாம் என்பதே வட கொரிய நிலைப்பாடு.

மூத்தவர் தனது இறுதி நாள்களில் வகுத்த அரசியற் தந்திரம் இப்போது சிறிதளவு பலன்தர ஆரம்பித்துள்ளது. தென் - கொரியாவின் நெடுங்கால நண்பன் அமெரிக்காவைப் பிரித்து வட-கொரியாவின் சகா ஆக்குவதே அந்தப் பரந்துபட்ட உபாயம். தென்- கொரியாவுடன் பேச மறுக்கும் வடகொரியத் தலைவர் அமெரிக்காவுடன் பேரம் பேசச் சம்மதித்துள்ளார். அமெரிக்காவின் றொபேட் கலூச்சி சென்ற ஒக்ரோபர் மாத ஒப்பந்தத்தின் கர்த்தா. இவருக்கு மறைமுக ஊக்கமும், ஆதரவும் வழங்கிய வடகொரியா அமெரிக்க வர்த்தகத்தையும் முதலீட்டையும் வரவேற்றுள்ளது. இதன் காரணமாக அமெரிக்காவின் பாரிய தொலைத்தொடர்பு நிறுவனம் ஏரி அன் ரீ வடகொரியாவுக்கு வருகை தந்துள்ளது. கார் மற்றும் வாகனத் தயாரிப்பு நிறுவனமான ஜெனரல் மோட்டர்ஸ் வடகொரியாவிற் பரீட்சார்த்தமாகத் தனது தொழிற்சாலையைத் திறக்க இருக்கிறது. இவற்றை மனதில் வைத்து தென் கொரிய அரசியல் விஞ்ஞானியான பேராசிரியர் யாங் சூங்சுல் ருஷ்யாவையும் நண்பனாகக் கணிக்க வேணடிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.



அண்மையில் நடந்த பள்ளிப் பிள்ளைகள் விழாவில் வட-கொரியத் தலைவர் கிம் ஜொங் இல் தனது படத்தை மாத்திரம் அனுப்பி இருந்தார்.

இன்னுமோர் அமெரிக்க நிறுவனமான எம். சி. ஐ. வடகொரியாவுக்குச் செய்மதி மூலம் தொலைத் தொடர்பு ஏற்படுத்தும் உதவியை வழங்கவுள்ளது. அமெரிக்கர்களின் இந்த வகை நடவடிக்கைகள் தென் கொரியர்களைக் கிலேசமுறச் செய்துள்ளது. அண்மையிற் தென் கொரியத் தலைநகர் சென்ற றொபேட் கலூச்சி அவர்களின் பயத்தைப் போக்கும் விதத்தில் அமெரிக்காவின் நட்பு நிரந்தரமானது என்றுள்ளார் ஆனால் தென்- கொரியா இதை நம்புவது கடினம். ருஷ்யாவிடமிருந்து பெருந்தொகைப் போர் ஆயுதங்களைத் தென் கொரியா கொள்வனவு செய்ததோடு வேறு பல வர்த்தக ஒப்பந்தங்களையும் அது செய்துள்ளது. அமெரிக்க -தென் கொரிய உறவுகள் கசந்துள்ளதை இது கோடிட்டுக் காட்டுகிறது.

நியூஸ்வீக், மே 22, 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்கொலைப் போராளி சின்னபின்னமாக்கிய இஸ்ரேலிய நகரின் படம்.

# ஏலாத் தன்மையால் ஏளனம்

## "தற்கொலைப் போர் முறையின் ஆத்மீகச் சிறப்பை உணராத மேற்குலகம் கீழ்த்தரமான பிரசாரத்தில் இறங்கி உள்ளது."

தமிழில் :
**கலாநிதி க. சோமாஸ்கந்தன்**

இஸ்ரேலின் நலன் பேணும் நட்பு நாடாக அமெரிக்கா விளங்குகிறது. பெரு நிதியை வாரி வழங்குவதோடு மேலதிகப் பாதுகாப்புப் பொறுப்பையும் அமெரிக்கா ஏற்றுள்ளது. அதன் இன்பதுன்பங்கள் தன்னைச் சார்ந்ததாக அமெரிக்க வெளியுறவுக் கொள்கை அமைகின்றது. யூதர்களுக்கு எதிராக, பாலஸ்தீனிய அரபுக்கள் நடத்துந் தற்கொலைத் தாக்குதல்கள் இரு நாடுகளுக்கும் முன்பு சந்தித்திராத புதிய அனுபவமாகத் தோன்றுகிறது. செய்வதறியாது திகைக்கும் நண்பர்கள் இருவரும் தற்கொலைப் போராளிகளை எள்ளி நகையாடுவதிற் கவனஞ் செலுத்துகின்றனர். அமெரிக்க பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் இவ்வகைப் போர் முறையின் ஆத்மீகச் சிறப்பை உணராது பரிகாசம் பண்ணித் தூற்றுவதில் ஈடுபாடு காட்டுகின்றன.

ஒப்பந்தம் என்ற பந்தத்திற் சிக்க வைத்துப் பி. எல். ஓ. அமைப்பை ஏமாற்றுவதில் இஸ்ரேல் பெருமளவு வெற்றி கண்டுள்ளது. முன்னேற முடியாத ஸ்தம்பித நிலைக்கு வந்த பி. எல். ஓ. வுக்கு வேறு வழி கிடைக்கவில்லை. சமாதானங் கிடைத்ததாகப் பிரசாரஞ் செய்தால் உலகின் நிதி உதவி கிடைக்குமென அரபாத் கணக்கிட்டார். எதிர்பார்த்த பெரு நிதி வரத் தவறியதும், வந்த சிறு நிதி முறைகேடாக விரயமானதும் நாம் அறிந்ததே. அதே வேளையில் யூதக் குடியேற்றங்களைத் தயவு தாட்சண்யமற்று நடத்தி, பாலஸ்தீனியர்களின் நிலத்தைச் சூறையாடுந் திட்டம் நடைமுறைப் படுத்தப் படுகிறது. இதைத் தடுக்க அரபாத்தால் முடியவில்லை.

பாலஸ்தீன நாடு பிறக்கும், அதன் தலை நகரம் கிழக்கு ஜெருசலேம் என்று அரபாத் அடித்துக் கூறி வருகிறார். ஆனால், அண்மைக் காலக் குடியேற்றங்கள் இங்கு தான் நடத்தப்படுகின்றன. தம் மக்கள் வாழாத நகர் எவ்வாறு தலைநகராக முடியும்? ஒப்பந்தத்தை நிராகரிக்க முடியாதவாறு அமெரிக்க இஸ்ரேல் கூட்டுச் சதி பி. எல். ஓ வைக் கட்டிப் போட்டிருக்கிறது. இஸ்ரேலின் ஏமாற்று வித்தையையும், பி. எல். ஓவின் கையாலாகாத் தன்மையையும் இளம் பாலஸ்தீனியர்கள் உணர்ந்துள்ளனர். தங்களுக்கு இஸ்ரேல் மாத்திரமல்ல அரபாத் நிர்வாகமும் பரம வைரியாக அமைவதை அவர்கள் அவதானித்துள்ளனர். அவர்களுடைய போராட்டம் இந்த இரு எதிரிகளையும் எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

அரபாத் நிர்வாகத்தைக் கொண்டே இளம் பாலஸ்தீனியர்களைக் கொடூரமாக நசுக்கும் அரசியற் தந்திரம் இஸ்ரேலிடம் உண்டு. எல்லாம் ஒப்பந்தத்தின் மகிமை. தனது நிர்வாகத்தையும், தனது எதிர் காலத்தையும் பாதுகாக்கத் தமது இனத்தவரையே அழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரபாத் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. கொதித்தெழுந்த இளைஞர்கள் தியாகத் தீயிற் குதிக்கத் தயாராகி உள்ளனர். மரபு யுத்தம் எடுபடா நிலையில் வேறு நாட்டில் இவ்வகைத் தற்கொலைப் போர்முறை வளர்ச்சியைக் கேள்விப்பட்டுள்ளனர். இசுலாம், மத வைராக்கியத்தையும், தியாகத்தையும் வலியுறுத்தும் வீரஞ் செறிந்த இளந் தலைமுறையினருக்கு துணை போவது இயற்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்



தற்கொலைப் போர் முறையை ஏளனஞ் செய்யும் இஸ்ரேலிய அமெரிக்க மக்கள் தொடர்புச் சாதனங்கள் தமது யுக்தியை இரு வகைப்படுத்தியுள்ளன. மனிதக் குண்டைத் தயார் செய்வதிற் பெருமளவு மூளைச் சலவை நடத்தப்படுவதாகக் குறை கூறுகின்றன. மறுக்க முடியாத விதத்தில் வாதங்களை இளைஞர்கள் மீது பிரயோகித்துச் சுய அழிவுக்குத் தூண்டுவதாகவுங் குற்றஞ் சாட்டுகின்றன. பிறர் தூண்டுதல் இன்றி இனப்பற்று, நாட்டுப்பற்றுப் போன்ற மேலான அம்சங்கள் இருப்பதை அவை மறுத்துள்ளன. இளைஞர்களை வலுக் காட்டியமாகத் தவறான வழியில் நடத்தி, பயங்கரவாதம் வளர்க்கப்படுவதாகவும் சஞ்சிகை வாயிலாகத் தெரிவிக்கின்றன.

இரண்டாவதாக இசுலாமிய மத நூல்களின் சில பகுதிகளுக்கு அழுத்தங் கொடுத்துப் பரலோகத்தில் இகலோகத்திலுங் கூடிய இன்பங்கள் இருப்பதாகப் பிரசாரங்கள் நடக்கின்றன. இவ்வாறு மேற்குலகப் பத்திரிகைகள் மீண்டும் மீண்டுங் கூறிப் பொய்யை மெய்யாக்கப் பார்க்கின்றன. இறந்த போராளிகள் சுவர்க்கஞ் செல்வதாகவும், அங்கு பல வித சுக போகங்கள் காத்திருப்பதாகவுந் தெரிவிக்கின்றன. இளைஞர்கள் மனதை மாற்றவுந் தற்கொலைக்குத் தூண்டவும் இந்த வகை வாக்குறுதிகள் கொடுக்கப்படுவதற்கு யாதொரு ஆதாரமும் இல்லை. ஒரு புனிதமான அர்ப்பணிப்பை எதிர்கொள்ள முடியாத நாடுகள் கேவலமான பிரசார யுக்திகளைக் கையாண்டு தமது தோல்வியை நிரூபிக்கின்றன.

*நியூஸ்வீக், ஏப்ரல் 24, 1995.*

★



*இராட்சத லொறிகள் புறப்படத் தயாராய் நிற்கின்றன.*

# பாதை திறப்பும், அதன் பலாபலன்களும்.

## சந்தைப் பொருளாதாரத்தின் புதிய பரிமாணம்.

**"ஆப்கான் வர்த்தகர்கள் நடத்தும் பாரிய கடத்தல்கள் பாகிஸ்தான், ஈரான், மத்திய ஆசிய நாடுகள் யாவற்றையும் பாதிப்ப தோடு பெருஞ் சர்வதேசத் தலையிடி ஆகவும் மாறியுள்ளது."**

*தமிழில்:*
கலாநிதி க. சோமாஸ்கந்தன்

கடல் எல்லை இல்லாத ஆசிய நாடுகளில் ஆப்கானிஸ்தான் ஒன்றாகும். 1950 இல் சர்வதேச ஒப்பந்தம் மூலம் பாகிஸ்தானின் கராச்சித் துறைமுகத்தை ஏற்றுமதி, இறக்குமதிக்குப் பயன்படுத்த ஆப்கானிஸ்தான் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த ஒழுங்கு ஐ. நாவின் அங்கீகாரத்துடன் செய்யப்பட்டுள்ளது. தனது இறைமைக்குட்பட்ட வசதியைப் பிறிதோர் நாட்டுடன் பங்கிட பாகிஸ்தான் விரும்பியதற்கு, சில காரணங்கள் உண்டு. இரு நாடுகளும் பொது எல்லையைக் கொண்டவை. அத்துடன் மதக்கோட்பாடுகளும் சமனானவை. ஆப்கானிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களிற் தலையிடவும், அதைத் தன் ஆணையின் கீழ்க் கொண்டு வரவும் துறைமுக உதவி வாய்ப்பு அளிக்கும் என பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது. இன்று நிலைமை வித்தியாசமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. பாகிஸ்தானின் பொருளாதார உறுதிப்பாட்டைச் சீர் குலைக்கும் காரணிகளில் ஒன்றாக இந்தச் சலுகை இடம் பெறுகின்றது.

மேற்குறித்த சர்வதேச ஒப்பந்தத்தின்படி ஆப்கான் வர்த்தகர்கள் கராச்சி மூலம் இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு சுங்கத் தீர்வை கிடையாது. பாகிஸ்தானுக்கு இந்த வகையில் வருமானங் கிடைக்க வாய்ப்பில்லை. இறக்கப்பட்ட பொருள்கள் துறைமுகத்தில் வைத்து, சீல் இடப்பட்டபின் ஆப்கானிஸ்தானுக்கு அப்புறப்படுத்தல் வேண்டும். அப்பொருள்கள் பாகிஸ்தானில் விற்பனை செய்வது ஒப்பந்தத்தின்படி தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் நடப்பதென்ன? இரு நாட்டு எல்லை நகரங்களான கந்தகார், சிமின் பல்டோக் போன்றவற்றிற்குப் பொருள்கள் போய்ச் சேர்ந்தபின் மீண்டும் பாகிஸ்தானுக்குக் கடத்தப்படுகின்றன. பாகிஸ்தான் வர்த்தகர்கள் இறக்குமதி செய்யும் பாவனைப் பொருள்களிலும் மலிவான விலையில் ஆப்கான் இறக்குமதிகள் கறுப்புச் சந்தையிற் கிடைக்கின்றன. உருது மொழியிற் பாரா ( Bara ) என்ற பெயருடன் ஆப்கான் பொருள்கள் விற்பனையாகும் சந்தைகள் பாகிஸ்தானின் நகரங்களிற் காணப்படுகின்றன.

பாகிஸ்தான் வர்த்தகம் விழ்ச்சி கண்டுள்ளது. அரசு வருவாய்க் குறைவால் நலிந்துள்ளது. ஜப்பான், ஜேர்மன் நிறுவனங்களுடன் இணைந்து பாகிஸ்தான் முதலீட்டாளர்கள் தொழிற்சாலைகளைத் திறந்துள்ளனர். இந்தத் தயாரிப்புக்கள் விலை போகாமல் முடங்கிக் கிடக்கின்றன. கராச்சியில் வேறு காரணங்களுக்காகக் குழப்பநிலை நிலவுகின்றது. இத் தொழிற்சாலைகளிற் பெரும்பாலானவை கராச்சியிற் காணப்படுகின்றன. தொடர்ந்து நட்டம் ஏற்படுவதால் அவை மூடப்படுங் கட்டத்தை நெருங்கிவிட்டன. இதன் விளைவுகள் பாரதூரமானவை என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஆப்கான் வர்த்தகர்கள் நடத்தும் கடத்தற்றொழில் அரசுகளை மிரட்டும் அளவுக்குச் சக்திவாய்ந்ததாக இருக்கின்றது. இன்று தலிபான் இயக்கம் ஆப்கான் வர்த்தகர்களின் இலாபத்திற்காக உழைக்கத் தொடங்கியுள்ளது. அவர்கள் கொடுக்கும் பெருநிதியிற் தலிபான் இயக்கம் சுயமாகப் பாகிஸ்தான் உதவியையோ, அமெரிக்க சலுகைகளையோ நம்பியிராமல் இயங்கத் தொடங்கியுள்ளது. வர்த்தகப் பாதைகளைத் திறந்து பொருள்கள் ஏற்றிச் செல்லும் கப்பல் போன்ற சரக்கு லொறிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் பணியில் தலிபான் ஈடுபடுகின்றது. இரு பகுதியினரும் புரிந்துணர்வுடன் ஆதாயமே குறியாகச் செயலாற்றுகிறார்கள்.

பாகிஸ்தானில், திறைசேரி உயர் அதிகாரி பின்வருந் திடுக்கிடுஞ் செய்தியை வெளியிட்டுள்ளார். இவ்வருடந் தொடங்கி மே மாதம் வரையிலான காலப் பகுதியிற் பாகிஸ்தான் தனது வருவாயில் 40சத வீதத்தைக் கடத்தற்காரர்களின் செயற்பாட்டால் இழந்து விட்டது. நிலைமை கட்டுக்கடங்காமற் போய்விட்டதாகவும் அவர் தெரிவிக்கிறார். வருடமொன்றுக்கு 100 பில்லியன் பாகிஸ்தான் ரூபா பெறுமதியான கடத்தல் வியாபாரம் நடப்பதாக, திறைசேரிக் கணக்குகள் தெரிவித்தாலும் உண்மையான மதிப்பீடு நாலு மடங்குகூடுதலாக இருக்கலாமெனச் சர்வதேச ஆய்வுகள் கூறுகின்றன.

மறுவளத்திற் பாகிஸ்தான் மக்களுக்கு அத்தியாவசியமான உணவு வகைகளும், ஆப்கானிஸ்தானுக்குக் கடத்தப்படுகின்றன. தட்டுப்பாடும், விலையேற்றமும், பணவீக்கமும் இங்கு காணப்படுகின்றன. இப்போது கடத்தல்,புதிய சந்தைகளைத் தேடி ஈரானுக்கும், மத்திய ஆசியாவின் 5 குடியரசுகள் வரை சென்றுள்ளன. ஜேர்மனி, ஜப்பான் ஆகியவற்றில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இராட்சத லொறிகள் 'மேலதிக அதிர்ச்சித் தாங்கிகள் பொருத்தப்பட்டு, கராச்சி துறைமுகத்தில் ஆரம்பித்து தெற்கு ஆப்கானிஸ்தான் ஊடாக ஈரானுக்கும், துர்க்மெனிஸ்தானுக்கும் செல்கின்றன. இன்னுமொரு நெடுஞ்சாலை கராச்சியில் ஆரம்பித்துப் பாகிஸ்தானின் கறுப்புச் சந்தை மையமான பெஷாவர் வரை சென்று அங்கிருந்து காபுல் தலைநகரை அடைந்தபின் வடக்கே உஸ்பெக், தாஜிக் குடியரசுகளுக்குச் செல்கின்றது.

இந்த லொறிகள் சென்றடையும் நாடுகள் ஒன்றிலாவது சுங்கத் தீர்வை விதிக்கப்படுவதில்லை. ஆப்கான் வர்த்தகர்கள் கொடுக்கும் இலஞ்சம் தீர்வை விலக்கு அளிக்க உதவுகின்றது. இன்று போரால் சின்னபின்னமான ஆப்கானிஸ்தானிற் பெருந்தொகையினரின் பிழைக்கும் வழியாக கடத்தல் நிலவுகின்றது. ஓட்டிகளாகவும், எடுபிடிகளாகவும் பலர் காலம் போக்குகின்றனர். பாகிஸ்தான் உயர் அதிகாரிகளும், ஆப்கான் வர்த்தகர்களிடமிருந்து கையூட்டுப் பெறுவதாக அண்மையிற் செய்திகள் வெளிவந்துள்ளன. கராச்சித் துறைமுகத்தில் ஆப்கான் வர்த்தகர்களுக்கு வரும் பொருள்கள் துரித கதியில் இறக்கப்படுவதற்கு இதுவே காரணமாகக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தான் வர்த்தகர்களும், முதலீட்டாளர்களும் அடிக்கடி செய்யும் முறைப்பாடு பலன் தரத் தொடங்கியுள்ளது. 1950 ஆம் ஆண்டு தீர்வையற்ற இறக்கு மதிக்கு வழி செய்துள்ளது. இப்போது பாகிஸ்தான் ஒரு தலைப் பட்சமாக 15 வகைப் பொருள்களின் இறக்குமதிக்குத் தடை விதித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் தேசிய மட்டத்தில் மின்சார இணைப்புக்கள் கிடையாது. ஆனால் அவர்கள் பெருந் தொகையான மின்சார உபகரணங்களையும், கணனிகளையும், மிக உயர்தர அச்சு இயந்திரங்களையும் கராச்சி மூலம் இறக்குமதி செய்கிறார்கள். ஒரு சர்வதேச ஒப்பந்தத்தை எவ்வாறு வர்த்தக சமூகம் துஷ்பிரயோகம் செய்கிறது என்பது இத்தாற் புலப்படும்.

அதே சமயத்திற் பாகிஸ்தான் வர்த்தகர்களுக்கு உதவும் நோக்கில் 32 விதப் பொருள்களுக்குச் சுங்க வரி குறைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாகப் பாகிஸ்தான் இறக்குமதியாளர்கள் கடத்தற் காரர்களின் சந்தையுடன் போட்டியிட வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் போட்டியில் வெற்றிகிட்டுவது கடினம் என்று, நிலைமையை நன்கு உணர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர். இந்த இரண்டு நடவடிக்கைகளும் ஆப்கானிஸ்தான் சனாதிபதி புர்கனுாடீன் றபானியைக் கோபமுறச் செய்துள்ளது. கராச்சித் துறைமுக இறக்குமதிகளிற் தமது வருவாய் தங்கியிருப்பதாகவும் ஒப்பந்தத்தை மீற வேண்டாமெனவும் அவர் பாக் அரசைக் கேட்டுள்ளார்.

இது வரை காலமும் பாகிஸ்தான் முப்படை புலனாய்வுத் துறையின் செல்லப்பிள்ளையாக விளங்கிய தலிபான் இயக்கம் பாகிஸ்தான் எடுக்கும் நடவடிக்கைகளால் எதிரியாக மாறியுள்ளது. தமது வருவாய் குறைந்துவிட்டதாக அவர்கள் குற்றஞ் சுமத்தியதோடு பாகிஸ்தான் வர்த்தகர்களையுந் தாக்க ஆரம்பித்துள்ளனர். துர்க்மெனிஸ்தான் பருத்தியை ஏற்றிவந்த லொறி அணியொன்றை மறித்து இரண்டு இலட்சம் பாகிஸ்தான் ரூபாவைக் கறந்துள்ளனர். பாகிஸ்தான் அரசு செய்வது அறியாது மலைத்துப்போய் உள்ளது. கடத்தற்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்த பாக் சுங்க அதிகாரிகள் இருவர் எல்லைப் புறத்தில் வைத்து, தலிபான் படையாற் கடத்தப்பட்டுள்ளனர். வளர்த்த கடா மார்பிற் பாய்ந்த கதை ஆகிவிட்டது.

ஃபார் ஈஸ்ரேன் எக்கணோமிக் றிவியூ, மே 11, 1995.

❋

## நாடுதிரும்பாதவர்களுக்குக் கட்டுப்பணங் (Deposit) கிடையாது

அண்மைய வருடங்களிலே சீனா, தனது இனக் குடிமக்களை வெளிநாடு சென்று உயர் கல்வி பெற அனுமதி வழங்கியுள்ளது. துரதிர்ஷ்டவசமாக வெளிநாடு சென்று கற்போர் மீண்டுந் தாயகம் திரும்பாதிருந்து விடுகிறார்கள். 1980 தொடக்கம் ஏறக்குறைய 220, 000 மாணவர்கள், தம் படிப்பு முடிந்ததும் படித்த நாடுகளிலேயே தங்கிவிட்டார்கள். இவர்களிற் பெரும்பாலானோர் ஐக்கிய அமெரிக்காவில் உள்ளனர். இதனால் மிகச்சிறந்த மூளை வளமும், திறமைகளும் சீனாவில் வரண்டுவிட்டது. இந்த அபாக்கிய நிலை தொடராதிருக்கச் சீனா புதிய கட்டுப்பாடுகள் சிலவற்றை வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு விதிக்கத் தொடங்கியுள்ளது. அரசுநிதியில் வெளிநாட்டிற் கற்கச் செல்வோர் நாடு திரும்பாவிட்டால் அவர்களுக்குக் கடுமையான பண அபராதம் விதிக்கப்படும். இந்த விதியை மீறுவோர் அரசு தமக்கு வழங்கிய உதவி நிதியையும் மீளளித்தல் வேண்டும். இந்தச் சட்டம் இன்று பரீட்சார்த்தமாகச் சீனாவின் ஜிலின், ஜியாங்ஸ்யு மாகாணங்களில் செயற்படுத்தத் தொடங்கியாயிற்று. அங்கெல்லாம் வெளிநாடு செல்லும் மாணவர்கள் ஒப்பந்தப்படிவம் ஒன்றிலே கைச்சாத்திட்டே செல்ல வேண்டும். ஆனால் அபராதப் பணத்தைச் சீனா எவ்வாறு அறவிடப்போகிறது? இது தெளிவாயில்லை. உள்ளவழி ஒன்று தான், விதியை மீறுவோர் அவர்களின் குடும்பங்களிலே இணைய முடியாது தவிர்க்கப்படுவர்.

★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காவற் கடமையை ஏற்பவர் யார்?

## ஆசிய நாட்டவர் தங்கள் பிராந்தியப் பாதுகாப்பைத் தாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டிய காலம் இது.

தமிழில்: திரு. த. கந்தசாமி

பனிப்போர் ஓளவுக்கு ஓய்ந்து விட்ட நிலையில் அமெரிக்கா தனது ஐம்பது ஆண்டுகால மாகப் பசுபிக் சமுத்திரக் கரையோர நாடுகளிற் சிறப்பாக, கிழக்காசிய நாடுகளில் இருந்து படிப்படியாகத் தனது படைகளை மீளப் பெற்று வருகிறது. இதனால் இப்பிராந்தியத்தின் காவற் கடமை அமெரிக்காவினின்று நீங்கும் நிலை ஏற்படும். அப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டால் அப்பொறுப்பினை வேறொரு நாடு ஏற்க வேண்டிய சூழ்நிலை தோன்றக் கூடும். ஜப்பான், ருஷ்யா, சீனா ஆகிய பலம் வாய்ந்த நாடுகளே இதற்குத் தகுதியானவை. கடந்த கால நிகழ்வுகளைக் கருத்திற் கொண்டு ஜப்பான், இப்பொறுப்பை ஏற்க விரும்பாது. வியற்நாமில் கடற்படைத் தளம் ஒன்றை வைத்துக் கொண்டிருக்கும் ருஷ்யாவும் இதனை விரும்பி ஏற்கும் எனக் கூறுவதற்கில்லை. எனவே இப்பொறுப்பு சீனாவிடம் செல்லக் கூடிய வாய்ப்பு உண்டு.

பிலிப்பைன்ஸ் தீவில் அமைந்திருந்த கடற்படைத் தளத்தை 1992 இல் அமெரிக்கா முடிவிட்டதுடன் தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளிலும் நிலை கொண்டுள்ள தனது துருப்புக்களை அமெரிக்கா குறைத்துக் கொண்டது. இதே வேளை சீனா தனது படையணியை நவீனமயப்படுத்தவும், பெருக்கவும் எண்ணங் கொண்டுள்ளது. கொரிய தீபகற்பத்தின் இராணுவ சூனியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையும், வடகொரியாவின் அணு ஆயுத உற்பத்தி தொடர்பான நிலையும் அமெரிக்கா இப்பகுதியில் இருந்து முழுமையாக வெளியேறாமற் தடுப்பதற்கான சிறந்த காரணங்களாகும். இதை உறுதி செய்யும் வகையிற் கடந்த மார்ச்சில் அமெரிக்க நாசகாரிக்கப்பல் சீனாவின் கடற்படைத் தளத்துக்குச் சென்றதைக் குறிப்பிடலாம். சீனாவின் படையணியின் வளர்ச்சியை அமெரிக்கா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. அண்மையில் சீனா ருஷ்யாவிடம் இருந்து நாலு சக்தி வாய்ந்த நீர்முழ்கிகளைக் கொள்வனவு செய்துள்ளதுடன் மேலும் ஆறு நீர்மூழ்கிகளை வாங்குவதற்கும் ஏற்பாடு செய்துள்ளது. அது மட்டுமன்றி மேலும் ஓர் இடசின் நீர்மூழ்கிகளைக் கொள்வனவு செய்வதற்கும் விருப்பந் தெரிவித்துள்ளது. விமானந் தாங்கிக் கப்பல் ஒன்றைக் கட்டுவதற்கும் சீனா திட்டமிட்டுள்ளது. தான் ஒரு வலிய நாடென்பதை வெளிப்படுத்துவதே இச் செயற்பாடுகளின் நோக்கமாகும். ஆசியாவில் உள்ள பல நாடுகள் அமெரிக்கா இப்பகுதியில் நிலை கொண்டிருப்பதைப் பெரிதும் ஆதரித்தாலும் படிப்படியாகத் தனது படைகளை விலக்கிக் கொள்ளும் என்றே கூறலாம்.

சீனாவின் இராணுவ வளர்ச்சி அமெரிக்காவை இப்பகுதியின் சமாதானத் தூதுவன் என்ற நிலையில் இருந்து நீக்குவதற்கன்று. ஆனால் அமெரிக்கா இப்பகுதியில் இருந்து முழுமையாக வெளியேறினால் ருஷ்யாவிடம் இருந்து வரக் கூடிய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலையுஞ் சீனாவுக்கு உண்டு. சீனாவின் விமானப்படை பெரும் பலம் வாய்ந்தது என்று கூறவும் முடியாது. சீனாவுக்கும் பிரச்சனைகள் உண்டு. தாய்வான் நாட்டுடன் ஆன பிரச்சனை, தென் சீனாக்கடலின் தனது ஆதிக்கம் என்பன சீனா எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகளாகும். சீனாவின் இராணுவ வளர்ச்சி இந்தியாவுக்கும் பெருந் தலையிடியைக் கொடுத்துள்ளது.

அமெரிக்கா இதுவரை காலமும் செய்து வந்த காவற் கடமையை, அது விலக்கிக் கொள்ளும் பட்சத்தில் சீனா அதனை ஏற்க வேண்டி நேரிடலாம். ஏனைய ஆசிய நாடுகள் இப்படி ஒரு நிலையை ஆதரிக்கும் எனக் கூற முடியாது. அப்படியாயின் ஆசிய நாடுகள் ஒன்று சேர்ந்து தமது பாதுகாப்புக்கு ஓரமைப்பை உருவாக்க வேண்டி ஏற்படும். கடந்த ஆண்டு ஆசியப் பிராந்திய மகா நாடு ஒன்று பாங்கொக்கில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தொழிற்பாடு உற்சாகந் தருவதாக இல்லை. இக் கூட்டத்தில் ஆசிய நாடுகள் மட்டுமன்றிப் பசுபிக் எல்லை நாடுகள், அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய சமுதாயம் என்பனவும் பங்கு கொள்கின்றன. இவ்வமைப்புப் பலம் பெற்றாலன்றி இப்பகுதியின் காவற்கடமையைச் சரிவரச் செய்யமுடியாது. எது எப்படி இருந்த போதிலும் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ஏசியாவீக் - ஏப்ரல் 14

❋

## ஹபிள் தொலைக்காட்டி காட்டும் அற்புதங்கள்

செய்மதியொன்றிற் பொருத்தப்பட்டு விண்வெளியில் உலா வரும் ஹபிள் தொலைக்காட்டியில் அண்மையிற் சில கூடுதல் மாற்றங்கள் செய்யப்பட்ட பின்பு அது மேலும் பல புதுமையான செயல்கள் புரிகிறது. அது ஐந்து நாள்களாகச் சுக்கிரனை நோக்கித் தருந் தகவலின்படி அங்கே சல்பூரிக்கமிலம் மழையாகப் பொழிகிறது. வெப்பநிலை சுமார் 900 பாகை பரனைற்று ஆகும். உடுக்களை நோக்குவதில் ஈடுபடாத வேளைகளிற் ஹபிள் போட்டோ பிடித்துப் பொழுதுபோக்கிக் கொண்டு புவியாளும் மனித குலத்தின் விண்ணுயர் அறிவை மேலும் உயர்த்துகிறது. அது கோள்களில் நிகழும் மேக மூட்டங்கள், புழுதிப் புயல்கள் என்பனவற்றையும் படம் பிடிப்பதோடு அங்கே நிகழும் இரசாயன வளிமண்டலத்தையும் ஆய்வு செய்து கண்டுபிடிப்புகள் நடத்துகிறது. அவற்றைக் கொண்டு அறிவியலாளர்கள் கோள்களின் தரைப்பருவ நிலைகள் பற்றியும், வேறு பலவற்றைப் பற்றியுங் கணிப்பீடுகள் செய்யலாம். 1970 களிற் சுக்கிரனில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பின் தாக்கத்திலிருந்து இன்னுந்தான் அது படிப்படியாகச் சீராகிக் கொண்டு உள்ளது. ஆய்வுச் செய்மதி வைகிங் 20 ஆண்டுகளுக்கு முன்பு கண்டறிந்த வேளையில் இருந்த நிலைமையிலும் பார்க்க இப்பொழுது செவ்வாய் குளிராகவும், மிதெளிவாகவும், ஈரலிப்புக் குறைவாகவும் உள்ளது.

## பரந்த இணைப்பு

போக்குவரத்து வாகனங்களின் பெருக்கத்தினால் விஞ்ஞானிகள் தமது ஆவணங்களை அஞ்சல் வழியாகப் பெறுவது கால தாமதத்தை ஏற்படுத்துவதால் அவற்றைப் பயன்படுத்தக் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்தச் சிரமத்தினை அறிவியல் சார்ந்தோர் வெற்றிகொள்ளப் புதியதோர் உன்னத கணனி முறையினை அறிமுகஞ் செய்ய விருக்கின்றனர். இதற்கென உன்னத கணனி நிலையங்கள் (Super Computing Centers) நிறுவிப் பரந்ததோர் இணைப்பை ஏற்படுத்துவதற்கு 50 மில்லியன் டொலர் செலவாகும். பொது மக்களுக்கு இது உபயோகத்துக்கு விடப்படாது. விஞ்ஞானிகள் உடனுக்குடன் இந்த மத்திய நிலைகளில் இருந்து தமக்கு வேண்டிய தரவுகளைப் பெற்றுப் பயன்படுத்த இந்த இணைப்பு உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவாண்டெனமோவில் அகதி இளைஞர்களின் கிளர்ச்சிக் கீதம்

## அகதி முகாங்களிலே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஐக்கிய அமெரிக்காவினுள் அனுமதிக்கப்பட்டபின், அந்த நாட்டின் வாயில்கள் அகதிகளுக்கு நிரந்தரமாக மூடப்பட்டுவிடும்.

தமிழில்; சொக்கன்

"எனக்கு இது பெரும் அதிர்ச்சி" என்று பில் கிளின்ரன் ஒரு காலத்தில் முழங்கினார். ஜோர்ஜ் புஷ் சனாதிபதியாய் இருந்த பொழுது அவர் ஹெயிற்றியிலிருந்து தமது உயிர்களைக் காத்துக் கொள்ளத் தப்பியோடிவந்த அகதிகளையும், படகுகளில் வந்திறங்கியவர்களையும் ஹெயிற்றிக்கே திருப்பி அனுப்பி அவர்களை இராணுவப் பயங்கரவாதிகளின் கருணையிலே வாழவிட முற்பட்டதை எதிர்த்துத்தான் கிளின்ரன் தமது அதிர்ச்சியை வெளியிட்டார். "உலகமெங்குமுள்ள அகதிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் என்னும் அமெரிக்காவின் தார்மிக மேலாண்மைக்கு இந்தச் செயலானது பெரியதொரு அடி" என்று அவர் அன்று புஷ் அவர்களைக் கண்டித்தார். கடந்த மாதம் சனாதிபதி கிளின்ரன், புஷ்ஷின் அதே செயற்பாட்டினைத் தாமும் கடைப்பிடிக்க முற்பட்டமைதான் பெரும் அதிசயம். ஐ. அமெரிக்கா, பொதுவுடைமை நாட்டிலிருந்து வந்த அகதிகளை வலுவந்தமாக அவர்களின் நாட்டுக்கு அனுப்ப முற்பட்டது, இதுவே முதற் றடவை.

ஐ. அமெரிக்காவின் முத்த அதிகாரிகளோடும், கியூபா நாட்டின் அதிகாரிகளோடும் கிளின்ரன் நடத்திய அந்தரங்கப் பேச்சுவார்த்தையானது, அதிபர் கஸ்ட்ரோவின் எதிரிகளாய் வாஷிங்ரனிலும், மியாமியிலும் உள்ளவர்களின் சீற்றத்தைக் கிளப்பிவிட்டது. அனுபவசாலிகளான ஐ. அமெரிக்க இராசதந்திரிகள் இருவரைக் கியூபாவிற்கு அனுப்பியதும் அவர்களின் சினத் தீக்கு நெய்யூற்றிவிட்டது போலாயிற்று. கிளின்ரனின் பேச்சுவார்த்தையின் முடிவில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி ஐ. அமெரிக்க கடற்படைத்தளமான குவாண்டெனமோவிலே தடுத்து வைத்திருக்கும் கியூபா அகதிகள் 15,000 பேர் நாட்டினுள் அனுமதிக்கப்படுவார்கள். ஐ. அமெரிக்காவின் கரையோரத்தைப் புகலிடமாகக் கொண்டுள்ள அகதிகள் மீது பிடல் கஸ்ட்ரோ நடவடிக்கை எடுக்காதிருக்கச் சம்மதித்தால், இன்று ஐ. அமெரிக்காவிற்கும், கியூபாவுக்குமிடையில் நிலவும் வேறுபாடு மறைந்து இருநாடுகளுக்குமிடையே சமரசம் ஏற்படலாம் என்று கியூபாவின் இராசதந்திர நிபுணர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

கிளின்ரனின் நிருவாகம், மிகவும் கருணையோடு குவாண்டெனமோவில் புகலிடம் பெற்றிருக்கும் 6,000 அகதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் அமெரிக்காவினுள் நுழைந்து வாழ்வதற்கு அனுமதி வழங்கியுள்ளதாகப் பீற்றிக்கொள்கிறது. இந்த அகதிகளிற் பெரும்பாலோர் பெண்களும், முதியோரும், சிறுபிள்ளைகளுமாவர். எஞ்சிய 15,000 இளைஞர்கள் தங்களைத் தடுப்புக்காவலிலிருந்து எப்



கடைசி மகிழ்ச்சி : கொள்கையில் மாற்றங்கொண்டு வரப் படாவிட்டால் இளைஞர்கள் கொத்தளிப்பர் என கிளின்ரன் அதிர்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது விடுவிப்பார்களோ என்ற அவநம்பிக்கையோடு மனங் குழம்பிக் கிளர்ச்சிக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். குவாண்டெனமோவின் அகதிக் கூடாரம் ஒன்றில் ' நரகத்திற்கு நல்வரவு ' (Welcome To Hell) என்ற அட்டை ஒன்று தூக்கப்பட்டிருப்பது அவர்களின் மனநிலைக்கு நல்ல எடுத்துக் காட்டு. இந்தக் கூடாரத்தினுள்ளே அலுப்பும், சலிப்பும், வியர்வைப் பெருக்குங் கொண்ட ஆறு இளைஞர்கள் ஒலிவ் மரப்படுக்கையிலே சாய்ந்து கிடக்கிறார்கள். அண்மையில் வெளியிடப்பட்ட பிரகடனம் அவர்களை நம்பிக்கையிழக்கச் செய்து உற்சாகங் குறைந்தவர்களாய் மாற்றிவிட்டது. இன்னும் பல மாதங்களுக்கு இதே இடத்தில், இதே மாதிரித் தொடர்ந்து அவர்கள் இருக்க வேண்டும். அவர்களைப் பொறுத்தவரையில் ஐ. அமெரிக்காவினுள் அவர்கள் அனுமதிக்கப்படுவது இன்றோ நாளையோ இடம்பெறப்போவதில்லை. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்கள் எத்தகைய விஷமச் செயல்களில் ஈடுபடுவார்களோ என்ற ஐயமும், அச்சமும், கவலையும் கிளின்ரனைப் பீடித்துள்ளன. 1980 இல் கியூபா இளைஞரின் கிளர்ச்சி, சஃபிகோட்டையில் இடம் பெற்றதால், தாம் ஆளுநர் பதவிக்காக மறுதேர்தலுக்கு நிற்க நேர்ந்ததை அவர் இன்னும் மறந்துவிடவில்லை. '' பென்ரகனின் நிருவாகபீடம், நாள்தோறும் அகதிச் செலவினமாக ஒரு மில்லியன் டொலர் விரயமாவதாகவும், வரப்போகும் கோடைகாலத்தில் அது மேலும் பெருஞ்செலவினத்தால், அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் என்றும் அறிவுறுத்தியுள்ளது '' என்று மூத்த அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

'' கிளின்ரனின் கவனம் முழுவதும் புளோரிடாவிலேயே குவிந்துள்ளது '' என்று மற்றொரு மூத்த அதிகாரி கருத்துத் தெரிவிக்கிறார். 1992 இல் கிளின்ரன் புளோரிடாவில் ஒரே ஒரு முறைதான் தேர்தற் பிரசாரத்தை மேற்கொண்டார். விளம்பரங்களுக்கென்று அங்கு அவர் பணம் எதுவுஞ் செலவு செய்யவில்லை. ஆனால் புளோரிடாவிற் கிடைத்த 50,666 வாக்குகளே புஷ்ஷைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடக் கிளின்ரனுக்கு உதவின, இந்த வெற்றிக்கு ஈடு செலுத்துமுகமாகப் புளோரிடாவுக்குத் தாம் அடிக்கடி வருகை புரியப் போவதாகக் குறிப்பிட்ட கிளின்ரன் அந்த மாகாணத்தினருக்குச் சமூகப் பாதுகாப்பளிப்பதையும், மருத்துவ வசதி செய்வதையும். ஐ. அ. தெற்குப் படையணியின் தலைமையகத்தைப் பனாமாவிலிருந்து டடே (Dade County) பகுதிக்கு நகர்த்துவதையும் உறுதிப்படுத்தினார்.

கடந்த மாதம் வரை மியாமியில் வாழும், மிகுந்த செல்வாக்கும், கஸ்ட்ரோவின்மீது பெரும் பகையுங் கொண்ட அமெரிக்கக் குடியேறிகளான கியூபர்களை (Cuban American) இணக்கஞ் செய்யும் முயற்சியில் கிளின்ரன் ஈடுபட்டார். இந்த முயற்சி புளோரிடாவிற் கையாளப்பட்ட தந்திரத்தினை ஒத்தது. எனினும் அவர்கள் கிளின்ரனுக்கு எதிரான குடியரசுக் கட்சிக்கே பெரும் ஆதரவு வழங்கி வருபவர்கள் (கிளின்ரன் ஜனநாயகக் கட்சியினர்) 1992 இல் தமது தேர்தற் பிரசாரத்தின்போது கிளின்ரன் கஸ்ட்ரோ மீது சுமத்திய பொருளாதாரத் தடைச்சட்டத்தை மேலும் இறுக்குவதற்குப் பின்னணியில் ஆதரவு வழங்கினார். கியூபாவின் அகதி இளைஞர்களை குவண்டெனமோவிற்குப் பின்தள்ளித் தடுத்து வைக்க முன்பு, அவர் அமெரிக்கா வாழ் கியூபர்களோடு நெருக்கமான பேச்சுவார்த்தையை மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கதே. இதே வேளை, அண்மையில் வாக்களிப்புக் கணிப்பினை வெள்ளை மாளிகை மேற்கொண்டபொழுது. புளோரிடாவின் வாக்குகளே கூடுதலாகக் கிடைக்கும் என்பதும், கஸ்ட்ரோவிலுங் கூடிய கடின நிலையில் குடியேறிக் கியூபர்களின் வாக்குகள் பெறக்கூடியதாயிருக்கும் என்பதும் வெளியாயின.

கிளின்ரனின் புதிய திட்டம், ஜனநாயகக் கட்சியின் பலத்த ஆதரவாளர்களான, ஆளுநர் லோற்றன் சைல்ஸ், பேரவை உறுப்பினர் பொப் கிரஹாம் ஆகியோரின் பக்கபலத்தைப் பெற்றபோதிலும் குடியரசுக்கட்சிப் பேரவையுறுப்பினரும், வெளியுறவுப் பிரிவுத் தலைவருமான ஜெஸ்ஸி ஹெல்ம்ஸ் அவர்களின் கடும் எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளது. ''கஸ்ட்ரோவின் வெப்பவலயக் குலாய்க் (Gulay) கினுள் கியூபர்களைச் சிறைப்படுத்த ''க் கிளின்ரன் உதவுவதாக இவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள். கியூபாவிற்கு மீண்டும் அனுப்பப்படுவதால் தங்கள் உயிருக்கு ஆபத்து என்று கூறுபவர்களின் கூற்றையும் அதிகாரிகள் மறுக்கிறார்கள். '' அவ்வாறு ஒரு நிலை உருவாகுமானால், அனுப்பப்படுவோர் மீளவுந் திரும்பி வர வாய்ப்பளிக்கப்பட்டு நன்முறையில் நடத்தப்படுவார்கள் என்று ஹவானாவிலுள்ள 37 ஐ. அமெரிக்க இராசதந்திரிகள் உறுதி கூறுகிறார்கள் '' என்று மூத்த அதிகாரி ஒருவர் சொல்கிறார். ஆண்டுதோறும் 20,000 பேர் வரை கியூபாவிலிருந்து வெளியேற விண்ணப்பிக்கின்றனர் எனவும், அவ்வாறு விண்ணப்பிப்பவர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸ்ட்ரோவின் இரகசியக் காவற்றுறையினர் தொல்லைப்படுத்துவதில்லை எனவும், வாஷிங்ரன்–ஹவானா உடன்படிக்கை கூறுகிறது. கஸ்ட்ரோவிடமிருந்து எவ்வளவுக்கு உறிஞ்சமுடியுமோ அவ்வளவிற்கு உறிஞ்சி, உறிஞ்சியதைக் கொண்டு சர்வதேச மன்னிப்புச் சபையும், பிற சமூக மேம்பாட்டு நிறுவனங்களும் கியூபாவில் புனர்நிர்மாணப்பணியில் ஈடுபடவேண்டும் என்றும் விமர்சகர்கள் வலியுறுத்துகின்றனர். இரகசியப் பேச்சுவார்த்தையின் போது ஐ. அமெரிக்கா இந்தக் கோரிக்கையை முன்வைத்த போதும், பின்னர் கைவிட்டுவிட்டது. கியூபா மீது விதிக்கப்பட்டுள்ள வர்த்தகத் தடை இறுக்கப்பட்டாலும், அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் புனர்நிர்மாண வேலைகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்குவதிலும், தொடர்பை விரிவாக்குவதிலும் வாஷிங்ரன் அக்கறை கொண்டுதான் செயற்படுகிறது. அங்கு பணிபுரியும் சமூக நல நிறுவனங்கள் வெளியிலிருந்து நிதியுதவி பெறத் தடையில்லை. ஆனால் இவற்றையெல்லாம் குடியரசுக் கட்சி பயனற்ற வீண் வேலைகள் என்று கண்டிக்கிறது.

சிலர் கியூபாவின் அகதிகளைத் திருப்பி அனுப்பாதிருப்பதற்குச் சட்ட மூலம் வகை செய்ய வேண்டும் என்று திட்டமிடுகிறார்கள். ஹெம்சும், வேறு சிலரும் பொருளாதாரத் தடையைக் கியூபா மீது மேலும் இறுக்க வேண்டும் எனக் கருதுகிறார்கள். இந்தத் தடையின் ஓர் அம்சமாகக் கியூபாவில் இயங்கி வரும் வெளிநாட்டு நிறுவனங்களின் அதிகாரிகள், பங்காளருக்கு விசா வழங்குவதைத் தடை செய்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றனர். ஏதோ ஒரு வடிவத்தில் வர்த்தகத்தடை மசோதா நிறைவேற்றப்படும் என்பது பெரும்பாலும் முடிவாகிவிட்டது. ஆனால் பில் கிளின்ரன் அதனைத் தமது மேலாளுரிமை கொண்டு (Veto) நிறுத்தவும் கூடும். அவ்வாறு நிறுத்தினால் மியாமியின் கியூபர்கள் வெள்ளை மாளிகையிலுள்ள தங்கள் நண்பரை இழக்க நேரலாம்.

ரைம் மே, 1995

தன்னிகரில்லாத் தங்க நகைகளுக்கு

அருள் முருகன் நகை அகம்

96 / 1, சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.



22 கரட் தங்க நகைகள் குறித்த
தவணையில் உத்தரவாதத்துடன்
செய்துகொள்ளவும், பழைய பவுண்
நகைகளைக் கூடுதலான பெறுமதிக்கு
விற்றுக் கொள்ளவும்



சிறந்த ஸ்தாபனம்:

கிளை: சிவா நகைமாடம்

யாழ் வீதி, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லவன் வகுக்கும் வாய்க்கால்

## சனநாயக நாடுகளில் மக்களாற் றெரிவுசெய்யப்பட்ட சனாதிபதிகள் எதேச்சாதிகாரிகளாய் மாறுகின்றனர்.

*தமிழில்; சொக்கன்*

கவ்டிலிஸ்மோ (Gaudillismo) என்ற சொல்லுக்கு 'வலியவன் ஆட்சி' என்பது பொருள். இந்த மரபை அடியொற்றிய சனநாயகமே இன்று லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடக்கின்றது. குடியேற்ற நாட்டாட்சியின் பின்பே, இந்த மரபு உருக்கொண்டது. பொதுவுடைமை நாடான கியூபா தவிர்ந்த மற்றைய லத்தீன் அமெரிக்க நாடுகளில் மக்களால் மக்களுக்கு மக்களின் ஆட்சி நடைபெறுகிற வகையிற் தேர்தல்களும், தெரிவுகளும் இடம் பெற்றாலும் சனநாயகம் என்பது பெயரளவிலே தான். நாட்டுத் தலைவர்கள் சட்ட வரம்புகளை மீறுகிறார்கள், தமக்கு வாய்ப்பில்லாத நியாயாதிக்க வரம்புகளைப் புறந்தள்ளுகிறார்கள். தம்மை விமர்சிக்கும் பத்திரிகையாளர்களைத் தொல்லைகளுக்கு உள்ளாக்குகிறார்கள். அமைதியீனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் படையினரை வீதிகளுக்கு அனுப்புகிறார்கள். "சனாதிபதி முறையிலான சனநாயகம் அதற்குரிய கட்டுக் கோப்பினுள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தலைவர்கள், தங்களைத் தெரிந்தெடுத்த மக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும் என்ற வகையில் நடந்து கொள்கிறார்கள். அரசியல் நிறுவனங்களுக்கோ, காங்கிரசுக்கோ, சட்ட வரையறைகளுக்கோ அடங்கவோ, விடை சொல்லவோ வேண்டியதில்லை என்பதே அவர்களின் முடிவான கருத்தாகத் தோற்றுகிறது" என்று பிரேசிலிலுள்ள அரசியல் விமர்சகர் அமௌரிடி சௌசா கூறுகிறார்.

ஒரு தசாப்தத்திற்கு முன்பு இராணுவத் தலைவர்கள் ஆட்சி நடத்தினார்கள். அவர்கள் எந்தப் பக்கத்திலிருந்து தமக்கு எதிர்ப்பு வந்ததோ, அந்தப் பக்கமாகத் தங்கள் முஷ்டிகளைத் திருப்பி, எதிர்ப்பை அடக்கி வந்தார்கள். இந்த நாள்களிலே மக்களின் பிரதிநிதிகளான சனாதிபதிகளும் அதே உத்தியினைத் தாமும் கையாளத் தொடங்கியிருக்கிறார்கள். ஐந்து, ஆறு வாரங்களுக்கு முன்பு பொலிவியாவின் சனாதிபதி சன்செச் டி லொசாடா அவசரகால நிலையினைத் தோற்றுவித்துப் பேரணிகளுக்கும், பத்திரிகைகளுக்கும் தடை விதித்தார். ஏப்ரல் 9 அன்று நடந்த மறு தேர்தலில் மக்களால் சனாதிபதியாகத் தெரியப்பட்ட அல்பேட்டோ பியூஜிமோரி, பெரு (Peru) நாட்டில் நீதி, சட்டத் துறைகளின் மீது தமக்குள்ள நிறைவேற்றதிகாரத்தைக் கையாண்டு தமது பிடியை இறுக்கியுள்ளார். மே 14 இல் இரண்டாவது முறையாக நடைபெறப் போகும் சனாதிபதித் தேர்தலில், தாம் மீண்டும் பதவிக்கு வரலாம் என்ற நம்பிக்கையில் ஆர்ஜென்ரீனாவின் சனாதிபதி காளோஸ் சவுல் மெனம் பொருளாதார சீர்திருத்தச் சட்டத்தைப் புகுத்தியுள்ளார். மற்றொரு சனநாயக நாடான வெனிசூலாவின் தலைவர் றஃபேல் கல்டெரா குடிமக்களின் உரிமைகளைத் 'தற்காலிகமாக'த் தடுத்து வைத்துள்ளார். இந்தத் தற்காலிக உரிமைத்தடை ஓராண்டில் நீக்கப்படும் என்ற அவரின் உறுதியுரை நிறைவேற்றப்படும் என்பதற்கான அடையாளம் எதனையும் காணக் கூடவில்லை.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் அண்மைக் காலத்திற் பல சிக்கல்கள் மேலெழுந்துள்ளன. பணவீக்கம், வளர்ந்து வரும் வறுமை, வெளிநாடுகளுக்கு மீளளிக்கப்பட வேண்டிய கடன்பளு, கெரில்லாச் சண்டைகள், அதிகரித்து வருங் குற்றச் செயல்கள், நகர்ப்புறங்களை நோக்கிய குடிப்பரம்பல்களால் எழுந்துள்ள நெருக்கடிகள் என்பன இந்நாடுகள் முகங்கொடுக்க வேண்டிய பாரிய பிரச்சினைகள். இவற்றைச் சமாளித்துச் சுமுகமான நிலையினை ஏற்படுத்தத் தலைமைத்துவம் இரும்புக்கரமுடையதாக மாறியேயாக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மக்களின் உணர்வானது பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைச் சனாதிபதியிடமே எதிர்பார்ப்பதாக மாறியுள்ளது. "எந்த வழியினைக் கையாண்டாவது விரைந்த தீர்வைக் கொண்டுவர வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு" என்கிறார் புவனஸ் அயர்சின் பொதுக் கொள்கை வடிவமைப்புப் பிரயோக நிறுவன (Applied Public Policy) நோக்கர் மற்றியோ கொறெற்றி.

பல்வேறு குழப்பங்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி விரக்தியின் விளிம்பிற்கே சென்று விட்ட நாடு பொலிவியா. ஐ. அமெரிக்காவிலே பயிற்சி பெற்றவரும், வணிகச் செல்வருமான லொசாடா 21 மாதங்களுக்கு முன்பு அந்நாட்டின் சனாதிபதி ஆனவர். அரசுடைமையாயிருந்த கைத்தொழில்கள் அனைத்தையும் தனியார் மயமாக்க அவர் முனைந்து செயற்படுகிறார். இந்த முனைப்பு நாட்டின் அமைதியைப் பெரிதும் பாதித்துள்ளது. லொசாடா, பொலிவியாவின் தொழிற்சங்கங்களைச் செயலற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




றுப் போக வைத்து முடக்குவதில் ஈடுபட்டுள்ளார். அண்மையில் கொக்கா இலை (Coca leaf) உற்பத்தித் தொழிற்சாலைகளின் 70,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இவர்களோடு பள்ளியாசிரியர்களும் இணைந்தனர். காவற்றுறையினருக்கும், பள்ளியாசிரியர்கள், தொழிலாளர்களுக்கு மிடையில் மோதல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. வேலை நிறுத்தக்காரர்கள், டைனமைற் வெடியைத் தடிகளிலே கட்டித் தீயிட்டு, காவற்றுறையினர் மீது வீசி அவர்களோடு போராடுகிறார்கள்.

ஏப்ரல் 18 அன்று நெருக்கடி உச்சக் கட்டத்துக்குச் சென்றது. சனாதிபதி லொசாடா, வேலை நிறுத்தக்காரர்களின் பேரணியை விரட்டியடிக்கக் காவற்றுறையினரைப் பணித்தார். பொலிவியாவின் தலைநகரான லா-பஸ்ஸில் கலவரம் வெடித்தது. வேலை நிறுத்தத்திற்குப் பின்னணியில் நின்று ஊக்குவித்தபத்திரிகையாளர்கள்உள்ளிட்ட 400 பேர் கைது செய்யப்பட்டுத் தலைநகருக்கு வெகுதொலைவிலுள்ள சிறைக் கூடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இன்று வரை அவர்கள் விடுதலையாகவில்லை. இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கு மக்களதும், காங்கிரசினதும், ஆசியும், ஆதரவும் சனாதிபதிக்கு இருக்கின்றன. பொதுக் கூட்டங்கள் நடத்தத் தடை, எவரையும் விசாரணையின்றிச் சிறையிலடைத்தல் என்பவற்றிற்கான சட்டத் திருத்தம்பாராளுமன்றத்தில் ஒரு வாரத்திற்குள் நிறைவேற்றப்பட்டது. ''எதிர்காலத்திற் சமூகத்தில் அமைதியின்மை ஏற்படாதிருக்கவே இந்த நடவடிக்கை'' என்று தொழிலமைச்சர் றெய்னால்டோ பீற்றர்ஸ் கூறியது குறிப்பிடத்தக்கது.

பெரு நாட்டின் வரலாற்றிலேயே மிக அதிகப்படி வாக்குகளைப் பெற்றுச் சென்ற மாதம் சனாதிபதியானவர் ஃபிஜிமோரி. கெரில்லா இயக்கத்தை முற்றாக முறியடித்து நாட்டில் மீண்டும் ஒளி தோன்ற வைத்தவர் என்பதனாலேயே இவருக்கு இந்த மாபெரும் வெற்றி கிட்டியது. அது 1992 ஏப்ரல் வாக்கில் இடம் பெற்றது. நீதி மன்றங்கள், காங்கிரஸ் என்பவற்றின் அதிகாரங்களையெல்லாம் 9 மாதங்கள் வரை முடக்கி வைத்துத் தன்னிச்சையோடு தொழிற்பட்டு, நீண்ட துயரத்தில் ஆழ்ந்திருந்த பெரு நாட்டு மக்களுக்கு விடிவளித்த நன்றிக் கடனின் கைம்மாறுதான் ஃபிஜிமோரியின் தேர்தல் வெற்றி. லிமாவின் அரசியல் ஆலோசகர் மனுவல் றொறடோவின் கூற்றுப்படி, ''ஜனநாயகம் குழப்பத்தில் மூழ்கிக் கிடந்த வேளையில் ஃபிஜிமோரி அதனை மீட்டெடுத்து ஒழுக்காற்றினையும், முன்னேற்றத்தையும் உறுதிப்படுத்தினார்.'' இன்று ஃபிஜிமோரி சர்வவல்லமை படைத்தவராய் விளங்குகிறார். அமைச்சரவை புத்துயிரளிக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் வலுவுடைய தாக்கப்பட்டுள்ளது. தமது அமைச்சர்கள், சட்ட சபை உறுப்பினர்களை வெறுங் கைப்பொம்மைகளாக இயங்கவைத்து, ஆளுநர்களை நியமித்து, பொருளாதார முன்னேற்றத்துக்குப் பலவகையிலும் ஊக்குவிப்பளித்து நாட்டை ஃபிஜிமோரி முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்கிறார். தமது ஆட்சி சனநாயகத்துக்கு ஒரு முன்மாதிரி என்று பெருமையுடன் கூறுகின்றார். பிறேசிலின் சனாதிபதி ஹென்றிக் கர்டோசோ, கறக்காசின் சனாதிபதி கல்டெறா, ஆர்ஜென்ரீனாவின் சனாதிபதி மெனம் ஆகியோரும் வரையறையற்ற அதிகாரங்களின் மூலந் தன்னிச்சையாக நாட்டாட்சியை முன்னெடுத்துச் செல்வதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதே.

இவற்றையெல்லாம் அவதானித்த அரசியற்றுறை நிபுணர்களும், அவதானிகளும், '' எதேச்சாதிகாரத்துக்குக் கிடைத்துள்ள புதிய வாய்ப்புக்கள் '' என்று வருணிக்கிறார்கள். 'வல்லவன் ஆட்சி' ( Caudillisimo ) யை ஊக்குவிப்பதிலே தொலைக்காட்சி முதன்மையிடம் வகிக்கிறது'' என்கிறார் புவனஸ் அயர்சின் பிரபல சட்டத்தரணியும், ஊழல் எதிர்ப்புப் போராளியுமான லூயிஸ் மொறெனோ ஒகம்போ. ''தமது படிமங்களை (Emages) வெளிப்படுத்தி அதன் மூலம், தமக்கு வேண்டப்படும் வாக்குகளை இத்தலைவர்கள் பெறுகிறார்கள், பதவிக்கு வந்ததும் சட்டங்களைச் செல்லாக்காசுஆக்கி விடுகிறார்கள்'' என்று இவர் மேலும் கூறுகிறார். தீவிரமானவையும், கடுமையானவையுமான நடவடிக்கைகள் முடிவுற்று, அவை வேண்டப்படாத பொழுது, லத்தீன் அமெரிக்காவின் தலைவர்களின் எதேச்சாதிகாரமும் மங்கி மறைந்து விடுமென்பதே இன்றுள்ள எதார்த்த உண்மை.

டைம் மே 15, 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொஸ்னியாவில் போர்க் கோலம்

## *வரலாற்றில் யூகோசிலாவியா*; முன்னாள் யூகோசிலாவியா சேர்பியாவின் தலைமையில் இயங்கியநாடு.

'ஐரோப்பாக் கண்டத்தின் மென்மையான அடிவயிற்றுப் பகுதி'
— பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில்

*தமிழில்:*
**கலாநிதி க. சோமாஸ்கந்தன்**

தென்-கிழக்கு ஐரோப்பாவின் பால்க்கன் (Balkan Region) பிரதேசத்தை வரலாற்று ஆசிரியர்கள் ஒரு வெடி மருந்துக் குவியலுக்கு ஒப்பிடுவர். இன்றைய கிரீஸ், அல்பேனியா, பல்கேரியா, ருமேனியா, முன்னாள் யூகோசிலாவியா பால்க்கன் நாடுகளாகும். இவற்றுள் யூகோசிலாவியா மிகப் பெரியது. முதலாம் உலக யுத்த முடிவில் ஐரோப்பாவில் உதயமான புதிய நாடுகளில் ஒன்று யூகோசிலாவியா. 1918 இல் தோன்றிய இந்த நாடு முதலிற் சேர்பியர், குரோசியர், சுலோவேனியர் அரசு என்று அழைக்கப்பட்டு பின்பு யூகோசிலாவியா என்று பெயர் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. தெற்குவாழ் சிலாவ் இனத்தவர் நாடு என்பது புதுப் பெயரின் பொருள்.

கி. பி 3 தொடங்கி 4 நூற்றாண்டுகளாக, சிலாவ் இன மக்கள் அலை அலையாக வந்து பால்க்கன் பகுதியிற் குடியேறி உள்ளனர். இப்போது போலாந்து, மேற்கு ருஷ்யா இருக்கும் மண் இவர்கள் பூர்வீகமாகும். உலகின் மிகப் பெரிய சிலாவ் இன மக்கள் வாழும் நாடு இன்றும் ருஷ்யா தான். இந்த சிலாவ் குடியேற்றவாசிகள் நிறுவிய அரசுகளில் வரலாற்று முக்கியமும், பால்க்கன் பிரதேசத்தில் அதிசக்தி வாய்ந்ததும் சேர்பியா தான். தொடக்க காலத்திலேயே சேர்பியா அயல் நாடுகளான பல்கேரியா, கிரீஸ், ஹங்கேரி போன்றவற்றுடன் போர் தொடுத்து தனது தனித்துவத்தைக் காத்துக் கொண்டுள்ளது. 200 வருடங்களுக்கு மேலாகச் சுயாட்சி செய்த திறன் சேர்பிய அரசர்களுக்கு உண்டு. 14 ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் பால்க்கனில் ஒப்பற்ற ஆதிக்க நிலைக்கு சேர்பியா உயர்ந்துள்ளது.



*சேர்பியர்களால் சங்கிலியாற் பிணைக்கப் பட்டிருக்கும் ஐ.நா. அமைதிப்படை வீரன்.*

ஆனால் 1453 இல் கொன்ஸ்ராண்ரினோப்பிள் (Constantinople) துருக்கியர் கையில் வீழ்ந்த பின் சேர்பியா உட்பட பால்க்கன் நாடுகளின் தலைவிதி முற்றாக மாறியுள்ளது. வீரஞ் செறிந்த எதிர்த்தாக்குதல் நடத்தினாலும் 1521 அளவில் முழுச் சேர்பியாவும் துருக்கியின் உதுமான் சாம்ராச்சியத்தின் ஓர் அங்கமாக மாறிவிட்டது. ஆனால், சேர்பியர்கள் தமது நாட்டை மீட்டெடுக்கும் நோக்கைக் கைவிடவில்லை. 1804 ஆம் ஆண்டு பாரியளவில் எதிர்ப்பைத் தொடக்கி 1829 இல் துருக்கியரைத் தூக்கி எறிந்து விட்டனர். சேர்பியர்களின் முன்னுதாரணத்தைப் பயன்படுத்தி, பிற பால்க்கன் நாடுகளும் தமது சுயாட்சியை வென்றெடுத்தன.

குரோசியாவும், சுலோவேனியாவும் அவுஸ்திரிய–ஹங்கேரி சாம்ராச்சியத்தின் கீழ்க் கிடந்தவை. இவை பிரிந்து வர உதவிய பெருமை சேர்பியாவைச் சேரும். முதலாம் யுத்தத்தில் அவுஸ்திரியா தோல்வியுற இரண்டையும் இணைத்து புதிய நாட்டைத் தோற்றுவித்தது சேர்பியா தான். பொஸ்னியாவும், கேர்சிகோவினாவும் 7 ஆம் நூற்றாண்டிற் சிலாவ் இன மக்கள் பெரும் எடுப்பில் குடியேறிய நாடுகளாகும். 1463 தொடக்கம் 1878 ஆம் ஆண்டு வரை இவை துருக்கிய சாம்ராச்சியத்தில் இணைக்கப்பட்டிருந்தன. 1878 தொடக்கம் 1918 வரை கைமாறி அவை அவுஸ்திரியா–ஹங்கேரி சாம்ராச்சியத்தில் இடம் பெற்றன. முதலாம் உலக யுத்தத்தில் அவுஸ்திரியா தோல்வியுற பொஸ்னியாவும், கேர்சிகோவினாவும் 1918 ஆம் ஆண்டு தொடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் சேர்பியாவின் முழுப்பொறுப்பில் இருந்துள்ளன. இது மறக்க முடியாத வரலாற்று உண்மையாகும்.

துருக்கி ஆட்சி செய்ததின் காரணமாகப் பொஸ்னியாவிற் பெருந்தொகை முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். தலைநகர் சராயேவோ ( Sarajevo ) முழுக்க ஒரு முஸ்லிம் நகரமாக இன்று காட்சி தருகிறது. 1971 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட குடிசனக் கணக்குகளின்படி முன்னாள் யூகோசிலாவியாவின் முஸ்லிம் மக்கள் தொகை 8.5 சத வீதமாகும். இவை இன்று பத்தில் ஒன்றாகி விட்டன. அவர்களுடைய நெருக்கம் பொஸ்னியாவிற்றான் காணப்படுகிறது. இன்னுமொரு மிக முக்கியமான வரலாற்றுக் குறிப்பு என்னவென்றால் 1946 வரை பொஸ்னியாவும், மொன்தினேகிரோவும் சேர்பியாவின் கீழ்ப்பட்ட பகுதிகளாக இருந்துள்ளன.

யூகோசிலாவியா 1946 இல் மறுசீரமைக்கப்பட்டபோது 1991 ஆம் ஆண்டு வரையிலான ஆறு நாட்டு ஒன்றியமாக அது தற்கால உருவம் பெறுகின்றது. அந்த ஆறு நாடுகளும் மக்கள் தொகையின்படி வரிசைப்படுத்தும்போது பின்வருமாறு அமைகின்றன. சேர்பியா, குரோசியா, பொஸ்னியா – கேர்சிகோவினா, சுலோவேனியா, மசிடோனியா, மொன்தினே கிரோ. அது சிர்குலையும் வரை யூகோசிலாவியாவில் சமஷ்டி முறை ஆட்சி நிலவியுள்ளது. ஆனால் மறைமுக ஆதிக்கம் பல்வேறு வழிகளில் வரலாற்று ரீதியாகவும், மக்கள் தொகை காரணமாகவும் சேர்பியர்களின் கையில் இருந்துள்ளது. முழு நாட்டின் தலைநகர் 1991 வரை சேர்பியாவின் பெல்கிரேட் (Belgrade) என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

1991 இல் யூகோசிலாவியா ஆறாகிப் போவதைத் தடுக்க முடியாத பல காரணிகள் உண்டு. ஆறிலும் சிலாவ் மக்களே மூத்த குடியினர். இங்கெல்லாம் பேசப்படும் மொழிகள் சிலாவ்வேரிற் தோன்றியவை. பிளவுக்குக் காரணமாய் நில அமைப்பும் சுட்டிக் காட்டப்படுகிறது. மலைத் தொடர்கள் இயற்கையாகத் தடை எல்லை போடுகின்றன. பால்க்கன் என்ற சொல் துருக்கி மொழிக்கு உரியது. பொருள் மலைத் தொடர்கள். மத, பண்பாட்டு வித்தியாசங்கள் வேறு. பல நூற்றாண்டுகளாகத் துருக்கியர் ஆட்சியின் கீழ்க் கிடந்தாலும் புராதன கிரேக்க சார்பு கிறிஸ்தவ மதத்தைக் கைவிடாது ஒழுகுபவர்கள் சேர்பிய மக்கள். குரோசியரும், சுலோவேனியர்களும் மேற்கு நாடுகளை ஒத்தவை. மதத்தால் றோமன் கத்தோலிக் கத்தைச் சேர்ந்தவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக எல்லோரும் சேர்பியாவில் இருந்து தூர விலகிச் செல்ல விரும்புகின்றனர்.

இன்று பால்க்கன் குழப்ப நிலைக்கு முக்கிய காரணம், சேர்பிய ஜனாதிபதி சிலோபதான் மிலோசவிச் அவர்களின் பரந்த சேர்பியக் கோட்பாடுதான். குரோசியா, பொஸ்னியா போன்ற நாடுகளிற் பெருமளவில் வாழுஞ் சேர்பியர்களை இணைத்துப் பரப்பளவும், மக்கள் தொகையுங் கூடிய தொரு சேர்பியாவை உருவாக்கி மீண்டும் பழைய வரலாற்றைப் புதுப்பிக்க வேண்டும் என்பது அவர் கனவு. இது வெடி மருந்துக் குவியலுக்குத் தீவைக்குஞ் செயலாகும் எனினும் அண்மைக் காலத்தில் ஐ.நா. கொண்டு வந்த பொருளாதாரத் தடை காரணமாகத் தமது கோட்பாட்டை அவர் தற்காலிகமாகக் கைவிட்டு விட்டார்.




குரோசியாவில் சேர்பியர் கையகப்படுத்திய பகுதிகள் (ஐ.நா.வின் பாதுகாப்பு பகுதிகள்)
மே மாத தாக்குதலால் குரோசியர் கைப்பற்றிய பகுதி.
--- பிரதான நெடுஞ்சாலை சாகிரேப் - பெல்கிரேட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் அவர் தொடக்கிய தீய பணியின் தாக்கங்கள் தொடர்கின்றன.

சேர்பிய ஜனாதிபதி மிலோசவிச் கொடுத்த ஆக்கமும், ஊக்கமும் குரோசியாவிலும், பொஸ்னியாவிலும் மூன்று வருடங்களுக்கு மேலாக நீடிக்கும் போரைத் தோற்றுவித்துள்ளது. பல்லாயிரம் மக்கள் இறந்துள்ளனர். பொருட்சேதம் பிறிது. ஆனால் ஒன்றும் பெருமளவிற் சாதிக்கப்படவில்லை. புதிய உலக அமைப்பிற் பேரினவாதமும், படையெடுப்பும் பயனற்றவை. 1991ஆம் ஆண்டளவிற் குரோசியவாழ் சேர்பியர்கள் பெரும் நிலப்பரப்பைக் கைப்பற்றிச் சேர்பியன் கிராஜீனாக் குடியரசு என்று பிரகடனஞ் செய்துள்ளனர். இதைச் சேர்பியாவுடன் இணைப்பதே அவர்கள் நோக்கம். குரோசியர்கள் இழந்த நிலத்தை மீட்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். தலைநகர் சாகிரப்பிற் றொடங்கி, சேர்பியத் தலைநகர் பெல்கிரேட் வரை செல்லும் நெடுஞ்சாலையின் பெரும் பகுதியை மீட்டு விட்டனர். அண்மையிற் கிடைத்த தகவலின்படி 1200 கி.மீ. பரப்பளவு மீட்கப் பட்டு விட்டதாகவும், இப்போரிற் பல சேர்பியர்கள் கொல்லப்பட்டதாகவும், இன்னும் பலர் சரண் அடைந்ததாகவும் அறிகிறோம். பொஸ்னியப் போரை மிஞ்சிய கொடூரம் குரோசியாவில் நடப்பதை உலகங் காணாதிருப்பது வியப்பான நிகழ்ச்சி. மண் மீட்புப் போர் இன்னும் பல வருடங் குரோசியாவில் நீடிக்கும் என்பது திண்ணம்.

பொஸ்னியாவில் நிலைமை சற்று வித்தியாசம். குரோசியாவில் 15 சத வீதமாகக் காணப்படும் சேர்பிய இனத்தவர்கள் இங்கு 35 சத வீதமாகக் காணப்படுகின்றனர். ஆனால் இங்கு முஸ்லிம்கள் காணப்படுவதாற் பிரச்சனை உலகளாவிய பரிமாணம் பெற்றுள்ளது. தொடக்கத்தில் (1991) முஸ்லிம்கள் தம்மைப் பாதுகாக்கும் நிலையில் இல்லாத போது பொஸ்னியச் சேர்பியர்கள் இனச் சுத்திகரிப்பு எனப்படும் பாலியல் வன்முறையையும், படுகொலைகளையுங் கட்டவிழ்த்து விட்டனர். ஐ.நா.வின் தலையீட்டாற் பெருந்தொகை முஸ்லிம்கள் பாதுகாப்பு வலயங்களில் அகதிகளாய் வாழ்ந்தாலுந் திருப்பித் தாக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளனர். சர்வதேச முஸ்லிம் அமைப்புக்களும், ஈரான் போன்ற நாடுகளும் அவர்களுக்கு உதவத் தொடங்கியுள்ளன. சேர்பியர்களின் பலத்தைக் குறைப்பதற்காக, குரோசியர்கள் பெருமளவு ஆயுதங்களைப் பொஸ்னிய முஸ்லிம்களுக்குக் கொடுத்து வருகின்றனர். எனினும் பொஸ்னிய வாழ் சேர்பியர்களின் இனவெறி பிடித்த தலைவர் இரடோவான் கரஜிச் பாதுகாப்புப் பிரதேசங்கள் மீது பீரங்கித் தாக்குதல் நடத்துவதை நிறுத்தவில்லை. ஆனால், அவருடைய நிலையிற் சரிவு ஏற்பட்டுள்ளதை நாம் பிறிதொரு விதத்தில் அறியலாம். குரோசியாவின் சேர்பியர்கள் இவரிடமிருந்து எதிர்பார்த்த உதவிகளை அவரால் வழங்க முடியவில்லை. கரஜிச்சின் கைகள் கட்டப்பட்டுள்ளன.

பொஸ்னியப் போர் நான்காவது வருடத்தை எட்டிப் பிடித்துள்ளது. ஐ. நா. தனது இயலாத் தன்மையை நிரூபித்து வருகின்றது. முஸ்லிம்கள் தமது நிலத்தில் 75 சத வீதத்தை இழந்து விட்டனர். ஐ.நா. வின் பாதுகாப்பு வலயத்தில் வாழ்வதிலும் போராடி மடிவது மேல் என்ற நிலைக்கு வந்துள்ளனர். ஐ.நா. வெளியேறினாற் போதும் என்ற வெறுப்பு நிலைக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஆச்சரியமாக இதே வித வெறுப்பும் அதிருப்தியும் குரோசிய அதிபர் ஃபிராங்கோ துட்ச்மான் அவர்களின் பேச்சுக்களிலும் நிலவுகின்றது. ஐ. நா. இன்று வேண்டாப் பண்டமாக நிலவுவதற்கு அது மேற்குலகின் கைப்பொம்மையாக மாறியதே காரணம்.

பல விதத்திலுந் தனிமைப் படுத்தப்பட்ட பொஸ்னியச் சேர்பியர்கள் தமது செல்வாக்கு இழந்த நிலையை ஏற்க மறுக்கின்றனர். தமது ஆயுத பலத்தை அவர்கள் சர்வதேசக் கண்டனத்தையும் மீறி நம்பியிருக்கின்றனர். பொஸ்னிய சேர்பியப் படைகள் அண்மைக் காலத்திற் சராயேவோ நகர் மீதான தாக்குதல்களைக் கூட்டியுள்ளனர். மே 11 ஆம் நாள் ஏவப்பட்ட ஷெல் 11 பொது மக்களைக் கொன்றுள்ளது. இதன் மூலம் சேர்பியர்கள் ஒரு பேருண்மையை உலகிற்கு உணர்த்தியுள்ளனர்: முஸ்லிம்களின் பாதுகாப்பு வலயங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தும் உரித்துத் தமக்கு உண்டு, தட்டிக் கேட்க யாரும் இல்லையென. ஐ நா விற்கும், அங்கத்துவ மேற்குலக நாடுகளுக்கும் இது பெருஞ் சவாலுங் கௌரவப் பிரச்சனையுமாக மாறியுள்ளது. இதன் காரணமாக மே மாத இறுதி வாரத்தில் இத்தாலியின் நேற்றோ விமானத் தளத்தில் இருந்து 15 எஃப் 16 இரகப் போர் விமானங்கள் பொஸ்னியாவை நோக்கிக் கிளம்பின. இவற்றுள் அமெரிக்காவுக்குச் சொந்தமான விமானங்கள் கூடுதலானவை.

பொஸ்னியாவின் சேர்பியர்கள் தமது தலைநகராகப் பாலே (Pale) நகரை நிறுவியுள்ளனர். இதன் சுற்றுப் புறத்தில் உள்ள அவர்களுடைய வெடி மருந்துக் கிடங்குகள் விமானத் தாக்குதல்களுக்கு இலக்காகின. பெருந் தீப்பிளம்புகள் வானை நோக்கிக் கிளம்பியதாகச் செய்திகள் கூறுகின்றன. இதற்குப் பதிலடியாகச் சேர்பியர்கள் ஐ. நா. வின் ஆறு பாதுகாப்பு வலயங்களில் ஐந்து மீது கடும் எறிகணைத் தாக்குதல்கள் குறிதவறாது நடத்தினர். இதில் 76 முஸ்லிம் மக்கள் இறந்தனர். மீண்டும் விமானங்கள் திரும்பின. இரண்டாவது முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக ஆயுதத் தளபாடக் களஞ்சியங்கள் மீது குண்டுகள் வீழ்ந்தன. வான்வழித் தாக்குதல்கள் தொடர்வதைத் தடுக்கும் முகமாகச் சேர்பியர்கள் தாம் ஏற்கனவே பிடித்து வைத்திருக்கும் 200-க்கும் மேற்பட்ட ஐ.நா. அமைதிப் படையினரை மனிதக் கேடயமாகப் பயன்படுத்துகின்றனர். தமது ஆயுதத் தளபாடக் களஞ்சியங்கள், வெடி மருந்துக் கிடங்குகள் போன்றவற்றிற்கு அண்மையில் இவர்களை இரும்புச் சங்கிலியாற் பிணைத்து வைத்துள்ளனர்.

நிகழ்ச்சிகள் இத்தோடு முடியவில்லை. ஜூன் முதல் வாரம் இரண்டு சேர்பியப் போராளிகள் ஐ. நாப் படையினரின் சீருடை அணிந்தபடி பிரெஞ்சு நாட்டு ஐ. நா. முகாமுக்குள் நுழைந்துள்ளனர். இதில் ஆயுத முனையிற் 12 பிரெஞ்சுப் படை வீரர்கள் கடத்தப்பட்டுள்ளனர். அடுத்த நாள் தமது சகாக்களை மீட்கக் கிளம்பிய பிரெஞ்சுப் படையினரில் இருவரும், அவர்களாற் தாக்கப்பட்ட நான்கு சேர்பியர்களுங் கொல்லப்பட்டுள்ளனர். முதன் முறையாக அமைதிப்படை தாக்குதல் தொடுத்துள்ளது. இதை அடுத்து 20,000 அடி உயரத்தில் ஒலியிலும் மும்முறை கூடிய வேகத்தில் வட பொஸ்னியா மேற் பறந்த அமெரிக்க எஃப் 16 விமானத்தைச் சேர்பியர்கள் சாம் 6 ஏவுகணை மூலஞ் சுட்டு வீழ்த்தியுள்ளனர். விமானி, விமானம் நொருங்க முன் வெளியேறி விட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், அவர் இதுவரை மீட்கப்படவில்லை. செய்தியாளர் மாநாட்டிற் பேசிய அமெரிக்க அதிபர் கிளின்ரன் ஐ.நா. அமைதிப் படையைப் பாதுகாக்க வேண்டியது அமெரிக்காவின் தார்மீகப் பொறுப்பு என்று தெரிவித்துள்ளார். மீண்டுமொரு சோமாலியாவா என்று அவதானிகள் வினவுகின்றனர். ஆகவே, பொஸ்னிய குரோசியப் போர் சுருங்கும் வாய்ப்புக் குறைவாகக் காணப்படுகின்றன.

ஐ.நா. வின் மூல நோக்கம் பின் வருமாறு:—

சர்வதேச அமைதியை நிலை நாட்டுவது, அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதைத் தடுப்பது, அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டாற் தடுப்பது, நாடுகளுக்கிடையில் ஏற்படுந் தகராறுகளைச் சமரசமாகத் தீர்ப்பது. ஐ.நா. இந்த இலக்கை எட்டியுள்ளதா என்ற வினாவுக்கு இல்லை என்பதே பதில். அமைதிப் பணிக்குரிய ஒழுங்குகள் ஐ.நா விடங் கிடையாது. அங்கத்துவ நாடுகளைச் சாராத ஐ. நா. ப் படையணியின் தேவை உணரப்பட்டுள்ளது. ஐ.நா. வின் தலையீடு மேற்கு நாடுகளின் நலன் காப்பதாக இருக்கக்கூடாது. அமைதிப் பணிக்குரிய நெடுங் காலச் செயற்றிட்டம் வகுக்கப்பட வேண்டும். இதுவரையில் ஐ. நா. இதற்குரிய முயற்சிகள் எடுத்ததற்குச் சான்றுகள் கிடைக்கவில்லை.

ஆதாரம்:— நியூஸ்வீக் ஜூன்5, 12
ரைம் ஜூன் 5,1995.

# அகிலம் அணுவுக்குத்தான் அதிகம் அஞ்சுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ருஷ்யாவில் செரனோபில் அணு உலையில் ஏற்பட்ட அணுக்கசிவாற் பல பயங்கரமான கதிர்வீச்சுத் தாக்கங்கள் அங்கு ஏற்பட்டன. இப்பொழுது மீண்டும் அந்த நிலையத்தில் உள்ள விபரீதம் விளைவிப்பதிற் பெயர்பெற்ற இலக்கம் 4 அணுத்தாக்கியை மூடி அடக்கிக் கொண்டிருக்கும் கொங்கிறீட் கவசம் ஆபத்தான நிலையில் இருப்பதாகச் சில துணிந்து பேசும் ருஷ்ய அறிவியலாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். அவர்களுடைய அந்த அச்சத்தை ஐரோப்பிய நாடுகள் அவை அனுப்பிய அறிவியலாளர் குழுவொன்று உறுதிப்படுத்தியுள்ளது. அந்த அணு உலையைத் தாங்கும் அமைப்புக்கள் பிளவுறக் கூடிய நிலையில் இருப்பதாகவும், அப்படி நடந்தால் அணுக்கதிர்வீச்சுத் துகள்கள் 30 கிலோ மீற்றர் சுற்றுவட்டத்திற்குட் பரவிப் பெருந்தீங்கு இழைக்கும் என்றும் அக்குழு கூறியுள்ளது. அவர்கள் அத்துடன் அந்த உலையை அடுத்து அமைந்து இயங்கிக் கொண்டு இருக்கும் இலக்கம் 3 அணுத்தாக்கியுங் கூட. அந்த வெடிப்பால் பாதிப்புறலாம் என்று கவலை தெரிவித்துள்ளனர். ஐரோப்பியக் குழு அதனைத் தடுப்பதற்கான மாற்று வழிகள் பற்றி ஆராய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்க்கன் பகுதியில் மற்றுமொரு போர்

**பால்க்கன் பகுதிச் சம்பவங்கள் தொடர்பாக, அமெரிக்கா மிக உன்னிப்பாக அவதானித்த வண்ணம் உள்ளது. இரு தரப்பினரையும் தாக்குதல்களைத் தவிர்க்கும்படி வேண்டிக்கொண்டிருப்பதுடன், சாகிரப் விமான நிலையத்திலுள்ள அமெரிக்க மருத்துவ உதவியாளர்கள் பாதிக்கப்படுவது பொறுத்துக்கொள்ள முடியாதது எனவும் எச்சரிக்கை செய்துள்ளது.**

தமிழில் : இளையவன்

காலை 10.30 மணியிருக்கும், சாகிரப் நகரில் ஆயிரக் கணக்கில் மக்கள் வந்து குவியத் தொடங்கினர். அப்போது தேநீர் இடைவெளிக்கான நேரமாக இருந்தது. சேர்பிய கிளர்ச்சி வாதிகள் தென் கிழக்கே முப்பது மைல் தொலைவிலுள்ள பெற்றிஞ்சாப் பகுதியில் எம். 87 இரக பல தடவைகள் பயன்படுத்தக் கூடிய றொக்கற் லோஞ்சர்களுடன் இங்கும் அங்குந் திரிந்து கொண்டிருந்தனர். ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் 200 இறாத்தல் எடையுடைய எறிகணைகள் குரோசியத் தலைநகர் மீது ஏவப்பட்டது. ஓடும் பேருந்துகளிலும், பாதசாரிகள் மத்தியிலும், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மத்தியிலும் அவை வீழ்ந்து வெடித்ததும் தீப்பற்றிக் கொண்டன. அத்துடன் சுவர்களைத் துளைத்துக் கட்டடங்களையுஞ் சேதப்படுத்தின. எறிகணைகளில் ஒன்று அமெரிக்கத் தூதுவரகத்துக்குச் சமீபமாக வீழ்ந்து வெடித்தது. மற்றுமொன்று ஆரம்பப் பாடசாலை விளையாட்டு மைதானத்திலும், விமான நிலையத்திலுங் கூட வீழ்ந்து வெடித்தது. இந்தத் தாக்குதல்களால் ஐந்து பேர் உயிரிழந்ததுடன், சுமார் 130 -க்கும் அதிகமானோர் படுபடுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதல் இழிவான குற்றச் செயல் என்று அமெரிக்கத் தூதுவரான பீற்றர் சல்பிரித் கோபத்துடன் விபரித்தார்.

நான்கு வருடங்களை எட்டி நிற்கும் பொஸ்னியப் பிரச்சனையிற் குடி மக்கள் மீதான தாக்குதல்கள் என்பது பொதுவான நிகழ்ச்சியாகி விட்டன. ஆனால், குரோசியாவில்? 1991 இல் குரோசியன் சேர்பியர்கள் சாகிரப் நகரிற் கடுமையான சண்டையொன்றுக்கு முகங் கொடுத்து இருந்தனர். இலகுவான ஆயுதங்களைத் தரித்த சுமார் 14,000 அமைதி காப்புப் படையினரை ஈடுபடுத்திய போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் நிலைமை சற்றுத் தணிவடைந்தது. மேற்குலகந் தனது பார்வையைப் பொஸ்னியாவின் மீது திருப்பியது. அதைத் தொடர்ந்து குறோசியாவின் நிலை நோய்க்கு இலக்காகியது. ஐ. நா. வின் உடன்படிக்கையானது நாட்டின் 27 சத வீத நிலப் பரப்பைச் சேர்பிய கிளர்ச்சிவாதிகளின் கையில் ஒப்படைத்தது. குரோசியர்கள் அதனை மீளப்பெற முயற்சிகள் மேற்கொண்டனர். கடந்த மூன்றரை வருடங்களுக்கும் மேலாக சாகிரப் பொஸ்னிய அகதிகளை வரவேற்கும் இடமாகவும் ஐரோப்பிய யூனியனில் காலப்போக்கில் அங்கத்துவம் பெறும் நிலையமாகவும் செயற்பட்டு வந்தது. ஆனால் மீண்டும் தயாராகிக் கொள்ளவும்-ஆயுத பாணிகளாகி முரண்பாட்டைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு இட்டுச் செல்லவும் குரோசியா தவறவில்லை.

ஏப்ரல் 28 இல் மீண்டும் ஆரம்பித்த மோதல் வடக்கு சேர்பியாவிலுள்ள மேற்கு ஸ்லோவேனியாவில் இடம் பெற்ற தனிப்பட்ட சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒக்குகனி வாயு நிலையம் ஒன்றின் முன்பாக நின்றிருந்த 19 வயதான குரோசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன் ஒருவர், இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையின் போது தனது சகோதரனைக் கொன்ற 25 வயதுடைய சேர்பியர் ஒருவரைக் கண்டார். உடனே குரோசியர் தமது கத்தியை எடுத்து சேர்பியரைக் குத்திக் கொலை செய்தார். குரோசிய அதிகாரிகள் அவரைக் கைது செய்து கொலைக் குற்றஞ் சுமத்தினர். அன்றிரவு சேர்பியர்களின் குழுவொன்று பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. அண்மையிற் திறந்து வைக்கப்பட்ட சாகிரப் - பெல்கிரேட் நெடுஞ்சாலையிற் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இதில் மூன்று குரோசியர்கள் கொலையுண்டனர். மேற்கு ஸ்லோவேனியா மீது தாக்குதல் நடத்தத் தருணம் பார்த்துத் திட்டமிட்டுக் கொண்டிருந்த குரோசியர்களுக்கு இது ஒரு வாய்ப்பைக் கொடுத்த விட்டது. மேற்குலக இராஜதந்திரிகளும், இராணுவ ஆய்வாளர்களுப் குரோசியா நீண்ட காலமாகத் திட்டமிட்டு வந்ததைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்ற மூன்று தினங்களின் பின்னர் அதிகாலை வேளையில் குரோசியர்களின் தாக்குதல் ஆரம்பமாகியது. கனரக ஆயுதங்கள், போர் விமானங்கள் என்பவற்றின் துணையுடன் சுமார் ஏழாயிரங் குரோசியத் துருப்புகள் மேற்கு ஸ்லோவேனியாவினுள் கிழக்கிலிருந்தம், மேற்கிலிருந்தும் ஊடுருவினர். சேர்பியப் படையினரை இரு கூறுகளாக்கிய குரோசியப் படையணிகள் ஒக்குகனியையும், அதையடுத்துள்ள நோவா கிறாடிஸ்காவையும் இலகுவாகக் கைப்பற்றிக் கொண்டனர். ஆயிரக் கணக்கான சேர்பியப் படையினரும், பொதுமக்களுஞ் சுமார் மூன்று மைல் நீளத்துக்கு மேலான வரிசையில் நின்று பொஸ்னிய சேர்பிய பகுதிக்குட் பிரவேசிப்பதற்காகச் சாவா ஆற்றைக் கடக்க முயற்சித்தனர். இந்த முயற்சியின் போது நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. சுமார் 600 சேர்பியப் படையினர் குரோசியர்களிடஞ் சரணடைந்தனர். சுமார் 4000 -க்கும் அதிகமான சேர்பியர்கள் சுற்றி வளைக்கப்பட்டுத் தடுப்பு முகாங்களுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். ஒக்குகனிப் பகுதியிற் குரோசியர்களின் அடாவடித் தனந் தொடர்பாக ஐ. நா. அவதானிப்பாளர்கள் புகார் தெரிவித்து இருக்கின்றனர். சம்பவங்களை நேரிற் கண்டவரான மேற்கு ஸ்லோவேனியாவிலுள்ள ஐ. நா. பேச்சாளர் ஒருவர் கூறுகையில்: ''குரோசியர்கள் வீடுகளுக்குத் தீ வைத்தனர், சேர்பியர்களின் உடைமைகளை அபகரித்தனர். கார்களைத் திருடினர், மக்கள் இவர்களுக்குத் தாராளமாக உதவ வேண்டியிருந்தது'' எனத் தெரிவித்தார்.



பக்றாக் நகரில் கொறோசியன் பொலிசாரால் சேர்பிய இளைஞர் கைது.

இதேவேளை சேர்பியத் தரப்பில் இருந்தும் எதிர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. சாகிரப் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்ட மறுநாளில் சேர்பியர்களுக்கும், குரோசியர்களுக்குமிடையே போர் நிறுத்த உடன்பாடொன்று கையெழுத்தானது. இது கையெழுத்தாவதற்கு ஒரு சில மணித்தியாலங்கள் முன்பாக நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலிற் சிறுவர் வைத்தியசாலையொன்று சேதமாகியது. இரு தாதியர்களும், ஒரு கர்ப்பிணித்தாயும், சிறு குழந்தையொன்றுங் காயமடைய நேரிட்டது. வைத்தியசாலை வளவில் நிகழ்ந்த வெடிக்காத எறிகணை ஒன்றைச் செயலிழக்கச் செய்ய முற்பட்ட பொலிஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டார். இதிலிருந்து சுமார் 300 யார் தொலைவிலுள்ள தேசிய கலையரங்கின் மீது விழுந்த எறிகணையால் நடனமணிகள் 22 பேர் காயமடைய நேரிட்டது. இவர்களிற் சிலர் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள். மற்றுஞ் சிலர் உக்ரைன், ருமேனியா, போலாந்து மற்றும் செக் குடியரசுகளைச் சேர்ந்தவர்கள். மேலுந் தாக்குதல்கள் தொடரப்பட்டால் பதிலடி கொடுக்கப்படுமெனக் குரோசிய அதிபர் பிரான்கோ ருட்ஜ்மான் தெரிவித்துள்ளார்.

பால்க்கன் பகுதிச் சம்பவங்கள் தொடர்பாக வாஷிங்ரன் உன்னிப்பாக அவதானித்த வண்ணம் உள்ளது. இரு தரப்பினரையுந் தாக்குதல்களைத் தவிர்க்கும் படி வேண்டிக் கொண்டிருப்பதுடன் சாகிரப் விமான நிலையத்திலுள்ள அமெரிக்க மருத்துவ உதவியாளர்கள் இந்த எறிகணை வீச்சினாற் பாதிக்கப்படும் நிலை ஏற்படுவது பொறுத்துக் கொள்ளப்பட முடியாதது என்று சேர்பியர்களை எச்சரிக்கை செய்துள்ளது. பிணக்குகளைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென அமெரிக்க அதிகாரிகள் குரோசிய அதிபரைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது நிலப்பரப்பில் தமது எண்ணத்தை நிறைவேற்ற அதிபர் ருட்ஜ்மான் சட்டப்படி உரிமையுடையவர் என்கிறார் அரச திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர். ஆனால் இது பலத்த எதிர் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதும், ஆபத்தானதும் ஆகும்.

இரு காரணங்களால் நிலைமை மேலும் மோசமடையக் கூடும். இந்த முரண்பாடுகளிற் தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளாமற் தூர ஒதுங்கி நிற்கும் சேர்பிய அதிபர் ஸ்லோபடாக் மிலோசவிச் மேற்குலகம் தமது நாட்டின் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை விலக்கிக் கொள்ள முயற்சி எடுத்து வருகிறார். ஆனால் பெல்கிரேட்டிலுள்ள தேசியவாதிகள் அவர் மீது மிகுந்த அழுத்தத்தைப் பிரயோகித்து வருகின்றனர். இவர் 1987 இல் சேர்பியர்களைப் பாதுகாப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. பொஸ்னிய சேர்பியத் தலைவரான றடோவின் கராட்விக் தமது சகோதர இனத்தவர்களான குரோசியர்களுக்கு உதவ வாக்குறுதி அளித்துள்ளார். தமது படைகளைத் தென்புறத்திற்கு நகர்த்துவது மூலம் பொஸ்னிய இராணுவத்தால் ஏற்படும் அச்சுறுத்தல்களைச் சமாளிக்கவும் அவர் முயலக்கூடும். ஜிம்மி காட்டரின் ஏற்பாட்டில் அமுலுக்கு வந்த போர் நிறுத்தத்தின் காலக்கெடுவும் முடிவடைந்து விட்டது. எனவே மீண்டும் சண்டைகள் தலைதூக்கக் கூடும்.

ஆக்கம்: ரொம்போஸ்ற், றொட் நோட்லன்ட், ஜொயெல் பிறான்ட், லோறா சில்பர், கறென் பிறெஸ்லோ, ஜேம்ஸ் எல் கிறாஃப்.

ரைம், மே 15, 1995

❋

## உங்கள் சொந்தக் கலைப் பொருள் சேகரிப்பு

கலாநிதி அல்பேட் பார்ண்ஸ் இப்படி வரும் என்று கனவிலும் நினைத்திலர். அமெரிக்க ஃபிலடெல்ஃபியா நகரில் 1951 இல் இறந்த இக் கோடீஸ்வரர் இறக்கும்போது ஓர் உயில் எழுதி வைத்தார். தமது 2,500 கலைச் சித்திரப் பொருள்கள் விழி நுணுக்கக் கூறுகளில்லாமற் பொதுமை பாவமும், தொனியும் உண்டு பண்ணும் ஓவியக் கலைப் பண்புசார் சித்திரங்கள் (இம்பிறெஷனிஸ்ற் ஆர்ட்) இதையடுத்து வந்த பிந்திய இம்பிறெஷனிஸ்ற் ஆர்ட் கலைச் சித்திரங்கள் தமது மாளிகைக்கு வெளியே ஒரு போதுங் காட்சிக்கு வைக்கக் கூடாது என்பது அவர் விருப்பம். ஆனால் உயில்களை நடைமுறைப்படுத்துவோர் காசு சம்பாதிக்க எற்றவாறு உயில்களை வளைத்துப் பொருள் கொள்கின்றனரே! பார்ண்ஸ் சேர்த்து வைத்த 84 சித்திரங்கள் இன்று ஃபிலடெல்ஃபியா நுண்கலை நூதனசாலை மூலம் உலகம் முழுவதுஞ் சுற்றுலாக் கண்காட்சிக்குச் செல்கின்றன. வாஷிங்ரனிலுள்ள பெலெவ்யூ கோர்பிஸ் என்ற நிறுவனம் ''கலைக் காதல்'' ஸிடீ றொம் என்ற பெயரில் பார்ண்ஸின் 330 சித்திரங்களை (மாக் கணனி முறையில்) இந்த இளவேனிற் பருவத்தில் வெளியிட்டுள்ளது. இந்தக் கணனித் தட்டு வரலாற்றறிஞன், கலைப் பொருள் பாதுகாவலன் உடனுதவும் நூல்கன் என்ற முப்பெரும் அறிஞரின் பணியைச் செய்கிறது. இதைப் பயன்படுத்துவோர் கலைக் கண்காட்சி மண்டபங்களுக்கூடாக உலாவரலாம். ஒரு கலைஞன் எப்படித் தன் தூரிகையின் ஓர் அசைவினால் அற்புதங்களைப் படைக்கிறான் எனக் காணலாம். கலையுலகிற் புகழ் பெற்ற பெயர்களை உ-ம்:'' மோடிக்ளியானி'' எப்படி உச்சரிப்பது எனப் பழகலாம். அல்லது நூலின் பொருள் அட்டவணைச் சுட்டியில் விரலை வைத்தால், தபால் முத்திரை அளவில் உலகப் பெருங் கலைச் சின்னங்களைப் பார்வையிடலாம். விரும்பினால் அதைக் கணனித் திரையின் முழு அளவுக்கும் பெருப்பிக்கலாம். ஆனால் வியப்பு என்னவென்றாற் சித்திரத்தை அல்லது புகைப்படத்தை ஆக்கியவரின் பெயர் வராது. மற்றப்படி கலைஞரின் வரலாறுகள் பூரணமாகக் கிடைக்கின்றன. றினோர் வரைந்த படங்கள் 65, பிக்காஸோ வரைந்தவை 19. எல்லாம் இருந்தும், ஒரு கலைக் களஞ்சியத்தின் இடத்தை இக் கணனித் தட்டு எடுத்து விடமுடியாது. ஆனால் இது வேலை செய்யும் முறை மிக நேரியது. கலையை மிக அழகாகத் தருகிறது. ஒரு சின்னஞ்சிறு நூதனசாலை, கலை வரலாற்றின் ஒரு பாடம் என்று இதனை வருணிக்கலாம். கலாநிதி பார்ண்ஸ் அவர்களே எம்மை மன்னியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைக்களமாக மாறிவிட்ட அகதி முகாம்

## றுவாண்டா: 2,000 ஹூட்டு இன அகதிகள் முகாமில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டனர். ருட்சி இன இராணுவம் வெறியாடுகிறதா?

*தமிழில்: திரு. த. சந்தசாமி*

பிரான்சியப் படைகளால் ருட்சி இராணுவத்திடமிருந்து ஹூட்டு இன அகதிகளைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட அகதி முகாங்களுள் மிகவும் பெரியதெனக் கருதப்படுவது கிபேகோவில் அமைந்துள்ள முகாமாகும். இங்கு ஓர் இலட்சம் ஹூட்டு அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர். இம் முகாமில் ஹூட்டு இனக் கரந்தடிப் படையினர் ஒளிந்திருப்பதாக ருட்சி அரசாங்கம் குற்றஞ் சாட்டியது. கடந்த ஏப்ரல் முற்பகுதியில் இம் முகாங்களை மூடி விட்டு அகதிகளை அவரவர் இடத்துக்கு அனுப்ப இராணுவம் முயற்சி செய்தது. ஆனால் ஏப்ரல் 22 இற் கிபேகோ முகாமைச் சுற்றி வளைத்த ருட்சி இராணுவம் அங்கு ஒளிந்திருக்கக் கூடுமெனக் கருதப்பட்ட ஹூட்டு இனப் போராளிகளை இனங்காண முனைந்தது. இதன்போது சிலர் தடைகளை முறித்து வெளியேற முற்பட்டனர். ருட்சி இராணுவம் உடனடியாகத் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததில் 2,000 பேர் (எல்லோருங் ஹூட்டு இனத்தவர்) கொல்லப்பட்டனர்.

இது மிகவும் மிலேச்சத்தனமான செயல் என்று அமைதிப் பணி புரியும் இராணுவ வீரர் ஒருவர் கூறியுள்ளார்: ஈக்கள் மொய்த்த நிலையிற் பல சடலங்கள் பாரிய கிடங்குகளிற் புதைக்கப்பட்டன. உயிர் பிழைத்தவர்களின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. சொந்த இடங்களுக்குத் திரும்புவதை இவர்கள் விரும்பவில்லை. "நாங்கள் சொந்த இடங்களுக்குப் போனால் நாய்களைச் சுடுவது போல் எங்களைச் சுட்டுக் கொன்று விடுவார்கள்" என்று



கிபேகோவில் கொலையுண்டவர்கள் மத்தியில் உயிரோடு போராடும் தந்தையும் குழந்தையும்.

ஒரு முதியவர் கூறியுள்ளார். இந்தப் பயங்கரப் படுகொலைச் சம்பவம் இரு இனங்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் அரசின் முயற்சிக்குப் பின்னடைவைக் கொடுத்துள்ளது. ருட்சி இராணுவங் கட்டுப்பாடு இழந்து ஹூட்டு இனத்தவருக் கெதிரான பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடலாமென அஞ்சப்படுகிறது. இதனிடையே றுவாண்டா அதிபர் பஸ்ரர் பிசிமுங்கு விசாரணைக் குழுவொன்றை அமைக்கும் முயற்சியிலும், இறந்தவர்களின் சரியான எண்ணிக்கையை அறிவதிலும் ஈடுபட்டுள்ளார். கடந்த யூலை மாதக் கலவரத்தின்போது நாட்டை விட்டு வெளியேறி அயல் நாடான சயர் நாட்டில் அடைக்கலம் புகுந்த 7 இலட்சம் ஹூட்டு இன மக்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பக் கூடிய நிலை இப்போதைக்கில்லை என்றே கூறலாம். அகதி முகாங்களில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் மிகவும் பதற்றத்துடன் சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். ருட்சி இனத்தவர்களுடன் தொடர்பு கொண்டுள்ள ஓர் உயர் அதிகாரி இனங்கள் இரண்டுக்கும் இடையில் நல்லுறவைப் பேணும் பணியில் ஈடுபட்டு வருகிறார். "போர் வேண்டாம். மக்கள் ஒன்றிணைந்து வாழவேண்டும்" என்று இவர் கூறி வருகிறார். "போதிய உணவு, குடிநீர், மருந்துவகை என்பன உங்களுக்கெனக் காத்திருக்கின்றன. நீங்கள் மேலுந் துன்பப்பட வேண்டியதில்லை" என்று மேற்குலக இராசதந்திரிகளும், ஐ நா. அதிகாரி ஒருவருங் கூறியபோதும் முகாமை விட்டு வெளியேறுபவர்கள் கடுங்கோட்பாட்டாளரினாற் கொலை செய்யப்பட்டு விடுவார்கள் என்ற அச்சம் அகதிகள் மத்தியில் நிலவுகிறது.

றுவாண்டாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வன்செயல்களும், பழிவாங்கல் நடவடிக்கைகளும் நீங்கிச் சமாதான சூழ்நிலை தோன்றுமென்பது சந்தேகத்துக்கிடமானதாகவே உள்ளது.

*நியூஸ்வீக், மே 8, 1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் கீதம் இசைக்கும் நாடு

## தென்னாபிரிக்கா:

**நெல்சன் மண்டேலாவின் ஓராண்டு ஆட்சியிற் கறுப்பர்களும், வெள்ளையர்களும் பெருமையான சமாதான வாழ்வை எதிர்கொள்கின்றனர்.**

*தமிழில்:* திரு. த. கந்தசாமி



இன அடக்குமுறைக் காலத்து ஆட்சியாளர்களின் உருவப்படங்கள் நாடாளுமன்றக் கட்டடத்தில் இன்று காட்சியளிக்கின்றன.

நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்க ஆட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு ஆண்டொன்று நிறைவு பெறுகிறது. 'சில பெயர் மாற்றங்கள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன. ஆனால் கறுப்பினத்தவர்கள் குடிசைகளிலும், வெள்ளையர்கள் மாடி வீடுகளிலும் வாழ்ந்து கொண்டேயிருக்கிறார்கள்' என்று சிலர் கூற முற்படலாம். இதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது. ஆனால் மக்களுடைய வாழ்க்கையிற் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் எதிர் காலத்தையிட்டு மிகுந்த நம்பிக்கையுடன் வாழ்கின்றனர் என்பதை யாவரும் அறிவர்.

பத்து இலட்சம் வீடுகள் அமைக்குந் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. 13 சத வீதமான வெள்ளையர்கள் நாட்டின் 75 சத வீதமான நிலப்பரப்புக்கு உரிமை உடையவர்களாய் இருக்கின்றனர். இருப்பினுஞ் சாதாரண மக்களிடையே ஒருவித மறுமலர்ச்சி உருவாகியுள்ளது. நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தலின் போது பல வித வன்செயல்கள் நடந்துள்ளன. இன்று மக்கள் மிகவும் நேச பாவத்துடன் பழகி வருகின்றனர். 'பொருண்மியச் சீர்திருத்தங்கள் நிறைவாக இல்லாவிடினுஞ் சிந்தனையிற் பெரிதுந் திருத்தம் ஏற்பட்டுள்ளது' என்று கறுப்பினப் பொறியியலாளர் கூறியுள்ளார். இதேபோல் வெள்ளையரான ஓர் அதிகாரி, "எனது உலகம் இப்போது கறுப்பாகவும், உயர்ந்ததாகவும் மாறிவிட்டது' என்று கூறியுள்ளார். எங்களிடையே இப்போது இன வெறுப்பு, காழ்ப்புணர்வு இல்லை. இங்கு நடைமுறையிலுள்ள கீதங்கள் இரண்டும் பல நிகழ்ச்சிகளின் போது இசைக்கப்படுகின்றன" என்று அவர் மேலுங் கூறினார். ஒருவரையொருவர் போற்றி வாழ்வோம் என்ற மண்டேலாவின் புதிய கொள்கையை வலுப்படுத்துவதாகவே இரட்டைக் கீதம் இசைத்தல் அமைந்துள்ளது. எடுத்ததற்கெல்லாம் போராட்டம் என்ற ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் கொள்கையை முடிவுக்குக் கொண்டுவரவே ஆட்சித் தலைவர் விரும்புகிறார். இதன் பயனாக மின்சாரக் கட்டணஞ் செலுத்த 80 சத வீதமான மக்கள் மறுத்து நின்ற நிலை மாறி 70 சத வீதமானவர்கள் கட்டணஞ் செலுத்த முன்வந்துள்ளனர். 'இன்று நாட்டின் ஆட்சி முறையானவர்களிடஞ் சென்றுள்ளது. அவர்கள் அழைத்தால் தெருக்களைக் கூட்டிச் சுத்தஞ் செய்யவும் நான் தயாராக உள்ளேன்' இவ்வாறு சாரதி ஒருவர் கூறினார். மண்டேலா இன்று அமெரிக்கத் தலைவர் ஜோர்ஜ் வாசிங்ரனுடன் ஒப்பிடப்படுகிறார். 83 சத வீதமான கறுப்பின மக்களும், 55 சத வீதமான வெள்ளையர்களும் இவரை ஆதரிக்கின்றனர். ஏனைய ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார நிலையை ஒப்பிடும் போது தென்னாபிரிக்காவின் சிறந்த வளர்ச்சிக்கு இவரே காரணமாவார்.

மண்டேலா மக்களின் மனதில் மகத்தான இடத்தைப் பெற்றுள்ளார். தினமும் ஐம்பது இலட்சத்துக்கும் அதிகமான பள்ளி மாணவர்கள் ஊட்டச் சத்து நிறைந்த மதிய உணவை இலவசமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றனர். மின்சக்தி விஸ்த ரிக்கப்பட்டுள்ளது. ஆறு வயதுக் குட்பட்ட சிறுவர்களும், கர்ப்பி ணித் தாய்மாரும் மருத்துவ மனை களில் இலவச சிகிச்சை பெறுகின் றனர். தேசியமயக் கொள்கையை முன்னர் ஆதரித்த ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் இன்று அதற்கு அதிக முக்கியத்துவங் கொடுக்க வில்லை. செல்வம் எல்லோர்க்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமாயின் முதலில் அதனைப் பெருக்க வேண் டும். சிக்கனம், சேமிப்பு இவை மூலமாகவே செல்வத்தைப் பெருக்க முடியும் என்ற கொள்கையை இவர்கள் கடைப்பிடிக்கின்றனர். இதன் காரணமாகத் தேசிய உற் பத்தி 2.3 சத வீதத்தால் அதிக ரித்தது. பணவீக்கம் 10 சதவீதத் துக்குங் குறைவாகவே உள்ளது. 1980 இல் 1600 கோடி டொலர் பெறுமதியான சொத்துக்களை வெள்ளையர்களும், வெள்ளையின வியாபாரிகளும் நாட்டுக்கு வெளியே கொண்டு சென்றனர். 1994 இன் இறுதிக் காலத்தில் 240 கோடி டொலர் பெறுமதி யான சொத்து நாட்டுக்குட் கொண்டு வரப்பட்டது.

நாடு இவ்வகையான முன் னேற்றங்களை ஓராண்டு காலத் தில் எட்டியுள்ள போதிலுஞ் சில விடயங்களில் மேலும் முன்னேற் றங் காணப்படவேண்டியுள்ளது. அரசியல் வன்செயல்கள் பெருமள விற் குறைந்துள்ளன. ஆனால் கொலைக் குற்றத்தில் இந்நாடு முன்னணியில் நிற்கிறது. அமெரிக் காவை விட ஆறு மடங்கு கொலை மலிந்த நாடாகத் தென்னாபி ரிக்கா கருதப்படுகிறது. ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் பிரமுகர்கள் ஊழற் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி உள்ளனர். இங்கு தொழி லாள வர்க்கம் கல்வியறிவு குறைந் தவர்களாகவும், அதிக வருமானம் பெறுபவர்களாகவும், அரசியற் தொடர்புள்ளவர்களாகவும் இருப் பது மற்றொரு குறைபாடாகும். வெள்ளை இனத்தவர்களுக்கும், நாட்டின் சொந்த மக்களுக்குமிடை யிற் பாரிய ஏற்றத்தாழ்வு நிலவு கின்றது. இன்றும் வெள்ளை இனத்தவரே நாட்டிற் பொறுப் பான பதவிகளை வகிக்கின்றனர். அது மட்டுமன்றிக் கறுப்பர்கள் பதவியில் அமர்த்தப்படுவதையும் இவர்கள் கண்டிக்கின்றனர். ஆயி னும் மண்டேலா நிறபேதமற்ற சமுதாயத்தை நிறுவுவதையே இலக்காகக் கொண்டு தொழிற் பட்டு வருகிறார். தென்னாபிரிக் காவில் வாக்குரிமை இல்லாதோர் கணிசமான தொகையினராக இருப்பதால் இவர்களையும் இணைத்தே தேசிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டியுள் ளது. மேலுந் தென்னாபிரிக்க வெள்ளை இனத்தவருக்குக் கறுப் பினத்தவரை விடக் கூடுதற் சலுகை காட்டப்படுவதாக மண் டேலா மீது சிலர் குற்றஞ் சாட்டு கின்றனர். இவரைப் பிரிந்து வாழும் இவரது மனைவி வினி மண்டேலாவே இவ்வகைக் குற்றச் சாட்டைத் தீவிரப்படுத்தி வருகி றார். அமைச்சராக இருந்த இவர் தலைவரினால் அமைச்சர் பதவியி லிருந்து நீக்கப்பட்டதையடுத்து அதிபர் மண்டேலாவுக்கு ஆதரவு பெருகியுள்ளது.

பொதுமக்களைப் பொறுத்த வரை 'பொறுத்திருந்து பார்ப் போம்' என்பதே கொள்கையாக உள்ளது. காணி நிலம் வேண்டும், குடி மனைகள் வேண்டும், போக்கு வரத்துக்கான வீதிகள் அமைக்கப் படவேண்டும் என்பவையே இவர் களின் வேண்டுதல்களாகும்.

பிறந்த குழந்தை நடை பயில் வதற்குச் சிறிது காலந் தேவைப் படுவது போல் மண்டேலாவின் ஆட்சியும் பீடு நடைபோடுவதற் குச் சில காலந் தேவை. விரைவில் அது நடைபோடும் என எதிர் பார்க்கலாம்.

ரைம்- மே, 8-1995

★

## அதிபர் மண்டேலாவுடன் ஒரு நாள்

"நான் இப்போது போத்தாவிடமிருந்து அதிக தொலைவில் உள்ளேன், அவரால் என்னை எதுவும் செய்துவிடமுடியாது.''

— மண்டேலா

76 வயது நிரம்பிய நெல்சன் மண்டேலா சுறுசுறுப்பாக இயங்குகிறார். தினமும் 18 மணித்தியாலங்கள் நாட்டின் முன்னேற்றத்துக்குச் செலவிடுகி றார். ஒரு காலத்திற் பயங்கரப் புரட்சியாளனாக இருந்த இவர் இன்று தலைசிறந்த ஆட்சித் தலைவராகத் திகழ்கிறார்.

அதிகாலை 5 மணிக்கு உடற் பயிற்சிக்காகச் சிறிது தூரம் நடந்து செல்லும் இவர் 7 மணிக்கே தனது அலுவலகத்துக் குச் செல்கிறார். தனது செயலா ளரை 'எனது மேலாளர்' என்றே குறிப்பிடுகிறார். முதல் வேலையா கச் செய்தித் தாள்களைப் படிக்கி றார். அடுத்துக் கடிதங்களைப் படிக்கிறார். எலிசபெத் மகா ராணியாரால் நன்றி தெரிவித்துச் சொந்தக் கையெழுத்தில் எழுதப் பட்ட கடிதமும் அங்கு காணப்படு கிறது. 8 மணிக்குத் தனது அமைச் சரவை உறுப்பினர்களைச் சந்திக் கிறார். முன்னைநாள் அரசுத் தலைவர் பி. டபிள்யூ போத்தா விடம் இருந்து தொலைபேசி அழைப்பு வருகிறது. அவருடன் தாய் மொழியில் உரையாடுகி றார்.

ட்றான்ஸ்சி என்ற நகரில் ஏற் பட்ட குழப்பத்தை அடக்கப் பொலிசாருக்குக் கட்டளை இடுகி றார் ''துப்பாக்கிப் பிரயோகந் தேவையானால் அப்படிச் செய்து கலவரத்தை அடக்குங்கள்'' என் பதே அவரிட்ட பணிப்புரை. ''ஆர்ப்பாட்டங்களைப் பொறுத் துக்கொள்வேன். ஆயின் சட்டம், ஒழுங்கு மீறல்களை அனுமதிக்க மாட்டேன்'' என்று இவர் கூறுகி றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கொரு அமைதியும் அங்கொரு அமைதியும்

**பயங்கரவாதிகளை அணைத்துப்பிடித்துப் பரிகாரஞ் செய்கிறார் என்ற விமர்சனங்களைப் பொருட்படுத்தாமல், முன்னாள் அமெரிக்க சனாதிபதி காட்டர் சமாதானத் தூது ஓதித்திரிகிறார்.- இப்போது சூடானில்.**

தமிழில் : திரு. கிருபைராஜா

உலகஞ் சுற்றும் அமைதிச் செம்மல் ஜிம்மி காட்டர் மீண்டும் ஒரு முறை இராச தந்திரிகளை வியக்கவைத்துள்ளார். சென்ற ஏப்ரல் முதல் வாரத்தில் சூடானுக்குச் சென்ற அவர்; அங்கு நீண்ட காலமாக இரத்தக் களரி நடாத்தும் உள்நாட்டு யுத்தம் மட்டுமல்லாமல் ஒருவகை அன்னியோன்னியமாக நிகழும் இன ஒழிப்புக்கும் மத்தியில் சென்று பேசி; இரண்டு மாதகாலப் போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதான வாக்குறுதியொன்றை ஆக்கமுறச் செய்தார்.

காட்டரின் சாதனை வியப்புக்கு உரியது. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக, வடக்கில் உள்ள முஸ்லிம், சூடான் அரசும், தெற்கில் உள்ள கறுப்பு இன கிறிஸ்தவ மற்றும் விலங்கு வழிபாட்டுப் புரட்சியாளர்களும்; ஒன்று மற்றதன் மக்களில் இயன்ற அளவு பேரை வேண்டுமென்றே உண்டாக்கும் பட்டினி போடல், குண்டு வெடிப்பு, சன்னச் சூடு என்பவற்றால் கொன்றொழித்துக் கொண்டுள்ளன. அவர்களுக்கிடையில் 13 இலட்சம் உயிர்கள் பலியாகியுள்ளன. ஆனால் காட்டர் ஏனைய இடங்களிற் போலவே இங்கேயும் சலிக்காமல் நின்று, அடையவே முடியாது என்றிருந்த பெறுபேறான போர் நிறுத்தமொன்றை, அதுவும் போருக்கு மிக ஏற்றதான பருவ நிலை அங்கு நிகழுங் காலத்தில் ஏற்படச் செய்து விட்டார்.



காட்டரின் இராசதந்திரத்தில் அடிக்கடி நிகழ்ந்தது போன்று இந்தத் தலையீடும் நீண்டகாலந் தாக்குப் பிடித்து நிற்குமா என்பது சந்தேகத்திற்கு உரியதாகவே உள்ளது, அமெரிக்க அரசாங்கத்திணைக்கள அதிகாரியொருவர் '' இது கினிப் புழுக்களுக்காகச் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்தம் '' என்று கூறினார். அந்தப் பயங்கரமான ஒட்டுண்ணி நோயை, உதவும் பணியாளர்கள் பரிகாரஞ் செய்து தீர்க்க இடங்கொடுப்பதற்காகவே, பொருதிக் கொண்டு இருந்தவர்கள், போர் நிறுத்தஞ் செய்ய இணங்கினர். அந்த இடைக் காலத்துள் தீர்வுப் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்திருக்கும் என்றாலும்; சூடானின் கடும்போக்கான கொலைச் செயல்கள் ஓயும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாக இல்லை, அரசாங்கம் நாடு முழுவதற்கும் இசுலாமியச் சட்டத்தைத் திணிப்பதால் ஏற்பட்ட அடிப்படையான பிணக்குப் பற்றி காட்டர் எதுவும் பேச்சு நடத்தவில்லை.

இருந்துங் கூட, பெரும் ஆட்கொலை நிகழ்த்திக் கொண்டிருந்த பிணக்கில் எந்தவொரு நிறுத்தமாவது ஏற்பட்டது வரவேற்கத் தக்கதாகும். சூடானில் ஏற்பட்டுள்ள தற்காலிகப் போர் நிறுத்தம் காட்டரின் இராசதந்திரத்தின் புதுமையான தன்மையைக் காட்டுகிறது. இம்முறை இதனை எவரும், சட்ட விரோதமான நிலைப்பாடொன்றிற்கு மனச்சாட்சியற்ற முறையிற் தரப்படும் இலஞ்சமென்று குறை கூற முடியாது. காட்டர் முன்பு சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் வடகொரியாவுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தவெனப் பேசத் தொடங்கிய பொழுதும்; சென்ற டிசம்பரில் பொஸ்னியாவில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தச் சென்ற பொழுதும்; சிலர் கருதியதுபோல் ஒரு கொலைஞர் கூட்டத்தைச் சட்டமுறைப்படிச் செயற்பட்டவர்களாக்கச் சென்றதாக விமர்சித்தது போல் இதனைச் சொல்ல முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஹெயிற்றியில் அமெரிக்கப் படை சமாதானமாகத் தரை இறங்க வைப்பதற்காகப் பேச்சுவார்த்தை நடத்தி அதிலே கடைசி நிமிடத்தில் வெற்றிகண்ட போதுங் கூட; அதற்கு ஆறு மாதங்களுக்குப் பின்பும் சிலர், அவர் அமெரிக்காவின் உத்தியோக ரீதியான கொள்கையைச் சீர் குலைத்துவிட்டதாகக் குறை கூறியது போல் இதிலும் செய்ய முடியாது.

ஆனால் அவருடைய நன்மனத் தன்மையுடனான செயலால், உலகின் பல இராசதந்திரப் பிரச்சனைகளை ஒவ்வொன்றாகக் கையாண்டு தீர்வு காண விளையும் துணிவு போற்றுதலுக்கு உரியது. அவர் சனாதிபதியாக இருந்த போது, அவருடைய ஆட்சி குறைபாடானதும், தட்டிக் கழிப்பதுமாக உள்ளது என்று சாடப்பட்டு இரண்டாம் முறை பதவிக்குப் போட்டியிட்ட போழ்து வாக்களிக்காமற் பதவி இழக்கச் செய்யப்பட்டவரான இந்த தனிப்பட்ட பிரசை, எப்படித் தன்னை உலக இராசதந்திரத்தில் மதிக்கத் தக்க ஒரு சக்தியாக மாற்றினார்?

அதற்கு அடித்தளமாக அட்லான்ராவில் இயங்குங் காட்டர் நிலையம் செயற்பட்டு உள்ளது. அந்த நிலையத்தின் பணியாளர்கள் 200 பேர் உலகெங்கும் பல வேலைத் திட்டங்களில் முழு நேரமாகச் செயலாற்றுகின்றனர். அந்த முன்னாள் சனாதிபதி தனது செயற்பாட்டை ''ஒரு சிறு இராசாங்கத் திணைக்களம்'' என்று வர்ணிக்கவில்லை. ஆனால் அவர், ''நாங்கள் உலகின் பெரும் பிணக்குகளை அவதானித்து பகுப்பாய்வு செய்கிறோம். அதனால் ஒரு பிரச்சனையிற்றலையிட எங்களுக்கு எதிர்பாராத சந்தர்ப்பம் ஒன்று கிட்டினால் நாங்கள் அதன் தொடக்க நிலையிலிருந்து கவனஞ் செலுத்திச் செயற்படத் தேவையில்லை. சில மணி நேரத்தில் அந்த விடயம் பற்றிய ஓரளவு தெளிவான அறிக்கை எனது கைகளிற் கிட்டும்'' என்று கூறுகிறார்.

வாசிங்ரனுடன் தொடர்பு கொள்ள முடியாத- அல்லது வாஷிங்ரன் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாத பல வெளி நாட்டுத் தலைவர்களுடன் காட்டர் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளார். அவருடைய பழைய சனாதிபதி என்ற அந்தஸ்தாலோ, அல்லது உலகில் ஏற்கப்படாதவர்களாக ஒதுக்கப்பட்ட பல தலைவர்களுடன் அவர் மனமுவந்து நட்பாகக் கதைக்குந் தன்மையின் மேன்மையாலோ அவர் அதிலே சிறப்புறுகிறார். அதனால் தான் அவர் உலகில் தனித்து ஒதுக்கப்பட்டிருந்த வடகொரிய சர்வாதிகாரி கிம்-இல்-சுங்குடனும், பொஸ்னியாவின் சேர்பியத் தலைவர் றடோவான் கராட்சிக்குடனும் தொடர்பு கொள்ள முடிந்தது. அவர்கள் ஏதும் திட்டமொன்றை முன்னேக வைக்க விரும்பும் போது அதற்கான இரக்கச் சார்புள்ள வாகனமாக அவர் ஆகி, அதனை வாஷிங்ரனுக்கு ஏக வைக்கிறார், அவருடைய பரந்துபட்ட மனிதாபிமானச் செயற்றிட்டங்கள் அவருக்குப் பல முக்கியமான நிலைகளுடன் தொடர்பு ஏற்படுத்தியுள்ளது. முக்கிய தென் சூடான் போராளிக் குழுத் தலைவர் ஜோன் காரஸ், ''இங்கு வந்து எனது ஞாயிறு நாள் வகுப்பிற் கலந்து கொண்டு உள்ளார் அது போலவே கார்டும் நகரத்திற்கும் பல பல மனிதாபிமானப் பணித் திட்டங்களுக்காக நான் 1985 முதல் சென்று வந்து கொண்டு உள்ளேன்'' என்று காட்டர் கூறுகிறார்.

அவ்விதமாகக் கினிப் புழுக்களை அழிப்பதானது ஓர் இடைக் காலப் போர் நிறுத்தத்திற்கு வழி சமைத்து உள்ளது. கராங்குடன் முதலிற் பேசிய பின்பு காட்டர் சூடானிய சனாதிபதி ஒமர் ஹஸன் எல்-பசீருடன் கதைத்து வைத்திய முயற்சிகள் தொடர்வதற்கு வேண்டிய காலம் வரை சுடுவதை நிறுத்தும்படி கோரினார். ஆரம்பத்திற் பசீர், ''அது அளவுக்கு அதிகமான தோர் இராணுவத் தியாகம்'' என்று கூறியதாகக் காட்டர் சொல்கிறார். காட்டர் அதற்குப் பதிலாக ''அவர், தெற்கின் மனிதாபிமானத் தேவைகளை உணராமல் இருக்கிறார்'' என்று எடுத்துரைத்தாராம். அரசாங்கந் தொடுத்துக்கொண்டிருக்கும் இனப் படுகொலைத் தன்மையான போர் என்று வர்ணிக்கப்பட்ட போரை அவர் கண்டனஞ் செய்யவில்லை. ஆனால் காட்டர் நான் எவரையாவது மனித உரிமைகளை மீறுபவர் அல்லது அமைதிக்குத் தடையாக இருப்பவர் என்று கண்டனஞ் செய்தால் அது வெகுவாகப் பாதிக்கக் கூடும்'' என்று கூறுகிறார். வேறு விதமாகச் சொல்வதானால் காட்டர் ஒருவரை நீ கூடாதவன் என்று சொன்னால் அவர் வெறுக்கப்படுவார்.

முன்னாள் சனாதிபதிக்குச் சமாதானம் ஏற்படுத்துவதென்பது ஒரு வெறும் விருப்பு அல்ல-ஒரு தேவ கட்டளை போன்றது. அவருக்கு அதனால் எதிர்ப்பு ஏதும் இல்லை. பல நிர்வாக உத்தியோகத்தர்கள் அவருடைய அணுகுமுறைகள் அகந்தையானவை என்று கூற ஒருவர், ''இயற்கையிலும் அதிகமான தன்னம்பிக்கை'' என்றும், அதனால் அனேக தடைகளைத் தகர்வுற வைக்கின்றது என்றும் கூறினார் காட்டரும் அரசாங்கத்தின் கொள்கைகளை எண்ணிப் பின் நிற்பவராக இல்லை. வடகொரியாவுடன் அவர் தன் விருப்பப் படியே உரையாடினார். ''அங்கே நாங்கள் போரிட நகர்வதாக அவர் கருதியதால் அவ்விதஞ் செயற்பட்டார்.''

படு கொடூரமான அகந்தை கொண்டவர்களுடன் கூட, காட்டர் நிறைவான விருப்புடன் உரையாடி அவர்களைப் போற்றவும், வாழ்த்தவுங் கூட முற்படுவதனால் அவர் நல்ல தீர்வுக்கும் அதே போன்று கடும் மாறுபாட்டுக்குங் கூட இடமளித்துள்ளார். கிம்களுடனும், கராட்சிக்குகளுடனும் சதாம் ஹுசெயின்களுடனும் பேசுவது அவசியமென்று அவர் உறுதியாக நம்புகிறார். ஈராக்கின் தலைவருடன் அவர் இடை நடுவர்கள் மூலந் தொடர்பு கொண்டுள்ளார். அமெரிக்கா அவருடைய அணுகு முறைகள் பற்றிக் கவலைப் படாதது போல் அமெரிக்கப் பத்திரிகைகளும் அவரை விமர்சிப்பதாக இல்லை. ஒருவரை நேரிற் கண்டனஞ் செய்து கொண்டு பயனுள்ள தீர்வு பெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது என்று அவர் கருதுகிறார் என்று முன்னாள் அமெரிக்க இராசாங்கத் துறைத் துணை அமைச்சர்களில் ஒருவரான செஸ்டர் குரோகர் கூறினார். அவர் மேலும், ''ஒரு தனிமைப்படுத்தப்பட்ட தலைவரை அணுகுவதனால் நன்மையுண்டு. ஒரு காட்டுப் பூனையை மனிதனைப் போல் மதிக்கும் விதத்தை அவர் புரிந்து கொண்டு உள்ளார்'' என்றுங் கூறினார்.

காட்டருக்குக் காட்டுப்பூனைகளுக்கும், வீட்டுப் பூனைகளுக்கும் இடையிலான வித்தியாசந் தெரியுமோ வென்பது ஓர் ஆழமான கேள்வியாகும் ஹெயிற்றியில் அரசைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றிய செட்ராஸுடன் அவர் உரையாடியபோது நல்லதொரு காவற்காரனாக நடந்து கொண்ட போதும் அவருடன் தூதுக்குழுவிற் சென்ற ஏனையோர் கெட்ட காவலர்களாக நடந்து கொண்டனர் என்று அவற்றை அவதானித்த ஒருவர் கூறினார். ஆனால் அதே வேளை அங்கிருந்து அவதானித்த இன்னுமொருவர் காட்டர் தனக்குள் செட்ராசை இராணுவ ரீதியான மதிப்புக்கு உரியவராக அல்லாமல் ஒரு கொலைகார முரடனாக மதிக்கவில்லை என்று தான் உண்மையாகக் கருதுவதாகக் கூறினார். உயர்தரப் பன்னாட்டுக் கற்கைகளுக்கான ஜோன் ஹொப்கின்ஸ் கல்லூரியில் அமெரிக்க வெளியுறவுக் கொள்கை பற்றிப் பேராசிரியர் மைக்கல் மென்டல்பாம் என்பவர், ''காட்டர் முன்புமனித உரிமைகளை வலியுறுத்துவதிலேயே செறிவாக ஈடுபட்டார் என்றும், ஆனால் இப்பொழுது அவர் பிணக்குத் தீர்ப்பதை மற்றவை எதற்கும் மேலாகக் கவனத்திற் கொள்வதாகவுங் கூறினார். நீங்கள் நன்னெறி விடயங்களிலேயே உன்னிப்பாக இருந்தால் அப்பொழுது உங்களால் ஒன்றுமே இல்லாமற் போவதிலும் ஏதாவது கிடைத்தால் நல்லதென்று எதிர்பார்க்க முடியாதென்று'' அவர் காட்டரின் செயற்பாடு தொடர்பாக மேலுங் கூறினார்.

முனைவுகளின் முடிவுகளே அமிலப் பரிசோதனையாகும். இதுவரை நிகழ்ந்தவற்றிற் காட்டர் கதவுகளைத் திறந்து விட்டாலும் அதன் மூலம் நின்று நிலைக்கும் நிலைமைகள் அடையப்படுவதில்லை எனக் காணப்பட்டு உள்ளது. விபரங்கள் இதோ:-

## வடகொரியா

சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் வட கொரியாவுக்குச் சென்றபோது அமெரிக்க நிர்வாகம் அனைத்துலக ரீதியான தடைகளை விதிக்கத் திட்டமிட்டு உள்ளதாகக் கூறி அதனால் வடகொரியா அதன் அணு உலைகளில் அணுக் குண்டு ஆக்குஞ் செயற்பாடுகளை நிறுத்தினால் அணுவாற்றல் பயன்பாட்டு வேலைத் திட்டங்கள் பற்றி மேலுங் கலந்தாலோசிக்க முடியும் என்று வாக்களித்தார் அந்தப் பேச்சுக்கள் காலகதியில் அணுக்குண்டுத் திட்டங்களை நிறுத்தவும், அதற்குப் பதிலாக குறைவான ஆபத்துத் தன்மை கொண்ட அணு உலைகள் வெளியிலிருந்து உள் வரவிடவும் இணக்கங் காணப்பட்டது. ஆனால் அமெரிக்காவில் உள்ள குடியரசுக் கட்சிவாதிகள் சிலரோ அதனால் சட்ட முறையற்ற அரசாங்கம் ஒன்றிற்கு இலஞ்சங் கொடுத்து அணுக்குண்டு ஆக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளதாகச் சாடினர். வடகொரியாவும் அந்த ஒப்பந்தத்தைச் செயலிழக்கச் செய்யும் விதமான ஆட்சேபனைகளைக் கிளப்பியுள்ளது.

## ஹெயிற்றி

செட்ராஸின் அதிரடி ஆட்சிக்கு காட்டர் அளவுக்கு அதிகமான பரிவு காட்டிவிட்டார் போற் றெரிகையில் அமெரிக்கா அந்த நாட்டுக்குள் ஒரு சூடு கூடச் சுடாமல் நுழைய முடிந்தது நன்மையே. அமெரிக்கப் படை அமைதியாகச் சென்றிறங்க செட்ராஸும் அவருடைய குழுவினரும் நாட்டை விட்டுத் தப்பி ஓடி அஞ்ஞாத வாசம் பெறச் சனாதிபதி அரிஸ்ரைட் தமது பதவியில் மீள இருத்தப்பட்டார். ஆனால் அமெரிக்கா அங்கே அமைதி காக்கும் பொறுப்பை ஐக்கிய நாடுகள் அவையிடங் கையளித்த போது ஓர் அமெரிக்கப் படை வீரர் கொல்லப்பட்டும், இன்னுமொருவர் காயப்பட்டும் இருக்கையில் ஹெயிற்றியர்களிடையே வன்செயல்கள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன.

## பொஸ்னியா

உலகில் அனேகர் இன ஒழிப்பு நடத்துஞ் சேர்பியக் குற்றவாளிக் கும்பலென்று கருதுவோர்க்குச் சட்டபூர்வங் கொடுத்து, காட்டர் 3 மாத இடைக்காலப் போர் நிறுத்தம் ஒன்றைச் சென்ற டிசம்பர் மாதத்தில் ஏற்படச் செய்தார். இருந்தும் இரு சாராரும் அமைதிக்கான உண்மையான முன்னேற்றம் எதையும் இன்னும் அடையவில்லை. மீண்டும் போர் தொடங்கி விட்டது.

நிலைமை இப்படியாக இருப்பினும் சனாதிபதி கிளின்ரன் காட்டரை விட்டொதுக்க மாட்டார். ஏனெனில் அனைத்துலக அலுவல்களிற் குறைவான நேரத்தையே செலவிடுந் தற்போதைய சனாதிபதிக்கு வெளியுறவுக் கொள்கையில் நிறைந்த கவனஞ் செலுத்தும், தான் எதை நாடுகிறார் என்ற தெளிவான விளக்கங் கொண்ட முன்னாள் சனாதிபதியின் மதியூக முனைவுகள் பயனுள்ளவை என்பதனாலாகும்.

எழுதியவர்: ஜோர்ஜ் ஜே சேர்ச்

ரைம் ஏப்ரல் 10, 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியர்வை இல்லையா? அப்பொழுது மேலதிக ஆயுளும் இல்லை!



## நீண்டநாள் வாழ்வதற்குக் கடினமான உடற்பயிற்சி ஒன்றுதான் வழி, என்கிறது ஹாவாட் பல்கலைக்கழக ஆய்வு.

*தமிழில் :* சொக்கன்

ஹாவாட் பல்கலைக்கழகத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தமது நெருக்கடி மிக்க கடமைகளுக்கிடையே அவ்வப்போது சில பந்து விளையாட்டுக்களிலும் சிறப்பாகக் 'கோல்ப்' (Golf) விளையாட்டுக்களிலும் ஈடுபடுகிறார்கள். அலுவலக எழுதுனர்கள் தங்களின் மதியச் சிற்றுண்டியைத் தொடர்ந்து உடற்பயிற்சிகள் சிலவற்றைச் செய்கிறார்கள். ஆனால் இவர்கள் இவற்றின் மூலங் கூடிய பயன் பெறவேண்டுமானால் இவற்றிலே கிரமமாக ஈடுபட வேண்டும் என்று கடந்த மாதம் வெளியான அமெரிக்க வைத்தியர் சங்கச் சஞ்சிகை அறிவுறுத்துகின்றது.

சஞ்சிகையில் வெளியான ஆய்வுக் கட்டுரை நடுத்தர வயது கொண்ட 17,300 பேர் கடுமையானதும், கிரமமானதுமான உடற்பயிற்சி மூலம் நீண்ட ஆயுளைப் பெற்றிருப்பதான தனது ஆய்வு முடிவினை வெளியிட்டுள்ளது. கிழமையில் ஒரு தடவையோ, இரு தடவைகளோ தங்கள் உடலை வசைத்து வியர்வை சிந்துபவர்களிலும் மேலே குறித்தவர்கள் கூடிய காலம் வாழ்கிறார்கள் என்றும் அது கூறுகிறது ''அரைமனதோடு ஏதோ கட்டாயத்துக்குச் செய்வது போன்ற உடற்பயிற்சிகள் உமது ஆயுள் நீடிக்க உதவப் போவதில்லை'' என்று இந்த ஆய்வை முன்னெடுக்குந் தலைவர் டாக்டர் ஐ. மின். லீ கூறுகிறார். இதே சஞ்சிகையிற் சில வாரங்களுக்கு முன்பு வெளியான டல்லாஸ் மாகாண உடற்பயிற்சி ஆய்வு நிலையத்தின் ஆய்வுக் கட்டுரை ஒன்றில் 9,777 ஆட்களில் நடத்திய பரிசோதனையின் முடிவு வெளியிடப்பட்டுள்ளது. அந்தக் கட்டுரையின்படி உடற்கட்டு (Physical Fitness) ஒன்றுதான் நீண்ட வாழ்வுக்கு வழி என்பதும், அதற்குக் கிரமமான உடற்பயிற்சி அவசியம் என்பதும் தெரிய வருகின்றது. ஒருநாள் விட்டு ஒருநாள் 28 முதல் 30 நிமிடம் வரை 3. 2 கி. மீ தொலைவு நடத்தல் வேண்டும் என்பது அந்தக் கட்டுரை தரும் ஓர் ஆலோசனை. உருளைக் கிழங்கை உண்பதன் மூலம் ஏற்படக்கூடிய விளைவுகளின் ஆபத்தைக்கூட இந்த நீண்ட நடை போக்கிவிடும் என்று கூறப்படுகிறது. தோட்ட வேலையும், நாயோடு உலாவப் போவதுங்கூட உடற்கட்டுக்குப் பொருத்தமான பயிற்சிதான். கடும் உடற்பயிற்சியை இவை ஈடுகட்டும் என்பது இவ் ஆய்வுக் கட்டுரைகளுக்கு முன்பே ஐ. அ. நோய்க் கட்டுப்பாட்டு நிறுவனங்களால் வெளியிடப்பட்ட அறிவுரைகளாகும். இவ்வகையான உடற்பயிற்சிகளில் 60 வீதம் அமெரிக்கர் ஈடுபடாதிருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த சில தசாப்தங்களாக இவ்வாறெல்லாம் உடற்பயிற்சியின் அவசியம் பற்றி அறிக்கைகள் வழங்கப்பட்டும் இந் நிலை தொடர்கிறது. சுறுசுறுப்பும், உடல் நலமும் வாய்ந்த பலருங் கட்டுப்பாடான உணவுப் பழக்கம், நிறை குறைப்பு, புகையிலை பயன்படுத்தலைத் தடுத்தல் என்பவற்றால் தம் ஆயுளை நீட்டிக் கொள்ளவில்லையா என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது. எனினும் இவை யாவிலும் உடற்பயிற்சி ஒன்றே கூடிய பயன்தர வல்லது என்று ஆய்வாளர்கள் ஆதாரபூர்வமாக நிறுவிக்கொண்டே இருக்கிறார்கள். ஹாவாட் பல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைக்கழகப் பொதுச் சுகாதாரத் துறையைச் சேர்ந்த டாக்டர் லீயும், அவரின் சகாக்களும் இந்த வற்புறுத்தலை அளிப்பதிற் குறிப்பிடத்தக்கவர்கள்.

நாள்தோறும் நடத்தலாகிய உடற் பயிற்சியில் ஈடுபடுபவர்களை இருவகையாகப் பாகுபடுத்தலாம். ஒரு சாரார் ஆற அமர நடப்பவர்கள். இவர்கள் நடக்கும் அதே தூரத்தை விரைவாக நடந்து முடிப்போர் மறுசாரார். இருவருடைய உடல் வெப்பமும் ஒரேயளவு வெளியேறுவதும், இவர்களுக்கு வேண்டிய உணவுக் கலோரிகள் ஒரேயளவாயிருப்பதும் உண்மைதான். ஆனால் ஆற அமர நடக்கும் பழக்கத்தை மேற்கொண்டவர்களிலுங் கூடிய பயன் பெறுவோர் கடினமாகவும், விரைவாகவும் கலோரிகளை வெளியேற்றுபவர்களே என்பது லீ குழுவினரின் ஆய்வு முடிவு. இவர்கள் முற்கூறப்பட்டவர்களிலும் 25 சத வீதங் குறைந்த மரண விகிதத்தை உடையவர்கள் என்கிறது அந்த ஆய்வு. விரைந்த, கடினமான உடற்பயிற்சிக்கு, ஒவ்வொரு வாரமும் 12 நிமிட இடைவெளியிற் சராசரி 1.6 கி.மீ நடப்பது சமமானது என்கிறார் லீ.

ஆனால், கடினமான அலுவலகப் பணிகளுக்கிடையே, கடினமான உடற் பயிற்சிகளையும் மேற்கொள்வது சாத்தியமா என்பது கேள்வி. லீ இக் கேள்விக்குக் கூறும் சமாதானம், ''ஆட்களின் உடல் நிலைகளுக்கும், ஆரோக்கியத்திற்கும் ஏற்ப பயிற்சிகள் வேறுபடலாம். உதாரணமாக மரதன் ஓட்டப் போட்டியிற் பங்கு கொள்பவரும் உடற் பயிற்சியே செய்யாதவரும் ஒரே வித பயிற்சியில் ஈடுபடவியலாது. பின்னவருக்கு அது அதிமானுட முயற்சி (Super Human Effort) யாகவே இருக்கும். ஆனால் அதற்காக இயன்ற அளவு கூடிய பயிற்சியை அவரவர் தகுதிக்கேற்ப மேற்கொள்வதும் அவசியமே.''

எந்த உடல் நல ஆலோசனைகளும் பகுத்தறிவுக்கு உகந்ததாக இருக்க வேண்டியது அவசியம். எளியனவும் சாதாரணமானவையுமான உடற்பயிற்சிகள் ஒருவரின் நீண்ட நாள் வாழ்க்கைக்கு உதவாது போகலாம். ஆனால், அவை அவரின் ஆரோக்கியத்தை உயர்த்தி வாழும் வரை உடல் நலத்தோடு வாழ உதவலாம். எனவே ஒருவர் தமக்கு உற்சாகமும், மகிழ்ச்சியுந் தரக் கூடிய ஏதாவது உடற்பயிற்சியில் ஈடுபடுவது அவசியம். இதற்காக அவரது சோம்பற் படுக்கையைத் துறந்து தொலைக் காட்சிப் பொழுது போக்கை ஒத்திவைத்து இயன்ற வகையில் உடற் பயிற்சியில் ஈடுபடுதல் வேண்டும்.

*கிறிஸ்ரீன் கோர்மன்*
*ரைம், மார்ச் 1995.*

## ஈராக்கிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான குத்துக் கொழுவல்

அமெரிக்க விமானப் பழுது பார்ப்பாளர்களான டேவிட் டாளிபர்டியும், வில்லியம் பர்லூனும் ஈராக்கிற்குள் சட்டவிரோதமாகப் புகுந்ததாகச் சாட்டப்பட்டு எட்டு வருடம் சிறை விதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவித்து அனுப்ப ஈராக்கின் பிரதிப் பிரதமர் தாரிக் அஸீஸ் ஆதரவு தந்தாலும், சனாதிபதி சதாமின் மகனான உதாயும், வேறு தீவிரப் போக்காளர்களும் அதற்கு எதிர்ப்புக் காட்டுகின்றனராம்.

அவர்கள் இந்த விடுதலைக்கு மாற்றாக ஈராக் மீது ஐ. நா. விதித்துள்ள பொருளாதாரத் தடையை விலக்கப் பேரம் பேச முயல்கின்றனராம். அந்தக் கைதிகள் இருவரும் விடுவிக்கப் படும்வரை தடை விலக்கல் பற்றிக் கதைக்க முடியாதென்று இராஜதந்திர வழிகள் மூலம் அமெரிக்கா எச்சரித்து உள்ளது. ஆனால் சில அமெரிக்க அதிகாரிகள், ஈராக் அதற்குப் பழி வாங்குவதற்கான அந்த இரு அமெரிக்கர்கள் மீதும் பொய்யான உளவுக் குற்றம் போட்டு, கொன்று விடலாம் என்று அஞ்சினாலும், சனாதிபதி கிளின்ரனின் நிர்வாகம் ஈராக்கின் வீராப்புக்களுக்கு மசிந்து விட்டுக் கொடுப்பதாக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தப் புள்ளிகளை உற்றுப் பார்த்தபடியே இருங்கள்; அவை முப்பரிமாண இரகசியங்களை வெளிப்படுத்தும் டயோராமா ஓவியங்கள் ஆகின்றன.

# மயக்கும் படங்கள்

**டயோராமா என்னும் சொல் 'ஹொராமா' என்ற கிரேக்க அடிச்சொல்லிலிருந்து பிறந்தது; ஒளி - நிழல் வண்ணபரை திறங்களின் மூலம் எழு ஞாயிறு போன்ற இயற்கை நேர்க்காட்சிப் பண்பு தோன்றத் தீட்டப்படும் ஓவியத்தைக் குறிக்கும்.**

*தமிழில் :* காவல்நகரோன்

பல காலமாகச் சிறுவர்கள் பிரபல கேலிச் சித்திரப் படப் புத்தகங்களில் மனத்தைப் பறிகொடுத்து வந்தனர். இந் நாள்களில் பாலர் வகுப்பினர் முதல்,பாட்டிமார் வரை ஒரு மர்மமானவகை முப்பரிமாணப் படங்கள் (நத்தார்) வாழ்த்து அட்டைகள், புத்தகங்களில் மூழ்கியிருக்கிறார்கள். ஒரு விதமாகப் பார்த்தால், இவை ''நீ பார்ப்பதைத்தான் கண் வழிப் பெறுகிறாய்'' என்ற பழமொழிக்கு வேறான காட்சியைப் பெறுகிறார்கள். இவற்றுக்குத் தன்னியக்கத் திட்டக்காட்சி இருகோண நிலைப்படங்கள் (ஸ்ரீறியோகிறாம்) என்று பெயர். இவற்றைப் பார்க்கும் போது, சுவர் அலங்கார கடதாசிச் சித்திரங்கள் போன்ற வற்றினிடையே முப்பரிமாண உருவங்கள் தோன்றும்.

இதற்குப் பெயர் 'மந்திரக்கண்' (மஜிக் ஐ). இத் தொழினுட்பத்தைப் பிரபல்யப்படுத்தியது அமெரிக்க மசாசுசெற்ஸ் மாநிலத்து நிறுவனமான என் ஈதிங் என்ரர் பிறைசெஸ் என்பது. அது முதலிற் கணனி மூலம் ஆக்கப்பட்டதும், முப்பரிமாணப் படிமங்களை மறைத்து வைத்திருப்பதுமான பெருஞ் சுவர் விளம்பரப் படங்களை உற்பத்தி செய்து விற்றது.

1993, நவம்பர் முதல் 'மந்திரக்கண்' வெளியிட்ட புத்தகங்களில் 10 இலட்சம் பிரதிகள், பத்து மாதத்துக்குள் அமெரிக்காவில் விற்பனையாயின. பற்பல நிறுவனங்கள் இப்படியான புத்தகங்கள், (சுவர் விளம்பர அளவு) பெரும் படங்கள் (நத்தார், பிறந்ததின) கார்டுகள் போன்றவற்றை விற்றுள்ளன. கணனி மென் தகடு (சொஃப்ற்வெயர்) செய்யும் நிறுவனங்கள் ஐ/ஓ யன்னல்களுக்கான மென்தகடு ஸ்ரீறியோ இலியூஷன்ஸ் என்ற பெயரிய மென்தகடுகளை விற்பனை செய்கின்றன. அவற்றைத் தம் கணனியில் பொருத்தித் தாமே விரும்பிய கோலங்களில் ஸ்ரீறியோகிறாம் படங்களை வீட்டிலேயே ஆக்கிக் கொள்ளலாம். இந்த மென்தகடு மறைந்த படிமம் ஆக்கும் பணியை அழகாகச் செய்ய வல்லது.

இரு பரிமாண மேற்றளங்களில் முப்பரிமாணங்களைக் காணும் போது ஏற்படும் புதுமை உணர்ச்சியைத் தனக்கு இலாபகரமாக உப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகிப்பதே 'மந்திரக்கண்' ணின் மாயாஜாலம். அதன் வெளியீட்டில் ஏதாவதொருபடத்தைப்பாருங்கள். மனத்தை மயக்கித் தலைசுற்றப் பண்ணும் நிறங்களில் வண்ணத்துப் பூச்சிகள், நீர்ச்சுழிகள், நீர்த்துளியில் துலங்கும் எழில் வட்டம் தெரியும். சில சமயம் கல்லூரி மாணவர் விடுதியிற் காணப்படும் பெரிய சுவரொட்டிகளில் உள்ள காட்சிகள் தோன்றும். சற்று நேரம் உற்றுப் பாருங்கள், பார்வையைச் சற்று அகன்று செல்லப் பண்ணுங்கள். மற்றொரு படிமம் ஒரு காடு அல்லது சிறகுள்ள குதிரை – ஒவ்வொன்றும் நீள, அகலத்தை விட ஆழமும் உடைய மாயத்தோற்றமுடன் விளங்கும். மாயவித்தையிற் றோன்றுவது போல எங்கிருந்தோ தலை நீட்டி, விண்வெளியில் மிதக்கும்.

இப்படிப்பட்ட படிமங்களை நாம் கண்டுபிடிப்பதன் மர்மம் என்ன? எமது பார்வை இரு கண் மணிகளுக்கூடாகச் செல்கிறது. இரண்டுக்குமிடையில் உள்ள காட்சிப்புல வேறுபாட்டை ஒன்றிணைத்துக் காணுந் திறன் மூளைக்கு உண்டு. இதனால் பொருள்களுக்கிடையில் உள்ள தூரத்தைக் காணுந் திறன் மூளைக்கு உண்டு. இதனால் பொருள்களுக்கிடையில் உள்ள தூரத்தைக் காணும் இயல்பு பார்வைக்கு ஏற்படுகிறது. இயற்கையில் அமைந்த எமது 'ஸ்ரீறியோஸ்கோப்' காட்சித் திறன் எம்மை மிகப் பெருந்தொகையான பொருள்கள் நிறைந்த 'உலகத்' துக்கூடாக (அலைகளின் மத்தியில் பவனி வரும் கப்பல் போல) ப் பயணஞ் செய்ய வாய்ப்பு அளிக்கிறது. இது முப்பரிமாணக் காட்சிப் பைத்தியங்களுக்கு வெகு உல்லாசத்தைத் தருகிறது.

மூளை எப்படிப் படிமங்களை முப்பரிமாணத்தினவாய் விளக்குகிறது என்பதை யாரும் அறியார். உண்மையில், நீண்டகாலமாக, மூளை இத் தொண்டில் ஈடுபட்டுள்ளது என்ற சங்கதியே எவருக்குந் தெரியாது. இது வெறுங் கட்புலனின் திறமை என்றே நினைத்து வந்தனர். உடம்பில் இருக்கும் இரண்டு 'குட்டி' ப் புகைப்படக் கருவிகளாகிய கண் என்ற பொறிகளுக்கு மட்டுமே இதில் தொடர்புண்டு என்று கருதினர்.

முப்பரிமாணங்களை அகக்காட்சியாகக் காணும் முயற்சி அதை இரு பரிமாண (தட்டையான) சமதளத்திற் கண்டு சுவைக்குந் திட்டம் மனிதனுக்கு ஒய்வு கிடைத்த காலம் முதலே நடந்து வருகிறது. (பிரான்சில்) லஸ்லோ என்னுமிடத்திற் புராதன குகை ஓவியந் தீட்டிய சைத்திரிகர்களே தமதுபடங்களை வரைந்துள்ள முறையில் 'ஆடும்' சுடர்விட்டு எரியுந் தீப்பந்த வெளிச்சத்தில் அவற்றை நோக்கினால் அவை முப்பரிமாணத் தோற்றமளிக்குமாறு சித்திரித் துள்ளனர். இக்கால முதலே ஸ்ரீறியோ கட்புலக்காட்சி பெறும் முயற்சிகள் மனிதனால் மேற்கொள்ளப்பட்டன என்று நம்பலாம். முப்பரிமாணத்துவம் என்பது யாது? அது எவ்வாறு அமைகிறது என்ற பிரச்சனையை முடிச்சு அவிழ்க்கத் தத்துவஞானிகளும், (மெய்யியலர்) விஞ்ஞானிகளும், கலைஞரும் பெரு முயற்சி செய்துள்ளனர். நாம் எவ்வாறு படத்தில் (நீள, அகலத்தை விட) ஆழத்தை நோக்குகிறோம்? நம்மைச் சுற்றி உள்ள உலகை ஒரு சமதளத்திற் புத்துருவாக்க எப்படி முடியும்?

இதைச் செய்து முடிப்பதற்கு ஒருமுறை யாதெனில், எம்மிடமிருக்கும் இரு கண்களைக் கொண்டு அவற்றின் திறனால், அல்லது அவற்றுக்கு உபகாரமான இரு கண் பிழம்புருக் காட்சிக் கண்ணாடி (பைநொக்குலர்) போன்ற ஒரு கருவியின் வழியே இரு படங்களை உள்ளே கண் திரைகளில் விழச்செய்து அவை இரண்டையும் மனம் ஒரே படமாக்கி ஆழத் தன்மையுடன் கூடியதாக நாம் காணச் செய்வதாகும். 1950 களில் இரு கருவிகளுடன் கூடிய முறைகள் பிரபல்யமாயின. அதில் ஒரு முறையின்படி முப்பரிமாண சினிமாத் திரைப்படங்கள் பார்ப்பதற்குச் சபையோர் சிவப்பு, பச்சை 'அரிதட்டு' ள்ள கண்ணாடிகளை அணிந்தனர். அதற்கென எடுத்த சினிமாப் படத்தில் ஒன்றின் பெயர் 'புவனாபேய்.' அக்காலகட்டத்தில் கையில் வைத்துப் பார்க்கும் 'ஸ்ரீறியோஸ்கோப்' காட்சிக் கருவிகள் சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்களில் அவசியம் இடம் பெற்றன. (அதில் ஒன்றுக்கு 'வியூமாஸ்ரர்' என்று பெயர்.) அவர்கள் சுவைத்த புத்தகக் கதைகளில் வருங் காட்சிகள் சுழற்றச் சுழற்ற 'திரை' யிற் றோன்றும். பெரிதாகக் காட்டும் இருகுழி ஆடிகள் உள்ள 'வியூமாஸ்ர'ரைக் கண்களுக்கு அருகில் வைத்துக்கொண்டு படச்சுருளைத் திருப்பத் திருப்பக் கதை தொடர்ச்சியாக விளங்கும்.

இவையிரண்டுக்கும் பயன்பட்ட அடிப்படை விஞ்ஞான தத்துவம் 1838 இல் சாள்ஸ் உவீற்ஸ்ரோன் என்பவர் சண்டுபிடித்த 'ஸ்ரீறியோ வியூஅர்' கைப்படப்பெட்டியுடன் தோன்றியது. அதிற் சோடியான படிமங்கள் தோன்றும். ஓராண்டு கழித்து, புகைப்படம் எடுக்கும் முறை தோன்றியது. அதிலிருந்து முப்பரிமாண "ஸ்லைட்" டுகள் (ஒளிஊடுருவக்கூடிய செலுலோய்ட் தகடு அல்லது கண்ணாடியிற் படம் பதித்து ஆக்கப்பட்டது). சலனப் படங்களைக் காணும் பேறு மனிதனுக்குக் கிடைத்தது.

1959 இல் பெல் ஆய்வுகூடம் என்ற உலகப்பிரசித்தமான வணிக நிறுவனத்திற் பணி புரிந்த புலனுணர்வு உளவியலறிஞர் (கலாநிதி) பேலா யூலெஸ் என்பவர் கண்களிரண்டுஞ் சற்று வேறுபட்ட நிலைகளிலிருந்து காணுங் காட்சியை ஏற்று மனித மூளையானது எவ்வாறு அச்செய்தியை ஒன்றிணைத்துச் சித்திரிக்கிறது என்பதை விளக்கும் (வேறுபடுத்திக் காணவல்ல) கருவியை ஆக்கினார். அக்கருவிக்கு 'றான்டம்டொற் ஸ்ரீறியோகிறாம்' (அங்கொன்று இங்கொன்றான புள்ளிகளைக் கொண்டு ஆக்கப்படும் படக்காட்சிச் சுருள்) என்று பெயர். பெயருக்கு ஏற்ப அது தொடர்பில்லாத இடையிடையே தோன்றும் புள்ளிகளாலான கோலம், அவைகள் மறைத்திருக்கும் படிமம் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட கண்ணாடியைப் போட்டுப் பார்க்கும்போது கட்புலனாகும். 1950 களிற் பிரபலமான முப்பரிமாணத் திரைப்படங்கள் போல இவை வல, இடக் கண்களுக்குத் தனித்தனிப் படிமங்களை ஆக்கி அமைத்து வைத்திருக்கின்றன. இவற்றை மூளை ஒன்றிணைத்து ஆழம் பொருந்திய படமாக நாம் காணச் செய்கிறது.

யுலெசுடன் பணிபுரிந்த கலாநிதி கிறிஸ்தோபர் ரைலர் என்பவர் 1979 இல் இக் கண்டுபிடிப்பை ஒருபடி மேலே கொண்டு போனார். அதற்குத் தன்னியக்கத் திட்டக் காட்சி இரு கோண நிலைப் படம் (ஓட்டோஸ்ரீறியோகிறாம்) என்று பெயர். இதில் இரு சாதாரண கண்களின் மூலமே படத்தில் ஆழமுந் தோன்றும் மாயக் காட்சியைக் காண முடியும். 1844 இல் சேர் டேவிட் புறூஸ்ரர் என்பவர் சுவர் அழகு சாதனக் கடதாசி கட்புலனுக்குத் தரும் மாயத் தோற்றத்தை அவதானித்ததை அடிப்படையாகக் கொண்டே ரைலர் இதனைக் கண்டுபிடித்தார். புறூஸ்ரரின் கண்டுபிடிப்பு தான் சற்று வாக்குக் கண்ணர் போலக் கண்களைப் புரட்டிவைத்துக் காகப் பார்வை பார்த்தால் சுவர்க்கடதாசிக் கோலத்தில் மலர்க் கொடிகள் சுற்றிப் படர்வது போன்ற காட்சி பெருமளவிற் றோன்றும் போது அதில் ஆழப் பகுதியாகிய மூன்றாவது பரிமாணமுந் தோற்றமளிக்கும் என்பதாகும். இம்மனப் பதிவு எழக் காரணம் ஒவ்வொரு கண்ணும் ஒரே கோலப்பகுதியிலே தான் பார்வையைச் செலுத்தியது எனினும் அவை நின்ற இடங்கள் சற்று வேறுபடுகின்றமையாகும்.

ரைலரின் கண்டுபிடிப்பில் சுவர்க்கடதாசி கோலச் சித்திரத் தாக்கத்தையும், அங்கொன்று இங்கொன்றுமாகப் புள்ளி ஸ்ரீறியோகிறாமையும் ஒன்றிணைத்துள்ளன. அதனை அப்பிள் 2 கணனியில் அடிப்படை 'பேசித்' திட்டமிடும்மொழியிற் பதியச்செய்தார். இப்பொழுது கோடிக்கணக்கில் சந்தைப்படுத்தப்படும் முப்பரிமாணப் படிமங்களுக்கெல்லாம் அதுவே அடிப்படையாயிற்று. இந்தக் கோலங்களின் பகுதிகளை இடமாற்றஞ் செய்வதன் மூலம் கணனி அவற்றைச் சமீபத்தில் அல்லது தூரத்தில் தெரியப் பண்ணும்.

இந்தப் படிமங்கள் எவ்வாறு உருவாகின்றன என்பதை விளங்க விரும்புகிறீர்களா? ஒரு கோலத்தைப் பொருளற்ற கிறுக்கல் வரையாகத் திரும்பத் திரும்ப இடுங்கள். ஒவ்வொரு முறை மீண்டுஞ் செய்யும் போதும் நீங்கள் கிட்டத்தட்டக் கட்புலனுக்குத் தெரியாத வகையில் அக்கோலத்தை 'வக்கிர'மாக்குகிறீர்கள். (முதலிற் கீறியது போல் ஒரே அளவிற் கீற முடியாதுதானே) இப்படிக் 'கோணல்' பண்ணினதால் படிமத்தின் 'நிழல் பேய்போல' சற்று உருமாறித் தோன்றும். இது முப்பரிமாணப் படிமம் போல வரையப்பட்ட

## முப்பரிமாணத்தினுள்ளே பார்ப்பது எப்படி?

ஒவ்வொரு சித்திரமும் மீளமீளத் தெரியுங் கோலத்தைக் கொண்டுள்ளது. இதனுள்ளே சொருகப்பட்டு, ஓர் உருத்திரிவு (அல்லது சொற்ப வேறுபாடு) முப்பரிமாணப் படிமத்தை மறைத்துக் கொண்டு இருக்கும். படிமத்தைப் புலன் கவர்தற்கு நீங்கள் ஒவ்வொரு கண்ணும் ஒரே மாதிரியான இடங்களை, கோலத்தினை வெவ்வேறு முறை திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருக்க, மூளை இரண்டுக்குமிடையிலுள்ள தொடர்பைக் கவனிக்க முடியும். இந் நிகழ்வின் சாரத்தை இலகுவிற் பெற, நீங்கள் உளம் பூரண அமைதி (ஓய்வுற்ற) நிலையிற் கிட்டத்தட்டத்தியான நிலையில் இருக்க வேண்டும். படத்தினூடே நோக்கி மனத்தை ஒருமைப்படுத்துதல் மூலம், அதாவது உங்கள் கண்பார்வையைக் குவியச் செய்து தூரத்தே பார்க்குகையில் உங்கள் கண்கள் 'விசாலப் பார்வையை' எட்டும். (அதாவது 'வாக்குக் கண்பார்வை'க்கு எதிர் நிலையை எய்தும்.)

படத்தை உங்கள் முகத்துக்கு எதிரே பிடித்துக்கொண்டு அதன் ஊடாகப் பார்த்தல் பற்றிச் சிந்தியுங்கள். நீங்கள் ஓய்வுற்ற நிலையில் தூரத்தே கூர்ந்து நோக்குவதாக நடியுங்கள். உங்கள் முகத்துக்குத் தூரமாக மெல்ல மெல்ல அரக்குங்கள். ஒவ்வோர் அங்குலம், அல்லது இரண்டு அங்குல இடைவெளியில் ஓரிரு கணங்கள் நின்று நின்று அரக்குங்கள். அதனால் உங்கள் மனம் புதிய நிலைக்கு ஏற்பத் தன்னைச் சரிப்படுத்திக் கொள்ளும். தொடர்ந்து செய்து, படம் முகத்திலிருந்து ஓரடி அளவு தள்ளி நிற்கக் கூடியதாகப் பிடியுங்கள். (இத்தூரஞ் சாதாரணமாக நீங்கள் ஒரு புத்தகத்தையோ, பத்திரிகையையோ பிடித்துப் படிக்கும் அளவு இருந்தாற் சரி) நிறுத்தி நிறுத்தி அரக்கும்போது கடினமான செய்கை எதுவென்றால் கூர்ந்து பார்ப்பதை இடையூறின்றிச் செய்வதுதான். மூளை விடுப்புணர்ச்சியால் (அறிய அவா உணர்வால்) தூண்டப்பட்டு, கையிலுள்ள சித்திரத்தில் மறைந்துகிடக்கும் படிமத்தைக் கண்டுகொள்ள அவசரப்படும். அதனாற் கண்களை மிரட்டி மீள் கூர்நோக்கை இடம் பெயரச் செய்யும். ஆகக் கிட்டப் பிடித்து உற்றுப் பார்க்க முயலும் ஸ்ரீறியோகிறாம்களில் ஒரு முப்பரிமாணப் பொருளைக் கண்டுபிடிப்பது ஒரு கற்றுணர் திறனாகும். (இயல்பில் அமைந்த திறன் அன்று.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முப்பரிமாணப்படிமம் எப்படி உருவாக்கப்படுகிறது?

1. தனியாகப் பொருத்தப்படும் கணனி மென்தகடுக் கருவி கொண்டு கலைஞன் கம்பிச் சட்டகச் சித்திரம் ஒன்றை ஆக்கு கிறான். (இங்கு சுழலும் சக்கரகரையிறங்கியில் நிற்கும் ஆட்கள்) இது மறைக்கப்பட்டிருக்கும் 256 சாம்பல் மட்டங்களில் நிழற் சித்திரிப்பைப் பயன்படுத்திச் சட்டகத்தை நிரப்புவர். இதற்கு அனுசரிக்கும் விதி சித்திரப் பரப்பு எவ்வளவுக்குக் கறுப்பாக உள்ளதோ அவ்வளவுக்கு அது தொலைவிற் றெரியும்.
2. ஓர் ஆரம்பச் சுருள் (அழகிய வண்ணக்கோலம்) வகுக்கப்படும். இதுவே உங்கள் முதற் பார்வையில் தோற்றும் இரு பரிமாண மேற்படை சுருள்களில் உள்ள நிறங்கள் சாம்பல் ஒழுங்கமைவு ஒப்பனைப் (கிறேஸ்கேல்) படிமத்தை மறைக்க உதவும்.
3. சுருள்கள் ஒரு ஸ்ரீறியோ சோடியாக, வலக்கண் பார்வைக்கும் (மேலுள்ள படம்) இடக்கண் பார்வைக்கும் (கீழ்ப்படம்) தோற்றும் விதமாக உருவாக்கப்படும். (படங்களின் விளிம்புகளிற் சோடியின்றி இருக்கும் சுருள்கள் ஆழப்பரிமாணத்தைக் காட்டமாட்டா) ஒவ்வொரு சோடியும் படத்தின் ஒரே துண்டுப் பகுதியைத்தான் காட்டும். ஆனால் சோடியின் இரண்டாம் பகுதியிலுள்ள குறும் வடிவுகள் (பிக்ஸெல்ஸ்) சற்று அரக்கி வைக்கப்படும். இந்த இடமாற்றத்தின் அளவு (சுமார் 256 புள்ளிகள் வரை) மறைத்துள்ள படிமத்தில் உள்ளடக்கமாயுள்ள சாம்பல் நிழலூட்டலின் கடுமையைப் பொறுத்துள்ளது. கடும் நிறப் பரப்புகள் மிக விலகி இருப்பதால், அவை பார்வையாளரால் படத்தின் மிகக் கூடிய ஆழத்தைப் புலப்படுத்தும். நிறங்கள் முப்பரிமாணப் பொருள்களைச் சுற்றியிருப்பதாக, முற்றுப்பெற்ற படத்தில் தோற்றமளிக்கும்.

(சாதாரண புலனுக்குத் தெரிகின்ற) படிமத்தின் பின்னே மறைந்து தோற்றமளிக்கும்.

நீங்களே அரும்பாடுபட்டுக் கையாற் தன்னியக்க ஸ்ரீறியோக் கிறாம்களை ஆக்கிக்கொள்ளலாம். ஆனால் அதிநுட்பமாக வெட்டி ஒட்டிச் செய்து முடிக்கும் நேரம் அளவின்றிப் பெருகும். இதனைச் செய்வதற்கு மேசை மீது வைத்து இயக்கும் பிரசுரக் கருவிகள் கணனிகளிற் பொருத்தப்பட்டால் நேரம் மிச்சமாகும்.

சித்திரக் கலைக்குரிய (கணனி) மென்தகடு வர்த்தக ரீதியிற் (மலிவாக) கிடைப்பதால், விளக்கக் குறி வரை கலைஞன் ஒருவன் ஒரு சாம்பல் நிற நிழலூட்டப்பட்ட படிமத்தை உருவாக்கியபின் அதனை மென்கணனிச் செயற்றிட்ட (புறோகிராம்) மூலம், முப்பரிமாண (ஆழ்தோற்றம்) படிமமாக உருமாற்றஞ் செய்யலாம். சாம்பர் நிறச் செய்திப்பரிமாற்ற உள்ளமைப்பு (இன்ஃபோமேஷன்) நிழல் தீட்டப்பட்ட ஓவியம் கிட்டத்தட்ட வெள்ளை நிறத்திலிருந்து முழுக் கறுப்பாகத் தோற்றமாறுதல் பெறுகிறது என்பதை விளக்கவல்லது. இது முக்கியமானது. ஏனெனில் இதிலிருந்தே நாம் செய்ய விரும்பும் (கண்ணை மயக்கிக் கோணற் பார்வை மூலம் பெறப்போகும்) மறுகோலத்திற் புள்ளிகளை அரக்கி வைக்க வேண்டும் என்பதைக் (கணனிமூலம்) கணிக்க முடியும். எமது கருவி எவ்வளவுக்கு (நுட்பமாக) அரக்கி வடிவமைக்கவென்று தயாரிக்கப்பட்டுள்ளதோ, அதைக்கொண்டு 16 முதல் 256 தளங்களிற் சாம்பர் வண்ணம் அமையலாம்.

ஒரு முப்பரிமாணத் தாக்கத்தை உண்டாக்குவதில் உள்ள அடிப்படைத்தத்துவம், சாம்பர் நிறப் (கருமைக்கும் வெண்மைக்கும் இடைப்பட்ட நிறம்) தொனிக்கும் படிமம் மேலெழுந்து தெரிவதற்கு அந்நிறம் தெளிவாக (லைற்றாக) இருக்க வேண்டும். அது மறைவதற்குச் சாம்பர் நிறங் கடுமையாய் (டார்க் ஆக) இருக்க வேண்டும் என்பதே. கலைஞன் எங்கு வெவ்வேறு மட்டங்களில் ஆழத்தைப் பிரயோகிப்பது என்பதைத் தீர்மானிக்கப் படிமத்தின் வெவ்வேறு பரப்புகளைத் தெளிவாகவோ, கடுமையாகவோ நிறமூட்ட வேண்டும் என்பதைக் கருத்தில் வைத்துக் கொள்கிறான்.

கலைஞன் எமது சாதாரண கட்புலனுக்குத் தெரியும் இரு பரிமாணக் (கண்கவர்) மேற் காட்சியை முதலிற் கோலமிடுகிறான். (திட்டமிடுகிறான்) இதே படச் சுருளை மறுபடி சித்திரித்து, அதன் அடியில் உள்ளமைப்புச் செய்து வைத்து மூலகாரணமான (அசல் சாம்பர் நிற)ப் படிமத்தை இவ்விரு சுருள்களுக்கு நடுவே மறைத்து வைக்கிறான்.

இச் சுருள்கள் இரண்டும் வல, இடக் கண்களின் நோக்கிலிருந்து (அதற்கேற்ப) சோடிசேர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு சோடியும் படத்தின் அதே துண்டுப் பகுதியைத்தான் காட்டுகிறது. ஆனாற் சோடியின் இரண்டாம் பகுதியிலுள்ள குறும் வடிவுகள் (பிக்செல்ஸ்) தோற்றஞ் சற்று அரக்கி அமைக்கப்படும். இந்த 'அரக்கும்' அளவு (இடம் பெயர்த்து வைக்கும் அளவு) மறைத்து வைத்துள்ள படிமத்தின் சாம்பர் நிற மட்டத்தைப் பொறுத்தே கணிக்கப்படுகிறது. கடுமையான பரப்புப் பகுதிகள் மிகக் கூடிய தூரத்துக்கு அரக்கி வைக்கப்படும், கோணுதல்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தூரங் கணிக்கப்பட்டு, சாம்பர் நிற வித எண்ணிக்கையுடன் நேரடி விகிதத் தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது முடிவுற்ற படத்தில் நிறங்கள் முப்பரிமாணப் பொருள்களைச் சுற்றிப் போர்த்தப்பட்டுள்ளது போலக் காணப்படும்.

1990 ஆம் ஆண்டு ரொம் பாஷே என்பவர் ' என் ஈ திங் என் ர(ர்) பிறைசெஸ் ' என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். அவர் கட்புலன் பற்றி ஆராய்ந்த புலனுணர்வு உளவியலறிஞர் கண்டுபிடித்த தொழில்நுட்பம் ஒன்றைப் பற்றிய கட்டுரையை வாசித்த பின்னரே, இப்படி முப்பரிமாணப் புத்தகங்கள் அமைக்கலாம் என்ற கருத்தைப் பெற்றார்.

பாஷே கூறுகிறார்: '' வாசித்த கணத்திலேயே அதுஎன் உள்ளத்தில் உறுத்தியது என.'' உடனேயே அதை 30, 000 பிரதிகள் விற்பனையாகும் ஒரு சஞ்சிகை விளம்பரத்திற் பயன்படுத்தினார். முதல் மாதத்திலேயே அது 2,000 பேரின் கவனத்தை ஈர்த்தது. அவருக்குத் தாம் ஒரு புதிய இலாபகரமான துறையில் இறங்கியிருப்பதாகப் புலப்பட்டது. பாஷே தமது முதலாவது படிமப் புத்தகத்தை யப்பானில் வெளியிட்டதிலிருந்து, முப்பரிமாணப் படப் புத்தகம் பல்லாயிரம் ' விசிறி ' களைக் கவர்ந்தது. முப்பரிமாணப் பைத்தியம் எங்கும் பரவியது என்றே கூறலாம். யப்பானியர் இம் முப்பரிமாணக் கண்மயக்கக் காட்சிகளை எங்கெல்லாமோ உபயோகித்தனர். கழுத்துப் பட்டியிலிருந்து, குளிக்கும் அறை மாபிள் கற்கள் வரை இச் சித்திரங்களே நிறைந்தன. 16 மாதங்களுக்குள், இப் ' பைத்தியம் ' தொடங்கின வேகத்தில் மறைந்துவிட்டது.

இது இப்பொழுதுதான் ஐரோப்பாவிலும், ஆங்கிலம் பேசும் உலகிலும் அறிமுகமாகியுள்ளது. அங்கு இது நிலைத்திருக்குமா என்பதைக் காலந்தான் காட்டும். இப்பொழுது முப்பரிமாணப் படங்களை இங்கிலாந்தில் உணவுப் பண்டங்கள், பந்தய ஓட்டக் காரர்களின் வடிவில், பெப்சி கோலா மென்பானத் தகர டப்பாக்களிற் பார்க்கலாம். அமெரிக்காவில் டேனி, டைனோசர் ( இராட்சத விலங்கு ) படங்களைச் சில இன உற்சாகமூட்டும் பானப் பெட்டிகளிலுங் காணலாம். நாஷ்வில் நகரிலுள்ள காஸ்கொம் நிறுவனந் தயாரிக்கும் வீடியோ நாடாக்களிலும் தோன்றுகின்றன. 150 செய்திப் பத்திரிகைகளில் ' கொமிக் ' படங்கள் வரிசைகளில் புதிர்க் கதைப் படங்களிலும் உள.

பாஷே இப்படி முப்பரிமாணப் படிமங்களைக் காணும்போது ஏற்படும் குதூகலத்தினிடையே புது யுகமாற்றங்களையோ, தத்துவ ஞானச் சிறப்புக்களையோ காண மறுக்கிறார். இப்படங்கள் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் பாணியிலேயே தொடர்ந்து சேவை செய்யும் என நம்புகிறார். '' இப் படிமங்களை நாம் பார்ப்பது ஒரு கெட்டித்தனந்தான் இல்லையா? அவற்றை நான் கண்டுபிடிக்காத படியால், நான் அப்படிச் சொல்ல முடியும். அக் கண்டுபிடிப்பில் ஒரு சந்தர்ப்பம் உளது எனக் கண்டேன், அதை இறுகப்பற்றிக் கொண்டேன் '' என்கிறார் பாஷே.

பொப்பியூலர் சயன்ஸ்,
செப்ரெம்பர், 1994.

இன்ரர்நெற் செய்தி வலைப் பின்னல்

## வலையில் உமக்கு என்று ஒரு சொந்தப் பக்கம்

உலகளாவிய செய்திச் சேவைத் தொலைக் காட்சி வலைப் பின்னல் ஏதோ மர்மத் திரைப் படத்தில் வரும் சிலந்தி மனிதனின் சாகசம் என்று அதிசயிக்கும் நிலை மாறிவிட்டது. எல்லோரும் (பேருந்தில் இடம் பிடிக்க முண்டியடிப்பது போல ) அதில் தமக்கும் ஒரு பக்கம் எடுத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். 1995 பெப்ரவரி மாதத்துக்கென வகுத்த திட்டத்தின்படி கணனி மென்பதிவுத் தகடு உற்பத்தியாளருள் மிகப் பெரும் நிறுவனமான '' மைக்கிறோசொ∴ப்ற் '' வின்டோஸ் வார்த்தை 6.0 ( Word- 6. 0 ) என்ற நிகழ்வுத் திட்டத்தில் இலவசமாக உங்கள் பெயரையுஞ் சேர்த்துக் கொள்ள வழிசெய்யலாம். இதன் படி இன்ரர்நெற் பிரசுரகர்த்தர்கள் சாதாரண விடயங்களுள்ள கோவைகளை ( ∴பைல் ) இந்த இரகமான வலைப்பின்னல் வடிவத்துக்கு மாற்ற வாய்ப்பு உண்டு. ( இதற்குத் தொழில் நுட்பப் பெயர் அதிநுண்ணுணர்வுப் பாடக் குறியீட்டு மொழி, எச்.ரி.எம் எல், என்பது ) இந்தப் புதிய திட்டத்திற்குப் பெயர் '' இன்ரர் நெற் உதவியாளன். '' இது எச். ரி. எம். எல். ( மொழி ) மாற்றுக் கருவியுஞ் சிலந்தி வலைப் பின்னலிற் பக்கந் தட்டி வாசிப்போரையும் ஒரே இடத்திற் சேர்த்து வைக்கிறது. சாதாரண எச். ரி. எம். எல். வழங்கும் உருவரை மாற்றுகளை விடச் சிறந்தவற்றைப் பக்கங்களை ஆக்குவோருக்கு ஏற்ப முன்வைக்கிறது. கணனிச் சேவை ( கம்பியூசேர்வ் ) போன்ற சேவைகளில் மைக்கிறோசொ∴ப்ற் வழங்கும் மேடை நிகழ்ச்சிகளைப் பார்வையிடுங்கள். பல விடயங்கள் விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்த போர் ஒன்றின் மூர்த்தண்ணியமான எதிரொலிகள்.



## பால்க்கன் குடாநாட்டில் குழப்பம் மலிந்த எச்சசொச்சம்.

தமிழில்; சொக்கன்

பால்க்கன் குடாநாட்டில் போரானது கொந்தளித்த வண்ணம் உள்ளது. அதன் மாகாணம் ஒன்றில் 80 வீதமான முஸ்லிம்களின் வீடுகள் எரியூட்டப்பட்டன. ஒரு கிராமத்தின் முழுக் குடிமக்களும் மந்தைபோலச் சாய்த்துச் செல்லப்பட்டுத் தேவாலய மண்டபத்துள் வைத்துத் தீக்கிரையாக்கப்பட்டார்கள். இனசங்காரம் கோரதாண்டவமாடுகிறது. முடிவில் நிகழப்போவதென்ன? மேற்கத்திய அவதானி ஒருவரின் தொகுப்புரை இது. ''இந்தக் கிளர்ச்சியின் அடிப்படை நோக்கம் வெளிப்படையானதாகவோ, மறைமுகமானதாகவோ, தெளிவானதாகவோ, மயக்கமானதாகவோ இருக்கலாம். ஆனால் எப்பொழுதும் எவ்விடத்தும் தமக்கு அந்நியமான மக்களினம் ஒன்றை முற்றாக அழித்துத் துடைத்து விடுவதே இறுதி இலக்கு.''

பரிச்சயமான தொனிதான்! இல்லையா? அப்படியே இருக்கட்டும். போர் தொடங்கியதிலிருந்து இன்றுவரை பெரும்பாலான கட்சிகள், பொஸ்னியாவிலும், தென் கிழக்கு ஐரோப்பாவிலும் தமது தலைகளை நுழைத்துக் கொண்டுள்ளன, முடிவாக இவர்களுக்குக் கிடைக்கப்போகும் பரிசுதான் என்ன? இன்னமும் கட்டியெழுப்பப்பட்டு வரும் யூகோசிலாவியாவின் எச்சசொச்சம் அல்ல. ஒட்டமன் சக்கராதிபத்தியத்தில் எஞ்சியுள்ள கூறுதான். இதற்கான தொடக்கம் இன்று நேற்று ஏற்படவில்லை; 1913 யூன் முதல் செப்ரெம்பர் வரை நடந்த இரண்டாவது பால்க்கன் போரிலேயே வித்திடப்பட்டது. இந்தக் குழப்பம் தெளிவற்றதாகவும் நீண்டதொரு சிக்கலாகவும் அன்றே உருவெடுத்துவிட்டது. அன்றைய போரானது உலக வரலாற்றிலேயே மிகப்பெருமளவு குருதிபெருக்கிய, கடுகளவுகூட மனிதாபிமானமற்ற ஒன்றாக விளங்கியது. ஆனால் முதலாம் உலகப்போர் அடுத்த ஆண்டிற் றொடங்க, இந்தப்போர் ஏறக்குறைய மறக்கப்பட்ட ஒன்றாயிற்று.

ஆனாலும் முற்றாக மறக்கப்பட்டது என்று சொல்வதற்குமில்லை. 1913 செப்ரெம்பரில் அன்று மூன்றே ஆண்டுகள் நிரம்பியதான காணகி உலக சமாதான அறநிதியம் (Carnegie Endowment For International Peace), பிரபலம் வாய்ந்த சட்டத்தரணிகளையும், அரசியல் வாதிகளையும், பத்திரிகையாளர்களையுங் கொண்ட விசாரணைக் குழுவொன்றை நியமித்தது. இந்தக் குழுவின் அறிக்கைகள் பால்க்கன் நாடுகளில், பரந்த அளவில் நிகழ்ந்த அட்டூழியங்கள்பற்றிய உண்மைகளை வெளிக்கொணர்ந்தன. அவற்றில் இனஒதுக்கலின் இரத்த பயங்கரமும்-வெறுப்புணர்வும், பொருளாதாரப் பின்னடைவும், அரசியற் குழப்பமும், எல்லையற்ற மிருகத்தனமும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டிருந்தன. இவ்வறிக்கைகள் 'மற்றொரு பால்கன் போர்' என்ற தலைப்பில் காணகி அறநிதியத்தால் மீண்டும் 418 பக்க அளவில் வெளியிடப்பட்டுள்ளன. ஆழமான சோக உணர்வினைக் கிளப்பும் இவை, அதேசமயம் உள்ளத்தைக் கவ்விப்பிடிப்பனவாகவும் உள்ளன. சமகால வரலாற்றின் மீது விறைப்பினை உண்டாக்கும் ஒளியைப் பாய்ச்சுகின்றன.

இன்றுபோலவே 1913 இலும், இருசாராருக்கும் பேரிழப்பைக் கொண்டு வந்த பால்க்கன் போரானது, வரவேற்கப்பட்ட ஒரு நிகழ்வாகவே தோற்றியது. 1989 இல் பொதுவுடைமையாட்சி முடிவுக்கு வந்தது போலவே 1912 இல் இஸ்தான்புல் தவிர்ந்த பிரதேசத்திலிருந்து ஒட்டமன் துருக்கியர் இறுதியாக வெளியேற்றப்பட்டனர். இன்று போலவே அன்றும் மேற்கத்திய உடன்படிக்கை உருவாக்கிகளால் (Treaty Makers) நிலைமை மேலும் மோசமாக்கப்பட்டது. ஆனால் அவர்கள் தமது உடன்படிக்கையை நல்ல அர்த்தமுடையதொன்றாகவே கருதினார்கள். இந்த மோசமான உடன்படிக்கைதான் மீண்டும் தலைகாட்டியுள்ள குழப்பம் யாவிற்கும் அடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை. முதலாவது உலகயுத்த முடிவில் உருவாக்கப்பட்ட உடன்படிக்கைக்கான வித்து, 1878 இல் பேர்ளினில் உருவான உடன்படிக்கையிலேயே இடப்பட்டுவிட்டது.

பேர்ளினில் வல்லாதிக்க சக்திகள் ஏற்படுத்திய உடன்படிக்கையானது, நாடுகளை இன அடிப்படையிலே ஒன்று சேரமுடியாதவாறு தனித்தனிப் பிரிவுகளாக ஆக்கிவிட்டது. பல்கேரிய மக்களையே பிரதான குடிகளாகக்கொண்ட மசிடோனியா சேர்பியாவிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டது. கிறீஸ், பல்கேரியா, றுமேனியா என்பன தனித்தனி நாடுகளாய்ப் பிரிக்கப்பட்டன. கிரேக்கரின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது. ஒவ்வொரு நாடும் சிறுமைப்படுத்தப்பட்டு விட்டதாகவே உணர்ந்தது.

வைதிக தேவாலயங்களின் எதிர்ப்பாளர் பிரிவுகள் சுவாலித்து எரிய வைத்த இனத்துவேஷமானது மேலெழலாயிற்று. ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளில் எழுந்த தேசிய அடிப்படை வாதம், சில தசாப்தங்களுக்கு முன்பே அப்பிரதேசங்களின் கல்விகற்ற இளைஞர்களின் கற்பனைகளைத் தூண்டி எரியவைத்தது. இன்றுபோலவே அன்றும் ருஷ்யா பல்கேரியாவுடன் சேர்ந்து சூழ்ச்சியில் ஈடுபட்டது. சமகால ஜேர்மனி போலவே ஆஸ்திரிய-ஹங்கேரி, குறோஷியருக்கு முட்டுக்கட்டை இட்டது. பிரான்சும் பிரித்தானியாவும் யுத்த மேகந் திரள்வதாக அஞ்சின,

புயல் மேற்கிளம்பியதன் பயன். பெறுபேறுகள் பயங்கரமானவையாய் ஆனதுதான். ''எரியுண்ட கிராமங்கள் பற்றியுந் தோல்வி கண்டு வெளியேறிய குடிமக்கள் பற்றியும்'' காணகி அறநிலைய விசாரணையாளரில் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார். ''இந் நிகழ்வுகள் பால்க்கன் போர்களிலே வழமையாகவும், சர்வசாதாரணமாகவும் இடம் பெறும் ஆட்சி எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தாம். தனியாகவும் குழுவாகவும் மேற்கொள்ளப்பட்ட மிருகத்தனமான கொலைகளையும், வாயாற் சொல்லமுடியாத கொடூரங்களையும் பற்றிக் காணகி அறநிதிய விசாரணைக் குழுவினர் பலபட விபரித்துள்ளனர். கண்களைத் தோண்டுதல், நாக்குகளை அரிதல், இச்செயல்கள் பெற்றோருக்கு நிகழும் பொழுது அவர்களின் பிள்ளைகளைப் பார்வையிட வலுவந்தம் செய்தல், பெற்றோர் கொலை செய்யப்படுகையிலும் பார்க்க வற்புறுத்தல் என்பன இத்தகைய குரூரங்களிற் குறிப்பிடத்தக்கவையாகும்,''

## தெளிவற்ற வதந்திகள்

வரலாறு அதன் சகல நிகழ்வுகளோடும் மீளவும் இடம்பெறுவதில்லை, காலமாற்றத்திற்கேற்ப நிகழ்வுகளின் போக்குகள் மாறுபடலாம். 1913 இல் இடம்பெற்ற போரில் வாள்கள், குண்டாந்தடிகள், கைத்துப்பாக்கிகள் பயன்பட்டமைக்குப் பதிலாக, ராங்கிகள் நவீனரக ஆயுதங்கள் இன்று பயன்படுத்தப்படுகின்றன. அன்று தொலைக்காட்சி பயனாகவில்லை. இன்றோ அதன் மூலம் உடனுக்குடன் போர் நிகழ்வுகள் யாவும் உலகமனைத்துக்கும் தெரியவருகின்றன. 1913 இல், செய்திகள் தெளிவற்ற வகையில், அவை ஒரு முடிவுக்கு வந்து சிலநாள்களின் பின்பே அறியக்கூடியனவாயிருந்தன. காணகி அறிக்கை கூடக் கொலைகள் நிறுத்தப்பட்ட பின்பே வெளியாயிறறு என்பதும் குறிப்பிடத்தக்கதே, எனினும் இந்த வேற்றுமைகளிலும் ஒப்புமைகளே கூடுதலாகவும், பலம்வாய்ந்தவையாகவும் காட்சிதருகின்றன, ''பால்க்கன் மக்கள் இப்படித்தான் நடந்துகொள்வார்கள் அவர்களை மாற்றமுடியாது'' என்ற நம்பிக்கை வரட்சியே இன்றும் நிலவிவருகிறது. பால்க்கன் குடாநாட்டின் இனப்பிரச்சனையும், சுத்திகரிப்பும் 80 ஆண்டுகளாக எவ்வித மாற்றமுமின்றி ஒரே மாதிரியில் தொடர்ந்து வருகிறது.

இந்நூற்றாண்டின் தொடக்கத்திற் சமாதான முயற்சிகளைக் கையாண்டவர்களின் ஆற்றல்மிகு செயற்பாடுகளளவு இன்றுள்ளவர்களின் செயற்பாடுகள் அமையவில்லை, இதுதான் நவீன உலகின் நியதி. காலத்தின் தேவையையொட்டிக் காணகி அறநிதியத்தின் அறிக்கை இரண்டாவது தடவையாக வெளியாகியுள்ளது. பொருளாதாரப் பின்னடைவு உள்ளவரை அந்த அறிக்கை வெளியிட்டுள்ள சோக சம்பவங்கள் தொடரவே செய்யும். இனச்சுத்திகரிப்பும், தேசியவிரிவாக்கமுந் தம்முள் முரணுவதைத் தடுத்தல் கடினமாகவேயிருக்கும். இவை உள்ளவரை சமாதானத்துக்கான வாய்ப்பும், பொருளாதார வளமும் பால்க்கன் குடாநாட்டில் ஏற்பட வழியில்லை என்பது நிச்சயம்.

- ஸ்கொட் செலிவன்

நியூஸ்வீக், மே 1995

❋

## நோயைத் தடைசெய்யும் கருவி

மலக்கட்டினால் (Motion Sickness) வாந்திக் குமட்டல், வாந்தி என்பவற்றால் பாதிப்புறுவோருக்கு வழமையாக அளிக்கப்படும் கதிர்வீச்சு மருந்தளிப்புச் சிகிச்சைகளின் பின் விளைவுகளாகத் தலைவலி, வயிற்றுக் குழப்பம், வலி என்பன உண்டாகின்றன. இவ்விளைவுகளைக் கட்டுப்படுத்தக் கலிபோர்னியாவிலுள்ள மயொன் ஆய்வுகூடங்கள் (Relief Band) என்ற ஒரு வகை வாரினைக் கண்டுபிடித்துள்ளன. இந்த ''வார்'' கடிகாரம் போல கையிலே கட்டிக் கொள்ளக் கூடியது. இது நரம்பு வழி மண்டலங்களூடாகச் சிறு மின் தாக்கத்தினை ஏற்படுத்தி நோக்கங்களைத் தடைசெய்யுஞ் சக்திவாய்ந்தது. இதன் மூலங் குமட்டல், வாந்தி முதலிப நோய்கள் இல்லாது போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி வாகை சூடிய பிரீஸியன்

பசுக்களின் செழுமையும்

போசாக்கும் மிக்க பால்

# பாம்டரஸ்ட்

நீங்கள் நம்பத்தகுந்த பால்




விநியோகஸ்தர்கள்:

*ஸ்ரீ விக்னேஷ்வரா ஸ்ரோர்ஸ்*
*சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ நியாய விலை !

★ நம்பிக்கை !

★ நிறைந்த சேவை !

விஜயம்

செய்யுங்கள்



# குகன்

# களஞ்சியம்

பலசரக்கு மற்றும் பல்பொருள்கள்

யாவும் மொத்தமாகவும், சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ள

## குகன் களஞ்சியம்

180 (38ɔ) கேணல் கிட்டுசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தின் தடித்த வங்கி ஒன்று, தான் நம்பிய ஒருவனின் அசட்டுக் கம்பீரத்தால் நொடிந்து போய் விட்டது.

## ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம் இங்கிலாந்தின் வங்கியொன்றைச் சரித்துவிட்டது.

*தமிழில் :* திரு. கிருபைராஜா

இலண்டனில் உள்ள 232 ஆண்டுப் பழம் பெருமை வாய்ந்த பாரிங்ஸ் வங்கி அரச பரம்பரையினரால் நிறுவப் பட்டுப் பெரும் மூலதன முதலீடு கள் செய்து நல்ல இலாபம் ஈட்டி வந்த ஒரு நிறுவனமாகும். அண் மையில் அது நொடிந்து போன தால் எலிசபெத் அரசியாரும் ஒரு மில்லியன் டொலரை இழந்து விட் டார். பெருமை பெற்ற அந்த வங் கியைச் சிறுமையுறச் செய்தவனோ சாதாரண இலிகிதனாகச் சேர்ந்து கெட்டித்தனங் காட்டி நம்பிக் கைக்குரிய உள் ஆளாக உயர்ந்து கள்ள ஆளாக மாறிய ஒரு சிறு படிப்பாளியான 28 வயதினன் ஒருவனாவான்.



'ஒன்றெய்தி நூறிழந்தார்.''

ஜேர்மன் பொலிசாரினால் வர்த்தகர் நிக். லீசன் ஃபிறாங் பேட்டில் விமானத்தி லிருந்து கைதியாக அழைத்துச் செல்லப் படுகிறார்.

அந்தப் பங்கப்பட்ட பாரிங்ஸ் வங்கிக்கு அதற்கு முக்கிய காரண கர்த்தனான நிக்கலஸ் லீசனைப் பற்றிய அறிக்கையொன்று முன்பு கிடைத்திருந்தால் ஒருவேளை இத்தகைய ஒரு சரிவு வராமற் போயிருக்கலாம். முன்பு வேறொரு வங்கி அவனை வேலைக்கு அமர்த்த எண்ணியபோது ஆட்களின் ஆளு மையை ஆய்வு செய்யும் ஒருவரி டம் அவனுடைய தகுதிக் குணாதி சயங்களைப் பற்றி ஆலோசனை கேட்ட பொழுது, அவர், ''ஆளு டைய பின்னணியிற் பிழை ஏதும் இல்லைத்தான் என்றாலும் நான் அவரை நம்பமாட்டேன். ஆள் கெட்டிக்காரனாக இருந்தாலும் அவருடைய வேகம் ஆழ்ந்து நோக் குடிய விவேகம் அற்றது. நீங்கள் அவரை வேலைக்குச் சேர்த்துக் கொண்டால் ஆறு மாதங்கள் கழிந்த பின்பு உங்களை மடக்கிப் பிடித்து மேலும் பெரிதான ஊதிய வசதி கோருவார்'' என்று கூறிய மதிப்பீடு பின்பு அப்படியே உண் மையாகிவிட்டது என்று கூறலாம்.

1990 இன் ஆரம்பத்தில் பாரிங்ஸின் இலண்டன் தலைமை யகத்தின் பங்குச் சந்தை முதலீட் டுக் கிளை, பணம் படைத்த பொதுசனங்களின் பெருஞ் சூதாட் டமான பங்குச்சந்தையின் முதலீடு களின் மீது பந்தயங் கட்டல் போன்ற வாங்கி விற்றல் செயற் பாடு ஒன்றில் ஈடுபடத் தொடங் கியபோது அந்த வங்கியின் ரோக் கியோக் கிளை அத்தகைய வங் கித்தலிற் பெரும் இலாபம் ஈட்டித் தந்தது. அது எப்படிப்பட்ட இலா பம் என்றால் பாரிங்ஸின் அந்தப் பங்குச் சந்தைச் செயற்பாட்டு முகாமையாளர் கிறிஸ்தோபர் ஹீத், பிரித்தானியாவிலேயே அதி கஞ் சம்பளம் பெறும் நிறைவேற்றுத் தர அலுவலரானார். அதனால் ரோக்கியோ கிளை, கட்டுப்பாடு களையும், பாரம்பரியமான தொழிற் செயன்முறைகளையும் பின்பற்றாத ஒரு வகையான சுதந்திரத்துடன் செயற்பட்டது. மரபு வழி வந்த பாரிங்ஸின் முகா மைத்துவம், கட்டுப்பாடுகளை மேற்கொள்ள எண்ணினாலும் வந்து குவிந்த இலாபத்தின் செல் வாக்கு அதனை மழுங்கடித்து விட் டது. 1993 இல் ஹீத் தானாக விலகிச் சென்றதையடுத்து ரோக் கியோ நிர்வாகம் ஒருவரை அடுத்து இன்னொருவராக நாலு உச்சத்தர அலுவலர்களின் கைகளுக்கு வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியது. அவர்கள் எவரும் அத்தனை திறமைசாலிகளாக இருக்கவில்லை. அந்தச் சரியான நிர்வாகம் இல்லாத வெற்றிடம் லீசனுக்கு ஏற்ற நல்ல வாய்ப்பாகி அந்த வங்கியில் விரைவாகத் தரமுயர்ந்த நிறைவேற்று அலுவலர் ஆனான்.

லீசன் 1987 இல் அந்த வங்கியால் அலுவலக இலிகிதன் ஒருவனாகச் சேர்க்கப்பட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் சரியாக நடத்தப்பட்டனவா என்று கணக்குச் சரி பிழை பார்ப்பதில் ஈடுபடுத்தப்பட்டான். அப்பொழுது அவன் முகாமையின் கவனத்தை ஈர்த்துக் கொண்டதால் வெளிநாட்டுச் செயற்பாடுகளைக் கவனிப்பதிலும் ஈடுபடுத்தப்பட்டான். இந்தோனேசியாவில் ஒரு கிளை திறக்கவும் ரோக்கியோக் கிளையில் ஏதோ ஊழற் குற்றச் சாட்டுக்களை விசாரிக்கவும் என அனுப்பப்பட்ட குழுவில் அவனுக்கும் இடங் கிடைத்தது. அந்த வேளையில் 1992 இல் பாரிங்ஸ் வங்கி சந்தைப் பங்குகளை வாங்கி விற்கும் பேரத்தில் பந்தயங் கட்டுவதிலும் ஈடுபட்டு இருந்ததால் அப்பொழுது ஆசியாவிலேயே பெரிய பங்கு மாற்றுச் சந்தை நிலையமாகத் தான் ஆவதற்கு முனைந்து கொண்டிருந்த சிங்கப்பூர்ச் சந்தையில் நுழைந்ததுடன் அங்கு அனுப்பிய குழுவில் லீசனையும் ஒருவனாகச் சேர்த்துக் கொண்டது. அங்கே லீசன் பங்கு வர்த்தகங்களை நிறைவேற்றுபவன் ஆனான். அவனைப் போல் அந்தத் துறையைக் கையாளக் கூடியவர்கள் வேறு எவரும் இல்லாததால் கடிவாளம் அவனுடைய கைகளிற் கிடைத்தது. அவனுடைய ஆண்டுச் சம்பளம் 350,000 டொலர் ஆனது. பாரிங்ஸுக்கு அவன் மில்லியன் கணக்கில் இலாபம் ஈட்டித் தருபவன் ஆனான். அந்த வங்கி விழுவதற்குச் சில வாரங்களுக்கு முன்பு கூட அவன் தனக்கு வங்கி 2 மில்லியன் டொலர் போனஸ் தருவதற்கு வாக்களித்து உள்ளதாகப் புழுகினான் சிங்கப்பூர் பங்குப் பேரச் சந்தையில் லீசனைப் பின்பற்றுவோர் கூட்டமொன்றும் உருவானது. எல்லா விலைமதிப்பு அட்டவணைகளும் விற்றுவிடச் சொல்லும் பொழுது அவனோ இல்லையென்று மேலும் விலையைக் கூட்டுவான். உள்ளூர்க்காரர்களும் அவனையே பின்பற்றலாயினர். சிங்கப்பூரில் இருந்த பாரிங்ஸ் கிளை முகாமையாளர்களும் அவன் மீது அத்தனை நம்பிக்கை கொண்டதால் 25 வயதினனான அவன் கட்டுப்பாடு என்பதே இல்லாத வகையிற் செயற்பட வாய்ப்புப் பெற்றான். சிங்கப்பூர் பங்குச் சந்தையின் அதிகாரிகள் சிலர் லீசனின் அசட்டுத் துணிச்சலைப் பற்றி எச்சரித்து இருந்துங் கூட எவரும் பொருட்படுத்தவில்லை.

பண வெகுமதிகளும், போற்றல்களும் ஒரு சாதாரண தொழிலாளி குடும்பத்தில் வந்தவனான லீசனுக்கு உசார் ஊட்டின. அவன் பல்கலைக்கழகப் படிப்பு ஏதும் பெற்றவன் அல்லன். தனது 18 ஆவது வயதில் பிரபலமான வங்கியொன்றிற் கீழ்மட்ட இலிகிதனாகச் சேர்ந்தான். அடுத்து 1987 இல் இலண்டனில் உள்ள அமெரிக்க வங்கியொன்றில் இலிகிதனானான். அந்த மகிமைப் பூச்சு அவனைப் பாரிங்ஸ் வங்கியிற் சேர உதவியது.

எத்தனைதான் தற்பெருமை இலட்சியங் கொண்டவனானாலும் லீசன் சிங்கப்பூரில் உள்ள பல்லினச் சமூகத்தின் துள்ளற் செந்தளிப்பில் அத்தனை பிடிப்புக் கொள்ளவில்லை. அவனுடைய மனைவி லீசாவும் அவ்வாறாகவே இருந்தாள். சிங்கப்பூரின் உயர் வகுப்பார் குடியிருப்புப் பகுதியொன்றில் அதிகம் உயராத ஆனால் படாடோபமான மாடி மனைத் தொகுதியொன்றில் வீட்டுப் பொருள்கள் அனைத்துடனும் வாடகைக்கு எடுத்த வீடொன்றில் அவர்கள் வசித்தனர்.

பணச் சந்தைக் கட்டடத்தின் உள்ளே பெருங் கவர்ச்சியானவனாக அவன் இருந்தாலும் அனேகமாகத் தனிப்பட்ட வாழ்விற் தனித்தே காணப்பட்டான். அவன் திருமணமானவன் என்பது அவன் ஒழித்தோடிப் போன பின்புதான் அவனுடன் பழகியவர்கள் அனேகருக்குத் தெரிய வந்தது. அவனைப் போலவே அவனுடைய மனைவியும் வருவாய் பெருகியவர்களின் படாடோபச் சமூக வாழ்வில் இணையாதவளாக வாழ்ந்தாள். அவன் பங்குச்சந்தையிற் கழிந்த நேரம் போக இரவு நேர விலையுயர்ந்த குடி நிலையங்களுக்குச் சென்று கெட்டிக்காரக் குடிகாரனாகவுந் திகழ்ந்தான். அங்கெல்லாம் அவன் தனவானாக உடனே காசுக் கணக்கை முடித்து விடுவான்.

ஆனால் அவன் தான் தொழில் செய்த இடத்திற் கனவானாக நடக்காமல் இருந்துங் கடைசி நேரத்திற் குட்டு வெளிவரும் வரை கெட்டிக்காரனாகவுந் திகழ்ந்து விட்டான். அவன் பாரிங்ஸ் வங்கிக்குப் பெரும் இலாபம் ஈட்டிக் கொடுத்த ஆண்டாகக் கருதப்படும் 1994 இன் கடைசியில் அவன் நடத்திக் கொண்டு இருந்த பொய்யான ஒரு கணக்கான இல. 88888 மூலம் பாரிங்ஸ் வங்கிக்கு 80 மில்லியன் டொலர் நட்டம் ஏற்படுத்தி விட்டான். சிங்கப்பூரின் பங்குச் சந்தை வட்டாரத்தில் அவன் ஜப்பானிய பங்குச் சந்தையான நெக்கியின் அலுவல்களிற் பெருஞ் சூரனாகக் கருதப்பட்டான். அவனுடைய பெருமைத் திறன் நெக்கி சந்தையின் பங்குகளில் ஏற்படும் நுணுக்கமான விலை வித்தியாசங்களைச் சிங்கப்பூர், ஒசாகா, ஜப்பான் சந்தைப் பங்குகளில் ஏற்படும் விலைகளுடன் ஒப்பிட்டு அதனைப் பரப்பிப் பகுத்து விலை குறைந்த இடங்களில் வாங்கி உடனே விலை கூடிய இடங்களில் விற்று அதன் மூலம் மில்லியன் கணக்கிற் சுரண்டிக் கொள்வதாகும். ஆனால் அவன் 1995 இல் ஏற்படுத்திய நட்டம் 1994 இல் ஏற்படுத்திய இலாபத்திலும் பத்து மடங்காக உள்ளது. இரகசியமான இல. 88888 கணக்கை, தான் வேறு ஒருவருக்காக நடத்துவதாகக் கூறி அவன் பாரிங்ஸ் வங்கியைத் தொங்க வைத்துவிட்டான். காப்பு உத்தரவாதம் ஏதும் அற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வங்கிக் கணக்கு மூலம் லீசன் அந்த வங்கிக்கு அழிவாக்கிக் கொண்டிருந்த போதும் வங்கி அதை அறியாமல் இருந்து விட்டது.

பங்குச் சந்தைப் பரிபாடக் கணிப்பீட்டின்படியான நெக்கியின் குறியீட்டெண் 19,000 புள்ளிகளுக்குக் கீழே வீழ்ச்சியுறாது என்று 1995 மார்ச் 10 இல் நினைத்து அவற்றில் பந்தயங் கட்ட எண்ணினான். முப்பது மாதங்களாக மந்த நிலையில் இருந்த ஜப்பானின் பொருளாதாரமும் மீண்டும் வேகங் கொள்ளத் தொடங்கியிருந்ததால், அது பாதுகாப்பான பந்தயம் ஆகும் என்பது அவனுடைய நம்பிக்கை. அதற்காக அவன் இல. 88888 கணக்கையே பயன்படுத்தினான். அவன் ஆரம்பத்தில் பாரிங்ஸில் கணக்குச் சரிபிழை பார்த்த காலத்தில் உற்ற அறிவும் அதனால் வசதி பெறலாம் என்று காட்டியது. அந்த வேளையில் ஒசாகாவும், சிங்கப்பூரும் ஒப்பந்தங்கள் விற்கப்பட்ட உடனே அவற்றின் குறித்த விலைக்கும், விற்ற விலைக்கும் இடையிலான வித்தியாசத் தொகையை உடனே கோரின. அந்த வங்கி இலக்கம் தொழில் நுட்ப ரீதியிற் பார்க்கும் போது பாரிங்ஸின் சொத்தாகும். அதனால் பாரிங்ஸ் கணக்கில் அந்தச் செலுத்துமதிகளில் ஒரு பகுதி கொடுபட்டது. அதனால். வங்கியில் உள்ளோர் கேள்வி எழுப்பிய பொழுது லீசன் அதனைக் காரியாலயத்தின் கணனியில் ஏதோ தவறென்று மழுப்பி விட்டான், அங்கிருந்த கணனியின் செயற்பாட்டை இயக்கும் இரகசியங்கள் வங்கியில் இருந்த அனேகர் அறிந்த தொன்றல்ல.

இப்படி இருந்தபோதும் 1994 டிசம்பரிலும் 1995 ஜனவரியின் தொடக்கத்திலும் நெக்கியின் குறிப்பீட்டெண் 19,000 நோக்கி நகர்ந்தது. ஆனால் அந்த நல்ல முன்னேற்றம் 1995 ஜனவரி 17 இல் ஜப்பானின் கோபி நகரில் றிச்டர் அளவீடில் 7·2 புள்ளி கொண்டதாக நிகழ்ந்த புவிநடுக்கம் பங்குச் சந்தையிலும் பாதிப்புக் காட்டியதால் நெக்கி குறிப்பீட்டெண்ணை 7 வீதத்தால் குறையச் செய்தது.

பாரிங்ஸ் வங்கி ஒன்றில் நட்டப்பட்டதை மற்றதைக் கொண்டு சமாளிக்க முடியாத நிலையில் இருந்தது. அப்பொழுது லீசன் ஜப்பானிய அரசாங்க உண்டியல்களை விற்க முயன்றபோது அவையும் நட்டத்திலேயே விலை போயின. இப்படியாக உள்ளகக் கட்டுப்பாடுகள் அற்ற நிலையில் பாரிங்ஸ் வங்கி $850 மில்லியன் டொலருக்குக் கடனாளியாகி நான்கு வாரங்களாக அந்த நிலைமையில் தொடர்ந்தது.

அத்தகைய தொழிற்றுறைச் செயன் முறைகளுக்கு மாறாக வங்கி லீசனையே முக்கிய விற்பனையாளனாகவும், அவற்றைக் கணக்கு வைப்பவனாகவும் செயற்பட விட்டது மாபெரும் பிழையாகி விட்டது. இந்த நிலையிலும் வங்கி லீசனைக் கைவிட்டால் ஏற்பட்ட நட்டத்தைத் தொடர்ந்து வேலை செய்ய வேறு யாரும் இல்லாத ஒரு நிலையை அடைந்தது. அத்துடன் இத்தனை நடந்துங்கூட, வங்கியின் இல. 88888 கணக்கைப் பற்றிச் சந்தேகம் எழவேயில்லை. இறுதியில் வங்கியின் கணக்காய்வாளர்களின் சந்தேகம் அதிகரித்துத் துலவி ஆய்வு செய்ய முன்வருவதற்கு முன்பு, நிலைமை தலைகீழாகி வங்கி செலுத்த வேண்டிய கொடுமதித் தொகை அதன் மூலதனத்தையும் விஞ்சி விட்டது.

வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் சிங்கப்பூருக்கு வந்து பெப்ரவரி 8ஆந் தேதி சந்தித்துப் போயிருக்க, பெப்ரவரியில் ரோக்கியோவில் இருக்கும் பிராந்திய முகாமையாளர் நெக்கி பங்குகளிற் பேரம் நடத்துவதைக் குறைத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தியிருக்க, வங்கி கடன் கொடுத்த தொகை அதன் மூலதனத்திற்கும் மேலானதாகப் போய்விட்டது.

பெப்ரவரி 24ஆந் தேதி லீசன் இவை அனைத்தையும் விட்டு விட்டுத் தப்பியோடினான். அன்று இலண்டனில் வங்கியின் தலைவருக்கு லீசன் அனுப்பிய ஃபக்ஸ் செய்தி ஒன்றில் நடந்தவற்றிற்குத் தான் மனம் வருந்துவதாகவும், இனிமேல் அவரைத் தான் சந்திப்பேன் என்று நினைக்கவில்லையென்றும் கூறப்பட்டிருந்ததாக அறிவிக்கப்படுகிறது. அதிலே தான் நடத்திய வியாபார விபரங்களை லீசன் குறிப்பிட்டிருந்தானாம். இங்கிலாந்தின் மத்திய வங்கி பாரிங்ஸை மீட்டெடுக்க யாரையாவது தேடி ஒரு வாரங் கழிந்தும் முடியவில்லை. பாரிங்ஸ் வங்கித் தலைவர் பீடர் பாரிங் தனது குடும்பந் தொடங்கி நடத்திவரும் 232 ஆண்டுகாலப் பெருமை வாய்ந்த வங்கியை வீழ்த்த ஏதோ சதி நடத்தப்பட்டதாகக் கூறினார். ஆனால் பங்குச் சந்தைச் செயற்பாடுகளில் நிபுணரான ஒருவர்: ''இது வர்த்தகத் துறையில் பழைய முறைகளைப் பேணுபவர்களுக்கும் அவர்கள் சார்பில் வர்த்தகஞ் செய்வோருக்கும் இடையில் நிலவுங் கலாசார இடைவெளியைக் காட்டுகிறது'' என்று விமர்சித்துள்ளார்.

லீசன் தனது கருமை நிற றோவர் ஸ்போட்ஸ் காரை விற்று வெள்ளை நிறப் பென்ஸ் கார் ஒன்றை வாடகைக்கு எடுத்து ஓட்டிக் கொண்டு மலேசியாவுக்குச் சென்று அங்கிருந்து ஜேர்மனியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராங்பர்ட் நகருக்குத் தனது மனைவியுடன் விமானம் ஏறினான். மலேசிய அதிகாரிகள் அவனைக் கைது செய்யுமுன்பு அவன் நழுவி விட்டான். ஆனால் ஜேர்மனியில் வந்து இறங்கியதும் அவனுடைய புகைப்படத்தைப் பார்த்து, பொலிசார் அடையாளங் கண்டு கைது செய்தனர். லீசன் தனக்கு ஒரு சட்டத்தரணியின் ஆலோசனை வேண்டுமென்று கோரிப் பிரித்தானிய கொன்சுலேட் தூதரகத்திற்கும் அறிவித்தான். பின்பு லீசனின் மனைவி இலண்டன் செல்ல விடுவிக்கப்பட்டாள். அவனுடைய உடனடி எதிர்கால விதி எப்படி இருக்கும் என்று கூற முடியாமல் உள்ளது.

சிங்கப்பூர் அவனைத் தன்வசம் ஒப்படைக்கக் கேட்கிறது. அங்கே அவன் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகத்திற்காக, 14 ஆண்டுகள் வரையிலான சிறையோ, மரண தண்டனையோ பெறக்கூடும். இந்தவகையான வழக்குகளில் நிபுணத்துவம் பெற்ற சட்டவாதிகள் நிறுவனம் ஒன்றைத் தனக்காக வாதிட லீசன் அமர்த்தியுள்ளான். அவர்கள் அவனை இலண்டனுக்கு அனுப்பினால், ''நடந்தவற்றை முறைப்படுத்தலாம்'' என்று வாதிக்கின்றனர்

பிரித்தானியாவில் நிலையாக நிலவிவந்த வங்கித் துறையின் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் 1980 இல் இலகுவாக்கப்பட்டன. அதனால், அங்கே அமெரிக்கர்களும், ஜப்பானியர்களும் அந்தச் சந்தையிற் பெரும் வர்த்தக நட்சத்திரங்களாகத் திகழ்ந்து பெருந் தொகைச் சம்பளத்திலும், பொலிவிலும் பூரித்தார்கள். அதேவேளையில் லீசனைப் போன்ற தன்னிச்சை இலட்சியவாதிகளுக்கும் அந்தவிதப் பதவிகளில் இடம் பிடிக்கச் சந்தர்ப்பங் கிடைத்தது. இளையோர் பலர் திடீர் திடீரெனப் பெரும் பதவிகளைத் தாங்க வருகையில், அவர்களுக்குப் போதிய பயிற்சி கொடுக்க அனுபவம் பெற்ற முகாமையாளர்களுக்கு நேரங் கிடைக்கவில்லை.

பழைமையான திறமையான பிரித்தானிய வங்கியொன்று சிறிது காலங் கவலையீனமாக முறை தவறிச் செயற்பட்டதால், ஒரேயடியாக நொடிந்து போய்விட்டது. காட்சியான பணம் கைவிட்டுப் போனபின் சாட்சிக் கோடேறி ஆகப் போகும் பயன்தான் என்ன?

ஹெவாட் ஜீ சுவா இயோன் எழுதிய கட்டுரையொன்றின் சுருக்கம்.

ரைம், மார்ச் 13, 1995.

## "தலை அலங்காரம் புறப்பட்டதே!"

உங்கள் தலைமுடி அலங்காரத்தை மாற்ற விரும்புகிறீர்களா? இருக்கும் 'ஸ்ரைல்' அவ்வளவு நல்லாயில்லை என்று மாற்றிவிட்டு முன்னரிலும் படுமோசமாக, பேய்க்குஞ்சு போலத் தோற்றமளிப்பதாகக் கவலைப்படுவதைத் தடுக்க ஒருவழி பிறந்திருக்கிறது. 'வீடியோவில் தலை முடிச் சிறப்பு நிலை' என்ற புதிய முறையில், உங்கள் முடிதிருத்தும் நிபுணர் புதிய தலை ஸ்ரைலுடன் உங்களைப் படமெடுத்துக் காட்டுவார். உங்கள் தோற்றம் உங்களுக்குத் திருப்தியாயிருந்தால், நீங்கள் அந்த 'ஸ்ரை' லில் தலையலங்காரம் செய்யும்படி அவரிடம் சொல்லலாம். (மேனாடுகளில் முடி திருத்தும் சேவை பெற ஆறு மாதத்துக்குமுன்னரே பதிவு செய்ய வேண்டும்; குறித்த மணியில் போகாவிட்டால், உங்கள் 'வேலை' நடைபெறாது. அவ்வளவு மவுசு). இப்போது கணனிமென் பதிவுத்தட்டு உங்கள் முகத்துக்கு உகந்த 2 இடசின் தலைமுடியலங்காரத்தை உங்கள் படத்திற் பதித்துக் காட்டும். இப்போதிருக்கும் தலைமுடி நீளம் அழகா? சற்றுக்குறைத்தோ கூட்டியோ அமைப்பதால் உங்கள் அழகுத் தோற்றம் மாறுபடுமா? என்பதை வருவதுரைக்குந் திறன் இந்தக்கருவிக்குண்டு. நீங்கள் புதிய தலைமுடி அலங்காரத்துடன் உங்களைத் தொலைக்காட்சித் திரையில் பார்த்த பின், புதிய ஸ்ரையிலைத் தேர்ந்தெடுக்கலாம். அல்லது புதிய, புதிய பாணியிற்தலைமுடியை வகுத்துப் படங்கள் எடுத்து அந்த வீடியோப் பதிவு நாடாவை வீட்டுக்கு எடுத்துச் சென்று தோழிகளுக்குக் காட்டி அவர்கள் அபிப்பிராயத்தைப் பெறலாம். உங்கள் முடி இயற்கையான நிறத்தில் இருக்கலாமா, இதற்கு முன் இரசாயனப் பொருள் மூலம் பெற்ற புதிய நிறத்தை மாற்றலாமா என்பது போன்ற பெண்களை வருத்தும் பிரச்சனைகளுக்கு விடை இலகுவிற் பெறலாம். செலவு 25 – 30 டொலர் வரையிற்றான். இதனை வழங்கும் நிறுவனத்தின் பெயர், ''வீடியோவில் ஸ்ரையில்கள்'' கனோகா பார்க், கலிபோர்னியா. றெட்கென் சங்கிலித் தொடர் சிகை அலங்கார நிறுவனத்தின் 300 சலூன்களில் இந்தக் கணனி முறையை அது அமைத்துள்ளது. ஆண், பெண் இருபாலாருக்கும் தலை முடி அழகுச்சாதனமுறையை உள்ளடக்கிய பூரண கணனிமென் தகடு அமைப்புக்குச் செலவு 20,000 டொலர் மட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய்க் குழாய் இழிமகன்



## வெள்ளை மாளிகை ஈரானுடனான 100 கோடி டொலர் வர்த்தகத்தைத் தடைசெய்துள்ளது.

தமிழில் : திரு. த. கந்தசாமி

மும்மர் கடாபி, சதாம் குசெயின், அயத்துல்லா கொமேனி ஆகியோர் யுத்தம், பயங்கரம், வெடிகுண்டு சூழ்ச்சி ஆகியவற்றின் அப்போஸ்தலர்களாக நீண்ட காலமாகச் செய்தித்தாள் தலைப்புக்கள் மூலம் அமெரிக்கர்களுக்கு அறிமுகமானவர்கள். இதற்குப் பதிலடியாக இவர்களது நாடு சிதைக்கப்பட்டது. இவர்கள் பகிஷ்கரிக்கப்பட்டார்கள். ஆயினும் அவர்கள் இயங்கிக் கொண்டேயிருக்கின்றனர். வெறுத்தொதுக்கப்பட்ட நாடுகள் எனக் கிளின்ரனால் அழைக்கப்பட்ட இந் நாடுகளின் தலைவர்கள் மேற்குலக எண்ணெய் நிறுவனங்களுக்குக் குறைந்த விலையில் எண்ணெய் வழங்க முன்வந்துள்ளன. விலை மலிவாக இருப்பதால் வியாபாரத்தை ஏற்க மறுப்பதும் கஷ்டமாக உள்ளது. அமெரிக்க மக்களைப் பொறுத்த மட்டிலும் இது பொருந்தும்.

அமெரிக்க எண்ணெய் முதலீட்டாளர் நிறுவனமான கொனொக்கோ ஈரானிய எண்ணெய் வயல்களை விருத்தி செய்வதற்கென ஈரானுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அண்மையில் நிறுத்திக் கொண்ட செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது 100 கோடி டொலர் சம்பந்தப்பட்ட ஒப்பந்தமாகும். உள்நாட்டு அரசியல் அழுத்தத்தினால் நிறுவனங்கள் சந்தையை இழக்க நேரிட்டால் அது அவர்களின் எண்ணெய் வியாபாரத்திற் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும், கிளின்ரன் நிர்வாகம் இக்கட்டளையைப் பிறப்பித்தது. ஆனால் ஈரானுடனான ஏனைய தொடர்புகளை நீக்கிக் கொள்ளவில்லை. கிளின்ரனின் அரசியல் எதிரிகள் விரைந்து இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி யுள்ளனர். குடியரசுக் கட்சியைச் சேர்ந்த செனட் அல்போன்சோ டி அமாட்டோ ஈரானுடனான எல்லா வியாபாரத் தொடர்புகளையும் நீக்கிக் கொள்ளக்கோரும் மசோதா ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். பயங்கரவாதத்தை ஊக்குவிக்கவும், அணு ஆயுத உற்பத்திக்கும் அமெரிக்க நிதி ஈரானால் பயன்படுத்தப்படும் என்பதனாலேயே இம்மசோதா கொண்டு வரப்பட்டது. குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட இருக்கும் பொப்டோல் உட்பட 26 பேர் இம்மசோதாவில் ஒப்பமிட்ள்ளனர்.

15 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க இராசதந்திரிகளை ஈரான் பணயக் கைதிகளாக வைத்திருந்தபோது அமெரிக்காவில் நடந்த தலைவர் தெரிவை அது பாதித்தது. இன்றும் அதேபோன்ற நிலை உருவாகியுள்ளது. 1981 இல் அயத்துல்லா கொமேனியினால் அமெரிக்க இராசதந்திரிகள் விடுதலை செய்யப்பட்டதிலிருந்து 1987 வரை அமெரிக்கா இலட்சக் கணக்கான பீப்பா எண்ணெயை ஈரானிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது, அதிபர் றேகன் நேரடி வியாபாரத்தைத் தடை செய்தபோதும் அமெரிக்க நிறுவனங்கள் மூன்றாம் உலக நாடுகளில் விற்பனை செய்வதற்காகத் தொடர்ந்தும் ஈரானிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்துள்ளன. இன்றும் ஆண்டுதோறும் 350 கோடி டொலர் பெறுமதியான எண்ணெய் வியாபாரம் தொடர்கிறது. பெரும்பகுதி எண்ணெய் அமெரிக்காவால் ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரானையும் ஈராக்கையும் தனிமைப்படுத்தும் வகையிலான கிளின்ரனின் கொள்கைக்கு அமைவாக எண்ணெய் வியாபாரத்தைத் தொடர்வது அமெரிக்க இராசதந்திரிகளுக்குச் சுலபமானதாக அமையவில்லை. வர்த்தக உறவுகள் எல்லோரும் அறிந்தவையே. ''ஜப்பானியர் இதனை அடிக்கடி எமக்கு நினைவுறுத்தி வருகின்றனர்'' என்று அமெரிக்க தூதர் கூறுகின்றார். G. 7 நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொண்ட இவர் பயங்கரவாத நாடுகளைப் பகிஷ்கரிப்பது பற்றிக் குரல் எழுப்பினார். அவர்கள் சொல்லொன்று செயல் ஒன்றாக நடக்கிறார்கள். ஜேர்மனியர் தமது கைத்தொழில் உற்பத்திகளை ஈரானுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஜேர்மன் அதிபர் கெல்மட் கோல் அமெரிக்காவுக்குச் சென்றபோது அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை எண்ணெய் வள நாடுகளுக்கு ஜேர்மன் வழங்கும் கடனுதவிகளை நிறுத்தும்படி நிராகரித்து விட்டார். இவ்விடயத்தில் இழப்புகள் ஏற்படாமல் நடந்து கொள்ளவே எல்லோரும் விரும்புகின்றனர். இன்றைய நிலையில் 1974 இல் இருந்த நிலையைவிட எண்ணெயின் விலை குறைந்துள்ளது. ஆனால் இன்னும் 15 ஆண்டுகளில் எண்ணெயின் தேவை 50 நூற்று வீதத்தால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, கடந்த காலத்திற் பாரிய அளவிலான எண்ணெய் அகழ்வுகள் எதிர்பார்த்த பலனைத் தராதபடியால் இப்போது எண்ணெய்வளம் உறுதிசெய்யப்பட்ட பின்னரே அகழ்வு வேலையை ஆரம்பிக்கின்றனர், பொருளாதார வளங் குன்றிய எண்ணெய் உற்பத்தி நாடுகள் வெளிநாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளன. இந்நாடுகள் அகழ்வு வேலைக்கான முதலீட்டுக்கு வெளிநாட்டு உதவியை எதிர்பார்த்து நிற்கின்றன. கொனொக்கோ எண்ணெய் நிறுவனம் ஈரானில் மேற்கொள்ள விருந்த இப்படியான ஒரு திட்டத்தையே கிளின்ரன் அரசு தடை செய்தது, ஆனால் பாதிக்கப்பட்டது அமெரிக்கன் நிறுவனமே. 1986 இல் லிபியாவின் பயங்கரவாத நடவடிக்கைக்குப் பதிலடியாக லிபியா மீது குண்டுத் தாக்குதலை நடத்த முன் நாலு அமெரிக்க நிறுவனங்களை லிபியாவுடனான எண்ணெய் வியாபாரத்தை நிறுத்தி விடுமாறு றேகன் கட்டளை இட்டிருந்தார். ஆனால் உடனடியாக ஐரோப்பிய நிறுவனங்கள் அவ்வெற்றிடத்தை நிரப்பி விட்டன.

### பித்தலாட்டம்

வளைகுடாப் போரின்போது சேதமாக்கப்பட்ட அகழ்வு வேலை அமைப்பைப் புனரமைப்பதற்கு மூவாயிரங் கோடி டொலர்களை ஈராக் எதிர்பார்த்து நிற்கிறது. இதன் எண்ணெய் வளம் சவுதி அரேபியாவின் வளத்திற்குச் சமமானது. எனவே ''ஈராக்கை நோக்கி எண்ணெய் நிறுவனங்கள் ஓடப்போகின்றன. ஈராக்கிடம் பெருமளவு எண்ணெய்வளம் உண்டு. அதுவுமல்லாமல் விலையும் குறைவாக உள்ளது'' என்று அமெரிக்க நிறுவனம் ஒன்றின் அதிபர் கூறியுள்ளார். ''பாலைவனப் புயல்'' என்ற ஈராக்கிற்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் பின் ஈராக்கிற்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதித்தது. ஆனால் ஈராக் வெளிப்படையாக ஜோர்தானுக்கும் மறைமுகமாக ஈரான், துருக்கி ஆகிய நாடுகளுக்கூடாகவும் எண்ணெய் வியாபாரத்தை நடத்திவருகிறது. இருபது மேற்கு நாட்டு நிறுவனங்கள் ஈராக்குடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளதுடன் சில நிறுவனங்கள் பொருளாதாரத்தடை நீக்கப்பட்டதும் வியாபாரத்தை ஆரம்பிக்க ஒப்பந்தமும் செய்து கொண்டுள்ளன. அமெரிக்க நிறுவனங்களும் வியாபாரத் தொடர்பை ஏற்படுத்த முயற்சிக்கின்றன என்று சிலர் கூறுகின்றனர்.

அண்மையிற் குவைத்திலிருந்து வழி தவறி ஈராக்கினுட் புகுந்த இரு அமெரிக்கர்கள் ஈராக் அரசால் கைது செய்யப்பட்டுள்ளனர். சதாம் குசெயின் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பொருளாதாரத் தடையை நீக்குமாறு அமெரிக்காவைக் கேட்கலாம். கடந்த 10 ஆண்டுகளில் ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளில் நடந்த பயங்கரவாதச் செயலுக்கு ஈரானியர் துணைபோயிருக்கலாம் என நம்பப்படுகிறது. உறவுகள் பலவீனப்பட்டால் வியாபாரத்தில் பெரும் பின்னடைவு ஏற்படும் என ஈரான் கருதுகிறது. வியாபாரந் தொடர்ந்தது; ஆனால் இதன் பெறுமதியில் ஒருபகுதி இரத்தத்தினால் கொடுபட்டுள்ளது.

கிறிஸ்தோபர் டிக்கி

நியூஸ்வீக் 27 - 3 - 95

★

## மாசுபடுதலுக்கான ஒரு சூடான தீர்வு

அதோடு யாரோ ஒருவர் வருவதன் பின் அந்த யோசனைகளில் ஒன்று தான் உண்மையில் வெளிப்படையாகத் தோற்றுகிறது. முள்ளங்கி வகையான ஒரு தாவரத்தில் இருக்கும் ஒருவகைத் திரவம் நீரில் இருக்கும் கபோலித் திரவமாகிய மாசுபடுத்தியைச் சுத்தஞ் செய்கிறது என்பதை நீண்டகாலமாகச் சுற்றாடலியல் சூழல் விஞ்ஞானிகள் அறிந்துள்ளார்கள். ஆனால் அந்தத் தாவரத்திரவத்தை சுத்தஞ் செய்வது ஒரு மிகவும் செலவுக்கான விடயமாகும், துண்டுதுண்டாக்கிய முள்ளங்கித் தாவரமும் ஐதரசன் பரவொட்சைட்டும் கலந்தது அதே மாதிரி பலனளிக்கும் என்று பென்மாநில இரசாயன வியலாளர்களான ஜீன்மார்க் பெல்லாக்கும், ஜேசி டெக்கும் இப்போது கண்டு பிடித்துள்ளார்கள் 66,000 கலன் நீரைச் சுத்திகரிக்கப் பாவிக்கும் முள்ளங்கித் திரவத்தில் நாளந்தம் 2.5 டொலர் கோடிசெலவாகும். துவைக்கப்பட்ட கிழங்கு 920 டொலராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக இரு; இல்லையேல் பின் தள்ளப்படுவாய்.

**வாடிக்கையாளர்களுக்கு எது எப்போது தேவையோ அதை அப்போது வழங்க வேண்டும். நேரத்துடன் போட்டி போட்டு தொழிற்படுபவர்கள் மெதுவாகச் செயற்படுபவர்களைப் பின்தள்ளிவிட முடியும்.**

*தமிழில்* : இளையவன்

1981 இல் ஜப்பானில் அது ஆரம்பித்தது. உலகின் மிகப் பெரிய மோட்டார் சைக்கிள் தயாரிப்பாளர்களாக மிளிர வேண்டும் என்ற எண்ணத்தை வெளியிட்ட யமஹா நிறுவனத்தினர் தமது போட்டியாளர்களான ஹொண்டா நிறுவனத்தைப் பின் தள்ள விழைந்தனர். ஹொண்டா அதற்கு எதிராகக் குரல் எழுப்பியது. அதிலிருந்து எச். வை. போர் எனப்படும் ஹொண்டா - யமஹா மோதல் ஆரம்பமாகியது.

பதினெட்டு மாதங்களில் ஹொண்டா கவர்ச்சிகரமான நவீன வகையான தயாரிப்புக்கள் மூலம் வாடிக்கையாளர்களைக் கவர யமஹாவின் விற்பனையில் சரிவு ஏற்பட்டது. காலப் போக்கில் யமஹா தனது தவறை உணர்ந்தது. 1983 இல் எச். வை. போரை முடிவுக்குக் கொண்டுவர யமஹா விழைந்தது.

விலைகளில் குறைப்பு, விளம்பர ஊக்குவிப்பு என்பன போன்றவற்றை ஹொண்டா மேற்கொண்ட போதும் அதன் வெற்றிக்கு அவை மட்டுங் காரணமல்ல. நேரத்துடன் போட்டி போட்டு தொழிற்பட்டதே ஹொண்டாவின் வெற்றிக்கான இரகசியம். ஹொண்டா தனது தயாரிப்பு மாதிரிகளில் அதிகரிப்பைச் செய்ததுடன் புது வகை மாதிரிகளின் வெள்ளத்தில் ( Flood of New Models ) யமஹாவை மூழ்கடித்தது.



எச். வை மோதல் ஆரம்பித்த போது இரு தரப்பிலும் 60 வகையான மாதிரிகள் இருந்தன. ஆனால் 18 மாதங்களில் ஹொண்டா 113 புது மாதிரிகளை ( New Models ) அறிமுகப்படுத்தியது. அவை கவர்ச்சிகரமானவையாகவும், தொழில்நுட்ப முன்னேற்றங்களை உள்ளடக்கியதாகவும் இருந்தன. இக் காலப் பகுதியில் யமஹாவினால் 37 புது மாதிரிகளையே உற்பத்தி செய்ய முடிந்தது. அதிலும் அவற்றிற் பெரும்பாலானவை காலத்திற்கு ஒவ்வாதவையாக இருந்தன. இதனால் யமஹா சரணடைய நேர்ந்தது. யமஹாவின் விற்பனை முகவர்களில் 12 மாதங்களிலேயே தளர்வு அவதானிக்கப்பட்டது. ஓர் உற்பத்தியாளர் மேற்கொள்ளக் கூடிய மிகப்பெருந்தவறு இது என உணரப்பட்டது.

## நேரந்தான் முக்கிய ஆயுதம்

''போட்டிகளில் வெல்வதற்குரிய முக்கியமான வளம் நேரம்'' என்பது ஜோர்ஜ் ஸ்டாக் என்பவரது கருத்து. 1988 இல் வெளியான ஹார்வார்ட் பிஸ்னஸ் றிவியூ இதழில் எழுதிய கட்டுரையொன்றில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ''நேரம் என்பது ஒரு முக்கிய ஆயுதம். அதற்கு பொருள், உற்பத்தி, தரம், புத்துயிர்ப்பு என்பவற்றைப் படைக்கக் கூடிய சக்தி உண்டு'' எனத் தெரிவித்துள்ளார்.

நேரத்தின் அடிப்படையில் போட்டியில் ஈடுபடுவோர், உற்பத்தியில் ஈடுபடுவதிலும் அவற்றைச் சந்தைப்படுத்துவதிலும் அதனைக் கடைப்பிடிப்பர். இதில் மிக முக்கியமானது புதிய மாதிரிகளைத் தயாரிப்பதிலும், அறிமுகப்படுத்துவதிலும் நேரச் செலவீட்டைக் குறைப்பது தான்.

நேரத்தின் அடிப்படையில் போட்டியிடுவோர் உற்பத்திச் செலவினத்தைக் குறைப்பதுடன் பரந்த உற்பத்திக்கான அடித்தளத்தைப் பேணுவதுடன் சந்தை வாய்ப்புக்களையும் பெருக்கிக் கொள்கின்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் மெதுவாகச் செயற்படும் தமது போட்டியாளர்களை ஓரங்கட்டி விடுகின்றனர். தாய்வானின் மிர்டாக் மற்றும் ஹொங்கொங்கின் ஜோன்சன் எலக்ரிக் போன்ற நிறுவனங்கள் தமது போட்டியாளர்களின் தந்திரத்தை முறியடிக்க நேரத்துடன் போட்டியிட்ட கதையைப் பின்னர் நாம் காணலாம். மிர்டாக் சர்வதேச நிறுவனத் தலைவர் பிரான்சிஸ் டிசாய் கூறுகையில், நேரத்தின் அடிப்படையிலான போட்டி பன்முகத் தொழிற்பாடுடைய உற்பத்திக் குழுக்களுக்கிடையே போட்டியை ஏற்படுத்தி ஏறத்தாழ வீழ்ச்சி நிலையில் இருந்த தமது நிறுவனத்தை 1992 இல் மீண்டுந் தூக்கி நிறுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகத் தெரிவிக்கிறார். இதன் மூலம் 1990 – 1994 க்கு மிடையே வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவது அதிகரித்தமையால் இரண்டு பங்குலாபம் பெற முடிந்ததாக ஜோன்சன் எலக்ரிக்கல் நிறுவன முகாமைப் பணிப்பாளர் பற்றிக் வாங் குறிப்பிடுகிறார். நேர அடிப்படையிலான போட்டி மூலம் ஓர் உற்பத்திக்குத் தேவைப்படும் நேரத்தில் சுமார் 5 சத வீதத்தை மீதப்படுத்த முடியும் என்பது அமெரிக்காவின் பேராசிரியர் ஜோசப் டி பிளாக்பர்ன் என்பவரது கருத்து. நேரத்தை அடிப்படையாகக் கொண்ட போட்டியாளர்களைப் பொறுத்த வரையில் வீணாக்கப்படும் நேரம் என்பது சந்தர்ப்பத்தை இழப்பதற்கு ஒப்பானதாகும். நேரத்தை அழுத்திப் பிடிப்பதன் மூலம் விருத்தி செய்யவும், தயாரிப்பில் ஈடுபடவும் உற்பத்தியை வெளியிட அல்லது சேவையை நல்க முடியும். நேரத்தை அழுத்திப் பிடிப்பது என்பது வேகமாகவும், அதிகமாகவும், நெகிழ்ச்சித் தன்மையோடும் வாடிக்கையாளர் திருப்தியுறும் வகையிற் செயற்படுவதைக் குறிக்கும் எனலாம்.

### அமுலாக்கல்

நேர அடிப்படையிலான போட்டி என்பதைத் தனியே தயாரிப்புக்களுக்கு மட்டும் பொருத்திப் பார்க்குந் தவறான கருத்து ஒன்றுண்டு. உண்மையிலிருந்து எதுவும் தூர ஒதுங்கிவிட முடியாது என பிளாக்பர்ன் சுட்டிக் காட்டுகிறார். சேவைத் தொழில்களைப் பொறுத்த வரையில் உற்பத்திகளுக்கு இட்டுச் செல்லுங் கவனத்தை ஈர்க்கச் செய்வதே நேர வரையறுப்பின் நோக்கம் எனலாம்.

இதற்கான விளக்கம் மிக இலகுவானது. சேவைகளை வழங்குபவர்களைப் பொறுத்த வரையில் வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்பும் இன்றியமையாதது. நேரத்துடனான போட்டி தான் நிதித்துறையிலும் மிக முக்கியமாக இருக்கிறது. வங்கிகள் தமது கடன்கள் தொடர்பில் மிகுந்த அவதானிப்பைக் கொண்டிருக்க வேண்டும். சிட்டிகுறொப் நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் ஈடுவைப்பதற்கான விண்ணப்பம் ஏற்கப்பட்டு 15 நிமிடத்தில் அவ்விண்ணப்பம் தொடர்பான பதிலளிக்கப்பட்டு விடுவதைக் காணலாம்.

### அமுலாக்கல்

நேர அடிப்படையிலான போட்டியை எப்படி அமுல்படுத்துவது? ''போக விடுங்கள் தேவையைக் கூட்டுங்கள்.'' முகாமைத்துவ ஆலோசகர் கிறிஸ்தோபர் மேயரின் கூற்று இது. மரபு ரீதியான அமைப்பு ஒன்றை வேகமாகத் தொழிற்படும் கணனி ஒன்றுக்கு மாற்றும் போது ஒழுங்கமைப்பான அமைப்பு மாற்றமும். சுழற்சி வேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளும் தேவைப்படுகின்றன. வேகமான சுழற்சி நேரம் என்பது நோக்கம், தந்திரோபாயம், வேகத்திற்கான அமைப்பு என்பவற்றிற் தங்கியிருக்கிறது.

நிறுவனம் என்ன செய்யப் போகிறது என்ற அடிப்படையிலும், சுழற்சி வேகத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலும் தந்திரோபாயம் வரையறுத்துக் கொள்ளப்பட வேண்டும். திறமையான நிர்வாகம் ஒன்று மாற்றப்படும் வழிமுறையை இந்த சுழற்சி வேகத்தை நூறு சத வீதத்தால் குறைத்துக் கொள்வது சாத்தியமானது.

வேலை மட்டத்தில் இவ் வேகத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் ஒரு நிறுவனம் நோக்கம், தந்திரோபாயம், அமைப்பு என்பன ஆரம்பத்திலேயே தீர்மானிக்கப் பட்டிருக்க வேண்டும். இது மேயரின் கருத்து. வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் முடிவுப் பொருளின் விநியோகத்தை மேற்கொள்ளக் கூடியதாக, பல தொழிற்பாடுகளையும் மேற்கொள்ளக் கூடியதொரு குழுவை அமைப்பது அடுத்த படிமுறையாகும். இந்த வகையில் நிறுவனமானது பெறுமதி மிக்க நேரத்தைக் கூட்டவும், பெறுமதியற்ற வீண் நேரத்தைக் குறைக்கவும் வகை செய்ய வேண்டும்.

நேர அடிப்படையிலான போட்டி என்பது அவதிப்பட்டுக் காரியங்களை முடிப்பது என்று அர்த்தப்படக் கூடாது. வேகமாகச் செயற்படுவது என்பதற்காக எல்லா இடமும் கண்டபடி ஓடித் திரிவது எமக்கு நன்மை பயக்காது.

வேகத்தைக் கூட்டுவது என்பது பெரும்பாலும் மெதுவாகத் தொழிற்படுவதற்கும் தள்ளி விட்டு விடக்கூடும்.

நன்றி- வேர்ள்ட் எக்ஸிகியூரிவ் டைஜஸ்ற், ஜனவரி 1995

★

## உடனடியாக மேலதிக இலாபத்தினை அடைவதற்கான 12 வழிகள்.

டிறைற்றன் பேட் கூறுவன:

### 1 கொடை வழங்க முயல்க:

உமது கொடை மேலதிக செலவினத்துக்கு இடமளிக்காது பார்த்துக்கொள்ளவும். உமது வாடிக்கையாளருக்குப் பொருத்தமானதாகவும், சர்வதேசக் கவர்ச்சியுடையதாகவும் இருத்தல் வேண்டும். எ.கா. மணிக்கூடு, கைக்கடிகாரம், கணிப்பொறி (Calculator), வைன்.

### 2. மாற்றீடாக (Alternative) வன்றி வித்தியாசமான கொடையாக இருக்கிறதா என்று பரீட்சிக்குக:

சந்தைப்படுத்தும் வியாபாரி ஒருவர் தோட்டப்பயிர் உற்பத்திகளை விற்பனை செய்கிறார். அவர் தமது கொடைகளை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கென்று வேறுபடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியதால், அவருடைய வியாபாரமானது 11 சத வீதத்தால் அதிகரிக்கக் கண்டார்.

### 3. விரைவான விநியோகம்:

வெற்றிகரமான வியாபாரக் காரணிகளில் முக்கியமானது விரைவான விநியோகம். பொருளின் தரம், சேவை என்பவற்றிற்கு அடுத்தது, இந்த விரைவான விநியோகம்.

### 4. பதில் வழங்காமையால் வாடிக்கையாளர் நட்டமடைவதை அவருக்குத் தெரிவிக்குக:

கையிருப்பு ஓர் அளவுக்குத்தான் உண்டு என்பதை அல்லது வாங்கும் பொருளின் காலக் கெடு வரையறைக்குட்பட்டது என்பதை எப்பொழுதும் தெரிவிக்கவும். உளவியலாளர்கள், மக்கள் தாங்கள் பெறாது இழக்கும் பொருள் பற்றியே கவலைப்படுவர் எனவும் ஏதோ இலாபங் கிடைக்கிறதே என்பதைப் பொருட்படுத்துவதில்லை எனவும் கூறுகிறார்கள்.

### 5. கடித உறையிற் கவனம் செலுத்துக:

கொடை வழங்குவதற்கு அடுத்ததாக முதன்மை பெறுவது கடித உறை விற்பனையாளர் தமது கடித உறையில் இடும் சுலோகம் (வாசகம்) அலுப்பை அளிக்கக்கூடியதாயிருந்தாலும், அது தமது வியாபாரத்தை 30சதவீதம் அதிகரிக்கச் செய்தது என்றால் கடித உறையினதும், அதில் இடும் சுலோகத்தினதும் முக்கியத்துவம் விளங்குகிறதல்லவா? மங்கல் நிறக் கடித உறையிலும் வெள்ளை நிறக் கடிதவுறை மேலானது. எனினும் இவ்விரண்டிலும் பல நிறக்கடித உறைகளே சிறந்தவை. கடித உறையினுள்ளே பேனா போன்ற ஏதாவது பொருளை இட்டு வைப்பதால், வாடிக்கையாளர் கூடிய ஆர்வத்தால் தூண்டப்படுவர்.

### 6. தனிப்பட்ட உறவு பேணுதல், இதற்குகந்தது கையெழுத்தே:

கடிதங்களைப் பொறுத்தவரையில் அவற்றைப் பெறுவோர் இரு வகையான எண்ணப் பாங்குடையவர்களாயிருப்பர். உடனடியாக வாசிக்க வேண்டும்; ஏனெனில் கடிதம் கவர்ச்சியாயிருக்கிறது என்பது ஓர் எண்ணப் பாங்கு. கவர்ச்சியில்லாவிடில் பிறகு வாசிப்போம் என்று காலங் கடத்துவது மற்றோர் எண்ணப்பாங்கு இந்த எண்ணப் பாங்கு ஏற்படுவது கடிதத்தை வாசிக்காமலே விடுவது வரை செல்லும் வர்த்தகர் ஒருவர் கடித உறையில் முகவரியையும். பொருள் கோரும் அட்டை (Order Card) யின் முகவரியையும், முகவரியாளரை விளிக்கும் பகுதியையும் (Salutation), உபசாரத் தொடரையும் தமது ஊழியர்களைக் கொண்டு எழுதுவித்து அனுப்பினார். இதனால் அவருடைய வியாபாரம் 50 சத வீதத்தால் அதிகரித்தது,

### 7. தரமான தாளைக் கையாள்க:

கடிதத்தின் எடையைக் கூட்டுவதும். கடிதத்தாளின் தரத்தைக் கூட்டுவதும் வியாபாரத்தை 20 சத வீதத்தாற் கூட்டும்.

### 8. வாடிக்கையாளரை முதன்மைப்படுத்துக:

வாடிக்கையாளர்கள் தங்களை நன்முறையில் நடத்துவதையே விரும்புவார்கள். உமது வாடிக்கையாளருக்குக் கூடிய நல்ல சேவையையுந் தனிப்பட்ட முறையில் அவருக்கு உதவ நீர் கொண்டுள்ள விருப்பத்தையும் வலியுறுத்தும் வகையிற் கடிதம் அமைவதோடு கோரிக்கை அட்டையின் மேற்புறத்தில் ''சிறப்பு முதன்மை'' (Priority) என்ற பதத்தைப் பொறிப்பதும் உமது வியாபாரத்தை முன்னெடுக்கச் சிறந்த உத்தியாகும். விரைந்த சேவைக்கென அவர்களுக்கு உமது சிறப்புத் தொலைபேசி இலக்கத்தையும் குறித்தனுப்பலாம். இதனோடு சிறப்புக் கோரிக்கைக்கான இலக்கத்தையும் அறிவித்து அதனைத் தொலைபேசித் தொடர்பின் போது வாடிக்கையாளர் கையாளவும் அறிவுறுத்தலாம். அது மிகவும் உதவியாயிருக்கும்.

### 9. உச்சத் தலைமை அதிகாரியே ஒப்பமிடுக:

மக்கள் தங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களில் துணைத் தலைமை அலுவலரோ, எழுதுவினைஞரோ ஒப்பமிடுவதைப் பெரிதாக நினைக்கமாட்டார்கள். உச்சத்தலைமை அதிகாரியின் ஒப்பத்தால், தாம் கௌரவத்துக்குள்ளாவதாகஉணர்வார்கள். வங்கித் தலைவர் ஒருவர், தமது வாடிக்கையாளர்களான கூட்டகங்களின் (Companies) தலைவர்களுக்கு நேரடியாகக் கடிதங்கள் எழுதினார். அந்தக் கடிதங்கள் நற்பயனைத் தந்தன.

### 10. ஆசிரியத் தலையங்கப் பாணியைக் கையாள்க;

சாதாரண விளம்பரப் பாணியில் எழுதாது ஆசிரியத்தலையங்கப்பாணியிற் காத்திரமாக எழுதி வெளியிடும் வெளியீடுகள் விளம்பரத்திலும் பெருமளவான நற்பயன் தரும்.

### 11. மக்கள் மக்களைப் பார்க்கிறார்கள் என்பதை நினைவிற் கொள்க:

பெரும்பாலான விளம்பரங்களிலும், கடிதங்களிலும் மக்களின் முகங்களைக் காண முடிவதில்லை. முகங்கள் வாசகர்களைக் கவர்ந்திழுப்பன. கூடிய அளவு பதில்களைப் பெற வேண்டுமானால் மக்களின் முகங்களைக் கடிதங்களும், விளம்பரங்களும் கொண்டிருத்தல் வேண்டும்.

### 12. பிற்குறிப்பை இடுவதில் அலட்சியம் வேண்டாம்:

கடிதங்களை வாசிக்கத் தொடங்கு முன் அவற்றில் யார் ஒப்பமிட்டுள்ளார்கள் என்று பார்ப்பது மக்களின் வழக்கம். முக்கியமான கோரிக்கை ஒன்று, பி. கு என்ற பிற்குறிப்பில் இடப்பட்டிருப்பின் ஒப்பத்தை அடுத்து வாசகரின் கண்கள் பிற்குறிப்பைக் கவனிக்கத் தவறா. இதனால் கோரிக்கைக்கு இணக்கம் அளிக்கப்படக் கூடிய வாய்ப்பு உண்டு.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டட முகப்பில் வெடிப்புக்கள்

## அக்குவினோ கொலைச்சதி தொடர்பாக நிலவிவந்த அமைதியைப் படையினர் குலைக்கிறார்கள்.

தமிழில்; சொக்கன்

12 ஆண்டுகள், 2 நீதிவிசாரணைகள், 16 பேர்களுக்குத் தண்டனைத் தீர்ப்புக்கள் முடிவடைந்த பின்னரும் பிலிப்பைன்சிய நாடாளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் பெனிக்கோ அக்குவினோ அவர்களின் கொலைச் சதி தொடர்பான துப்புக்கள் இன்னமும் முற்றாகத் துலக்கப்படவில்லை என்றே பிலிப்பைன்சினர் நம்புகின்றனர். அக்குவினோவின் கைம்பெண்ணும், முன்னாள் சனாதிபதியுமான கொறேசன் அக்குவினோவும், வேறு பலரும் இந்தக் கொலைச் சம்பவம் ஃபேடினன்ட் மார்க்கோஸ்–இஸபெல்லா மார்க்கோஸ் காலத்தில் இடம் பெற்றதைச் சுட்டிக் காட்டித் தங்களின் ஐயங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இதுபற்றி மீண்டும் புலனாய்வை மேற்கொண்டு புதைந்து கிடக்கும் மர்மங்களை வெளிக் கொண்டு வரும்படி அரசுக்கு அழுத்தங் கொடுக்கிறார்கள்.

1987 தொடக்கம் 31 மாத காலமாக மீள் விசாரணை நடந்தது. பெனிக்கோ அக்குவினோ மூன்றாண்டுகள் தமது நாடு துறந்து ஐக்கிய அமெரிக்காவில் வாழ்ந்து பின் நாடு திரும்பிய ஒரு சில நிமிஷங்களிலேயே விமானத்தளத்தில் வைத்துக் காவற்றுறையைச் சேர்ந்த றொங்கெலியோ மொறெனோ என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது இந்த நீண்ட விசாரணையின் போது உறுதியாயிற்று. இதனோடு விமானத்தளக் காவலர்களான படையினர் மாகாணத்திற்



குழப்பம் ஏற்படுத்திய குழுவினனான றோலாண்டோ கல்மன் என்பவனைச் சுட்டு வீழ்த்தியதும் வெளியாயிற்று. 1990 இல் நீதிமன்று மொறெனோ உள்ளிட்ட 14 போர் வீரர்களை அக்குவினோ கொலைச் சதியிற் சம்பந்தப்படுத்தி அவர்களுக்கு இரட்டிப்பு ஆயுட்காலக் கடூழியத் தண்டனை வழங்கியது. இவர்கள் இன்றும் தாங்கள் சுத்தவாளிகள் என்றே வாதிடுகிறார்கள். கொலைச் சதி பற்றி மூச்சுக்கூட விடாது இரகசியத்தைப் பொத்தி வைத்திருக்கிறார்கள்.

கட்டடத்தில் வெடிப்பு உண்டானது போல இதுவரை மூடுண்டு கிடந்த மர்மத்தை விமானப் படைத் தலைமையகத்தைச் சேர்ந்த சார்ஜன்ற் மாட்டினஸ் என்பவர் வெடிக்க வைத்திருக்கிறார். இவர் 'பிலிப்பைன்ஸ் டெய்லி இன்குயறர்' என்ற பத்திரிகைக்குக் கொடுத்துள்ள விரிவான அறிக்கையில் அக்குவினோ கொலைச் சதியிற் தாம் வகித்த பங்கினை அம்பலப்படுத்தியிருக்கிறார். அக்குவினோவைக் கொன்றவன் கல்மன் என்பதே இவரது முடிவான தகவல். எனினும் மார்க்கோசின் நெருங்கிய நண்பர் எடுவார்டோ கொறேசன் அக்குவினோவின் சகோதர முறையினரும், அவருடன் உறவை முறித்துக் கொண்டவருமான கொஜுராங்கோ, ஆயுதப்படைத் தலைவரும் மார்க்கோசின் விசுவாசமான மெய்க்காப்பாளருமான ஃபியன் வேர் ஆகியோருக்கு இக் கொலைச் சதிபற்றி முன்னரே ஓரளவு தெரிந்திருந்தது என்று தாம் உறுதியாக நம்புவதாகவும் கூறியுள்ளார்.

மேலும் விமானத் தளப் பாதுகாப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவுடன் காவற்றுறைத் தலைவர் மேஜர் ஜெனரல் றோமியோ கட்டன், விமானப்படைக் கேணல் றோமியோ ஒஹாகோ, வர்த்தகர் ஹெமிலோ கொசுய்க்கோ ஆகியோர் சதித் திட்டம் பற்றித் தமக்கு விளக்கந் தந்ததாகவும் மாட்டினஸ் தமது அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார். அக்குவினோவின் கொலை நடைபெற்ற ஆகஸ்ற் 21, 83–க்கு முந்திய இரவு கல்மன் விமானத்தளத்திற்கு அண்மையில் உள்ள உணவு விடுதியிலே தங்கியிருந்ததும் இவர் அறிக்கையின் மூலந் தெரிய வந்தது. கட்டனும், கொசுய்க்கோவும் கொஜுராங்கோவுக்கு நெருக்கமானவர்கள். ஒஹாகோ, ஜெனரல் வேர் அவர்களின் கையாள். கல்மனை விமானத்தளத்தின் ஓடுபாதைக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு மாட்டினசுக்கு அளிக்கப்பட்டிருந்தது. அக்குவினோவைச் சுடும் பொழுது பதற்றங் காரணமாகக் கல்மனின் குறி தவறினால் அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையும், அக்குவினோவையும் சுடும்படியும் அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. கட்டன் ''விமானத் தளத்திற் பணியாற்றும் அனைவரும் இந்தச் செயற்பாட்டிலே பங்காளிகளே'' என்றும் மாட்டினசுக்குச் சொல்லப்பட்டிருக்கலாம்.

சிறைத் தண்டனை அனுபவித்து வரும் படை வீரர்கள் இந்த ஏற்பாடுகள் பற்றி மாட்டினஸ் சிறையில் வைத்துத் தங்களுக்கு எடுத்துரைத்த பின்பே தெரிய வந்ததாகக் கூறினார்கள். அடுத்து நிகழப்போவதென்ன? கொசுய்க்கோ ஏற்கனவே விசாரிக்கப்பட்டு விடுதலையானவர். ஒஹெறாகோ ஐக்கிய அமெரிக்காவில் வாழ்கிறார். கட்டன் தான் மாட்டினசை எக்காலத்திலுஞ் சந்தித்ததில்லை என்று சாதிக்கிறார். ஹெர் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் நாட்டிலிருந்து தப்பியோடி வெளிநாட்டில் மறைந்திருக்கிறார். கொறேசன் அக்குவினோ (முன்பே உறவு முறிந்துபோன தன் சகோதர முறையினரான) கொஜுராங் கோவிடம் அவர் அறிந்ததை வெளியிடும் வண்ணம் நீண்ட காலமாகவே கோரி வருகிறார்.

இதுவரை வெளியானவற்றிலிருந்து மீண்டும் விசாரணையைத் தொடங்குவது நியாயப்படுத்தப்படவில்லை என்கிறார் நீதித் துறையின் பதிற் செயலாளர் டெமற்றியோ டெமெற்றியா. சனாதிபதி ஃபிடெல் றாமோஸ் அவர்களோ பிலிப்பைன்சின் காவற்றுறை கட்டுப்பாட்டில் இருந்து விலகிக் குழம்பியுள்ள நிலையில் மீள் விசாரணையைத் திரையிட்டு நிரந்தரமாக மூடிவிடுவதையே விரும்புகிறார். அக்குவினோ கொலை நிகழ்ந்த ஓகஸ்ற் 21, 1983 இல் காவற்றுறையின் தலைவராய் விளங்கியவர் ஃபிடெல் றாமோஸ் என்பது கவனத்துக்குரியது.

★

# ருஷ்யா மேற்கொள்ளும் மோசமான ஏமாற்று

தமிழில் : இளையவன்

இதுவரை கண்டறியப்பட்டவற்றை விடவும் நாசகாரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதும், நரம்பு மண்டலத்தையே தாக்கக் கூடியதுமான இரசாயன வாயுக்களை ருஷ்யா தயாரித்து வருகின்றது. 57 வயதான நரைத்த தலை முடிகளை உடைய ருஷ்ய விஞ்ஞானியான மிர்சாயேனோவ் இதுபற்றி அண்மையில் விபரித்துள்ளார்: அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்கும் இடையேயான ஒப்பந்தம் பற்றிய ஒரு மீறல் இது என்பதுடன், 1993 சனவரியில் செய்து கொள்ளப்பட்ட இரசாயன ஆயுதங்கள் தொடர்பான ஒப்பந்தத்திற்கு நேர் எதிரானதுமாகும்.

இது பற்றிய ஆபத்து எளிதில் உணரக் கூடியது. இது தொடர்பாக உலகை எச்சரிக்க வேண்டியது எனது கடமை எனக் குறிப்பிட்டு மிர்சாயேனோவ் மேலும் விபரிக்கிறார்.

## இரகசியமான வாய்பாடுகள்

வில் மிர்சாயேனோவ் பெரும்பாலும் விரும்பத்தகாத ஒரு புரட்சிக்காரர். அர்ப்பணிப்புமிக்க ஒரு கம்யூனிஸ்ரரின் புதல்வர். அவரது பெயரிலுள்ள வில் என்பது கூட விளாடிமிர் இலிச்லெனின் என்பதை நினைவுபடுத்துவதன் குறுக்கம் ஆகும். இவரும் ஒரு கம்யூனிஸ்ற் கட்சியின் விசுவாசி என்பதுடன் இரசாயன எந்திரவியலில் கலாநிதியுமாவார். 1965 இல் மாஸ்கோவின் மிக இரகசிய இரசாயன ஆயுதங்கள் தயாரிப்புத் திட்டத்தின் கீழான இரசாயன தொழில்நுட்பத் துறையிலான விஞ்ஞான ஆய்வு நிலையத்தில் பணிபுரிய நியமனமானார். இவர் அங்கு 26 வருடங்களைச் செலவிட்டார்.

சோவியத் பிரசை என்ற வகையில் முன்னுரிமை வசதிகளை உடையவர். சாதாரண சோவியத் பிரசைகளுக்குக் கிட்டாத பல பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமை படைத்தவர். இந்த முன்னுரிமைகளின் விலை என்னவென்றால்- தனிமைப்படல். எந்த வெளிநாட்டவருடனும் தொடர்பு கொள்ள ருஷ்ய விஞ்ஞானிகள் அனுமதிக்கப்படுவது இல்லை. கே. ஜி.பியைச் சேர்ந்த ஒருவரின் துணை இல்லாமற் பொது நூலகத்திற்குக் கூட அவர்கள் போகக்கூடாது.

மர்சானேனோவ் இரசாயனப் பொருள்கள் வளியிலும், மண்ணிலும், நீரிலுங் கலப்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் பிரிவின் தலைவராக உயர்ந்தார். இது கூட மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டதல்ல, பதிலுக்கு வெளிநாட்டுப்புலனாய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துவிடக்கூடாது என்பதே அதுவாகும். எதிர் ஒற்றர் பிரிவு ஒன்றின் பணிப்பாளர் என்ற வகையில் மிர்சாயேனோவ் இரசாயனப் பொருள்களின் குறியீடுகளையும், அவற்றின் நச்சுத் தன்மை பற்றியும், அவற்றைக் கண்டுபிடிப்பது மற்றும் உருமறைப்புச் செய்வது பற்றியும் நன்கு அறிவார்.

இந்த நிலையத்தில் தயாரிக்கப்பட்ட இரசாயனப் பொருள்கள் நாட்டின் பாதுகாப்புக்குத் தேவையானதல்ல என்பதை நன்கு அறிந்திருந்தபோதும் மிர்சாயேனோவ் தொடர்ந்தும் அந்த நிலையத்திலேயே பணிபுரிந்து வந்தார். நாளந்த வாழ்க்கையின் ஒவ்வோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகசியமான முறையில் இரசாயன ஆயுதங்கள் பரீட்சித்துப் பார்க்கப்படுவதை அறிந்துள்ள சோவியத் விஞ்ஞானிகள் உலகம் இது குறித்து எச்சரிக்கப்பட வேண்டுமென விரும்புகின்றனர்.



அசைவையுங்கூட கம்யூனிஸ்ற் கட்சி கட்டுப்படுத்தி வந்த நிலையில் வேறு எந்த வேலை பற்றியுந் தன்னால் நம்பிக்கை கொள்ள முடியவில்லை எனவுங் குறிப்பிட்டார்.

புளோரின் அசிட்டிக் அசிட் உட்பட மூன்று நாசகாரமான இரசாயனங்களைப் பயன்படுத்தி 1980 இன் ஆரம்பத்திலேயே ஓர் இரசாயன ஆயுதத்தைத் தயாரிக்கும் முயற்சியில் ருஷ்யா ஈடுபடத் தொடங்கியது. எப்.பி.என அழைக்கப்படும் இது சனத்தொகை நெருக்கமான பகுதியிற் பயன்படுத்திப் பார்க்கவுந் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த வேளையில் இந்த நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் பத்து சகாக்கள் ஆப்கானிஸ்தானிற் பணிபுரிய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இந்த எப்.டி எனப்படும் இரசாயன ஆயுதத்தை ஆப்கானில் பரீட்சித்துப் பார்க்கவே நோக்கங் கொண்டிருந்ததாக மிர்சாயேனோவ் இப்போது குறிப்பிடுகின்றார். கே.ஜி.பி இத்தகைய நாசகாரத் திட்டத்தை இரகசியமாக வகுத்திருந்தது. எல்லா நகரத்திலும் கிணற்று நீரை நச்சுப்படுத்தி விடுவதே அவர்களது திட்டமாக இருந்தது.

எப்.டி என்பது ஈரலையும், புரத்தை உண்டுபண்ணுங் கலங்களையும், குருதியின் வடிகட்டுங் கலங்களையும் நாசமாக்கக்கூடியது ஆகும். இத்தகைய பொருளினால் நஞ்சூட்டப்படும் நீரை அருந்தும் ஒவ்வொருவரும் மரணிக்க வேண்டியதுதான். எப்.டி உடலில் எந்தத் தடயத்தையும் விட்டுவைக்காது. சடலத்தை ஆய்வு செய்பவர்கள் எந்தத் தடயத்தையுங் கண்டுபிடித்துவிட முடியாது. இதனால் மேற்குலகு உண்மையைக் கண்டறிந்து இருக்க வழியில்லை. மொஸ்கோவின் இராணுவத் தலைவர்கள் இக் கண்டுபிடிப்பை ஒரு மகத்தான சாதனையாக வர்ணித்ததை மிர்சாயேனோவ் கேட்டுள்ளார்.

மிர்சாயேனோவ் தமது பாதுகாப்பைப் பற்றிப் பொருட்படுத்தாமல் தமது மேலதிகாரிகளுக்கு இது பற்றி எச்சரித்துள்ளார். இரசாயன உலையொன்றைப் பரீட்சித்துக் கொண்டிருக்கும்போது, இந்த நரம்பு வாயுவான சோமன் அதனுடன் இணைந்துள்ள குளங்களிற் கசிவதைக் கண்டுபிடித்தார். இக் குளத்தின் நீரில் ஆபத்தான கட்டத்தின் 1000 மடங்குக்குச் செறிவு காணப்பட்டது. இது பற்றி மேலதிகாரிகளுக்கு அவர் அறிவித்தபோது இத்தகைய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டார்.

## கூடாத கலவை

ருஷ்யாவில் இருக்கும் இரசாயன ஆயுதங்களிற் பெரும்பாலானவை நீண்டகாலமாகச் சேமித்து வைக்கப்பட்டிருப்பவையாகும். இதனாலேயே இந்த நிறுவனம் இரண்டு விதமான ஆயுதங்களை விருத்தி செய்ய முற்பட்டது. இரண்டு தனித்தனியான பகுதிகளில் இந்த நாசகாரமான நச்சுப்பொருள்கள் தேக்கி வைக்கப்பட்டன. புதிய வரவு என்று அர்த்தப்படக்கூடிய நோவிசொக் எனப் பெயர் சூட்டப்பட்ட கலவையொன்றை மிர்சாயேனோவின் நிறுவனம் விருத்தி செய்தது. இது இரண்டு விதமான நச்சுத் தன்மையைக் கொண்டது. அத்துடன் இது நேரடியாகத் தோலின் மூலம் உறிஞ்சப்படத் தக்கது. வி.எக்ஸ். என்பதை விடவும் மனிதத் தோலுக்குப் பத்துமடங்கு நச்சுத் தன்மையைத் தரக் கூடியது. ஏற்கனவே பாவனையிலிருக்கும் இதன் ஒரு துளியளவே கொல்வதற்குப் போதுமானதாகும்.

நோவிசொக்கின் ஒரு துளியளவு, நரம்பு மண்டலத்தைப் பாதித்துச் செயலிழக்க வைப்பதுடன், பூச்சிகளை ஒரு கிருமிநாசினி கொல்வது போல மனிதர்களைக் கொன்று விடக்கூடியது. மிகமிகக் குறைவான ஓர் அளவு நோவிசொக் கூட மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது ஆகும். இதனை ஆய்வு செய்ய முற்பட்ட விஞ்ஞானிகளில் ஒருவர் பெரும் பாதிப்புகளுக்கு இலக்காக நேரிட்டது இங்கு நினைவுபடுத்தத்தக்கது.

1987 இல் கிளாஸ்நொத் எனப்படும் மறுசீரமைப்பு உச்சக் கட்டத்தில் இருந்த வேளையில் ருஷ்ய அதிபர் கொர்பச்சேவ் இரசாயன ஆயுதங்களின் தயாரிப்பு, கைவிடப்படுமென அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சோமன் இப்போதும் தயாரிக்கப்பட்டு வருவதாகவே மிர்சாயேனோவ் நம்புகின்றார். நோவிசொக்கின் புதிய வடிவமொன்று 9-230 என்ற பெயருடன் உஸ்பெஸ்கிஸ்தான் பகுதியிற் பரீட்சித்துப் பார்க்கப்பட்டிருக்கக் கூடும் எனவும் அவர் நம்புகிறார்.

மேலெழுந்தவாரியாக நோவிசொக் திட்டம் செரினியாகோவின் ஆய்வு கூட விபத்திற்குப் பின் பாதிப்புக்குள்ளானது. எனினும் இதே போன்ற இன்னுமோர் இரகசியத் திட்டந் தொடர்ந்தது. சாராம்சம்-33 என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த இரட்டை ஆயுதந் தொன் கணக்கிற் தயாரிக்கப்பட்டு, சோவியத் இராணுவத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொர்பச்சேவ் பதவியிலிருந்த போது மொஸ்கோ அரசு இரசாயன ஆயுதங்களின் தயாரிப்பு கைவிடப்படுமெனப் பகிரங்கமாக அறிவித்திருந்தது. இருந்தும் ஆய்வு கூடப் பரிசோதனைகளும், ஆய்வு கூடக் கலந்துரையாடல்களும் தொடர்ந்து இடம்பெற இரசாயன ஆயுத தயாரிப்புத் துறையில் எந்த மாற்றமும் நிகழ்ந்ததாக உணர முடியவில்லை என்கிறார் மிர்சாயேனோவ். இவர் மே 1991 இல் கம்யூனிஸ்ற் கட்சியிலிருந்து விலகி சனநாயக ருஷ்யா எனப்படும் முன்னாள் அரசியற் கைதிகளால் அமைக்கப்பட்ட கட்சியில் இணைந்து கொண்டார். இரசாயன ஆயுதங்களின் அச்சுறுத்தல் குறித்துப் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுவதே இவரது தலையாய பணியாகவுள்ளது.

### கே. ஜி. பி. யின் வருகை

கம்யூனிஸ்ற் கட்சி கலைக்கப்பட்டமை மற்றும் சோவியத் ருஷ்யா சிதறியமை என்பன தமக்கான சந்தர்ப்பத்தைத் தோற்றுவித்து இருப்பதாக மிர்சாயேனோவ் கருதினார். குரன்டி என்ற செய்திப் பத்திரிகையில் கட்டுரையொன்றை எழுதிய அவர், அதில் நிழலில் இருக்கும் இரசாயன ஆயுதங்களால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் குறித்து ருஷ்யத் தலைவர்களையும், மக்களையும் எச்சரித்து இருந்தார். பத்திரிகையில் அக் கட்டுரை வெளியிடப்பட்டதும் அவர் தமது நிறுவனத்திலிருந்து வெளியேறினார்.

அடுத்த வருடத்தில் என்ன செய்வது என்பதை அறிய முடியாத நிலையை அவர் எட்டினார். 1992 இன் வசந்த காலத்தில் ருஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ற்சின் இரசாயன ஆயுதத் தடுப்பு ஒப்பந்தத்திற் கையெழுத்திடத் தயாராக இருப்பதாக அறிவித்தார். யெல்ற்சின் பாராளுமன்றத்திற் சமர்ப்பித்த இரசாயன ஆயுதங்களின் பட்டியலைப் பார்த்தபோது அதில் நோவிசொக் நஞ்சுகள், சாராம்சம் 33, எப். டி போன்றவை குறிப்பிடப்படவில்லை என்பது தெரியவந்தது. அதாவது இரசாயன ஆயுதங்களின் தடை இவற்றுக்குப் பொருந்தாது என்பது புலனாகியது.

மீண்டும் மிர்சாயேனோவ் பொதுமக்கள் அரங்கிற்கு வந்தார். சுற்றுப்புறச் சூழல் விஞ்ஞானியான லெவ் பெடோறோவ், " அரசியலில் நஞ்சு " என்ற தலைப்பின் கீழ் ருஷ்யாவின் இரகசிய இரசாயன ஆயுதத் திட்டங் குறித்து மொஸ்கோ நியூஸ் இதழில் எழுதினார். மிர்சாயேனோவ் இது தொடர்பாகப் பல பத்திரிகைப் பேட்டிகளை வழங்கினார். அரசாங்கம் இக் குற்றச் சாட்டுக்களை வன்மையாக மறுதலித்ததுடன், கே. ஜி.பி. ஆட்கள் சிலர் வாசலுக்கும் வந்தனர்.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 11 நாள்கள் சிறையிருந்தபின் மிர்சாயேனோவ் விடுதலை பெற்றார். முதலில் விஞ்ஞானிகளிற் பலரும் அவருக்குத் தனிப்பட்ட முறையில் ஆதரவு தெரிவித்தபோதும், அவரது கூற்றுக்களைப் பகிரங்கமாக உறுதிப்படுத்த முன்வரவில்லை. இந்த நிலையிற்றான் அந்திரே செலினியாகோவ் தமது ஆய்வுகூட விபத்துப் பற்றி விபரித்தார். இதைத் தொடர்ந்து முன்னாள் இராணுவ வீரரான விளாடிமிர் பென்ரன்கோ சிகானி நகரத்திலுள்ள இரசாயன ஆயுத ஆய்வு கூடம் பற்றிய தகவலை வெளியிட்டார். " பரீட்சார்த்த முகாம் ஒன்றுக்குள் என்னை அழைத்துச் சென்ற அவர்கள் ஏதோ ஒன்றைப் பரவ விட்டனர். அதனை நான் சுவாசித்ததும் தலை கிறுகிறுத்தது. என்னவோ எல்லாம் செய்தது. எனது நெஞ்சும், நுரையீரலும் பாதிக்கப்பட ஆரம்பித்தது. கண்கள், மூக்கு, வயிறு என உடலின் பல பாகங்களிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டன" எனத் தெரிவிக்கிறார்.

1993 பெப்ரவரியில், மிர்சாயேனோவின் குற்றச் சாட்டுகளுக்குப் பகிரங்க ஆதரவு தெரிவிக்கச் சில விடயமறிந்த உள் வீட்டுக்காரர் முன்வந்தனர். நோவிசொக் தயாரிப்பிற் பங்கு கொண்ட விளாடிமிர் உக்லேவ் அவர்களில் ஒருவர். குற்றவியல் சம்பந்தப்பட்ட இரகசியப் பொலிஸ் அவரிடம் விசாரணை நடத்தியமை, இறுதியாக மேற்கின் கவனத்தைப் பெற்றது. அதிருப்தியுற்ற விஞ்ஞானிகளுக்கு எதிரான கிரெம்ளின் அரசின் நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்கா கண்டனந் தெரிவித்தது.

ஆனால் இக் கண்டனங்களைத் தொடர்ந்து செயற்பாடுகள் இடம்பெறாமையால் மிர்சாயேனோவ் வழக்கைச் சந்திக்கவேண்டியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அரசின் இரகசியங்களை வெளியிட்டதாக அவர் மீது குற்றஞ் சுமத்தப் பட்டிருந்தது. இரண்டாந் தடவையும் மிர்சாயேனோவ் சிறைவைக்கப் பட்டார். மேற்கும், மனித உரிமை அமைப்புக்களும் தலையிட்டதைத்தொடர்ந்து காலப் போக்கில் அவர் விடுதலை செய்யப் பட்டதுடன், அவர் மீதான குற்றச் சாட்டுகளும் கைவிடப்பட்டன.

இப்போது வில் மிர்சாயேனோவ் அதிருப்தியுற்ற விஞ்ஞானிகள் குழு ஒன்றுடன் இணைந்து இரசாயன ஆயுதங்கள் அழிக்கப் பட வேண்டுமெனவும், ஆய்வுகளுக்குத் தடைவிதிக்க வேண்டுமென வுங் கோரி வருகின்றார். தடைவிதிக்கப்பட வேண்டும் என்பதை ஆதரிக்காத போதும், உக்லேவ் தயாரிப்புகள் நிறுத்தப்பட வேண்டும் என்கிறார். ஊழல் மிக்க இராணுவத்தினரால் நோவிசொக் போன்றவை அராஜக சக்திகளின் கையில் கிடைத்துவிடக் கூடும் எனவும் அவர் அஞ்சுகிறார்.

மிர்சாயேனோவ் தனது நிலைப் பாட்டை அமெரிக்காவிலும் விளக்க வேண்டும் என்றே விரும்புகின்றார். ஆனால், அவரால் அதற்கு முடியவில்லை. ஏனெனில், ருஷ்ய அரசின் இரகசியங்கள் தெரிந்தவர் என்ற அடிப்படையில் அவர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான கடவுச் சீட்டுப் பெறுவது கூட இயலாததாகியுள்ளது.

ரீடேர்ஸ் டைஜஸ்ற், சனவரி 1995.

★

## சந்தைக்கு வரவிருக்கும் உற்பத்திப் பொருள்கள்

தொலைபேசியில் கூப்பிடுகிறவர் யார்? தம் இலக்கத்தையோ, பெயரையோ சொல்லாமல் அழைக்கும் அநாகரிகர், தூஷிக்கும் நோக்கங் கொண்டவர். அச்சுறுத்துபவர் இனித் தப்ப முடியாது. ''அழைப்போர் அடையாளம்'' (''கோலர் ஐடி'') எனப்படுங் கருவியை வைத்திருப்பவர்களுக்குத் தொலைபேசியிற் குரல் கேட்டதும், பேசுபவரின் இலக்கத்தை உடனே 'திரை'யிற் காண்பித்துவிடும் சேவை இதுவரை பெறக் கூடியதாயிருந்தது. இது பேசுபவரின் நோக்கத்தைத் தெரிந்து முகத்தில் அடிப்பதுபோல இப் பக்கத்திலிருந்து பேசுவதைத் துண்டித்துவிடும் 'அநாகரிக'ச் செயலிலும் மேலானது என இதுவரை அறியப்பட்டது. இப்பொழுது ஒரு புதிய தொலைபேசி– பதில் சொல்லும் இயந்திரத்தை ஒன்றிணைத்த கருவியைச் செய்து, ''வடபுலத் தொலைத் தொடர்பு'' நிறுவனம் சந்தைப்படுத்த முன்வந்துள்ளது. அதை உங்கள் தொலைபேசியுடன் இணைத்து உங்களுடன் தொடர்பு கொள்ளும் நண்பர், உறவினர்கள் 75 பேரின் பெயர், தொலைபேசி இலக்கம், விலாசங்களை அதிற் பதிந்து வையுங்கள். அது ஒரு குட்டி 'வழிகாட்டி' யாய் உதவும். வரும் அழைப்புகள் அவற்றில் ஒன்றானால் இக் கருவி உங்களுக்கு அழைப்பவர் பெயரைத் தெரிவிக்கும். (ஓர் அந்தரங்கக் காரியதரிசியின் பணியைச் செய்யும்.) அந்தப் பட்டியலில் இடம் பெறாத பெயர் என்றால் சத்தமிட்டுச் சொல்லும்; நீங்கள் உங்கள் வேலையைச் செய்தபடியே 'திரையை' நிமிர்ந்து பார்க்காமல் இருக்கலாம். விரும்பத்தகாதோர் என்றால் அழைப்பைப் புறக்கணிக்கலாம். விரும்பும் பேர் வழிகளுக்குத் தனித்தனிச் சுக செய்திகள், வாழ்த்துக்களை நாடாவிற் பதிந்து வைக்கலாம். இக் கருவி உங்களுக்காக இவற்றை அவர்களுக்குச் சொல்லிவிடும். உங்களிடம் ஆலோசனை பெறும் வாடிக்கையாளருக்கு ஒருவகைப் பதில், உங்கள் விளையாட்டுக் கழகக் குழுவுக்கு மற்றொருவகை, சாதாரண பிறருக்கும் வேறொரு பொதுவான பதில் இப்படிப் பதிவு செய்து வைத்துவிடலாம். உங்களைக் குழப்பாமலே அவர்கள் கருவியிலிருந்து உங்கள் பதிலைப் பெறுவர். உங்களிடந் தொலைபேசியில் தொடர்புற்றுப் பொருள்களை வாங்க விரும்பும் வாடிக்கைக்காரருக்கு விசேட பதில் உங்கள் குரலிற் கொடுக்கப்படும். இந்தக் கருவியில் ஒவ்வொருவருக்கும் தனித்தனிச் செய்திகள் பெற வசதியிருப்பதால், உங்கள் தனித்துவ வாழ்வினை, இரகசியத்தினை மற்றொருவர் அறியாமல், ஒவ்வொருவருந் தத்தமக்குரிய செய்திகளை மட்டுமே பெறுவர். உங்கள் நேரமும் மிச்சம், உங்கள் சொந்த விடயங்கள் பகிரங்கமாகும்; வெட்க நிலையும் ஏற்படாது. இக் கருவிக்குப் பெயர், 'மெரிடியன் 9516'. இதன் விலை 269.95 டொலர், (270 டொலர் என்றால் எங்கிப் போய்விடுவீர்கள் என்று 5 சதத்தைக் கழித்து விலை போட்டிருக்கிறார்கள்.) பெற விரும்பினால் உடனே 800–717–2454 –க்குத் தொலைத் தொடர்பு கொள்ளுங்கள்.

''ஃபோச்சூன்'' டிசம்பர் 26, 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரும் நினைவும்

## இரு கலைக்கண்காட்சிகள் ஒரு துயரமான விவாதத்தை மீண்டும் ஆரம்பிக்கின்றன. நாஸி படையெடுப்பாளரை வென்ற 50 ஆண்டுகள் கழித்து ஜேர்மனியரிடமிருந்து அபகரித்துச் சென்ற கலைப் பொக்கிஷங்களை ருஷ்யா திருப்பிக்கொடுக்க வேண்டுமா? என்பதே சர்ச்சை.

*தமிழில் :* காவல்நகரோன்

1941 யூன் மாதம் ஜேர்மனி சோவியத் ஒன்றியத்தை முற்றுகையிட்ட போது ஜேர்மனிய காவற்படை எவ்வளவு கால அவகாசம் அளித்ததோ, அவ்வளவு அவகாசத்தில், மொஸ்கோவின் பூஷ்கின் அரும் பொருட் காட்சி மனை தலை சிறந்த கலைப்படைப்புக்களைக் கொண்ட கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்தது. சென்ற மார்ச் முதல் வாரத்தில் 63 சித்திரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. எல்கிறேக்கோ (El Greco) கோயா (Goya), றெனர் (Renoir) போன்ற கலைக்குரிசில்களின் தலையாய படைப்புக்கள் அவை. ருஷ்யர் 1945 இல் பெரும் நாட்டுப் பற்றுப் போரில் வெற்றி பெற்று ஜேர்மனியிலிருந்து திரும்பிய போது, கொள்ளைச் செல்வமாக எடுத்து வந்தவைகள். அதே வேளையில், செயின்ற் பீற்றர்ஸ் பேர்க் (லெனின்கிறாட்) நகரில் ஹேர்மிற்றேஜ் மியூசியம் ('துறவிமடப் பொருட்காட்சி மனை') தோல்வியுற்ற ஜேர்மனியிலிருந்து, மீட்டெடுத்து வந்த 70- க்கும்மேற்பட்ட கலைச் செல்வங்களை ''மறைந்திருந்த பொக்கிஷங்கள் திறந்து காட்டப்படுகின்றன'' என்ற பெயரில் காட்சிக்கு வைக்கும் இறுதி ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தது. மார்ச் 30 ஆந் தேதி திறந்து வைக்கப்பட இருக்கும் இக்கண்காட்சியில் 'இம்பிறெஷனிஸ்ற்' கலைச் சித்திரங்களும், அதற்குப் பிந்திய போஸ்ற் இம்பிறெஷனிஸ்ற் போன்றவைகளும் இடம் பெறும். (முற்கூறியது விரி நுணுக்கக் கூறுகள் இல்லாமல், பொதுமைப் பாவமும், தொனியும் உண்டு பண்ணும் ஓவியக் கலைப் பண்பு பொருந்தியது, பிரான்சில் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. புறவாய்மைப் பண்போவியம் எனலாம். பிற்கூறிய 'போஸ்ற் - இம்பிறெஷனிஸ்ற்' கலை அதற்கு மாறாக எழுந்த அகவாய்மைப் பண்போவிய முறை. ''இவ் ஆங்கிலச் சொல் 1910 இல் வழக்குக்கு வந்தது.'' இதில் கலைஞனின் அகவயமான நோக்குக்கு முதன்மையளித்து, உருவத்தைப் பிரதிநிதிப்படுத்தலுக்கு இரண்டாம் இடமே தரப்படும்.) உலகளாவிய கலைப் பிரியர்கள் - இப்பொக்கிஷங்கள் போரில் அழிந்து விட்டன என்று



'' எங்களைப் போன்ற திருடர்.''

*ஹிற்லர், கலைத் திருட்டுக்குப் பேர் போன மந்திரி கெபல்ஸ் கொண்டு வந்த சித்திரத்தைப் பாராட்டுகிறார்.*

நம்பியிருந்தவர்கள் - இப்பொழுது அவை பொது மக்களின் பார்வைக்கு மீண்டும் வைக்கப்படுவதை நினைந்து மன ஆறுதல் அடைவர். அதே சமயம் இக்கண்காட்சிகள் கலாசாரப் பொக்கிஷங்களை நாடு கடத்திச் செல்வது சரியா என்ற கசப்பான விவாதத்தை மீண்டுந் தூண்டியுள்ளன.

தோல்வியடைந்தவர்கள் நாட்டிலிருந்து, போரில் வெற்றி வாகை சூடிய படைகள் கலைப் படைப்புக்களைக் காவிக் கொண்டு ஓடுதல் நெடுங்காலமாக இருந்த தீய வழக்கம். பிரான்சின் புகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற லூவர் அரும் பொருட் காட்சி மனையில் வெரோனீஸின் "கானாவில் விவாகம்" என்ற அற்புத ஓவியம் எப்படி இடம் பெற்றுள்ளது? நெப்போலியன் வெனிஸ் நகரத்திலிருந்து அதைத் திருடி வந்தான். "புனித மார்க்கின் குதிரைகள்" அவனால் அகற்றப்பட்டிருக்கும். ஆனால் அவனைப் போரில் வென்ற வெலிங்ரன் பிரபு அவற்றை அவன் மீண்டும் வெனிஸியருக்கே கொடுத்து விடும்படி நெருக்கினார். வெனிஸியரோ அவற்றை பைசாந்தியரிடமிருந்து முன்னர் அபகரித்து வந்தனர். ஆனால் ஜேர்மனிய நாஸிக் கட்சியினரே இதில் பேர் பெற்ற கொள்ளையர். வின் நிக்கலஸ் அம்மையார் எழுதிய பரிசு பெற்ற நூலாகிய "ஐரோப்பாவின் கற்பழிப்பு"வில் குறிப்பிடுகிறார்: "ருஷ்யருடைய நோக்குப் பற்றி நாம் சற்று அனுபதாபத்துடன் கவனிக்க வேண்டும். ஏனெனில் ஜேர்மனியர் பெருமளவை அழித்து விட்டனர். ருஷ்யர் தாம் கொள்ளையடித்துக் கொண்டு போனவைகளைப் பற்றி, 1990 களின் முதலாண்டுகள் வரை ருஷ்யர் மூச்சு விடவில்லை. அவைகளை அழிக்காமல் பவுத்திரப்படுத்தி வைத்தமைக்கு உலகம் நன்றியுடன் இருக்க வேண்டும். தாம் அவற்றை உரியவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கும்படி வற்புறுத்தலாகாது என வாதிக்கின்றனர். அவர்கள் உணர்ச்சி உச்ச நிலைக்குப் போகிறது. 1990 அளவில் சற்று விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு காணப்பட்டது. எனினும், பிறகு தேசிய வெறி ருஷ்யாவில் பரவவே, அந்தப் போக்கும் மறைந்து விட்டது என்பதாக.

சென்ற மார்ச் முதல் வாரத்தில் ஜேர்மன் தொலைக்காட்சிக் குழு ஒன்று பூஷ்கின் மியூசியக் கண்காட்சிக்கு வந்த போது, அக்கலைமனை இயக்குனரான 72 வயதுப் பெண்மணி ஐரினா அன்ரோனோவா அவர்கள் படம் பிடிக்கும் உரிமைபெறப் பணம் செலுத்த வேண்டும் என்று விரட்டி விட்டார். பணம் செலுத்தா விட்டால், அவர்கள் செய்வது "களவு" என்பது அவரது வாதம். "எம் கலைப் பொருள்களை ஜேர்மன் – இத்தாலிய ஃபாசிஸ்ற் படையினர் அழித்தொழித்தனர். நாமோ அவைகளைப் பாதுகாத்து வைத்துள்ளோம். எமக்கு ஏதாயினும் சரியீடு செய்ய வேண்டும் என்று நாம் கோருவது நியாயமே." இக்கண்காட்சியில் நாஸிகள் தனிப்பட்ட ஹங்கேரிய யூதரிடமிருந்து அபகரித்த எட்டுச் சித்திரங்களைச் சேர்த்திருப்பது சிலருக்கு அருவருப்பைத் தந்தது. வில் விகோற்றே என்ற ஜேர்மன் வரலாற்றறிஞர் (2 ஆம் உலகப் போருக்குப் பிந்திய ஜேர்மனியிலிருந்து அகற்றிக் கொண்டு சென்ற ஓவியங்களைத் தேடிப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்) கூறினார். ஒரு ஜேர்மன் ஓவியத் தொகுப்பிலிருந்து பெற்ற சித்திரத்துக்கு அண்மையில், ஒரு தனியார் யூதத் தொகுப்பிலிருந்து பெற்ற சித்திரத்தைத் தொங்க விடுவது பெரும் பழிப்புக்குரியது. அதுவும் இலட்சக்கணக்கான ஹங்கேரி நாட்டு யூதரை கொடூர தண்டனை பெறும் அகதி முகாங்களுக்கு அனுப்பிய வேளையில் அவர்களிடமிருந்து ஐக்மன் அபகரித்த ஒன்றைக் காட்சிக்கு வைக்கலாமா? ஜேர்மன் கலைப்பொக்கிஷங்கள் ருஷ்யாவில் பதுக்கிவைக்கப்பட்டதை வெளிப்படுத்தக் காரணமாயிருந்த ருஷ்ய கல்விமான் கொன்ஸ்தந்தின் அகின்ஷா இன்னுங் கூர்மையான கண்டனத்தை வெளியிட்டார். செச்னியாவில் நிகழ்வதற்கும், பூஷ்கின் நூதனசாலையில் நிகழும் தேசிய களியாட்டுக்கும் வேறுபாடு காணோம். ருஷ்யா வலதுசாரித் திக்கில் வழி விலகிச் செல்கிறது.

1945 இல் வெற்றிச் சின்னங்களைச் சேகரிக்க ஆணைக்குழுக்களைத் தம் நேரடி மேற்பார்வையில் ஸ்ராலின் நியமித்தார். கைத்தொழில், இராணுவப் பொருள்களைச் சேகரிப்பதே முதல் நோக்கம். ஆனால் ருஷ்ய செம்படை பேர்ளின் நகரின் பாதாள அறைகளிற் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த கலைப்பொருள்களைக் கண்டு கொண்டது. ஜேர்மனி சரண் அடைவதற்கு ஐந்து நாள்களுக்கு முன், ருஷ்யர் புகைவண்டி வண்டியாகக் கலைச்செல்வங்களைக் கிழக்கே அனுப்பினர். இப்பொழுது பூஷ்கின், ஹேர்மிற்றேஜ் நூதன சாலைகளிற் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளவற்றை விட, பேர்ளினின் கிழக்கு ஆசிய நூதன சாலையின் முழுத்தொகுப்பான 3,500 சித்திரங்கள் (பிரஷ்ய மன்னர்களின் பொற்ஸ்டாம் அரண்மனைகளிலிருந்தவை) ட்றெஸ்டென் நூதனசாலைகளில் இருந்த வெனிஸ் சைத்திரிகர் ரிஷியன் (1477 – 1576) திட்டிய ஓவியங்கள், புறாகெலின் ஓவியங்கள், லைப்ஸிக் பல்கலைக்கழகத்திலிருந்த கூடன்பேர்க் முதன் முதலாக அச்சடித்த பைபிள் பிரதிகள் அனைத்தும் இக் கொள்ளைப் பொருள்களுக்குள் அடங்கும். 1945 இல் மொஸ்கோவுக்கு வந்த விசேட புகைவண்டிகளிலிருந்து இவைகளிற் சிலவற்றை இறக்கும் பணியில் (இன்று நிர்வாகியாயிருக்கும்) அன்ரனோவா ஈடுபட்டிருந்தவராம்.

ஒருவர் நியாயம் பேசலாம் ஜேர்மனியின் போர்க்கொடுமைக்காக. அது அனைத்தையும் இழக்கத் தகுதியானதே என்று ஹிற்லர் யூதரிடமிருந்து சகலவற்றையுங் கொள்ளையடித்து அவர்களைக் கொன்று ஒழித்தார். ஸ்லாவிய இனத்தின் பண்பாட்டு ஒளி விளக்கை அணைத்துவிட முயன்றார். மொஸ்கோவை நோக்கி அவரது படைகள் முன்னேறிய போது, 400-க்கு மேற்பட்ட நூதனசாலைகளைக் கொள்ளையடித்தும், எரித்தும் நாசமாக்கினர். ருஷ்யா தான் 2 இலட்சம் கலைப்பொருள்களை இழந்ததாகக் கூறுகிறது. இவற்றுள் லெனின்கிறாட் நகருக்குப் புறத்தே இருந்த சுதரீன் அரண்மனையிலிருந்த (பால்ரிக் கடற்கரையிற் காணப்படும்) மஞ்சள் நிறமான பவளம் போன்ற பொருள் - அம்பர் - பல தொன்கைளில் அடங்கும். சோவியத் படைவீரர் சேகரித்துப் பாதுகாத்த கலைப்பொருள்களுக்கு அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந் தியாக விலைகொடுத்தனர். லெனின்கிறாட் முற்றுகையின்போது நூதன சாலையின் ஒவ்வொரு பொருளும் பாதுகாக்கப்பட்டன. ஆனால் பேரில் நகரத்தின் அரைவாசி சனத்தொகை (5 இலட்சம் மக்கள்) அழிந்தனர்.

### தங்கக் கொள்ளை

ருஷ்யரும், ஜேர்மனியரும் கலைப்பொக்கிஷங்களை யிட்டுப் பூசலிடும் வேளையில், அமெரிக்கர்கள் சுத்தமான பூனைசன் டோலத் தலை நிமிர்ந்து பார்த்திருக்க முடியாது. அவர்கள் ஜேர்மனியில் படைநடத்தியதன் விளைவும் மாசற்றது அன்று. ஒரு கணிப்பின்படி 1945 யூலையில் பேர்ளினில் இருந்த அமெரிக்க படைகளுக்கு மாதச் சம்பளம் சுமார் 1 மில்லியன் டொலர். ஆனால் சில புது முயற்சிகாண் போர்த் தளபதிகளின் மூலந் தபாற்கட்டளைகளுக்குச் செலவிட்ட தொகை 4 மில்லியன். சம்பளத்தை விட மேலதிகப்பணம் எப்படிப் பெற்றார்கள்? ஒரு வர்த்தகப் புதுமுயற்சிகாண் ஆர்வலரான படைத்தலைவர் குவெட்லின் பேர்க் ஆசனக் கோயிலில் திருடிய தங்க (மனிகுயிற்றிய) பூசைப் பாத்திரம் முதலியவற்றை ரெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள தமது வீட்டுக்கு இரகசியமாக அனுப்பி விட்டார். 1991 இல் அவற்றை, அவரது வாரிசுகளுக்கு 2.75 மில்லியன் டொலர் பணங் கொடுத்து, ஜேர்மனி இரகசியமாக வாங்கியது. ஆனால் டலாஸ் நூதன சாலை அவற்றைக் கையளிக்கு முன் ஒரு கண்காட்சி ஏற்பாடு செய்து விட்டுத்தான் அனுப்பியது, பூஷ்கின் நூதனசாலை இன்று செய்வதைப்போல.

1907 ஹேக் நகரில் நிகழ்ந்த மகாநாட்டு விதிகள் தந்த அனைத்துலகச் சட்டத்தின்படி கலைப் பொருள்களைக் கொள்ளையடித்தல் குற்றமாகும். 1940 களின் பிற்பகுதியிலும், 1950 களிலும் ருஷ்யா கிழக்கு ஜேர்மனிக்குப் பலகலைப்பொருள்களைத் திருப்பி யனுப்பியது மெய். ஆனால் மேற்கு ஜேர்மனிக்கு எதுவுமே சேரவில்லை. 1990 இல் மிக்கேல் கோர்பச்சேவ் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, இருபகுதியாரும் கலைப் பொருள்களை மீண்டும் தருவதற்குச் சம்மதித்தார். 1992 இல் ருஷ்ய - ஜேர்மன் மீட்டு வழங்கும் பணிக்கு ஓர் இணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இன்று ஜேர்மனிதான் திரும்பக் கொடுக்க வேண்டிய அனைத்தையுங் கொடுத்து விட்டதாகக் கூறுகிறது. ஆனால் ருஷ்ய அரசியற் சூழ்நிலை மாறிவிட்டது. பொருளாதாரக் குழப்பம், சமூக வீழ்ச்சி, அழிந்து போகும் பேரரசு போன்ற காரணங்களால் அரசாங்கம் தீவிர வலதுசாரிப் போக்கு உடையதாகி வருகிறது. வெறும் இலட்சியம் பேசிக் கொடுப்பனவுகள் செய்யக்கூடாது. ஜேர்மனியின் கோதா நூலகத்துக்கு 6,000 நூல்களை (1541 இல் அச்சடித்த பைபிள் உட்பட) மீண்டும் வழங்க எடுத்த முயற்சி, இறுதி நேரத்தில் சுங்கப் பகுதியினரால் தடுக்கப்பட்டது. சென்ற ஆண்டு, முன்னாள் படைத்தலைவர் ஒருவர் பழைய ஓவிய நிபுணரது சித்திரங்களைப் பிரெமென் - குன்ஸ்தால் தொகுப்புக்குத் தனிப்பட்ட முறையில் கொடுக்க முயன்றபோதும், இப்படித் தடையேற்பட்டது. ருஷ்ய பாராளுமன்றம் கலைப் பொருள்களைத் திருப்பிக்கொடுப்பதைத் தடுக்கும் சட்டம் இயற்றி விட்டது. ருஷ்யர் போர் மூலம் அபகரித்த அனைத்துமே தேசியச் சொத்து எனப் பிரகடனஞ் செய்யும் சட்டம் இயற்றவும் ஆலோசிக்கின்றது.

ருஷ்யாவினுள் இப்படிக் கடும் போக்கு ஒரு சிறு கூட்டத்தினது நோக்கு என்பது மெய்யாகலாம். போருக்கு முந்தியே அவற்றைச் சொந்தமாக வைத்திருந்தவர்கள் தொடர்ந்து வைத்திருக்கலாம் என்பது சிலர் கருத்து. நியூயோர்க் நகர் சென்ற ஹேமிற்றேஜ் நூதன சாலை இயக்குனர் மிக்கேல்; பியோற்றோவ்ஸ்கி ஜேர்மனியிடம் கொள்ளையடித்த அனைத்தையும் - தமது நூதனசாலைகளுக்குச் சிலவற்றை வைத்துக்கொண்டு- திருப்பிக் கொடுக்கலாம் என்பதே தம் கருத்து என்றார். (நமக்குள் பேரம் பேசுவோம் வா என்ற மனப்போக்கு இது என்றார் ஒரு நிபுணர்) பூஷ்கின் நூதன சாலை வருகிற செப்ரெம்பர் மாதம் 100 மில்லியன் டொலர் பெறுமதியுள்ள டச்சுச் சித்திரங்களை - உலகப் பிரசித்தரான றெம்பிறான்ற், டியூரர், செஸானி போன்றோர் படைப்புகளை - கண்காட்சிக்கு வைக்கப்போவதாக அறிவித்தது. அடுத்த சனவரி மாதம் ஹைன்றிக் ஸ்க்னீமான் என்ற நிபுணர் ட்றோய் என்ற கிரேக்க இதிகாசப் புகழ் பெற்ற தொல் நகரத்தில் 19 ஆம் நூற்றாண்டு நிகழ்த்திய தொல் பொருள் ஆய்விற் கிடைத்த தங்கக் கலைப் பொருள்களைக் காட்சிக்கு வைக்குந் திட்டமும் உண்டு. இருப்பதை வெளிப்படுத்துவது உற்சாகமளிப்பதாகும். ஆனால் திருப்பிக்கொடுக்க வேண்டும் என்ற பிரச்சனையை மூடி மறைக்க இயலாது.

*அறிக்கைகள் அனுப்பியவர்கள் : நியூயோர்க்கிலிருந்து பற்றிக்றெஜேர்ஸ், மொஸ்கோவில் இருந்து பெற்ஸி மக்கே; பேர்ளினிலிருந்து ஸ்ரெ.ஃபான் தைல்.*

*நியூஸ்வீக் மார்ச் 13, 1995*

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவக்குழியை அண்மித்து நின்ற போதும் மௌன மொழி பேசிய மனித முகபாவங்கள்

தமிழில் : திரு. இருபைராஜா

இருபது ஆண்டுகளுக்கு முன்பு கமரூச் கெரிலாப் படை கம்போடியாவின் தலைநகர் நொம்பென்னைக் கைப்பற்றிய போது, அதனைக் கொண்டாடவென ஒரு பேயாட்டப் புரட்சியையும் நடத்தியது. தலைநகரிலும், ஏனைய நகரங்களிலும் குடியிருந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள், கிராமப் புறங்களில் வேலை செய்து வாழவென விரட்டித் துரத்தியடிக்கப்பட்டு, அங்கிருந்த கொலைக் களங்களில் அழிந்து அற்றுப் போக வைக்கப்பட்டனர். வேறு பல புத்திசீவிகள் ''துரோகத்தனமானவர்கள்'' என்று சாடி வகைப்படுத்தப்பட்டு, அதிலும் பார்க்க அவலமான மரணத்தை அடைய, துன்பக் கேணிகளான சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டார்கள். அந்தச் சிறைகளுக்கு எஸ் 21 என்ற சங்கேதப் பெயர் இடப்பட்டு இருந்தது. அங்கே அவர்கள் தங்களை முன்பு ஒடுக்கி வருத்திய பகைவர்களாக கமரூச்சுடன் இணைந்திருந்து பின்பு புரட்சிக்கு எதிராகச் செயற்பட்டதாகச் சாடி சிறையிடப்பட்டவர்களுடன் அடைக்கப்பட்டனர். அவர்கள் எல்லோரும் மரணபரியந்தம் சித்திரவதை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர்,

அந்த எஸ் 21 சிறைகளை நடத்திய அதிகாரிகள், ஒரு வகை விசர் கொண்ட, கட்டாயமாகச் சிறையில் வைத்து அழிக்கப்பட்டவர்கள் பற்றிய விபரங்களைப் பதிவு செய்து, பொய்யான நல்ல முகபாவங் காட்டி நிற்க வைத்து, புகைப்படமும் எடுத்து வைத்தனர். பின்பு அதிகாரம் பறிபோய் அந்த ஆட்சியாளர்கள் தப்பி ஓடிய போது ஆவணங்களை அழித்து விட்டுப் போக, புகைப்படங்கள் எப்படியோ தப்பிப் பிழைத்துக் கிடந்து விட்டன.

இப்போது அந்தச் சிறைச் சாலைகளில் ஒன்றான டுவெல் சிலெஸ், ஒரு மனித துயர அரும் பொருட்காட்சியகமாக மாற்றப்பட்டு, அதன் சுவர்களெங்கும் அந்தச் சிறையிலே அழிந்த 15,000 பேர்களின் புகைப்படங்கள் வரலாற்றுச் சாட்சியமாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அங்கே அவர்கள் யார் எவர் என்ற அடையாளம் ஏதும் இல்லாமல் முன்பு இருந்து அழிக்கப்பட்டவர்களாகப் புகைப்பட உருவில் சுவர்களிற் தோன்றுகின்றனர்.

அந்தப் புகைப்படங்களை ஒவ்வொன்றாக நோக்கும் போது, அங்கே சிறை வைக்கப்பட்டிருந்த் அனேகர், புகைப்படம் எடுக்கப்பட்ட வேளையிற் தமது விரக்தியான வெறுப்பைக் கரட்டும் நிலையிலும் சிலர் தமது அச்சத்தின் பிடியிலிருந்து விடுபட முடியாத நிலையிலும், படமெடுக்கப்படுவதற்கு முகம்காட்டியுள்ளனர் என்பதை உணர முடிகிறது. அங்கே வரும் பெருந்தொகைப் பார்வையாளர்களிற் சிலர் காணாமற்போன தமது உறவினர்களின் படங்களை அடையாளங் கண்டு கொள்வதும் உண்டு. அத்தகைய தேடுதல் முடிவில்லாமல் தொடர்கிறது.

இந்தப் புகைப்படங்கள் காலகதியில் மங்கிப்போகக் கூடியவை. அப்பொழுது, அநியாயத்திற்கு இரையாகினோர் தம் வரலாறும் முழுமையாக மங்கிவிடக் கூடும். 1993 இல் அமெரிக்கர்களான இரண்டு புகைப்படக் கலைஞர்கள் அங்கு வந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்தப் படங்களை மேலும் நிரந்தரமாக இருக்க வைக்க முயற்சிகள் செய்து கொண்டு உள்ளனர். அவர்கள் கிறிஸ் றைலி 28, தொக்நிவான் 31, என்ற இருவரும் ஆவர்.

★

## இரு மடங்கு ஆசையைத் தூண்டும் உணவு

ஹாஜென் – டாஸ் நிறுவனத்தின் சமீபகால உற்பத்திப் பொருளின் சிறப்பு உணவுக்குப்பின் சுவைக்கும் (பழ) இனிப்புப் பொருளுடன் சமிபாட்டுக்குதவும் பண்டத்தையும் சேர்த்து விடுவதாகும். டீ சரோனோ அமரெற்றோ ஐஸ்கிறீம் சுவையுடன் கடுங் கொழுப்புச் சத்தையும் உங்களுக்குத் தந்துவிடும் என்று பயப்படவேண்டாம். உயர் 'கலோரி' வெப்பம் ஆக்கி என்பதால் கொழுத்துவிடக்கூடும், நிறை கூடிவிடும் எனப் பயந்து சாப்பிடாமல் விடாதீர்கள். (வளம் மிகுந்த மேனாடுகளிற் சரியான கலோரிப் பெறுமானமிக்க உணவுகளை உண்டு, நிறை கூடாமல் பார்த்துக் கொள்வது நாகரிகம்). இந்தப் புதிய உணவில் ஒரு சிறிதளவு மதுசாரமும் (அல்கஹோல்) இருவேறு உங்களைக் கவரும் பொருள்களும் ஒன்று சேர்த்திருக்கிறார்கள். பெய்லியின் ஒரிஜினல் ஐரிஷ்கிறீமும் மதுவும் உங்களைக் கவரும். ஹைஜென் டாஸ், கிறான்ட்மெற்றோபொலிற்றன் நிறுவனங்கள் இவற்றை விற்பனை செய்யும் உரிமை உடையன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்கால அழைப்புகள்

தமிழில் : இளையவன்

இலத்திரனியற் தொடர்புச் சாதனத்தின் ஓசையைக் கேட்டுத் துயிலெழும் ஒரு வர்த்தகர் திடீரெனப் பயண மொன்றை மேற்கொள்ள வேண்டி இருக்கலாம். அப்போது தனது ரக்ஸியிற் பயணஞ் செய்தபடியே மனைவிக்கும், அலுவலகத்துக்குந் தகவல்களை அனுப்பிவிட்டு விமானப் பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளவும் தேவை ஏற்படுகிறது. இதனைச் சாத்தியமாக்கக்கூடிய வகையிற் தகவற் தொடர்புச் சாதனங்கள் இப்போது நவீனமயமாக்கப்பட்டு விட்டன.

1876 இல் அலெக்சாண்டர் கிரகாம் பெல் கம்பிகளின் ஊடாக மனிதர்களின் குரலை அனுப்பும் வழிமுறையைக் கண்டு பிடித்தார். அதன் பின்னர் கடந்த ஒரு நூற்றாண்டின் தொழில் நுட்பத் துறை முன்னேற்றங்கள் பிரமாண்டமான சாதனைகளை எட்டியிருக்கிறது. ஆரம்பத்திற் செப்புக் கம்பிகளின் ஊடாக மனிதர்களின் குரலை அனுப்ப முடியும் என்பது மட்டுமே கிரகாம் பெல்லின் கண்டுபிடிப்பாக இருந்தது, இரண்டு தசாப்தங்கள் கழிவதற்கு முன்பாகவே இதிற் பல தொழில் நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இப்போது பைபர் ஒட்டிக் கேபிள்களும், சற்றலைற்றுக்களுங் கூட உபயோகத்துக்கு வந்துவிட்டன.

தொலைத் தொடர்புகளின் ஊடாகப் பெருமளவிற் தரவுகளை அனுப்பவும், பாக்ஸ் செய்யவும், ஒளிப் பிம்பங்களைத் தோன்றச் செய்யவுங் கூட இப்போது வசதிகள் வந்துவிட்டன. அத்துடன் தொழில் நுட்பத் துறையின் முன்னேற்றங்களின் காரணமாகத் தரம், வகை, சேவை என்பவற்றின் அடிப்படையிற் செலவு, அளவு எடுத்துச் செல்லப்படுந் தன்மை என்பனவற்றுக்கு ஏற்றதாகக் கைக் கடக்கமான தொலைத் தொடர்புக் கருவிகளும் வடிவமைக்கப்பட்டு விட்டன. அடிப்படையிற் பேசிக் கொள்வதற்கான ஒரு கருவியாகிய தொலைபேசி உலகின் ஏனைய பகுதிகளுடனான இணைப்புக்கு ஒரு பாலமாகிவிட்டது.

புதியதும், மலிவானதுமான நடமாடுந் தொலைத் தொடர்பு வசதிகள் அறிமுகமாக்கப்பட்டு இப்போது பாவனைக்கும் வந்து விட்டன. குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் மட்டும் பயன்படுகின்ற போதும் இதன் உபயோகம் இப்போது மிக முக்கியமானதாகிறது. இலகுவிற் தகவல்களை அனுப்பவும், அவற்றைப் பெற்றுச் சேகரிக்கவும், தேவையான வேளையில் இலகுவிற் பயன்படுத்தத்தக்க தனிப்பட்ட தொடர்புச் சாதனங்கள் இப்போது தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இத்தகைய தனிப்பட்ட தொடர்புச் சாதனங்கள், புகைப்படக் கருவிகள், ஒலி பெருக்கிகள் (Speakers) மற்றும் நுண்ணிய ஒலிவாங்கிகள் (Microphones) போன்றவற்றையும் இணைப்புக்களாகக் கொண்டவையாக இப்போது ஆசியாவில் சந்தைக்கு வந்துள்ளன.

சுருக்கக் கூறின் வீடுகளில் ஒரு தொலைபேசி பொருத்தப்படும் போது அதனூடாகக் கேபிள் தொலைக்காட்சி, பாதுகாப்புக்கான நிறுவனங்கள், கம்பியூற்றர் தகவல் வங்கி என்பன உட்படப் பல்வேறு அமைப்புக்களுடனான தொடர்புக்கு ஒரு வழி ஏற்பட்டு விடுகிறது.

பிரதான நகரங்களில் இருக்கும் ஒவ்வொரு வீடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை ஏற்படுத்தும் வகையில் ஆசியாவிலுள்ள ரெலிக்கொம் நிறுவனங்கள் தமது திட்டங்களை வகுத்துச் செயற்பட்டு வருகின்றன. மலேசியா, தாய்வான், ஹொங்கொங், ஜப்பான், சிங்கப்பூர் போன்ற பல இடங்களிலும் இதற்கான திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன. 1997-க்கு முன்பாகத் தமது திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என்கின்றன ஹொங்கொங், சிங்கப்பூர் நிறுவனங்கள். 360 பில்லியன் டொலர் செலவில் இருபது ஆண்டுகளிற் தமது திட்டங்களைப் பூர்த்தி செய்துவிட முடியும் என்கிறது ஜப்பான். நுகர்வோருக்கான அடுத்த பெரிய இலத்திரனியற் சாதனமாக மைக்ரோ செல்லூலர் தொலைபேசிகள் இப்போது சந்தைக்கு வருகின்றன. ஜப்பானிய நிறுவனங்கள் இதனை வடிவமைத்துள்ளன. தனிப்பட்ட தொடர்புச் சேவைக்கானது என்று அமெரிக்க நிறுவனங்களும், 'தனிப்பட்ட தொடர்பு வலைப்பின்னல்' என்று ஐரோப்பிய நிறுவனங்களும் பெயர் சூட்டும் இது இலக்கங்களாலான இலத்திரனியற் கம்பியில்லாத் தொலைபேசி (Digital Electronic Cordless Telephone) வகையைச் சேர்ந்தது.

கடந்த நான்கு வருடங்களில் மட்டும் நான்கு விதமான செல்லூலர் தொலைபேசிகள் வடிவமைக்கப்பட்டுவிட்டன. அழைப்புக்களை ஏற்க வல்லனவாக இருக்கும் இத் தொலைபேசிகள் ஒப்பீட்டளவில் மலிவானதும், (350 டொலர்களிலும் குறைவு) எடை குறைந்ததும், எடுத்துச் செல்ல இலகுவானதும் ஆகும். அத்துடன் நகரத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தடிகள், வீட்டின் இரைச்சல் என்பவற்றுக்கு மத்தியிலும் நடந்த படியோ, பயணஞ் செய்தபடியோ பயன்படுத்தத் தக்கவை என்பதும் குறிப்பிடத்தக்கது. இரண்டு கிலோ மீற்றர் தொலைவுக்கு உட்பட்ட ஒரு மையத்தில் இருந்து அழைப் புக்களை ஏற்கவும், தகவல்களை அனுப்பவும் செல்லூலர் தொலை பேசிகள் பயன்படும். இதேவேளை நூறு முதல் இருநூறு மீற்றர் தூரம் வரை மட்டும் பயன்படுத் தப்படக்கூடிய மைக்றோ செல்லூ லர் தொலைபேசிகளும் இருக்கின் றன.

### ஜப்பான் தயாரிக்கும் தொலைபேசிகள்

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலை நகர் மணிலாவில் இருக்கும்போது பயன்படுத்தப்படும் நடமாடுந் தொலைபேசியைச் சிங்கப்பூர், கோலாலம்பூரில் தரையிறங்கும் போதும் பயன்படுத்தலாமா? அல் லது ஹொங்கொங், மற்றும் ஹனோய் போன்ற நகரங்களிற் குச் செல்லும் போது பயன்படுத்த முடியுமா? இந்தச் சவாலை ஏற் றுக்கொண்டு ஜப்பானிய தொலைத் தொடர்பு நிறுவனங்கள் செயலிற் தீவிரமாகியுள்ளன. இன்னும் ஒரு சில மாதங்களுக்கு இடையில் நட மாடுந் தொலைபேசியின் திருத் திய வடிவமொன்றைச் சந்தைக்கு விடமுடியும் என ஜப்பான் கருது கிறது. இலக்கங்களாலான கம்பி யில்லாத தொலைபேசி, அல்லது மைக்றோ செல்லூலர் எனத் தொழில் நுட்ப ரீதியாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. எனினும் ஜப் பானியர் இதனைத் தனிப்பட்ட தொடர்புக்கான ஹன்டிபோன் அமைப்பு (Personal Handy Phone System) என்றே அழைக்கின்ற னர்.

ஐரோப்பாவின் டிஜிற்றல் யூரோப்பியன் கோர்ட்லெஸ் ரெலி போன் (Digital European Cordless Telephone) அமைப்புட னும் அமெரிக்காவின் பேர்சனல் கம்யூனிக்கேசன் சேவிசஸ் உடனும் (Personal Communi cations Services) போட்டியிடத்தக்க வகை



வீடியோத் தொலைபேசியும் ஒருகால் மழுங்கடிக்கப்படக் கூடுமோ!

யில் ஜப்பான் இத்துறையில் முன் னேறிவிட்டது. ஜப்பானின் வட பகுதி நகரங்களில் இது தொடர் பான களப் பரிசோதனைகளை யும் அது வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளது.

1998 இல் ஆரம்பிக்கப்பட வுள்ள இத் தொலைபேசிச் சேவைக்காக 1993 முதல் இது வரை ஏழு இலட்சத்துக்கும் அதிக மான வாடிக்கையாளர்கள் ஒப்பந் தஞ் செய்துள்ளனர். இது ஸ்ரீ றியோ றேடியோக்கள் பரவுவது போல் பரவிவிடும் என்று சன்யோ எலக்ரிக் தாபனத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிடுகின்றார்.

### கம்பியில்லா இணைப்புக்கள்

பின் தங்கிய கிராமப்புறங்க ளையும், நகரங்களையுந் தேசிய தொலைத் தொடர்பு அமைப்பு டன் இணைப்பது என்பது பெரும் பாலுஞ் செலவு மிகுந்ததாகவே இருக்கின்றது. இதற்காகுஞ் செல வினத்தின் முப்பது வீதத்துடன் கம்பியில்லா வகையிலும் குறைந் தளவு நேரத்துடனும் நுண்ணலை (Micro Wave) அன்ரனாக்கள் மூலந் தொடர்புறுத்துஞ் செயற்பாடு இப்போது அறி முகமாகி வருகிறது. இன்னும் மூன்று வருடங்களில் மலே சியா முழுவதிலும் இத்தகைய இணைப்பு, சாத்தியமாகி விடும் என நம்பப்படுகிறது.

ஆசியாவின் பரந்த தன் மையைப் பொறுத்த வரை யிலுஞ் சேறுகள் மிகுந்த நீர் நிலைகளைக் கொண்ட தரை யமைப்பைப் பொறுத்தவரை யிலும் இத்தகைய கம்பி யில்லா இணைப்பு மிகுந்த கவனத்துக்கு உரியதாகிறது.

### தடையின்றி ஒலிக்கும் மணிகள்

ஐந்து வருடங்களுக்கு முன்னர் தொலைத்தொடர்பு அமைப்பு முற்றிலுமாக அர சாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தது. ஆனால் இப்போது பல நாடுகளிலும் இத் துறையின் மீதான அரச ஆதிக்கம் விடுபட்டு வருகி றது. வெளிநாடுகளுக்கான தொலைத் தொடர்புகளைச் சுதந் திரமாக மேற்கொள்ளும் அனுமதி யைப் பெறுவதற்காகப் பலரும் போட்டி போடுவதையும், இத் துறையிற் தனியார் நிறுவனங்க ளின் போட்டி மலிந்து வருவதை யும் இப்போது கண்கூடாகக் காண முடிகிறது. இதன் காரண மாக என்ன நோக்கத்திற்காக ஒவ் வொருவருந் தொலைத் தொடர் பைப் பெற விழைகின்றனர் என்ப தைக் கண்டறிந்து மட்டுப்படுத் துவது கூடக் கடினமானதாகி விடு கிறது.

### ஹொங்கொங்

ஆசியாவின் குறிப்பிடத் தகுந்த வர்த்தக நகரங்களில் இது முக்கிய மானது. இங்கு செல்லூலர் தொலை பேசித் தொடர்பு இணைப்புக்கான மூன்று நிறுவனங்கள் சமாந்தரமான நிலையிற் செயற்படுகின்றன.

### இந்தியா

உள்ளூர்ச் சேவைகளை மேற் கொள்வதற்கான இணைப்புக் களை அமைக்கப் புதுடில்லி தனி யாருக்கு அனுமதி அளித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வருடத்தில் ஐம்பதினாயிரம் இணைப்புக்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இது தவிரப் பம்பாயில் மட்டும் 1,50,000 இணைப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. செல்லூலர் தொலைபேசி, மற்றும் பேஜிங் மாக்கெட் என்பவற்றின் போட்டிகளுக்கும் இந்தியா இடமளித்து இருக்கிறது.

### இந்தோனேசியா

இத்துறையில் இங்கும் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகிறது. அரசாங்கத்தின் தனியாதிக்கத்துக்குப் பதிலாகத் தனியார் நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்த நிலையில் எதிர்வரும் மூன்று ஆண்டுகளிற் தொலைத் தொடர்புகளை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மலேசியா

அரசாங்கம் பெரும்பான்மையான பங்குகளைக் கொண்டதாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக இங்கு தொலைத்தொடர்புத் துறை செயற்பட்டு வருகிறது. கோலாலம்பூரில் இருந்து வெளிநாட்டுத் தொலைத் தொடர்புகளை மேற்கொள்வதற்கு இரண்டு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்காவையும், ஒரு பங்குதாரராகக் கொண்ட ஒரு நிறுவனம் மியாசற் எனப்படும் மலேசியன் சற்றலைற் ஒன்றைக் கொண்டிருக்கிறது. ரைம் எஞ்சினியறிங் எனப்படும் நான்காவதான ஒரு நிறுவனம் சர்வதேச தொடர்புகளுக்கான அனுமதியை விரைவிற் பெற்றுக்கொள்ள இருக்கிறது.

### பிலிப்பைன்ஸ்

அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்த நீண்டதூரத் தொலைத் தொடர்பு புதியவர்களின் வருகையை அடுத்துப் படிப்படியாக அரசின் கட்டுப்பாட்டை இழந்து வருகிறது. மேலும் ஏழு நிறுவனங்கள் உள்ளூர்த் தொலைபேசி அமைப்புக்களை ஏற்படுத்த அனுமதியைக் கோரியிருக்கின்றன.

### தென்கொரியா

கடந்த மூன்று ஆண்டுகளாக வெளிநாட்டுத் தொலைத் தொடர்புகளுக்காகப் போட்டியிட வேண்டிய நிலையிற் கொரியா ரெலிகொம் நிறுவனம் இருக்கிறது. கொரியா ரெலிகொம் செல்லூலர் தொலைபேசியையும் விற்பனை செய்து வருகிறது.

### தாய்லாந்து

உள்ளூர்த் தொலைத் தொடர்புகளையும், வெளிநாட்டுக்கான தொலைத் தொடர்புகளையும் இரு வேறு நிறுவனங்கள் பேணி வருகின்றன. மேலும் இரு தனியார் நிறுவனங்களுக்கும் கூட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. செல்லூலர் தொலைபேசிச் சேவையை வேறு மூன்று நிறுவனங்கள் பொறுப்பேற்று நடத்துகின்றன.

*ஆசியா வீக்,*
*பெப்ரவரி, 3, 1995*

## பூரண பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஏவுகணைகள்

ஓர் ஏவுகணையை அனுப்புகிற ஒவ்வொரு வேளையிலும் அதனுடைய வேகம் குறைவடைந்து பூச்சியத்தை எட்டும் வரையிலும், அதனை அனுப்புகிறவரும், பாதுகாப்பளிக்கிறவரும் நாடித்துடிப்பு அதிகரிக்கும் அளவுக்குப் பயந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அதனுடைய இரைச்சலும், எழுச்சியும் திரவமாகவோ, திடப்பொருளாகவோ இருக்கும் எரிபொருள், சரியான நிலை வந்து வெடிக்கும் வரை நீடிக்கும் ஒரு றொக்கெற் உயரப் போய் அதனுடைய ஒரு பகுதி எரிபொருள் தீர்ந்தவுடனேயே அது ஓர் உறக்க நிலைக்கு வருகிறது. (Catastrophe) அதனுடைய முடிவு நேரத்தில் மற்றப் பகுதியினது எரிபொருள் எரியத் தயாராகி விடுகிறது.

ஒரு நல்ல ஏவுகணை றொக்கெற் உலகை வலம் வரக் கூடியதாக இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது மிகவும் உயரத்துக்கு மேலே அதாவது 225 மைல் உயரத்தில் உலாவிவரக் கூடியது. இப்போது அதை அனுப்பினால் அது 1996 இல் தான் வெடிக்கக் கூடியதாக இருக்கும். எண்பது அடி உயரமுள்ள இதற்கு ஹைபிளையர் என்று பெயர்.

1930 இலிருந்து உயரப் பறக்கும் றொக்கெற்றுகள் பறந்து வருகின்றன. முன்னோடிகள் விறகு முதற் கொண்டு சரி ஈறாக இதற்கான எரிபொருள் பற்றி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சக்தி வாய்ந்த திரவப் பொருளை எரிபொருளாகப் பயன்படுத்துவது பற்றி வேர்ன் ஹர் (Wernher Bon Braun) சிபார்சுகள் செய்தார். ஆனால் நாசா நிறுவனத்தார் திடப்பொருளே எரிபொருளாகப் பயன்படுத்த உகந்தது எனத் தெளிவாகக் கூறியுள்ளனர்.

ஹைபிரிட் றொக்கெற்றுக்களையும், இந்த ஹைபிளையர் றொக்கெற்றுக்களையும் ஒப்பீடு செய்வது இங்கு பொருத்தமானதே. றொக்கெற்றுக்கள் திடமானதும், மற்றும் திரவமானதுமான எரிபொருள்களைப் பயன்படுத்தியுள்ளது. ஹைபிளையர் றொக்கெற்றுக்கள் திட எரிபொருளையும், திரவ ஒட்சிசனையும் எரிபொருளாகப் பயன்படுத்தியுள்ளது. இவை சேமித்து வைக்கப்பட்டுள்ள தாங்கியிலிருந்து ஒரு வழிப் பாதையால் வெளியேறும் போது அந்தத் திரவம் எரியும் பகுதிக்கு உந்தப்படுகிறது. அதற்குள்ளிருந்து பிறக்கும் சக்தியால் ஒரு சில்லு அசைகிறது. அப்போது பறக்கும் பொறியினால் ஒட்சிசனும் ஆவியாக்கப்பட்டுவிட திட எரிபொருளும் தொடர்ந்து எரியும். தொடர்ந்து ஒட்சிசன் வந்து கொண்டிருக்க எரிதலும் தொடரும்.

இந்தப் பொறியினால் பல நன்மைகள் உண்டு. இந்த இரண்டு விதமான எரிபொருள்களும் பொதுமையாக உபயோகிக்கப்படுமிடத்து மின் ஒழுக்கினால் அல்லது மேலதிக அழுத்தத்தினால் கட்டுப்பாட்டுக்குள் வராமற் போய் விடக்கூடும். இந்த ஹைபிளையரில் அப்படி நிகழாது. இந்த நன்மையை ஆம்றொக் (Amroc) கின் அமெரிக்க தொழில்நுட்பவியலாளர்களும், மாட்டின் மரிற்றா என்பவரும் கூட்டாக பயன்படுத்தவுள்ளனர். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் ராங்கிகள் கடல் அடிக்குச் செல்கின்றன



தமிழில்: கலாநிதி க. சோமாஸ்கந்தன்

அமெரிக்காவுக்குச் சொந்தமான மெக்சிக்கோ குடாக் கடலில் அடிப்பாகம் கற்பாறைகள், மேடுகள், பவளக் குன்றுகள் போன்றவை இல்லாமல் தட்டையாக இருக்கின்றது. கடலடி ஏற்றத் தாழ்வு காணப்படின் மீன் போன்ற உயிரினங்கள் கூடுதலாக வாழுமென அறிஞர்கள் கருதுகின்றனர். இதற்கெனச் செயற்கைத் தடைகளையும் வரம்புகளையும் நீரடியில் அமைக்குந் திட்டமொன்றை அமெரிக்க அரசு உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டம் 1953 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலாக்கப்படுகிறது. அமெரிக்காவின் நதிகள் மீது காணப்படும் பழைய காலப் பாலங்கள் இடித்துப் புதிதாக்கப்படும் போது இடிபாடுகள் ஒழுங்காகக் கடலடியில் கொட்டப்படுகின்றன. இதனாற் செயற்கை மேடுகள் எழும்புகின்றன. இரண்டாம் உலகயுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட பாரிய கடற்படைக் கப்பல்களும் இவ்விதமாகக் கடலடிக்கு அனுப்பப்படுகின்றன. இவ்வருடந் தொடக்கம் அமெரிக்கத் தளங்களில் காணப்படும் பெருந்தொகை போர் ராங்கிகளும் கடல் வளத்தைப் பெருக்கும் பணிக்கு கடலடிக்குச் செல்கின்றன.

ராங்கிகள் 50 தொடக்கம் 100 வருடங்களுக்கு மேலாக உப்பு நீரின் அரிப்பைத் தாங்கும் வல்லமை பெற்றவை. போர்த்தியிருக்குந் தகடு உயர்ந்தரக உருக்கினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதனுடைய தடிப்பும் அதிகம். இந்தக் காலப்பகுதியில் பல மில்லியன் டொலர் பெறுமதியான மீன் போன்ற உயிரினங்களை இந்த ராங்கிகள் அமெரிக்காவுக்கு உழைத்துக் கொடுக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கடலிற் தூக்கிப் போடப்படுமுன் சூழல் தூய்மையைப் பேணும் ஆர்வலர்களின் வேண்டுகோளை அரசு தனது மேன்மையான கவனத்தில் எடுத்துள்ளது. ராங்கிகளில் பொருத்தப்பட்டிருந்த குண்டுகள், வெடிப்பொருள்கள் போன்றவை அகற்றப்படுகின்றன. பின்பு வெப்பம் மிகுந்த நீராவியினால் உயர் அழுத்தம் பிரயோகித்து ராங்கிகள் நன்றாகக் கழுவிச் சுத்தப்படுத்தப்படுகின்றன. எண்ணெய்ப்பற்று இல்லாமல் செய்வதிற் கூடுதற் கவனஞ் செலுத்தப்படுகின்றது. இதன்பின் விசேட புகையிரதங்களில் ஏற்றப்பட்டு கடற்கரைக்கு அண்மையில் உள்ள ரயில் நிலையம் வரை எடுத்துச் செல்லப்படுகின்றன.

இறக்கப்பட்ட ராங்கிகள் பல சக்கரங்கள் பொருத்தப்பட்ட லொறிகளில் ஏற்றப்பட்டுக் கடற்கரைக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு பாரங்காவிகள் கடலில் நிறுத்தப்பட்டிருக்கும் விசேட பாரஞ் சுமக்கும் படகுகளில் ஏற்றுகின்றன. தேவைப்பட்ட இடங்களில் ராங்கிகளை அடக்கஞ் செய்வதற்காகப் படகுகள் கடலை நோக்கிச் செல்கின்றன. இங்கு படகிற் பொருத்தப்பட்ட பாரங்காவிகள் ராங்கிகளைத் தூக்கிக் கடலிற் போடுகின்றன. அனேகமாக ராங்கிகள் தரையில் நிறுத்தப்பட்டிருப்பது போல நிமிர்ந்தபடி நிற்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்க ராங்கிகளின் பெருமை அவ்வாறானது. இது வரையில் 500 ராங்கிகள் நீரில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. வருடமொன்றுக்கு 1,000 ராங்கிகள் வீதம் தமது பழைய ராங்கிகளைப் புதிய பணிக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளதென அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொப்பியூலர் மெக்கானிக்ஸ் – மே 1994

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனியின் ஆற்றலும் பருமனும்

தமிழில் :
கலாநிதி க. சோமாஸ்கந்தன்

கணனியின் வரலாற்றை ஆரம்பத்திலிருந்தே உன்னிப்பாகக் கவனித்தால் ஒன்று தெளிவாகத் தெரியும். வேகம், நினைவுச் சேமம், கொள்திறன் இவை தான் தயாரிப்பாளர்களின் தீராத தாகம். இன்னுமோர் அம்சத்தையும் இவ்விடத்தில் குறிப்பிடவேண்டும். அதுதான் பருமன் ( SIZE). ஆரம்ப காலக் கணனிகள் மிகவும் பெரியவை. ஆனால் பருமனுக்கு ஏற்ற ஆற்றல் ( SCOPE ) அவற்றில் இல்லை. அவற்றைக் கையாள்வதுங் கடினம். இயந்திர நிலை மாறி இலத்திரனியல் பிறந்தபின் பருமன் குறையவும் ஆற்றல் பெருகவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கணனிகளை இயன்றளவு சிறிதாக்குவதும் முன்னணித் தயாரிப்பாளர்களின் இலட்சியமாகக் காணப்படுகிறது.

டிரான்சிஸ்ரர்கள் (TRANSIST-ORS ) ஒன்றிணைக்கப்பட்ட மின்சுற்றுக்கள் ( I. C INTEGRATED CIRCUITS ) அரைக் கடத்திகள் ( SEMI - CONDUCTORS ) மைக்கிறோ புரோசெசர் ( MICRO PROCESSOR ), சிப் ( CHIP) போன்றவற்றில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பாரிய மாற்றங்கள் சிறிய ரக கணனிகளுக்கு வழிகாட்டுகின்றன. மேற்கு நாடுகளில், வீட்டுக்கு ஒரு வானொலிப் பெட்டி போன்று வீட்டுக்கு ஒரு கணனி வைத்திருப்பதற்கு இது வகை செய்துள்ளது.

நவீன கணனியின் தோற்றத்திற்குத் தற்காலத்தில் வித்திட்டவர் இங்கிலாந்தின் கேம்பிறிஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சாள்ஸ் பபேஜ் (Charles Babage ) என்பார். இவர் தலைசிறந்த கணித நிபுணர். 1812 இல் அவருக்கு கணனி பற்றிய எண்ணங்கள் தோன்றின. அவற்றிற்கு உருவங் கொடுக்க அவர் 50 வருடங்கள் உழைத்தார்.



தான் வடிவமைத்த 701 சி குறிப்பேடு ரக கணனியைக் காண்பிக்கும் ஐ. பி. எம். பொறியியலாளர் ஜோண் கரிடிஸ்

மாற்றான் மனைவியான ஆங்கிலக் கவிசிரேஷ்டர் பைரன் பிரபுவின் மகள் அடா ( ADA ) என்ற சீமாட்டி அவர் மீதும், அவருடைய எண்ணங்கள் மீதும் ஆறாக் காதல் கொண்டாள். இது அவருக்கு பேருக்கங் கொடுத்துள்ளது. இறுதியில் அவர் தோல்வி கண்டார். அவருடைய முற்போக்கு எண்ணங்களுக்கு நிகரான தொழில்நுட்ப வளர்ச்சி அன்று இல்லாததே முக்கிய காரணம்.

எனினும் 1944 இல் அமெரிக்காவின் ஹாவாட் ( Harvard ) பல்கலைக்கழகக் கணிதப் பேராசிரியர் கோவாட் அய்க்கென் ( How-ard Aiken ) என்பாரும், ஐ. பி. எம். எனப்படும் சர்வதேச வர்த்தக எந்திரங்கள் தயாரிப்பு நிறுவனமும் (International Business Machines Corporation - I. B. M.) கூட்டாக மார்க் - 1 (Mark -1) எனுங் கணனியை வடிவமைத்துள்ளனர். இது மனிதனின் இடைத்தலையீடு இன்றி தானியங்கி முறையில் இயங்க வல்லது. பல தரப்பட்ட செயற்பாடுகளை, பெருந்தொகையில் அதிவேகமாகத் தானியங்கி முறையிற் செய்த முதலாவது கணனி என்ற வரலாற்றுப் பெருமை இதற்கு உண்டு.

பேராசிரியர் பெபேஜினின் கருத்துக்கள் சிறிது காலங்கவனிப்பாரற்றுக் கிடந்தபின் திடீரென ஆதரவு பெற்று உருவாகியதற்கு இரண்டாம் உலகப் போரின் நெருக்கடியே முக்கிய காரணம். ஏவுகணைகள் பற்றிய தகவல்களைக் கணக்கிடுவதற்காக மார்க் 1 பெரும்பாலும் பாவிக்கப்பட்டுள்ளது. 1947 இல் மீண்டும் அய்க்கெனும் ஐ. பி எம்மும் இணைந்து மார்க் - 2 என்ற கணனியை வடிவமைத்துள்ளனர். இவை இரண்டும் இயந்திர ரகக் கணனிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது குறிப்பிடத்தக்கது. நவீன மின்துகள் கணனிகள் பின்பு வந்தவை. கணனிப் பாவிப்பு, பெருகுவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள், இராணுவத் தலைவர்கள் போன்றோரின் தேவைகள் உலக வரலாற்றில் முன் எப்போதும் காணமுடியாதளவு வர்த்தகம், தொழில்நுட்ப வளர்ச்சி என்பனவாம்.

இரண்டாம் உலகப் போரின் முன் உயர்தர கணிதத் தேவை (Higher Mathematics ) பெருமளவில் இருந்ததில்லை. பொறியியலாளர்கள், இயற்பியலாளர்கள், பொருளாதார நிபுணர்கள், கணக்கியலாளர்கள் போன்றோர் மத்தியில் ஆர்வம் இருந்தாலும் பொது மக்கள் இதில் அக்கறை காட்டவில்லை. கணனி அறிமுகமான பின் நிலைமை மாறிவிட்டது. எண்கள், உருவங்கள், அடையாளங்கள் ஆகியவற்றையும் அவற்றின் விதிமுறைகளையும் உள்ளடக்கியது கணக்கியல். எண்ணியலுக்கு வரம்பு இல்லை. அது பற்றிய ஆய்வுகள் இன்னும் முடிவுறவில்லை. என்றோ ஒருநாள் முடிவுறும் என்று நம்ப இடமில்லை.

இரட்டை எண் முறையைக் ( Binary ) கணனிமொழியாகத் தெரிவு செய்ததற்கும், அதன் இயக்கத்திற்கும், உருவமைப்புக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வேறுபடும் சமன்பாடுகள் (Differ-ential Equations ) என்ற கோட்பாட்டில் இரண்டின் அடிப்படை பற்றிய விளக்கத்தைக் காணலாம். இரட்டை எண் அடிப்படை கணனிக்குத்தான் மிகப் பொருந்தும். வேறு விதத்தில் அதை நாம் பயன்படுத்துவது கடினம். O என்ற எண் மின்சார ஓட்டத்தைத் தடுக்கும் விசையை ( Switch - சுவிச்) முடுக்குவதாலும், I என்ற மின்சாரத்தை ஓடச் செய்யும் விசையை முடுக்குவதாலுந் தோன்றுகின்றன. இந்த விசைகள் இரட்டை எண் முறை விசைகள் ( Binary Switc-hes ) என்று அழைக்கப்படுகின்றன. இவை வெளிச்சத்தைப் போடுதல், இல்லாமற் செய்தல் போன்ற ஒண் / ஓப் ( On / Off ) முறையில் இயங்குகின்றன.

கணனியின் இயக்கத்திற்கு மேற்கூறிய வகை விசைகள் பெருமளவிற் தேவைப்படுகின்றன. கணனி மொழியாகத் தசம எண் முறை தெரிவு செய்யப்பட்டிருந்தால் பல சிக்கலான கம்பித் தொடுப்புத் தேவைப்படும் (Wiring). அத்துடன் கணனியின் பருமன் மிகபெரியதாகவும், அதன் வேகம் மிகக் குறைந்ததாகவும் இருக்கும். இரட்டை எண்முறை தெரிவு செய்யப்பட்டதற்கு இதுவே காரணம். கணனிகளுக்கிடையில் ஆற்றல் மற்றும் பருமன் வித்தியாசங்கள் காணப்பட்டாலும் அவை யாவும் இரட்டை எண் முறையிலேயே இயங்குகின்றன.

ஆரம்பகாலந் தொட்டு கணனிக்கும், ஐ. பி. எம். நிறுவனத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை இங்கு விளக்கியுள்ளோம். பல முன்னணிக் கணனிகளைச் சந்தைப் படுத்துவதோடு அரச மற்றும் இராணுவ ஒப்பந்தங்களையும் ஐ. பி. எம். கைப்பற்றியுள்ளது. சக நிறுவனங்களுடனான போட்டியில் ஐ. பி. எம். இன் வெற்றிக்கு அதன் பொறியியலாளர்களும், விஞ்ஞானிகளும் பெரும் பங்களிப்புச் செய்கின்றனர், ஆனால் பி. சீ. எனப்படும் தன்னியற் கணனி விற்பனையில் ஐ. பி, எம். மூன்றாம் இடத்தை மாத்திரம் வகிக்கிறது. இத்துறையில் அமெரிக்காவில் நிறுவப்பட்ட ஜப்பான் நிறுவனம் ரொசிபாவும் (Toshiba ), அமெரிக்க நிறுவனமான கொம்பாக்கும் ( Compaq) முறையே முதலாம் இரண்டாம் இடங்களை வகிக்கின்றன. அண்மையில் ஐ. பி. எம். பொறியியலாளர் ஜோன் கரீடிஸ் (John Kar-dis ) வடிவமைத்த 701 சீ ( 701 C ) என்ற மடியில் வைத்து இயக்கும் எடை குறைந்த சிறிய ரகக் கணனியுடன் விற்பனை விகிதாசாரங்கள் மாற வாய்ப்புண்டு, பிரயாணஞ் செய்யும் போது எடுத்து செல்லப்படும் இந்த ரகம் அமெரிக்கர்களால் குறிப்பேடுகள் (Note Book ) என்றழைக்கப்படுகின்றன. 701 சீ. குறிப்பேடுகளில் அளவு குறைந்ததென்றாலும் கரிடிஸ் அதில் புரட்சிகர மாற்றம் ஒன்றைப் புகுத்தியுள்ளார்.

கணனியின் நினைவுச் சேமத்தில் (Memory ) தகவல்களைச் சேமிக்க உதவும் உள்ளீடு (Input ) சாதனங்களிற் தட்டச்சு முக்கிய இடம் வகிக்கிறது. தட்டச்சுப் பொறி Typewriter ) பெரும்பாலான கணனிகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன, தட்டச்சுப் பொறியின் முகப்பில் உள்ள எழுத்து மற்றும் எண்பொத்தான்களை அழுத்துவதன் மூலந் தகவல்கள் நினைவுச் சேமத்திற் பதிவு செய்யப்படுகின்றன. ஒருவகையிற் கணனியின் உள்ளீடு சாதனங்கள் மனிதரின் ஐம்புலன்களுக்கு ஒப்பிடக்கூடியவை. ஐம்புலன்வழியாகத் தகவல்கள் மூளைப்பகுதியைச் சேர்கின்றன. அதே போன்று உள்ளீடு சாதனங்கள் மூலந் தகவல்கள் கணனியில் மையப் பகுதியை அடைகின்றன.

குறிப்பேடு போன்ற சிறிசுகளிற் பொருத்தப்பட்டிருக்குந் தட்டச்சு இணைப்பு மிகச் சிறியனவாக அமைகின்றன. பிரயாணஞ் செய்யும் போது தகவற் பதிவுக்கு இவை கடினம் விளைவிப்பதாக வாடிக்கையாளர்கள் குறைப்படுகின்றனர். இந்தப் பிரச்சனையைப் பொறியியலாளர் வெகு இலாவகமாகத் தீர்வு வைத்துள்ளார். 701 சீயின் எடை நாலரை இறாத்தல். திரையின் மூலைவிட்டம் 10.4 அங்குலம். தட்டச்சு இணைப்பின் அகலம் 11.5 அங்குலம். இதிலுள்ள பொறியியற்பிரச்சனையைக் கரிடிஸ் கையாண்ட விதம் இத்தொழிலில் ஈடுபாடு உடையோரைப் பிரமிக்க வைத்துள்ளது. அவர் தட்டச்சுப் பகுதியை மேலிருந்து கீழாக இரு துண்டுகளாக்கி உள்ளார். திரை அடங்கிய மூடியைத் திறக்கும் போது இரு பகுதியும் இணைந்து முழுமையாகிவிடும். மீண்டும் மூடும் போது இரு பாகமும் பிரிந்து பெட்டிக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்து விடும். தட்டச்சு இயக்கப் படும்போது பெட்டியின் இரு பக்கமும் ஒவ்வோர் அங்குலம் நீண்டு இருக்கும். இதனால் 701 சீக்கு வண்ணத்துப்பூச்சி என்ற செல்லப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு விரிந்து சுருங்கும் தட்டச்சுப் பகுதி ஒரு புரட்சிகர அமைப்பு என்பதில் ஐயமில்லை. எளிதிற் கண் பார்த்து இயக்கக் கூடிய தட்டச்சு இணைந்த குறிப்பேடு வாடிக்கையாளர்களின் நெடுநாட் தேவை 701 சீ இதைப் பூர்த்தி செய்யத் தவறாது.

இவ்வருடந் தயாரிக்கப்பட்ட வண்ணத்துப் பூச்சிகள் யாவும் விற்பனையாகி விட்டன என்று கணனிச் சந்தையை ஆய்வு செய்யும் புள்ளி விபரந் தயாரிக்கும் நிறுவனம் டேற்றா குவஸ்ற் (Data Quest) தெரிவித்துள்ளது. 701 சீயிற் சில குறைகள் இருப்பதாகவும் அது சுட்டிக்காட்டியுள்ளது. வழமையாகக் குறிப்பேடு கணனிகளிற் பொருத்தப்பட்டிருக்கும் மின்கலங்கள் தொடர்ச்சியாக ஆறு மணித்தியாலம் இயங்குந் தன்மை உள்ளன. ஐ. பி. எம், மூன்று மணிகள் வேலை செய்யும் மின்கலத்தை இணைத்துள்ளனர். காரணத்தை அவர்கள் தெரிவிக்கவில்லை. இப்போது பென்ரியம் (Pentium) சிப்களைப் பொருத்துவதுதான் தயாரிப்பாளர்களின் வழக்கம், ஐ. பி. எம். இன்ரெல் 486 (Intel 486) ரக சிப்களையே தெரிவு செய்துள்ளனர். 3800 டொலர் என்ற இதன் விலை வெகு உச்சத்தில் இருந்தாலும் விற்பனை அமோகமாக நடக்கின்றது.

ஆதாரம்: நியூஸ்வீக்
மார்ச் 20. 1995

★

## திருக்கி மின்பிறப்பாக்கி இயக்கும் வானொலி

சாதாரண மணிக்கூடு ஒன்று அதன் உள்ளிருக்கும் சுருள் வில்லை (Coil Spring) திருக்கி இறுகவைத்த பின்பு அதனால் ஏற்படும் எதிர்விசையால் (Re Coil) உண்டாகும் அசைவுச் சக்தியைக் கட்டுப்படுத்திச் சிற்சுழல்வுக்கு உட்படுத்துவதன் மூலம் இயங்கவைக்கப்படுகிறது என்பது தெரிந்த ஒன்றாகும்.

அவ்விதமாகவே முதலில் வந்த கிரமபோன் என்ற இசைத் தட்டுக்களை இசைக்க வைக்குங் கருவியும் கையாற் திருக்கி உள்ளிருக்கும் சுருள்வில்லை இறுக்கிவிட்ட பின்னர் ஏற்படும் எதிர்விசையைக் கொண்டு அதிலே பொருத்தப்பட்ட டைனமோவைச் சிறுக வைத்துப் பெறப்படும் மின்சாரத்தாற் செயற்பட வைக்கப்பட்டது. ஆனால் மின்பாவனையும், மின்கலங்கள் கிடைப்பதும் பரவலுற்ற பின்பு அந்தக் கருவியின் பாவனை அருகிப் போய் வேறு எத்தனையோ பல மின்சாரத்தால் இயங்கும் நவீன ஒலிக்கருவிகள் பெருகிவிட்டன.

இப்பொழுது அதே முறையைக் கையாண்டு தென் ஆபிரிக்கா நாட்டின் கேப்ரவுண் நகரில் உள்ள பேஜென் பவர் நிறுவனம் மின்கலம் இல்லாமல் இயங்கக்கூடிய கொண்டேகும் வானொலிப் பெட்டியொன்றை உற்பத்தி செய்து சந்தைக்கு விட்டுள்ளது. நேரடியான மின்சார வசதிகள் கிடைக்காத மின்கலங்கள் வாங்குவதும் சிரமமான இடங்களில், இந்தப் புதிய முறையில் இயங்கும் வானொலிப் பெட்டிக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கும். அதன் பின்பக்கத்தில் உள்ள திருக்கியை ஒரு நிமிட நேரங் கிறுக்கி இறுக வைத்தால் அதன் உள்ளிருக்கும் மின்சார அலகு அந்த வானொலிப் பெட்டியின் இலத்திரனியற் சுற்றுத்தொகுதியும், ஒலிபரப்பு அமைப்பும் 45 நிமிடங்கள் இயங்கவைக்கத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்து கொண்டு இருக்கும். ஒரு கசற்றின் உள்ளே பொருத்தப்பட்ட சின்னஞ் சிறிய மின்பிறப்பாக்கி 10,000 முறைகள் வரை திருகி இயங்கவைக்கக் கூடியதாக நீடித்து உழைக்குமாம். அதன் பின்பு அதனை அகற்றிவிட்டு, புதிய மின் உற்பத்திக் கசற் ஒன்றை இலகுவாக மாட்டிவிடலாம். சிற்றலை, மத்திய அலை, எஃப். எம். ஆகியவற்றில் ஒலிப்பரப்புக்களைத் தெளிவாகக் கேட்கலாமாம். ஒலியும் உயர் தரமானதாக இருக்குமாம்.

ஏற்கனவே றுவாண்டாவுக்கு அனுப்பவென 60.000 வானொலிப் பெட்டிகளுக்கான வர்த்தகக் கோரிக்கை வந்துள்ளதாம். பல அனைத்துலக அமைப்புக்கள் இந்த வானொலிப் பெட்டி மீது உற்சாகங் காட்டியுள்ளன. மின்சாரம் பெற வாய்ப்பும், மின்சாரச் செலவுக்கு வசதியும் அற்ற நிலையில் உள்ள அநேக இடங்களில் வானொலி கேட்டல் பரவ இந்த புதிய உற்பத்தி வானொலிப் பெட்டி மிகவும் உதவும். மின்சாரமும் மின்கலங்களும் உள்ளே வருவதும் தடை செய்யப்பட்டுள்ள வட ஈழ நாட்டிற்குள் அந்த வானொலி வந்தாற் பெரும் மவுசு பெறும் என்பது நிச்சயம். விலை, 25 டொலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளி

# நோவா வீ 1974 சிக்னி

## Nova V 1974 (Cygni)

# அதன் தோற்றமும் மறைவும்

"எமது உயிருக்கு ஆதாரம் சூரியன்;
சூரியனின் ஒளிர்வுக்கு ஆதாரம் அணுசக்தி."

தமிழில்:
கலாநிதி க. சோமாஸ்கந்தன்

விண்ணில் அமைதியாகக் காணப்படும் நட்சத்திரம் திடீரெனச் சூரியனை மிஞ்சிய ஒளிப்பொலிவையும், பேராற்றலையும் வெளிப்படுத்திய பின் தோன்றியவாறே அடங்கிவிடும். இவ்வாறு பேரொளி வீசும் விண்மீன் நோவா எனப்படும். நோவா இலத்தின் மொழிச் சொல். புதியது என்பது அதன் அர்த்தம். தொலைநோக்கிகள் வந்த பின் நோவாக்கள் பற்றிய உண்மை ஓரளவுக்குத் தெரிகிறது. மங்கலாக இருந்த விண்மீன்களே திடீரென ஒளிவீசிய பின் மீண்டும் பழைய நிலைக்குச் செல்கின்றன என்பதே அடிப்படை உண்மை. சாதாரண நோவாக்கள் 8 என்ற தனிப் பொலிவெண் அளவுக்கு ஒளி வீசும். நோவா இன்னுங் கூடிய பொலிவுடன் ஒளி வீசும்போது சுப்பர் நோவா (Super Nova) என்று அழைக்கப்படும். ஒரு சுப்பர் நோவாவின் தனிப்பொலிவெண் 17 வரை போகும். உச்சப் பொலிவு நிலையில் அது சூரியனை விட 100 கோடி மடங்கு கூடிய ஒளி வீசும்.

பேரண்ட வெளியிற் 10 இலட்சத்திற்கு மேலான பால் மண்டலங்கள் (Galaxy) கலக்சி இருப்பதாக ஊகிக்கப்படுகிறது. எமது பால் மண்டலத்தின் அகலம் 100,000 ஒளி ஆண்டு என்பது கணக்கு. இதில் நட்சத்திரங்கள் (Suns & Stars), கோள்கள் (Planets), நுண்கோள்கள் (Asteroids), எரிநட்சத்திரங்கள் (Meteors) என்பனவும் தூசி, துகள், வாயுக்கள் போன்றவையுங் காணப்படுகின்றன. எமது சூரியனும் ஒரு நட்சத்திரமே. சாதாரணமாக எமது கண்ணுக்குத் தெரியும் நட்சத்திரங்களிற் பூமிக்கு மிக அருகில் இருப்பது சூரியனாகும். சூரியன் பூமியைப் போன்ற திடப்பொருள் அல்ல. அங்கு நிலவும் உயர்வெப்ப நிலையால் அது நட்சத்திரங்கள் யாவற்றையும் போன்று வாயு (Gaseous State) உருவிலிருக்கிறது. சூரியனின் வெளிப்புற வெப்பம் 6,000 பாகை சென்ரிகிறேட். பூமிக்கு 93,000,000 மைல் தொலைவிற் சூரியன் இருப்பதால் அதன் தாக்கம் எம்மீது குறைவாகக் காணப்படுகிறது. பூமியை விடச் சூரியன் 1,300,000 மடங்கு பெரியது.



வெள்ளைக்குள்ளனை மையப்படுத்தி நோவாச் சுவாலை கிளம்புகிறது. பெரிய விண்மீன் பக்கலிற் காணப்படுகிறது. சிவப்பு வண்ணத்தில் அணுக்கரு எரிபொருள் காணப்படுகிறது.

எமது மண்டலத்தைத் தொலைநோக்கி மூலம் படம் எடுத்து ஆய்வு செய்தபோது இதுவரையிற் தெரிந்த நட்சத்திரங்களின் எண்ணிக்கை 1,000,000,000. நட்சத்திரங்கள் அனைத்தும் ஒரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தில் இருப்பதில்லை. சூரியனுக்கு அடுத்தபடியாக வெறுங் கண்ணாற் பார்க்கக்கூடிய நட்சத்திரம் அல்பா சென்தோரி (Alpha Centauri) பூமியில் இருந்து 4 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் இருக்கிறது. நட்சத்திரங்கள் வெளிச்சப் புள்ளிகளாக இரவிற் றோன்றுவதன் காரணம் அவை இருக்குந் தூரமே. சென்தோரி போன்றவற்றின் தூரத்தில் எமது சூரியன் இருந்தால் அது ஒரு புள்ளியாகவே தோன்றும். நட்சத்திரங்கள் சிறியதும், பெரியதும், மிகப் பெரியதுமாகக் காணப்படுகின்றன. நட்சத்திரங்கள் வாயு உருண்டையாக (Ball of Gas) இருக்கின்றன.

நட்சத்திரங்களிற் காணப்படும் வாயுக்களிற் பெரும்பகுதி ஹைதரசன் வாயு ஆகும். ஹீலியம், நைதரசன், உயிர்வாயு, இரும்பு, நிக்கல், சிங்க், நியன், மக்னீசியம் போன்றவையும் வாயுக்களாக அங்கு இடம்பெறுகின்றன. சூரியனைப் போன்று நட்சத்திரங்கள் பெரும் வெப்பத்தையும், ஒளியையும் வெளியிடுகின்றன. வெப்ப அளவுகள் நட்சத்திரங்களின் பருமனைப் பொறுத்தது. அவை வெகு தூரத்தில் இருப்பதால் வெப்பத்தை எம்மால் உணர முடியவில்லை. நட்சத்திரங்களின் தோற்றமும், வளர்ச்சியும் மிக மெதுவாக நடக்கின்றன. அவற்றின் வளர்ச்சிக் காலம் பல மில்லியன் வருடங்களாகும். இன்று காணப்படுகின்ற நட்சத்திரங்களில் அவற்றின் தோற்றம், வளர்ச்சி, இறுதிக் கட்டம் ஆகியவற்றின் ஒவ்வொரு நிலைக்கும் உதாரணங்கள் காணப்படுகின்றன. புதியவை பிறக்கும் வாய்ப்பும் உண்டு.

சூரியனும், வேறு நட்சத்திரங்களும் வெளியிடும் வெப்பமும், ஒளியுஞ் சாதாரண எரிபொருளினால் ஏற்பட்டதல்ல. அணுசக்தி ஒன்றினாற்றான் அதைச் சாதிக்க முடியும். சூரியனிற் காணப்படும் வாயுக்களிற் பெரும்பகுதி ஹைதரசன், ஹீலியம் என்பனவாம். மூன்று ஹைதரசன் அணுக்கள் பிணைந்து ஓர் எடை கூடிய ஹீலியம் அணுவாக உருப்பெறுகின்றது. ஒரு ஹைதரசன் குண்டு வெடிக்கும் போதும் இதுதான் நிகழ்கின்றது. காபன் சுற்று (Carbon Cycle) அணுப் பிளவும் நடப்பதாக அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இந்தச் சுற்றில் நைதரசன், மற்றும் உயிர்வாயு அணுக்களும் இணைகின்றன. ஆகவே சூரியன் உட்பட நட்சத்திரங்கள் யாவுந் தமது வெப்பம், ஒளி ஆற்றல் யாவற்றையும் அணுசக்தி மூலம் பெறுகின்றன. அணுக் கருவினைத்தான் அடிப்படைக் காரணம். சூரியனும் மற்றெல்லா நட்சத்திரங்களும் தம்மிடமுள்ள ஹைதரசன வாயுவை எரிக்கின்றன.

நட்சத்திரங்களின் ஒளியின் அலை நீளம் அதன் வெப்ப நிலைக்கு ஏற்றதாக இருக்கிறது. விண்மீனகளின் வெப்பநிலை அதன் நிறமாலையைப் பாதிக்கின்றது. நீல வண்ணம் உச்ச வெப்பத்தையும் சிவப்பு, மஞ்சள் வண்ணங்கள் குறைந்த வெப்பநிலையையுங் காட்டுகின்றன. பரப்பளவிற் பெரிய நட்சத்திரங்கள கூடிய வெப்பமாக இருக்குமெனச் சொல்வதற்கில்லை. பரப்பளவிற் பெரிய விண்மீன்கள், பூதங்கள எனப்படும். பூதங்களிற பெரிய மாபூதங்களும் உண்டு. அல்டேபாரன் (Aldeparan) என்ற நட்சத்திரம் சூரியனிலும் 50,000 மடங்கு பெரியது. ஆனால் வெப்பமற்ற சிவப்பு நிறம் உள்ளது. ஒறியோன் (Orion) ஒரு சிவப்பு மாபூதம். அது சூரியனிலும் 30,000,000 மடங்கு பெரியது. நட்சத்திரங்களின் நிறங்கள் தொலைநோக்கி மூலம் பார்க்கும்போது புலப்படுகின்றன. நீலம் 30,000 பாகை செல்சியசுக்கு மேற்பட்ட வெப்பத்தையும், சிவப்பு 3,500 பாகை செல்சியஸ் வெப்பத்தையுங் குறிக்கும். இடையில மஞ்சள, வெள்ளை போன்ற நிறங்கள உண்டு.

விண்மீன்கள் ஏன் பகலிற் தெரிவதில்லை, இரவில் அவை ஏன் கண் சிமிட்டுகின்றன என்று கேள்விகள் கேட்கப்படுகின்றன. பகலிலும் நட்சத்திரங்கள் ஒளிவீசுகின்றன. சூரியனின் ஒளியால் அவை மறைக்கப்படுகின்றன. பூமியின் வளியிலுள்ள தூசி, துகள் போன்றவை சூரிய வெளிச்சத்தை எதிரொளிக்கின்றன. இதனாலும் விண் மீன்களைப் பார்க்க முடிவதில்லை. பூமியின் வளியில் 30,000 — 45,000 அடிக்கு இடைப்பட்ட உயரத்தில் வெப்ப வேறுபாடும், நீராவியுங் காணப்படுகின்றன. இதற்கிடையால் நட்சத்திர ஒளி வரும்போது ஒளிக் கதிர்கள் ஆட்டங் காண்கின்றன.

ஒரு நட்சத்திரம் அதிலுள்ள எல்லா ஹைதரசன் அணுக்களும் ஹீலியம் அணுக்களாக மாற்றப்பட்டவுடன் பருமனில் மிகவுஞ் சுருங்கி ஒளியிழந்த சிறிய கோளாக மாறிவிடுகிறது. இந்த நிலையில் அது வெள்ளைக் குள்ளன் (White Dwarf) என்று அழைக்கப்படும். அறிஞர்கள் இவற்றை வான் வெளி எரி சாம்பர் என்பர். வெள்ளைக் குள்ளர்கள் நட்சத்திரங்களின் படிமுறை வளர்ச்சியில் கடைசிக் கட்டத்தில் இருக்கின்றன. இவை பரிமாணத்திற் சுருங்கியும், மேற்புறத்தில் வெண்மையாகவும் இருக்கின்றன. கோள்களிற் பெரிய தான வியாழனுடன் ஒப்பிடும் போது வெள்ளைக் குள்ளர்கள் சிறியதாக இருப்பினும் பொருண்மையில் வியாழனை விட 1,000 மடங்கு அதிகமாக இருக்கலாம். இவ்வுதாரணத்தின் சாரம்: வெள்ளைக் குள்ளர்கள் மிகவும் நசுக்கப்பட்டுச் சிறியதாக்கப்பட்ட விண் மீன்கள். எனினும் வெள்ளைக் குள்ளர்களுக்கு மகத்தான நிறை ஈர்ப்பு விசை உண்டு. விண்மீன்களின் இறுதிநிலை என அவற்றைக் கூறினாலும், பொலிவுள்ள நட்சத்திரங்களைப் பாதிக்குந் தன்மை வெள்ளைக் குள்ளர்களுக்கு உண்டு.

நோவா போன்ற பல்லாயிரம் மடங்கு பெரிய ஒளியும், ஆற்றலும் பீறிட்டுக் கிளம்புவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. நட்சத்திரங்களில் நிகழும் அணுப் பிளவுகளால் (Nuclear Reactions) தயாராகும் ஒளியும், ஆற்றலும் வெளியேறும் வேகத்திற்கு மேலதிகமாக இருக்கும்போது நோவா தோன்றுகின்றது. நோவா ஒரு பாரிய திடீர் அணுகுண்டு வெடிப்புக்குச் சமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நோவா ஏற்படும் விண் மீன் சிதறி அழிவதில்லை. மேற் பகுதி வாயுக்கள் மாத்திரம் வெளி யேற்றப்படுகின்றன. சில நட்சத்தி ரங்கள் பல தடவைகள் நோவா நிலைஅடைகின்றன.சுப்பர் நோவா நிலையில் சிதற வாய்ப்பு உண்டு. 1054 இல் நிகழ்ந்த சுப்பர் நோவா சிதறலின் பாகங்கள் ரிசப இராசி யில் இன்றுங் காணலாம்.

அடுத்தபடியாக நோவாக்கள், இரண்டு நட்சத்திரங்கள் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நட்சத்தி ரங்கள் ஒன்றை ஒன்று சுற்றும் போது ஏற்படுகின்றது. இரண்டு நட்சத்திரங்கள் ஒன்றை ஒன்று சுற் றுவதை இரட்டை ஒழுங்கு என் பர் ( Binary System ). அனேகமாக இந்தச் சோடி நட்சத்திரங்களில் ஒன்று வெள்ளைக் குள்ளனாக இருக்கின்றது. அடுத்தது சூரியனி லும் சற்றுப் பெரியதாகவும், வெப் பங் கூடியதாகவும், வெண்- நீல வண்ணம் உள்ளதாகவும் பெரும்பா லும் அமைகின்றது. உதாரணமாக சீரியஸ் பகுதியில் இரண்டு விண் மீன்கள் இவ்வாறாகச் சுற்றிக் கொண்டு இருக்கின்றன. காலத் திற்குக் காலம் ஒன்றை ஒன்று மறைத்துக் கிரகணம் உண்டாக்கு வதும் உண்டு.

மேற்கூறியது போல் இரண்டு விண்மீன்கள் ஒன்றை ஒன்று சுற் றும்போது சில சமயம் நோவா ஏற்படுவதற்குரிய காரணத்தைக் கடந்த 40 வருட ஆய்வுகள் விளக் குகின்றன. ஆய்வுக்கு எடுக்கப் பட்ட இரட்டையர்கள் ஒன்றை ஒன்று சுற்றிவர 4 மணி 39 நிமி டம் எடுப்பதாக அமெரிக்காவின் பாலொமார் மலை அவதான நிலை யந் தெரிவிக்கின்றது. வெள்ளைக் குள்ளனுக்கு மகத்தான ஈர்ப்பு விசை உண்டென்பது நாம் அறிந் ததே. இதன் காரணமாகப் பெரிய விண் மீனின் பொங்கும் வாயுக்க ளைத் தன்பால் இழுக்குஞ் சக்தி வெள்ளைக் குள்ளனுக்கு உண்டு. வாயுக்களின் ஒரு பகுதி வெள் ளைக் குள்ளன் மீது படியப் பெரும் பகுதி வாயுக்கள் இரண்டு நட்சத்திரங்களையும் ஒன்றாக மூடிப் போர்த்துக் கொள்ளும். இந்தப் போர்வைக்குள் இரண்டுந் தொடர்ந்து சுற்றிக் கொண்டிருக் கும். அச்சமயத்தில் அணுக்கருப் பிணைவும்- பிளவும் ஏற்படுவதாக வும், ஒளியும்- ஆற்றலும் வெளியேறு வதாகவுந் தெரிவிக்கப்படுகிறது. சில சமயங்களில் இதைப் பூமியிலிருந்து வெறுங் கண்ணாற் பார்க்கலாம் என்றுந் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நோவா நெடுங் காலம் நிலைப்பதில்லை. சக்தி செலவழிந்த பின் பழைய நிலைக்குத் திரும்பி விடும். சோடி அமைப்பில் ஒன்றா கிய பெரிய நட்சத்திரம் அமைதி அடைந்துவிடும். பழைய வெள் ளைக் குள்ளன் தொடர்ந்து அப்ப டியே இருக்கும்.

வீ 1974 சிக்னி என்று பெயரி டப்பட்ட நோவா 19 பெப்ரவரி 1992 இல் ஆரம்பித்து 1993 இறு திப் பகுதியில் தணிந்துள்ளது. ஆரம்ப நாட் டொட்டு முடிவுறும் நாள் வரை இது பூமியிலிருந்தும், விண்ணிலிருந்தும் நன்கு அவதா னிக்கப் பட்டுள்ளது. இதற்கு முன் ஒரு நோவா இவ்வளவு நுணுக்கமாக அவதானிக்கப்பட வில்லை. இதுவரை காலமும் நோவாக்கள் பற்றி நிலவிய கருத் துக்களிற் பெரும் பகுதியை ஆய்வு முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. பெரிய நட்சத்திரத்தின் வாயுவை வெள்ளைக் குள்ளன் தன்பால் இழுப்பதையும், அங்கு நிலவும் அபார ஈர்ப்பு வாயுவை நசுக்குவ தால் வெடிப்புக்கு வழி ஏற்பட் டுள்ளதையும் அறிஞர்கள் கண்டு ணர்ந்துள்ளனர். அத்துடன் பூமி யில் நடத்தப்பட்ட ஹைதரசன் குண்டுவெடிப்பின் போது கிளம்பிய புகையின் வடிவத்தில் நோவாச் சுவாலை இருந்ததாகவுந் தெரிவிக் கப்பட்டுள்ளது. மேலும் வெள் ளைக் குள்ளன் தன்பால் இழுத்த வாயுக்கள் பூமியிலும் நூறு மடங்கு கூடியதென அதே விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்

நோவா நிகழும் போது வெள் ளைக் குள்ளனும் தனது பொரு ளைப் பங்களிப்புச் செய்கின்றது. இதனால் அதனுடைய பருமன் குறையும். ஒரு நோவாவின் காலம் வெள்ளைக் குள்ளனின் பரு மனிற் தங்கி இருக்கிறது. பெரி யவை வேகமாக வாயுக்களை எரித் துவிடும். சிறியவை மெதுவாகச் செல்லும். சிக்னி 18 மாதங்கள் நிலைத்துள்ளது. இரட்டை அமைப்பு விண்மீன்களில் நோவா காலத்திற்குக் காலம் பல தடவை தோன்ற முடியும். ஒவ்வொரு முறையும் வெள்ளைக் குள்ளன் உருவத்தில் சிறுக்கும், இறுதியில் அதற்கு என்ன நடக்கும் என்ப தற்குச் சிக்னி நோவா விடை பகர வில்லை. விடை தெரியா விண் வெளி மர்மங்களில் இதுவும் ஒன்று.

ஆதாரம்: சயன்சி:பிக் அமெரிக்கன், சனவரி 1995.

★

### அரண்மனையில் தனியறைகள் வாடகைக்கு

*முதலில் எலிசபெத் அரசி பக்கிங்காம் அரண்மனையை உல் லாசப் பயணிகள் பார்வையிடத் திறந்துவிட்டார். இதன் மூலம் மேலதிக வருவாய் சிறிதளவு கிடைத்தது. இப்பொழுது இளவ ரசி டயானா, மாகிறற், மைக்கல் ஆகியோரின் (ஹென்சிங்ர னிலும் ஹம்டன் கோட்டிலுமுள்ள) அரண்மனைகளின் 60 தனி யறைகளை விடுதி வேண்டுவோருக்கு வாடகைக்கு விட முன் வந்துள்ளனர். இவற்றிலிருந்து மாதம் 300 பவுண் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இந்தத் தனியறைகள் அரச குடும்பத்தினரின் பகுதியில் இருந்து தனிப்படுத்தப்பட்டிருப்ப தோடு காவற் படை முகாமினாலும் (அரச குடும்பப் பிரிவு) சூழப் பட்டிருப்பதால் வாடகைக்கிருப்போர் அரச குடும்பத்தினரோடு தொடர்பு கொள்ளவோ, கடித முகவரிகளை அரச மனைப் பெய ரிட்டுப் பயன்படுத்தவோ வாய்ப்பில்லை. இது ஒருவகையில் ஏமாற்றந்தான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிலின் எலும்புகள்



ஐஸ்லாந்து நாட்டின் ஒரு காவியம்; வைக்கிங் என்னும் போர்த்திறன் மிக்க வீரன் ஒருவனின் அசாதாரணமும், குரூரமும் வாய்ந்த முகத் தோற்றம் பற்றியும், கோடரியால் பிளக்க முடியாதிருந்த மண்டையோடு பற்றியும் கூறுகிறது. இந்த வீரன், 'பகெற்'றின் நோயால் (Paget's Disease) பீடிக்கப்பட்டிருக்கலாம்.

தமிழில் : சொக்கன்

## 'பகெற்'றின் நோய்

**1854** இல் விக்ரோறியா மகாராணியின் சிறப்பு மருத்துவராகவும், சில ஆண்டுகளுக்குப் பின் வேல்ஸ் இளவரசரின் மருத்துவராகவும் சேர் ஜேம்ஸ் பகெற் (Sir. James Paget) என்பவர் பணிபுரிந்தார். இவருடைய புகழுக்கு அடிப்படை இவர் பல நோய்கள் பற்றி அளித்துள்ள விளக்கமாகும். இவற்றுள்ளே எலும்புகள் விகாரமடைதல் (Osteitis Deformans) தொடர்பான நோயின் விளக்கம் மிகப் பிரபலமானது. "இந்த நோயானது பெரும்பாலும் 40 வயதுக்குப் பின்னரே தோன்றும். இதன் பரவுகை மிக மெதுவாகவே நிகழும். பொதுவான உடல் நலத்துக்கு இது பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தாது. தொடர்ந்து பல ஆண்டுகள் நீடிக்கும் உடலிலுள்ள எலும்புகளின் வடிவ மாற்றம், அளவுப் பருப்பம் என்பனவே இதன் அறிகுறிகள். உடலுறுப்புக்கள் விகாரமடைந்த போதிலும் அவை தமது வலுவிற் குறைவதில்லை. முண்டத்தைத் (Trunk) தாங்கும் சக்தி உடையனவாகவே இருக்கும்" என்பது இந்நோய்க்குப் பகெற் தரும் விளக்கம். இந்நோய் பகெற் அவர்களின் பெயராலேயே (Paget's Disease) வழங்குகிறது.

சாதாரண எலும்புகள் எட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தாமாகவே தம்மைப் புதுப்பித்துக் கொள்கின்றன. மீளுருவாக்கஞ் (Rebuilding) செய்கின்றன. ஆனால் பகெற்றின் நோய் பீடித்தவர்களுக்கு எலும்பு வளர்ச்சியும், புதுப்பிப்பும் மிக விரைவாக நடக்கின்றன. இதனாற் புதிய எலும்புப் படிவுகள் Layers Of The New Bone) ஒழுங்கற்ற முறையில் அமைவதால், அவை சாதாரண எலும்புகளிலும் அளவாற் பருக்கின்றன. இவ்வுருப்பருப்பத்தால் நோய்த் தடுப்பாற்றல் குறைகிறது.

## பகெற்றின் நோய் ஒரு குடும்ப வியாதி

'எக்ஸ்' நுண்கதிர் (X-rays) வாயிலாகவும், இரத்தப்பரிசோதனை வாயிலாகவும் எலும்புகளை உருவாக்கும் கலங்களைத் தாக்கும் எரியத்தினை இனங்காணலாம். சிறுநீர்ப் பரிசோதனை மூலம் எலும்புடைவுக் காரணியின் அளவினைக் கண்டு கொள்ளலாம். எலும்புருவாக்கமும், உடைவும் பெருமளவு பாதிக்காது அவை மெதுவாக நிகழ (Calcitonin, Disphosphonates) மருந்துகளைப் பயன்படுத்துகின்றனர்.

பகெற்றின் நோய் மிகப் பழைமையானது. எகிப்திலே கண்டெடுக்கப்பட்டதும், சுமார் கி. மு. 1000 ஆண்டைச் சேர்ந்ததுமான, மிகத்தடித்து வைரம் ஏறிய மனித மண்டையோட்டை ஆராய்ந்து, அதற்குரியவனுக்கு 'பகெற்றின் நோய்' இருந்தது என்ற உண்மை ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

## குடும்பக் கதைகள்

நோர்ஸ் காவியங்கள் எனப் புகழ் பெற்ற ஐஸ்லாந்தின் இலக்கியப் படைப்புக்களில் உலாவரும் வைக்கிங் குல வீரருள்ளே தலை சிறந்தவன் எகில். வைக்கிங்களின் வீரசாகசச் செயல்களிலே பங்கு கொண்டு, தலைமை தாங்கி நோர்வே, சுவீடன், டென்மார்க், கிழக்கு பால்ரிக்நாடுகள், இங்கிலாந்து, சாக்சனி, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளிலெல்லாம் சாதனைகள் புரிந்து, தன் புகழ் நிறுவியவன் என்பதோடு, சிறந்த கவிஞனாகவும் அவன் விளங்கினான். கடும் போக்கினன், எனினும் அற உணர்வும் வாய்ந்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 900 இல் வாழ்ந்த எகி லின் வீர சாகசங்களுக்கிடையே அவனது சில நடத்தைகளும், குண வியல்புகளும் அவனை மிக ஆழமா கப் பாதித்தும் வந்துள்ளன. சாத னைகளும் சமூக மதிப்பிற் தளப்ப மின்மையுங் கொண்டவனாயினும், அவனுடைய வல்லுணர்ச்சிப் போக் குகளும், உருவத் தோற்றமும் அவனை நேரிற் கண்டவர்களுக்கு அதிர்ச்சியையும், அச்சத்தையும் அளித்தன. அவலட்சணத் தோற் றம் வாய்ந்த அவன், எளிதிற் பொறுமை இழப்பவனாயும், சிந்த னையில் இடைக்கிடை தன் மறதி கொண்டவனாயும் சித்திரிக்கப் பட் டுள்ளான். இவை இவனுடைய தந்தை, பேரன் ஆகியோரிலுங் காணப்பட்டவைதாம். இவர்கள் அச்சத்தை ஊட்டும் பாரிய உருவி னர். ஆனால், இவர்களின் இனத் தவர்களோ சிவந்த நிறமும், அழ கும் வாய்ந்தவர்கள்.

வயது செல்லச்செல்ல எகில் செவிப்புலனையும், கட்புலனையும் படிப்படியாக இழந்து வந்தான், உடலின் சமநிலை தளம்புவதால் காரணமின்றியே தரையில் அடிக் கடி விழுந்தெழுந்தான். கால்கள் குளிர்ந்து விறைப்படைதல், தொடர்ச்சியான கடுந்தலைவலி, உடற் தளர்ச்சி என்பனவும் அவ னைப் பாதித்தன, அவனுடைய மண்டையோட்டின் வடிவ விகா ரம், முகத்தோற்றத்தின் குரூரத் தன்மை என்பனவும் காவியங்க ளில் விரிவாக வருணிக்கப்படுகின் றன. எகிலின் எலும்பின் மீளுரு வாக்கம் அசாதாரணமாக விரைந்து நிகழ்ந்து வந்ததன் வெளிப்பாடு களே இந்த நோய்க்குறிகள் என்று முடிவு கொள்ள வைக்கின்றன,

எகில், தனது இறுதிநாள்க ளைத் தனது வளர்ப்பு மகளான தோடிஸ் என்பவளுடன் கழித் ததாகத் தெரிகிறது. ஐஸ்லாந்தின் இன்றைய தலைநகரான றேக் ஜவிக்கிற்கு அதிக தொலைவில் இல்லாத மொஸ்பெல் என்ற விவ சாயப் பண்ணையில் அவன் தனது கடைசி மூச்சை விட்டான். அங்கு ஒரு மண்மேட்டில் அவனது சட லம் புதைக்கப்பட்டது. ஆனால் கி. பி. 1000 இல் ஐஸ்லாந்து கிறிஸ்தவமயப்பட்ட பொழுது சடலம் பழைய இடத்திலிருந்து எடுக்கப்பட்டு, தோடசாலும் அவள் கணவன் கிறிமாலும் விவசாயப் பண்ணையிலேயே இருந்த, சிறிய கிறிஸ்தவ தேவாலய இடுகாட்டில் புதைக்கப்பட்டது.

ஆனால் எகிலின் அஸ்திக ளுக்கு அப்பொழுதும் நிரந்தர ஓய்வு கிடைக்கவில்லை. 150 ஆண்டுகளுக்குப் பின்பு முன்னைய தேவாலயத்திற்கு 500 மீற்றர் தொலைவில் மற்றுமொரு தேவா லயம் எழுந்தது. ஸ்கப்ரி என்னும் எகிலின் பிரசித்தி பெற்ற கால் வழியினர் ( Descendant ) ஒருவர் எகிலினுடைய மண்டையோட்டை யும், எலும்புகளையும் முன்னைய புதைகுழியிலிருந்து கிளப்பிப் புதிய தேவாலயததுக்குக் கொண்டு வந்தார். எகிலினுடைய காவியம் ஸ்கப்ரியின் கண்டு பிடிப்புப் பற்றி அசாதாரண கதை ஒன்றினைக் கூறுகின்றது.

தேவாலய பலிபீடத்தின் கீழே எலும்புகள் சில கிடக்கக் காணப் பட்டன. அவை சாதாரண மனித எலும்புகளிலும் மிகப் பெரியவை. தேவாலய மதகுருவும் விவேகியுமான ஸ்கப்ரி தொற்றின் சன் எலும்புகளோடு கிடந்த மண்டையோட்டினை எடுத்துத் தேவாலயத்தின் வேலியிற் கொளு வினார். அதன் பிரமாண்டமும, வைரமும் ஸ்கப்ரிக்கு வியப்பளித் தன. அவற்றைப் பரிசோதிகக நினைத்த அவர் பாரமான கோடரி ஒன்றை ஒரு கையினாற் தூக்கி மண்டையோட்டைக் கொத்தினார். ஆனால் மண்டை யோடு உடையவுமில்லை, பிளவு படவுமில்லை. கொத்திய இடத் தில் சிறிய சிராய்வும் வெண் புள்ளி ஒன்றும் தோற்றின. மண் டையோட்டின் மீது இன்னமும் தோலுந் தசையும இருந்தன. எனினும் இந்தக் கதையினை எவ ரும் நம்பவில்லை. ஏனெனில் 150 ஆண்டுகளுக்கு முற்பட்ட மண்டையோடு கோடரியின் கொத்துதலுக்குத் தாக்குப் பிடித்து உடையாதிருப்பது நடக்க முடியாதது.

ஆனால் இன்றைய மருத்துவ அறிவானது, மேற்குறித்த நிகழ் வினைப் பொய்யானதென்றோ புனைகதையென்றோ தள்ளி விடத் தயாராகவில்லை. எகிலின் காவியங்கள் அவனுடைய மண்டை யோட்டினை '' வெளிப்புறம் முழு வதும் சிப்பிஓடு போல வைரித் துக் காட்சிதந்தது '' என வருணித் துள்ளமை கவனத்தை ஈர்ப்பதா கும், '' வைரித்து இடையிடையே பள்ளம் விழுந்து உழவுசால் போலக் கோடுகள் அமைந்து '' விளங்கிய மண்டையோடு என்னும் பொழுது அந்த விபரணம் முழு வதும் மனித மண்டையோட்டில் மட்டுமே காணத்தகும் இயல்புக ளாகும். இவை கொண்டு எகி லுக்கு 'பகெற்றின் நோய்' பிடித் திருந்தது எனறே கொள்ளலாம். பகெற்றின் நோயாளர் 15 பேர் களில் ஒருவரின் மண்டையோட் டில் இவ்வியல்புகளைக் காணக் கூடியதாகவுள்ளது.

இறுதிக் காலத்தில் எகில் முழுக் குருடனானான். மாரிக்காலக் குளிர் நாள் ஒன்றின்போது கணப்பருகிற் குளிர் காய விரும்பி கணப்பி ருந்த இடம் நோக்கி அவன் சென்ற பொழுது கணப்பு நெருப்பின் மீதே கால் வைக்க இருந்தான். கணப்பருகில் இருந்த பெண் அவனை எச்சரித்தாள். எகில் திரும்பிச் சென்று தனது இருக்கையில் இருந்து கொண்டு கவி இசைத்தான்.

'' நெருப்பின் அருகே
தள்ளாடியபடி சென்றேன்;
பெண்களிடம்
இரக்கத்தை எதிர்பார்த்து
வேண்டினேன்;
எனது போர், கொடுமை!
மிகக் கொடுமை.
அது எனது புருவவெளியில்
நடந்தது. ''

இப்பாடலின் பொருள் தெளிவாயில்லை. எனினும், '' எனது விழிகள் சந்திக்கும் இடத்தில் நான் வேதனையைத் தாங்கிக் கொண்டேன் '' என்று பொருள் கொள்ளலாம். இதன் மூலம் அவ்வேளையில் அவனுக்குத் தலைவலியிருந்தது என்று ஊகி ♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாம், பகெற்றின் நோயாளிகளுக்கு அசாதாரண பருப்பத்தையடையும் முதுகந்தண்டெலும்பு தலையிடியை ஏற்படுத்துவதுண்டு. இருதயத்தில் ஏற்படுஞ் சேதமும் தலைவலிக்கு வழிவகுக்கும். மற்றொரு கவிதையிற் தனது கால்களில் உண்டாகும் குளிரையும், விறைப்பையும் அவன் விபரிக்கிறான்.

"எனக்கு இரு கால்கள்
குளிர் விதவைகள்,
பாலுணர்ச்சி மரத்த கிழவிகள்
தீக்கொழுந்தை
வேண்டி நிற்பவர்கள்."

குளிரால் விறைத்த கால்களும் குளிர்(ச்சி)ப்பெண்களும் என்ற இரு நிலைப்பட்ட ஏக்கத்தால் எகில் வாடுவதை இப்பாடல் வெளிப்படுத்துகின்றது. வளைந்த முதுகந்தண்டெலும்பு, தடித்த வளைவுடன் கூடிய கை, கால் எலும்புகள் காரணமாக நடையிற் சமநிலையின்மையும், காரணமின்றித் தரையில் விழுந்தெழலும் எகிலுக்கு ஏற்பட்டிருக்கலாம். இவையும் பகெற்றின் நோய்க்கான அடையாளங்களே. ஆக எல்லா வகையாலும் ஆராய்ந்து பார்க்கையில் எகில் பகெற்றின் நோய்க்கு ஆளானவன் என்றே கொள்ளலாம்.

அண்மையில் மேற்கொண்ட ஆய்வுக்கு முன்பு ஐஸ்லாந்தில் இந்நோய் இல்லை என்ற முடிவுக்கே வந்தனர். ஆனாற் கடந்த பத்தாண்டுகளாக இந்நோயானது சிறிது சிறிதாக அங்கு பரவி வருகிறது என்பது தெளிவாகத் தெரியவருகிறது. ஐஸ்லாந்துத் தலைநகர வைத்தியசாலையிலும், அந்நாட்டுத் தேசியப் பல்கலைக்கழக வைத்தியத்துறையிலும் வைத்திய நிபுணர்கள் 1991 தொடக்கம் பகெற்றின் நோயாளருக்குச் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

எனவே, ஐஸ்லாந்தின் காவியங்களின் செய்திகள் மூலம் 1000 ஆண்டுகளுக்கு மேலாகப் பகெற்றின் நோய் ஸ்கன்டிநேவியத் தீபகற்பத்தில் நிலவியது என்பதும், எகில் அந்நோயால் பீடிக்கப்பட்டவன் என்பதும் தெளிவாகின்றன.

சயன்ரிஃபிக் அமெரிக்கன்
சனவரி 1995

# நெப்போலியன் ஆட்சிக் கால எகிப்து

**நெப்போலியன் போனபார்ட் எகிப்தைக் கைப்பற்றிய போது, பிரான்ஸ் நாட்டு அறிஞர்கள் நைல் நதிக்கரைக்குச் சென்றனர். அவர்கள் அந்நாட்டின் சிறப்பை ஐரோப்பியர் அறியவைத்தனர்.**

*தமிழில்:* திரு. கந்தசாமி

1798 யூலை முதலாம் நாள் 36,000 இராணுவ வீரர்கள் கொண்ட பிரான்சிய அணியொன்று நெப்போலியன் தலைமையில் எகிப்திய துறைமுகமான அலெக்சாந்திரியாவில் தரையிறக்கப்பட்டது. எதிர்ப்புக்கள் எதுவும் இல்லாத நிலையில் அதே மாதம் 21 ஆந் தேதி அங்கு ஆட்சி புரிந்த மமலுக் ஆட்சியாளரை நெப்போலியன் வெற்றி கொண்டான். ஆயினும் சில தினங்களுள் நெப்போலியனுடைய கடற்படை நெல்சனாற் தோற்கடிக்கப்பட்டது. அங்கு சென்ற படையினர் வெளியேற வழியின்றி அங்கேயே தங்கிவிட்டனர். நெப்போலியன் தடைகளை மீறிப் பிரான்சுக்குத் திரும்பினான்.

நெப்போலியன் அழைத்துச் சென்ற விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், கல்விமான்கள் ஆகியோரடங்கிய 151 பேரைக் கொண்ட குழு பல்வேறு விடயங்களில் ஆய்வுகளை நடத்தி முடிவுகளை மேற்குலக நாடுகளுக்கு அனுப்பி வைத்தனர். இவர்கள் கண்டுபிடித்தவற்றுள் மிகவும் முக்கியமானது இப்போது பிரித்தானிய அரும் பொருட்காட்சிச் சாலையில் உள்ள "றொசிற்றா கல்" ஆகும். பிரித்தானிய இராணுவம் எகிப்தில் இருந்து பிரான்சியரை 1801 இல் வெளியேற்றிய போது இந்தக் கல் பிரித்தானியரிடங் கையளிக்கப்பட்டது. எகிப்தில் தங்கியிருந்த மூன்று ஆண்டுகளிற் பிரான்சிய அறிஞர்கள் எகிப்தின் கட்டடக்கலை,



வெற்றி வளைவின் ஊடாகத் தீபிய அரசன், பரிவாரங்கள் புடைசூழச் செல்லுங் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரினங்களின் இயல்பு ஆகிய தொடர்பாகப் பல வழிகளில் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

1809-க்கும், 1828-க்கும் இடையில் வெளியிடப்பட்ட எகிப்து நாட்டு விவரணம் என்ற பிரெஞ்சு நூலின் தொகுப்பு மிகப் பெறுமதியான ஆவணங்களைக் கொண்டதாகும். எகிப்தின் புராதன சின்னங்களையும், மக்களின் வாழ்க்கை முறைகளையும் இந்நூலின் மூலமாகவே மேற்கு நாட்டினர் தெரிந்து கொண்டனர். நைல் நதிக்கரையோரமாகக் காணப்பட்ட ''கார்ணக்'' ''லக்சோர்'' எனும் இரண்டு பாரிய ஆலயங்கள் பற்றிய குறிப்புக்கள் இந் நூலில் அடங்கியுள்ளன. தீபிஸ், தெந்தர, மெம்பிஸ், கீசா ஆகிய நகரங்களில் இவர்கள் அகழ்வு வேலைகள் மேற்கொண்டு பல உண்மைகளை இந் நூலில் வெளியிட்டுள்ளனர். இவர்கள் வரைந்துள்ள ஓவியங்கள் அந் நாட்டின் அன்றைய நாகரிகத்தை மிகவுந் துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கின்றன. இவை இல்லாதிருப்பின் இயற்கை அழிவுகளாற் பின் சேதமுற்றுப்போன ஒரு நாட்டின் நாகரிகத்தை இன்று எவரும் அறிய முடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.

நெப்போலியன் இத்தகைய திறமைசாலிகளை அழைத்துச் சென்றது அந்த நாட்டைப் பல வழியிலும் வளப்படுத்தும் நோக்கம் கொண்டதாய் இருந்துள்ளது. செங்கடலையும், மத்திய தரைக் கடலையும் இணைக்குங் கால்வாய் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது இவர்களின் ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது. இந்த அறிஞர்கள் எகிப்துக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது எகிப்து பற்றி எதுவித முன்னறிவும் அற்றவர்களாகவே இருந்துள்ளனர். அ... அவர்களுடைய ஆராய்ச்சிக்கு கூடிய காலந் தேவையாயிற்று. சிறிய கட்டட அமைப்பை வழிபாட்டிடமென்றும், நடுத்தரமானவற்றை ஆலயங்கள் என்றும், பெரியனவற்றை அரசமாளிகைகள் என்றும் ஆரம்பத்தில் இவர்கள் கருதினர். அரசர்களின் சிலைகளிற் காணப்பட்ட கிரீடங்களை ஒருவகைத் தலையலங்காரம் எனவும் எண்ணினர். சிலைகளிற் காணப்பட்ட வரிவடிவங்கள் விளங்கிக்கொள்ள முடியாதனவாய் இருந்தன. றொசிற்றா கல்லிற் காணப்பட்ட சித்திரம், தெமொற்றி வரிவடிவம், கிரேக்கவரிவடிவம் என்பன தலமி என்பவருடைய பெயரைக் குறிப்பன என்பதை 1822 ஆம் ஆண்டிலேயே அறிய முடிந்தது. கானலைப் பற்றி ஆராய்ந்த ''மங்கே'' என்ற விஞ்ஞானி அடிவானத்துக்கு அப்பால் இருந்து வெளியேறிப் பூமியை அடைந்த ஒளிக் கற்றைகள் மணற்பரப்பின் வெப்பம் மிகுந்த பகுதியிற் பட்டு மீள்வதினால் ஏற்படும் தோற்றமே அதுவாகும் என 1798 இல் கூறியிருந்தார். இரசாயன மாற்றங்கள் தொடர்பாகச் சில கொள்கைகளை பாத்லெட் என்பவர் வெளியிட்டார். உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சியிலும் இவர்களிற் சிலர் ஊக்கங் காட்டினர். பாறைகளின் அமைப்பை ஆராய்ந்த இவர்கள் மிகவும் உபயோகமான 100 படங்களை வரைந்துள்ளனர். இயற்கை அமைப்பினைப் பொறுத்தே ஒரு நாட்டின் நாகரிகம் வளர்கிறது என்பதை இவர்கள் வலியுறுத்தி உள்ளனர். எகிப்திய நாகரிக வளர்ச்சிக்கு நைல் நதியே முழுமையான காரணமாக அமைந்தது என்பது இவர்களின் முடிவாகும். மருத்துவத் துறையில் இவர்கள் காட்டிய ஆர்வம் பல நோய்களை இனங்கண்டு அதற்குப் பரிகாரங் காணவும் காரணமாய் அமைந்தது. பிளேக், காய்ச்சல், ஈர்ப்புவலி, மஞ்சட் காய்ச்சல், குட்டரோகம், யானைக்கால் நோய் ஆகியவற்றின் தன்மைகளை ஆராய்ந்து அவற்றைக் குணமாக்க வழிவகைகளையும் அறிந்திருந்தனர். மேலும் இந் நோய்களிற் சில வைரசாலும், வேறு சில கிருமிகளாலும் பரவும் தன்மையுள்ளன என்பதையும் அன்றே இவர்கள் கண்டறிந்தனர்.

ஏனைய ஏகாதிபத்திய நாடுகளைப் போலன்றிப் பிரான்ஸ், எகிப்திய நாட்டின் வளர்ச்சிக்குப் பலவழிகளிலும் ஊக்கமும், ஒத்துழைப்புங் காட்டி வந்துள்ளமை குறிப்பிடக் கூடியதாகும். எகிப்தில் ஆட்சி செய்த காலங்களில் நெப்போலியன் பணி மெமலுக் ஆட்சியாளர்களின் கொடுமையில் இருந்து எகிப்தை விடுவிப்பது, நீர்ப்பாசனத் திட்டங்களை அமைப்பது; விவசாயத்தைப் பெருக்குவது, மத்திய தரைக் கடலூடாகவும், அரபிக் கடலூடாகவும் ஒழுங்கான வர்த்தக முயற்சிகளை பெற்றுக் கொடுப்பது, கைத்தொழில் முன்னேற்றத்துக்கு உதவுவது ஆகியவற்றுடன் எல்லாவற்றுக்கும் மேலாக எகிப்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்ற போற்றத்தக்க கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்று கூறுதல் மிகவும் பொருத்தமானதாகும்.

சயன்ரிஃபிக் அமெரிக்கன்
செப்ரெம்பர் 1994.

## ஓர் எல்லையில்லாப் பிரச்சனை

இந்த வருட முற்பகுதியில் ஈக்குவடோர், பெரு நாடுகளுக்கு இடையில் வெடித்த எல்லைச் சண்டைக்கு ஒரு சில நாள்களில் எல்லையில்லா குறுக்குவலை அதனுடைய ஒரு சொந்தத்தில் ஒரு யுத்தத்தைச் சந்தித்தது. ஈக்குவடோர் வெளியுறவு அமைச்சு செய்திக் குறிப்புக்களையும், உள்ளூர்ப் பத்திரிகைகளில் இருந்து எடுத்த பகுதிகளையுந் தொலைக்காட்சி வலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தில் அதனுடைய கூற்றைப் பிரசைகள் அறியுமாறு போட்டுக் காண்பித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org